CONNEMARA PUBLIC LIBRARY
20 FEB 1960

காவேரி

பொருளடக்கம்

விகாரி-ஹ மலர் 19	டிசம்பர்—1959	கார்த்திகை இதழ் 4

டில்லித் தபால்	... கே. ஸ்ரீநிவாஸன்	...	4
தொழில் துணுக்குகள்	... விசால்தேவ்	...	10
பெண்களுக்கு மட்டும்	... எஸ். விஜயா	...	14
இன்பமே இங்கே வா! (தொடர்கதை)	தி. சேஷாத்திரி	...	17
சகோதர வாஞ்சை	... தேவி	...	27
சிறையில் அறிவுரை	... நா. பார்த்தசாரதி	...	33
விஞ்ஞானத் துணுக்குகள்	... நா. கி. நாகராசன்	...	40
சிவோகம் சச்சிதானந்தம்	... நாகு	...	43
நெ. 10. பல்டன் பஜார்	... சேகர்	...	51
சாட்சி எங்கே?	... ரா. வேங்கடசாமி	...	58
புவனேஸ்வரியின் லக்ஷ்யம்	... ஹரிணி	...	68
வேஷம் பலித்தது!	... சேஷ்டை	...	75
வஜ்ரவீணை (தொடர்கதை)	... கே. சுந்தராம்பாள்	...	81
சிறுவர் பகுதி	... எஸ். விசாலாட்சி	...	89
திரை உலகம்	... விச்வம்	...	92

குறிப்பு: காவேரியில் வெளியாகும் கட்டுரைகளில் உள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும், அவற்றை எழுதினவர்களுடையனவே; அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.

காவேரி

விகாரி-ஸு மலர் 19	"சென்றிடுவீர் எட்டுத் திக்கும் — கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"	கார்த்திகை இதழ் 4

டில்லித் தபால்

கே. ஸ்ரீநிவாஸன்

பெண்கள் 'இல்லை' என்றால் அதற்கு 'ஆமாம்' என்று அர்த்தம் என்று பரிகாசமாக சொல்லுவதுண்டு. கிட்டத் தட்ட இதே வியாக்யானத்தைத் தான் பத்திரிகைகளும் ஸ்ரீமதி இந்திராகாந்தியைப்பற்றி சமீபத்தில் தெரிவித்தன, "அவருக்கென்ன ஸார்? அப்படித்தான் சொல்லுவார் கிட்டிமுட்டி வந்தால் விட்டு விடவா போகிறார்" என்று பொதுவாகக் கூறப்பட்டு வந்தது. சமீபத்தில் ஸ்ரீமதி காந்தி மூர்த்தன்யமாக தான் பூரா தவணைக்கும் காங்கிரஸ் அக்ராசனராக இருக்க மறுக்கவே அவர் உண்மையில் இனி தலைமைப் பதவி வகிப்பதில்லை என்ற முடிவுக்கு வந்துவிட்டார் என்பது வெளிவந்தது.

ஸ்ரீமதி இந்திரா காங்கிரஸ் அக்கிராசனராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபொழுது அவரை முதல் முதலில் பேட்டிகண்ட பத்திரிகை நிருபர்களில் முதல்வன் நான். அலகாபாத்துக்கு அருகாமையில் பாத யாத்திரை செய்து மிகவும் களைப்புடன் மூன்றாம் வகுப்பில் பிரயாணம் செய்து டில்லி அடைந்த அவர் கொஞ்சமும் அலுப்புக் காட்டாமல் எனக்கு சுமார் ஒரு மணி நேர பேட்டி கொடுத்தார். அப்பொழுது அவர் விளக்கிச் சொன்னது இன்னமும் ஞாபகம் இருக்கிறது.

"ஏன் இந்தப் பதவியை நீ வேண்டாம் நான் வேண்டாம் என்று உதறிக்கொண்டு ஓடுகிறார்கள்?"

"இது மிகவும் கஷ்டமான கேள்வி. காங்கிரஸ் அக்கிராசனராக இருப்பதை 10 வருஷங்களுக்கு முன் கூட பெரும் பெருமையாகக் கருதினார்கள். அப்பொழுது போட்டி போட்டுக்கொண்டு பெயர்களை பிரேரேபிப்பது வழக்கம். இன்றுள்ள நிலைமையுடன் அன்றிருந்த நிலைமையை ஒப்பிட்டுப் பார்த்தால் அன்று மிகவும் சர்வ சகஜமாக வேலை நடந்தது என்று தோன்றுகிறது. விடுதலை வேண்டும் என்ற கோரிக்கையை முன்னால் வைத்துப் போராடிய பொழுது ஐக்கியம் நம்மிடை இருந்தது. சுதந்திரம் எய்திய பிறகு நிலைமை மாறி விட்டது. பிரச்னைகள் அதிகரித்ததுடன் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை அற்று விட்டது. ஆகவே மாகாண எல்லைகள் முதல் மந்திரி சபை அலுவல்கள் வரை பிளவுகள்; இந்தப் பிரச்னைகளை துலக்குவது சுலபம் அல்ல. ஏனென்றால் எந்தப் பிரச்னைக்கு ஒரு முடிவுதான் உண்டு? இரு தரப்பார் சம்பந்தப்பட்டபொழுது யாராவது ஒருவருக்கு முடிவு பாதகமாவது சகஜம்தானே? இம்மாதிரி பிரச்னைகள்

தீர்ப்பதிலேயே அவகாசம் எல்லாம் விரயம் ஆகிவிடுகிறது, பிறகு ஆக்க வேலையை கவனிக்க எங்கு நேரம்! இதனால்தான் இந்த உத்தியோகம் வேண்டாம் என்று ஓடுகிறார்கள்."

"அப்படியிருக்கும்பொழுது நீங்கள் மட்டும் எப்படி தைரியமாக ஒப்புக்கொண்டீர்கள்?"

"தைரியம் என்று சொல்வது தவறு, ஸ்ரீ தேபர் தன் முழுத்தவணைக்கு முன்னரே விலகுகிறார்- அதனால் ஒரு நெருக்கடி ஏற்பட்டுவிட்டது. இந்த சமயத்தில் என்னை பலவந்தமாக வற்புறுத்துகிறார்கள். அதனால் ஒப்புக்கொண்டேன்."

"பிரதம மந்திரி உங்கள் தந்தை என்ற காரணத்தால் கட்சிக்கும் சர்க்காருக்குமிடையே உறவு சுமுகமாக இருக்கவேண்டும் என்றுகூட உங்கள் பெயரை பிரேரேபித்ததாகச் சொல்லுகிறார்களே?"

"சொல்வதெற்கென்ன? நன்றாக சொல்லுவார்கள். ஆனால் அது உண்மையல்ல. நான் காங்கிரஸ் சேவிகை. எனக்கு சர்க்காரை விட ஸ்தாபனம் தான் பெரிது. ஆகையால் ஸ்தாபனத்தின் பெயருக்கு குறைவு வரும் என்று தோன்றினால் நான் தலைமைப் பதவியை க்ஷணப் பொழுதில் துறப்பேனேயல்லாது அதைப் பேணிக் கிடக்க மாட்டேன்!"

இந்தப் பேட்டி என் குறிப்புப் புத்தகத்தில் ஏடுகளைப் புரட்டிய பொழுது கிடைத்தது. அதில் அவர் தொடர்ந்து ஏன் தான் தலைமைப் பதவியை வகிக்க முடியாது என்றும் குறிப்பிட்டிருந்தார். தன்னுடைய தேக நிலை திருப்திகரமாக இல்லையென்பதுடன் தன் கணவருக்கு உள்ள ரத்தக் கொதிப்பு அவ்வப்பொழுது அவருக்கு மன வியாகூலத்தைக் கொடுப்பதுடன் தன் தலைமைப் பதவி காரணமாக தன் தந்தைக்கு சேவை செய்ய முடியவில்லை என்பதையும் குறிப்பிட்டார். இதெல்லாம் மறுக்கமுடியாத உண்மைகள். எல்லாவற்றிற்கும் மேலாக ஸ்ரீமதி இந்திரா ஒரு வாத்ஸல்யம் நிறைந்த குழந்தைகளின் தாய் என்பதையும் ஞாபகத்தில் வைக்கவேண்டும்.

தன் தலைமைப் பதவி காலத்தில் தான் ஒரு "ஆமாஞ்சாமி" இல்லை என்பதை கேரள நாட்டு சர்க்கார் கலைப்பு நிகழ்த்தியது மூலம் காண்பித்தார். பிரதமர் உடனடியாக மத்திய தலையீட்டை ஆதரிக்காமல் இருந்த பொழுது ஸ்ரீமதி இந்திரா மூர்த்தண்யமாகக் கேரள காங்கிரஸ் ஸ்தாபனத்தை ஆதரித்ததுடன் கேரள இயக்கத்தை வெற்றிகரமாக முடித்து வைத்தார். முடிந்தது என்று இருந்த பம்பாய் மாகாணப் பிரச்னையையும் திரும்பக்கிளப்பி இரு பாஷை மாகாணங்கள் முடிவு உண்டாக்கிய பெருமையும் ஸ்ரீமதி இந்திராவைச் சேரும்.

ஸ்ரீமதி இந்திராவுக்குப் பிறகு யார் என்பதை பெரிய பிரச்னையாகப் பண்ணாமல் சட்டுப் புட்டென்று முடித்ததை மெச்சத்தான் வேண்டும். மாகாணங்களில் முக்கால் வாசியில் ஸ்தாபனம் பிளவுபட்டுக் கிடக்கிறது. இந்தியாவின் தலைசிறந்த மாகாணம் உத்திரப்பிரதேசம். இங்கு ஸி. பி. குப்தா குழு, பாபு சம்பூர்ணாநந்த் குழு என்று இரு குழுக்கள் துவந்த யுத்தம் செய்து ஸ்தாபனத்தை மூட்டை கட்டும் நிலைக்குக் கொண்டு வந்து விட்டன. பஞ்சாபிலும் இதே கதைதான். இரு பாஷை மாகாணம் அமைகது முன்னரே விதர்பத்தில் என்னென்ன மகாராஷ்டி ஜில்லாக்களை சேர்க்க வேண்டும் என்பதுபற்றி மண்டை உடைகிறது. ஆகவே காமா சோமாவென்று வண்டவாளம் வெளிவராமல் எஞ்சி இருக்கும் மாகாணம் ஆந்திரப் பிரதேசம். அங்கேயிருந்து அந்தப் பிரதமரைப் பிடித்தது ஒரு விதத்தில் நல்லது. ஸ்ரீ சஞ்சீவி ரெட்டியை எனக்கு நன்றாகத் தெரியும். நல்ல அடிப்படை தொண்டர். ஆக்க வேலையில் அக்கறை கொண்ட உழைப்பாளியும்கூட. ஆனால் கொள்கையை விட்டுக் கொடுக்க மாட்டார். நக்கீரரைப்போல "நெற்றிக் கண்ணைக் காட்டிலும் குற்றம் குற்றமே" என்று சொல்ல வல்லவர்.

காங்கிரஸ் வடநாட்டார் அதிகம் உள்ள ஸ்தாபனம். "மேலிட"த்தில் உள்ள பெரும் புள்ளிகள் அசாத்திய கொம்பேறி மூக்கர்கள். இதில் தெற்கத்தியார் அக்கிராசனராக இப்பொழுது இருப்பது மிகவும் அவசியம். ஸ்ரீ ரெட்டியின் தலைமையை நாம் பெரிதும் வரவேற்க வேண்டும்.

* * *

"பின்னால் வளைந்து குனிவது" என்பது எகத்தாளமாக எதையும் குறிப்பிட

உபயோகிக்கும் ஆங்கில சொற்றொடர், மனிதன் பின்னால் வில் மாதிரி வளையலாம் அல்லது குனியலாம். இரண்டையும் செய்வதென்பது இயலாத காரியம். உடல் இடம் கொடுத்தால்தானே இவ்வாறு செய்ய முடியும்? ஆனால் கம்யூனிஸ்ட் கட்சியின் உடல் சாதாரண மனித உடல் அல்ல: அது புழுவின் உடல், ஆகையால் இரு காரியங்களையும் செய்திருக்கிறது.

இந்திய-திபெத் எல்லையை வட கிழக்கு இந்தியப் பகுதியில் நிர்ணயிப்பது மக்மஹோன்கோடு என்பதை உலகம் அறிகிறது. சென்ற இரு மாதங்களாக இதைப் பிரஸ்தாபிக்காத தினசரி கிடையாது. ஸ்ரீ மக் மஹோன் என்பவர் முன்னாள் பிரிட்டிஷ் இந்திய சர்க்காரில் அந்நிய நாட்டுக்காரியதரிசியாக இருந்தவர். இவர் பதவி வகித்த காலத்தில் தான் திபெத்தைக் குறித்து ஸிம்லாவில் ஒரு மகாநாடு கூடிற்று. திபெத்துக்கும் சீனாவுக்கும் புகைச்சல் இன்றல்ல நேற்றல்ல, சுமார் 500 வருஷங்களாக தாயாதி காய்ச்சல். உலகத்தில் பாதி ஜனத்தொகை கொண்ட சீனர்கள் உலக மலா தூதர்கள் என்று வர்ணிக்கப் படுவது தவறு. அவர்கள் நாடு பிடித்து அடித்துக்கட்டும் எதேச்சாதிகாரிகள். அவர்கள் திபெத் சுதந்திரமாக வாழ்வதை காணச் சகிக்காமல் அவ்வப்பொழுது யுத்தம் செய்திருக்கிறார்கள். ஆனால் திபெத் நாட்டினர் கொஞ்சமும் சலிக்காமல் இந்த படையெடுப்புகளை உதரித் தள்ளியும் இருக்கிறார்கள். சென்ற நூற்றாண்டில் இந்த தொல்லை அதிகரிக்கவே இந்தியாவில் சர்வ வல்லமை கொண்ட பிரிட்டிஷாரை அணுகி இந்த கஷ்டத்திற்கு நிரந்தர நிவர்த்தியை டலாய்லாமா நாடினார்.

சீனாவின் கட்சி திபெத் தன்னைச் சேர்ந்தது; ஆனால் உள் நாட்டு சுதந்திரம் கொண்டது என்பது. ஸிம்லா கூடிய மகாநாட்டில் இந்தக் கொள்கையை பிரிட்டிஷார் ஒப்புக்கொண்டார்கள். ஆனால் திபெத்துக்குள் சீன அதிகாரிகளோ அல்லது ராணுவமோ வரக்கூடாது என்று ஒப்பந்தத்தில் ஷரத்துப் போட்டார்கள். இந்த ஒப்பந்தத்தில் தான் திபெத்துக்கும் இந்தியாவுக்குமிடையே உள்ள எல்லையை குறித்தது ஒரு கோடு. இதைத்தான் மக்மஹோன்கோடு என்று பாமர வாசகமாகச் சொல்வது. மக்மஹோன்கோடு சீனாவுக்கும் இந்தியாவுக்கும் உள்ள எல்லையை குறிப்பது என்று சமீப காலத்தில் பிரபல இந்தியப் பத்திரிகைகள்கூடத் தவருக எழுதுகின்றன. அஸ்ஸாமுக்கு வடக்கே கீழக்கோடிவரை திபெத் தான் உள்ளதே தவிர சீனா இல்லை. இந்திய-சீன எல்லையை மக்மஹோன் கோடு குறிக்கிறது என்று நாம் வாய் தவறிக்கூட சொல்லக்கூடாது. ஏனென்றால் அது நாம் மறைமுகமாக திபெத்தின் கபளிகரத்தை ஒப்புக் கொள்வதாகும்.

நிற்க, மக்மஹோன்கோடு என்பது உலகத்தில் யாவரும் ஒப்புக்கொள்ளும் விஷயம். அதை ஒப்புக் கொள்ளாதவர்கள் சீனர்கள்தான் என்று வாசகர்கள் நினைக்கலாம். அதுசரி. ஆனால் அவர்கள் மனதில் கூட நினைக்க முடியாத மற்றொரு சாரார் இந்திய கம்யூனிஸ்ட்களில் ஒரு பாதி. இந்தத் துரோகிகள் நிறைந்த கும்பல் சென்ற மாதம் கல்கத்தாவில் கூடிய பொழுது மக்மஹோன்கோடு எல்லை இல்லை என்றும் அதைப்பற்றி இந்திய பிரதமரும் சீனப் பிரதமரும் சம்பாஷணை நடத்த வேண்டும் என்றும் முடிவு செய்தது. தேசபக்தி நிறைந்த மகாராஷ்டிரத்தில் உள்ள கம்யூனிஸ்டுகள் ஒரு போடுபோட்டார்கள், வாக்கு வன்மையும் சாமர்த்தியமும் நிறைந்த பார்லிமெண்ட் அங்கத்தினர் ஸ்ரீ எஸ். ஏ. டாங்கே தன் மாகாண கம்யூனிஸ்ட் கட்சி மக்மஹோன் கோட்டையும் இந்திய சர்க்காரின் கட்சியையும் ஆதரிக்கும்படி செய்தார். இந்த ஒரு சுப சூசகத்தைத் தவிர இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சி தான் மனதால்கூட தேசத்தையும் அதன் க்ஷேமத்தையும் கருதவல்லாதது என்று நன்கு நிருபித்ததுடன் எந்த விஷயத்திலும் அது சீனாவிடமிருந்தும், ரஷ்யாவிடமிருந்தும் உத்திரவு வாங்கும் கைக் கூலிகள் என்றும் வெளிப்படுத்திவிட்டது.

மீரத்தில் நவம்பர் மாத மத்தியில் நடந்த கம்யூனிஸ்ட் கட்சி மகாநாடு பாக்குவெட்டியில் அகப்பட்ட பாக்குக்கு உயிர் இருந்தால் எவ்வளவு அவஸ்தைப் படுமோ அவ்வளவு கம்யூனிஸ்ட் அவஸ்தையை படம் பிடித்துக் காட்டியது. சாதாரணமாக "தாம் தூம்" என்று ஆர்ப்பாட்டம் செய்யும் கம்யூனிஸ்ட்டுகளை, அவர்கள் கூடிய டவுன் ஹாலை விட்டு வெளியே வந்தால், முதுகைப் பிரித்து ஓடுமாற்றத் தயாராக இருந்தார்கள் மீரத் பொது ஜனங்கள். கம்யூனிஸ்ட்கள் தியாகிகள் சமாதியில்

புஷ்ப ஹாரம் வைப்பதைக்கூட தடுத்தார்கள் பொதுமக்கள். மீரத்துக்கு அருகிலுள்ள காஸியாபாத்தில் போலீஸ் படையின் உதவி கொண்டு "பொதுக்கூட்டம்" நடத்தப்பட்டது. அதே காஸியாபாத்தில் முன்னாள் கேரளப் பிரதமர் ஸ்ரீ நம்பூதிரிபாத்தை எட்டிய மட்டும் விரட்டினார்கள் பொதுமக்கள். பெற்றேன் பிழைத்தேன் என்று ஸ்ரீ ஈ.எம்.எஸ். காரில் டில்லிக்கு விரைந்து டில்லி எல்லையில் நின்று நெற்றி வெயர்வையைத் துடைத்துக்கொண்டார். இரு மாதங்களுக்கு முன்தான் கம்யூனிஸ்ட் கட்சியின் கனபாடிகளான ஸ்ரீ அஜாய் கோஷ் டில்லியில் மார் தட்டினார். "கேரளத்தில் மத்திய சர்க்கார் தலையிட்டால் கம்யூனிஸ்ட்களின் கௌரவம் வானைத் தொட்டுவிட்டது. இனி எங்கள் நம்பூதிரிபாதுக்கு எங்கு சென்றாலும் பிரதமர் நேருவுக்குக் கிடைக்கும் அமோக ஆதரவு கிடைக்கும்" என்று. மீரத்திலும் காஸியாபாத்திலும் ஸ்ரீ கோஷுக்கு சரியான பதில் கிடைத்தது.

மீரத்தில் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் ஜுரம் கண்டது. பிழைக்க வழி மக் மஹோன் கோடு என்ற பேதி மாத்திரைதான் என்ற வைத்தியர் ஸ்ரீ டாங்கேயே பகிரங்கமாக முதலில் கட்சி நிந்தனை செய்தது. கேஸ் முடிந்துவிடும் என்று தோன்றியவுடன் கட்சி வேண்டா வெறுப்பாக மக் மஹோன் கோட்டை ஒப்புக்கொண்டது. இதைத்தான் "பின் வளைந்து முன் குனிதல்" என்று குறிப்பிட்டேன்.

* * *

"ஆகக் கடைசியில் கம்யூனிஸ்ட் கட்சி தேசபக்த மார்க்கத்தை கடைப்பிடித்ததா இல்லையா" என்று கேட்பவர்களுக்கு இதோ பதில். கம்யூனிஸ்ட் கட்சி அப்படி ஒன்றும் செய்யவில்லை. பஞ்ச தந்திரத்தில் சொன்ன சாம, தான, பேத, தண்ட யுக்திகளில் இப்பொழுது தண்டத்தை கைவிட்டு சாமத்தில் இறங்கியிருக்கிறது. சிறுத்தையை மில்லில் சாயம் ஏற்ற வைத்திருக்கும் மாபெரும் தொட்டியில் ஒரு டன் சோப்புக் கரைத்து நாள் கணக்கில் ஊற வைத்தாலும் அதன் புள்ளிகள் முன் இருந்த படியேதானே இருக்கும்? அதே போல் பழைய கருப்பன் கருப்பனேயல்லாது புதுமனிதன் அல்ல. கம்யூனிஸ்ட் சித்தாந்தத்தில் சமயோஜிதத்திற்கு ஏராள இடம் உண்டு. அதைத்தான் இன்று கம்யூனிஸ்ட்கள் செய்கிறார்கள். இன்று அவர்கள் குழைவதெல்லாம் நம் நாட்டின் வருங் காலத்துக்காக அல்ல; கேரளத்தில் மறுபடியும் தேர்தலில் ஒரு முண்டு முண்ட. சீனாவும் சமாதான கோலத்தை, இந்திய கம்யூனிஸ்ட்களுக்கு அபயம் கொடுக்க வேண்டிப் போடுகிறது. கேரள தேர்தல்களுக்குப் பிறகு சீனா இந்தியாமீது முழுமூச்சாக படையெடுத்தால் அப்பொழுது நம் செந்தோழர்கள் அதை பொருட்படுத்த மாட்டார்கள்; அதற்கு மாறாக உள்நாட்டில் கலவரம் விளைவித்து நாசகாரி வேலைகளில் இறங்குவார்கள். இதனால்தான் நாட்டில் கம்யூனிஸ்ட் கட்சியை தடைசெய்ய வேண்டும் என்ற கோஷம் நாலு திக்குகளிலிருந்தும் கிளம்பியிருக்கிறது. கட்சியை தடை செய்தால் நபர்கள் "பூமிக்கடி"யில் சென்று விடுவார்கள். இது அவர்களுக்கு சர்வ சகஜம். செய்ய வேண்டுவது என்னவென்றால் ஒவ்வொரு கம்யூனிஸ்டின் நடமாட்டத்தையும் நன்கு கண்காணிக்க வேண்டும்.

* * *

ரேழியில் படுத்துத் தூங்கியவன் புரண்டு ரேழித் திண்ணையில் படுத்தானாம் என்று சகஜமாக அசம்பாவிதத்தைக் குறிக்க உபயோகிக்கும் சொற்றொடர். லடாக்கில் இந்தியப் பிரதேசத்தில் ஆக்கிரமித்து ஒரு ரோட்டையும் அமைத்த சீனர்கள் எல்லை கண்காணிப்பு போலீஸ் படையை சேர்ந்த ஏழு போலீஸாரையும் சுட்டுக் குவித்தனர். வெறும் துப்பாக்கி சகிதம் சென்ற போலீஸார் மேல் பீரங்கிப் பிரயோகம் செய்ததுமல்லாமல், அவர்களில்

எஞ்சியவரை ,கைதும் செய்தார்கள் சீனர்கள். இதில் வயிற்றெரிச்சல் என்னவென்றால் இந்தியா வழக்கம்போல் ஒரு டன் ஆக்ஷேபத்தை அனுப்பியதற்கு பதில் சீனாவின் நொண்டிக்கட்சி: "உண்மையில் பாரா செய்த இடம் உங்களுடையதாக இருந்தால் நீங்கள் முன்னாலேயே கண் காணித்திருப்பீர்கள். அந்தப் பிரதேசம் எங்களுடையது, அதனால் தான் போலீசாருக்கு திக்குத் தெரியாமல் வந்து விட்டார்கள். குற்றம் நிச்சயம் உங்களுடையது" என்றார்கள்.

சீனர்கள் காட்டுமிராண்டிகள். யுத்தத்தில் எங்கும் நல்ல பெயர் வாங்கியவர்கள் அல்ல, ருஷ்யாவிடத்திலும் திபெத்தியர்களிடத்திலும் ஜப்பானியர்களிடத்திலும் செம்மையாக உதை வாங்கி அனுபவப் பட்டவர்கள். அவர்களுக்கு பதில் மரியாதை அல்ல; ஒரு உதைக்கு இரு உதைகள். நல்ல காலமாக, வெகு பிரயாசைப் பட்டு பிரதமர் மனதை திடப்படுத்திக் கொண்டு இந்திய-திபெத்திய எல்லையை ராணுவத்தாரிடம் ஒப்படைத்து விட்டார்கள். இனி சீனர்களுக்கு கொஞ்சம் பாடம் கற்க, வேண்டுமான வாய்ப்புகள் கிடைக்கும் என்று நம்புவோம்.

* * *

அடுத்த மாதம் டில்லியில் உலக விவசாய சந்தை நடக்கப் போகிறது. உலகத்தில் உள்ள நாடுகளில் எந்தெந்த முறை மூலம் எப்படிப்பட்ட உயர்ந்த விளைச்சல்கள் கிட்டுகின்றன என்பதை சித்தரிக்கும் சந்தை இது. சிறிய அளவில் இந்தச் சந்தையை பெரும்பாலும் விவசாய பிராந்தியங்கள் அருகாமையிலுள்ள-பிரதேசங்களில் நடத்தினால், ஜனங்களும் பார்ப்பார்கள், விவசாயிகளும் பார்த்துப் பயனடைவார்கள். டில்லியில் இம்மாதிரி சந்தைகள் கண்காட்சிகள் ஏற்பாடாவதில் இரு சாராருக்குத்தான் பலன் உண்டு. ஒன்று கண்டிராக்டர்கள். மற்றொரு குழு கண்காட்சிக்கென்று மத்திய சர்க்காரில சலுகை பெற்ற பெருச்சாளிகளாக கொழுத்துவரும் அதிகாரிகள், கண்காட்சிக்கு இருகோடிகள் செலவானால் அதில் 70 சதம் கண்டிராக்டர்கள் பங்கு. டில்லிவாசி என்ற முறையில் எனக்கும் டில்லியில் கண்காட்சி நடப்பதில் சந்தோஷம் தான். ஏனென்றால் சொக்காயை மாட்டிக் கொண்டு பகல் மூன்று மணிக்குக் கிளம்பினால் இரவு ஒன்பது மணி வரை பொழுது போகும். என் குடும்பத்தாருக்கும் இது மாதிரி காட்சிகள் மிகவும் பிடித்தது. ஏன், டில்லியில் உள்ள பஞ்சாபிகள் தினம் கட்டுச்சாதம் கட்டிக்கொண்டு இம்மாதிரி சந்தையில் தினம் முகாம் செய்துவிடுவார்கள். கேள்வி என்னவென்றால் இது மாதிரி செய்வது முறையா? இம்மாதிரி சந்தையை மற்ற முக்கிய நகரங்களான சென்னை, பம்பாய், கல்கத்தா, நாகபுரி முதலிய இடங்களில் ஏன் சிறிய காலங்களுக்கு எடுத்துச் செல்லக்கூடாது? பதில்! நடக்காது சார். ஒருக்கால் விவசாயிகள் பார்த்து உற்பத்தி பெருகிவிட்டால் அனர்த்தம் அல்லவா?

ஆரோக்கியத்தை விரும்புவோர் எப்பொழுதும் லைப்பாய் உபயோகித்தே நீராடுவார்

பாலர் முதல் வயோதிகர் வரை குடும்பத்திலுள்ளோர் யாவரும் உற்சாகத்துடன் இருக்கும் வீடு எதுவோ அதுவே உண்மையான இன்ப நிலையம். உற்சாகத்திற்கு ஆதாரம் ஆரோக்கியந்தான். ஆனால் ஆரோக்கியத்திற்கு நிரந்தரமாக ஆபத்து விளைவிப்பது அழுக்கு. நாம் எவ்வளவு ஜாக்கிரதையாக இருந்தாலும் அழுக்கிலிருந்து தப்பமுடியாது — அழுக்குத்தான் நோய்க் கிருமிகளின் இருப்பிடம். அழுக்குடன் கிருமிகளைக் கழுவிக் களைந்து உங்கள் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பது லைப்பாய் சோப். அன்றாடம் லைப்பாய் சோப்பினால் குளித்து அழுக்கிலுள்ள கிருமிகளினின்று உங்கள் ஆரோக்கியத்தைக் காத்துக்கொள்ளுங்கள். புதுமலர்ச்சியூட்டும் அனுபவம் அதுவே.

L/P. 3-X52 TM

தயாரிப்பாளர்கள்: இந்துஸ்தான் லீவர் லிமிடெட், பம்பாய்.

தொழில் துணுக்குகள்

விசால்தேவ்

புதுவகை குளோரோபில்

பச்சையம் எனப்படும் "குளோரோபில்" (Chlorophyll) தற்காலத்தில் பலவித தொழில்களுக்குப் பயன்படும் ஒரு முக்கிய கச்சாப் பொருளாகும். முக்கியமாக இது இப்பொழுது சோப்பு, பற்பசை, அழகு சாதனங்கள், உணவுப்பண்டங்கள் தயாரிப்பில் பயன் படுத்தப்படுகிறது. இது ஒரு முக்கியமான மருந்துப் பொருளாகவும் இப்பொழுது உபயோகமாகிறது. இவ்வளவு தூரம் மனிதனுக்குப் பயன்படும் இப்பொருள் வெப்பம் வெளிச்சம் இரண்டினாலும் கெட்டுப்போகும் இயல்புடையது. ஆனால் "தாமிர பச்சையம்" (Copper Chlorophyll) வெப்பத்தாலோ வெளிச்சத்தாலோ கெட்டுப் போவதில்லை.

இந்த புதிய வகை தாமரைப் பச்சையம் தேள் பச்சிலை (Urtica Parviflora) யிலிருந்து தயாரிக்கப் படுகிறது. இந்தப் பச்சிலையை காய வைத்து சாராயத்தில் இட்டு வடித்தால் அதிலிருந்து "பிவோ பைடின்" என்ற பொருள் கிடைக்கிறது. இதை மயில் துத்தத்தோடு (Copper Sulphate) கலந்து சுத்தம் செய்தால் தாமிரப் பச்சையம் கிடைக்கிறது.

இப்பொழுது நம் நாட்டில் பல்வேறு தொழில்களுக்குத் தேவையான தாமிரப் பச்சையம் முழுவதும் வெளிநாடுகளிலிருந்தே வருகிறது. இதன் விலை ராத்தல் 60—80 ரூபாயாகும். ஆனால் நம் நாட்டிலேயே மலிவாக தாமிரப் பச்சையம் தயாரிக்கலாம். இதற்கான இயந்திர சாதனங்களை டேராடுனில் உள்ள வன ஆராய்ச்சிக் கழகம் தயாரித்து விற்கிறது. இத்தொழிலை ஆரம்பித்து நடத்த சுமார் ரூ 20,000 முதலிருந்தால் போதும், வருடம் 3000 ராத்தல் தாமிரப் பச்சையம் தயாரிக்கலாம். இதன் அடக்க விலை ராத்தலுக்கு ரூ. 41.4 ஆகும். ஆகையால் ஒரு ராத்தலுக்கு 20—40 ரூபாய் வரை லாபம் கிடைக்கும். வருடலாபம் 60000—80000 வரை கிட்டும் லாபகரமான தொழில் இது.

பெட்ரோல் வற்றாது

தென் அமெரிக்காவில் வெனிஜுலா என்ற நாடு ஒன்று உண்டு. அந்நாட்டின் கிழக்குப் பகுதியில் ஓடும் ஒனிரகோ என்னும் நதியின் டெல்டாவில் இப்பொழுது புதிதாக பெட்ரோல் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. இங்கே ஆராய்ச்சி காரியங்களில் ஈடுபட்டுள்ள நிபுணர் கோஷ்டி இத்துறையில் மிகப் புதுமையான செய்தி ஒன்றைக் கண்டறிந்து இப்பொழுது வெளியிட்டுள்ளது. அது ஆராய்ச்சி நடத்தும் பகுதியில், பல இடங்களில் பெட்ரோல் இன்னும் பூரணமாக உற்பத்தியாகவில்லை. பாறை இடைவெளிகளில் படிந்துள்ள "ஹைட்ரோ கார்பன்" (Hydro Carbon) கள் பெட்ரோலாக மாறப் பலவித மாற்றங்கள் அடைய வேண்டியதிருக்கிறது. இவ்விதம் பலதரப்பட்ட மாற்றங்கள் அடைந்து பலதரப்பட்ட நிலையில் உள்ள ஹைட்ரோ கார்பன்கள் இங்கு கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. உலகில் இவ்விதம் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது இதுவே முதல் முறையாகும். இதிலிருந்து இப்பொழுது ஒரு உண்மை புலனாகி இருக்கிறது. பூமிக்கடியில் ஏற்கனவே உற்பத்தியான பெட்ரோல் தான் உண்டு. அந்த ஸ்டாக் எல்லாம் தீர்ந்து விட்டால் பிறகு பெட்ரோல் கிடையாது எனவே இதுவரை நம்பப்பட்டு வந்தது. ஆனால் இப்பொழுது இந்த ஆராய்ச்சிமூலம் பூமியில் பெட்ரோல் புதிது புதிதாக உற்பத்தியாகியபடி இருக்கிறது. ஆகையால் பெட்ரோல் ஸ்டாக் எல்லாம் இன்னும் சிறிது காலத்தில் தீர்ந்துவிடும் என்ற அச்சம் தவறானது.

சுகந்த மூக்குப்பொடி

இதைத் தயாரிக்க நல்ல உயர்தரமான புகையிலையே நல்லது. புகையிலைக் காம்பு நரம்பு முதலியவைகளை நீக்கிவிட்டு சுத்தமான இலையை மட்டும் 10—12 மணி நேரம் சுண்ணாம்பு நீரில் ஊறப்போடவும். பிறகு அதை நன்கு உலர்த்தி எடுத்து நெருப்பில் வாட்டவும். கறுமை நிறம் அடையும்வரை வாட்டவேண்டும். பிறகு கல்வத்திலிட்டு நன்கு கடைந்து மெல்லிய துணியால் சலித்துக் கொள்ளவும். இவ்விதம் சலித்தெடுத்த புகையிலைப் பொடி 48 ராத்தலுக்கு கீழ்க் கண்ட சரக்குகளைத் தயாரித்துக்கொள்ளவும்.

ரோஸ் வாட்டர்	... 12 ராத்தல்
மல்லிகை அத்தர் (Oil of Jasmine)	1 தோலா
ரோஜா அத்தர்	... 1 தோலா

முதலில் ரோஸ்வாட்டரைப் பொடியில் சேர்த்து நன்கு கலந்து காயவைக்கவும். இப்படிச் செய்வதால் பொடி கட்டி கட்டியாக ஆகிவிடும். ஆகையால் மறுபடியும் ஒருமுறை அதைக் கடையவேண்டும். இப்படிச் செய்தால் பொடி அதிக நயமாக இருக்கும். இதை

விரும்பாவிட்டால் புகையிலையை முதலில் காம்பு நரம்பு நீக்கியதும் ஒருமுறை 6 ராத்தல் ரோஸ் வாடரில் நனைத்துக் காயவைக்கவும். பிறகு இரண்டாவது ஒருமுறை பாக்கியுள்ள 6 ராத்தல் ரோஸ் பவுடரில் நனைத்துக் காய வைக்கவும் இவ்விதம் இரண்டு முறை ரோஸ் வாடரில் நனைத்துக் காயவைத்த பிறகு கல்வத்திலிட்டுக் கடைந்து சலித்து பொடியாக்கிக் கொள்ளவும். நெருப்பில் வாட்ட வேண்டாம். இந்த இரண்டு முறையில் ஏதாவது அவரவர் வசதி விருப்பம் போல் ரோஸ் வாடர் சேர்த்துக்கொள்ளலாம். இவ்விதம் ரோஸ் வாடர் சேர்த்தான பொடியை முதலில் கையில் மல்லிகை அத்தரை பூசிக்கொண்டு சிறிது சிறிதாக கையில் பொடியைத் தேய்த்து தேய்த்து வாசனை ஊட்டவேண்டும். இவ்விதம் பொடி முழுவதற்கும் மல்லிகை வாசனை ஊட்டியானதும் அதேபோல் கையில் ரோஜா அத்தரைப் பூசிக்கொண்டு ரோஜா வாசனை ஊட்ட வேண்டும். இவ்விதம் செய்தால் அப்பொடி கம கம என வாசனை மூக்குப் பொடியாகி விடும்.

புதிய வகை உரம்

பேராசிரியர் என். ஆர். தர், டாக்டர் ஏ. ஸி. கௌர், பேராசிரியர் வி. பி. குப்தா ஆகிய மூவரும் தேசிய விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகத்தில் நடத்திய பல ஆராய்ச்சிகளின் பயனாக இப்பொழுது சில உண்மைகளைக் கண்டறிந்துள்ளனர். அம்மோனியம் சல்பேட், காலசியம் ஸைனமைடு (Calcium Cyanamide) போன்ற உரங்களை நிலத்திற்கு தொடர்ந்து இடுவதால் தீமை ஏற்படுகிறது. நிலவளமும் கெட்டுப் போகிறது. நகரசபைகளில் சேரும் குப்பைகளை மக்கச் செய்து, கம்போஸ்ட் உரம் தயாரிக்கிறார்களல்லவா? இந்த கம்போஸ்ட் உரத்தோடு இரும்புத் தொழிற்சாலைகளில் கிடைக்கும் கழிவுப் பொருளான பேசிக் ஸ்லாக் (Basic Slag) கை தூள் செய்து, கலந்து விட்டால் அது முதல்தரமான உரமாகி விடுகிறது எனக் கண்டறிந்திருக்கிறார்கள். பயிர்களுக்குத் தேவையான நைட்ரஜன், பாஸ்பரஸ், பொடாஷ், கால்சியம், சுண்ணாம்பு, மாக்னீசியா, இரும்பு, மாங்கனிஸ், வெனடியம் உள்ளிட்ட எல்லாச் சத்துக்களும் அவ் உரத்தில் அடங்கி இருப்பதால் மற்ற எந்த உரத்தையும்விட பயிர்களுக்கு அது அதிக நன்மை செய்கிறதாம். மக்கிய தாவர சத்துக்கள் அதில் அடங்கி இருப்பதால், மண் கிருமிகள் (Soil bacterias) வளர்ச்சியடைந்து காற்றிலிருந்து நைட்ரஜன் சத்தை கிரகித்து பயிர்களுக்கு உதவும் காரியமும் அதிகரிக்கிறதாம். இதனால் நிலவளமும் கூடுகிறதாம். ஏற்கவே இம்முறையை மேல்நாடுகளில் கோதுமை, உருளைக்கிழங்கு வயல்களில் கையாண்டு, நல்ல பலன் கண்டிருக்கிறார்கள். இந்த கண்டுபிடிப்பு நம் விவசாய அபிவிருத்திக்கு வெகுவாக உதவக்கூடிய தொன்றாகும்.

அட்டைப் பலகை

அட்டைப் பலகைகள் (Hard boards) இப்பொழுது வெகுவாக பிரயாணி பஸ்களின் உட்புறம், இரயில்வே பெட்டிகளின் உட்புறம், ஏர்கன்டிஷனிங் குழாய்கள், மறைப்புகள், கட்டிடங்களின் கூரைகள் முதலியவற்றிற்கு வெகுவாக உபயோகமாகின்றன. விதவிதமான நாற்காலிகள், மேஜைகள், பீரோக்கள், பாகிங் பெட்டிகள், தயாரிக்கவும் இது உபயோகமாகிறது. 1957-ல் 29.2 லட்சம் ரூபாய் பெருமதியுள்ள 3725 டன், 1958-ல் 1·11 லட்சம் பெருமதியுள்ள 1580 டன் அட்டைப் பலகைகள் வெளிநாடுகளிலிருந்து நம் நாட்டில் இறக்குமதி செய்யப்பட்டது. இப்பொழுது இப்பலகை இறக்குமதி பூரணமாக நின்றுபட்டுவிட்டது. ஆனால் நம் நாட்டுக்கு இப்பலகையின் தேவை வருடம் சுமார் 30,000 டன் என மதிப்பிடப்படுகிறது.

நம் நாட்டில் இப்பொழுது பெரும்பாலும் வீணாகும் இரும்புத்தூள், கரும்புச் சக்கை, சணல் கழிவு, கல்நார் கழிவு போன்றவைகளைக் கொண்டு, இப்பலகையை நாமே சுலபமாகத் தயாரிக்கலாம். இதற்கான வழிமுறைகளை ஜியால் கோராவில் உள்ள மத்திய எரிபொருள் ஆராய்ச்சிக் கழகம் கண்டறிந்திருக்கிறது. இந்த நார்ப்பொருள்களை ஒன்று சேர்த்து பலகை உருக்கொடுக்க உதவும் பிசினும் நம் நாட்டிலேயே கிடைக்கக் கூடியதே. ஆகையால் நூற்றுக்கு நூறு சுதேசிப் பொருளாக இவ் வட்டையை நம் நாட்டில் உற்பத்தி செய்ய வாய்ப்பிருக்கிறது. இந்த அட்டைகள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் அட்டைகளைவிட உயர்வாக உள்ளன. 8 அடி × 4 அடி × ⅛ அங்குல அளவுள்ள 93000 அட்டைகள் வருட சராசரியாக தயாரிக்கும் ஆற்றல் உள்ள தொழிற்சாலை ஸ்தாபிக்க சுமார் 6 லட்சம் ரூபாயாகும். மேற்படி அளவுள்ள 75 அட்டைகள் சுமார் ஒரு டன் எடை இருக்கும்.

மேற்கண்ட முறையில் ஏற்கனவே நம் நாட்டில் பம்பாயில் உள்ள அணில் ஹார்டு போர்ட்ஸ் 6000 டன், போபாவில் உள்ள மத்திய பிரதேஷ் இண்டஸ்ட்ரிஸ் 6000 டன், பாலிபடாமில் உள்ள வெஸ்ட் இண்டியா பிளைவுட்ஸ் 3750 டன் ஹார்டு போர்டு தயாரிக்கும் தொழிற்சாலைகளை ஆரம்பித்துள்ளன. புதிதாக தொழிற்சாலைகள் ஆரம்பிக்க விருப்பமுள்ளவர்கள்; காரியதரிசி,

நேஷனல் டெவலப்மெண்ட் கார்பொரேஷன் மாண்டி ஹவுஸ், புதுடில்லி-1, என்ற விலாசத்துக்கு எழுதி வேண்டிய விவரங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

புதிய சுண்ணாம்புப் படிவுகள்

நம் ராஜ்யத்தில் தஞ்சை, திருச்சி, சேலம், கோவை, மதுரை, ராமனாதபுரம், திருநெல்வேலி, ராமேஸ்வரம் தீவு ஆகியவைகளில் புதிதாக ஏராளமாக சுண்ணாம்புப் படிவுகளை இந்திய பூ இயல் ஆராய்ச்சி இலாகா கண்டு பிடித்திருக்கிறது. இராமனாதபுரம் ஜில்லாவில் சாத்தூர் அருப்புக்கோட்டைத் தாலுக்காக்களில் மட்டும் 43,62,000 டன் சுண்ணாம்புக்கல் இருப்பதாக மதிப்பிடப்படுகிறது. இராமேசுவரம் தீவில் உள்ள சுண்ணாம்புக் கல் புது வகையானது. சிப்பிகளால் ஆனது அப்படிவு. இவ்விதம் அங்கு 50 லட்சம் டன் சிப்பிச் சுண்ணாம்பு கிடைக்கும் எனக் கணக்கிட்டிருக்கிறார்கள். தென் ஆற்காடு ஜில்லாவில் 20 லட்சம் டன் கிடைக்கலாம் என மதிப்பிடப்படுகிறது. இவ்விதம் பெரும் அளவில் சுண்ணாம்புக்கல் கிடைக்கும் நம் தமிழ் ஜில்லாக்களில் எல்லாம் வருங்காலத்தில் செமண்ட் தொழிற்சாலைகள் தொடங்கி நடத்த நல்ல வாய்ப்புண்டு.

தவிட்டு ரொட்டி ஆராய்ச்சி

மலிவாக தவிட்டு ரொட்டி தயாரிப்பது நம் நாட்டில் வெகு காலமாகவே இருந்து வரும் ஒரு வழக்கமாகும். ஆனால் இதுபற்றி விஞ்ஞான முறையில் இதுவரை எவ்வித ஆராய்ச்சியும் மேற்கொள்ளப்படவில்லை. சமீபத்தில் நடத்தப்பட்ட ஒரு ஆராய்ச்சியிலிருந்து தவிட்டில் உடல் நலத்துக்கு அவசியமான வைட்டமின் பி.-யும் ஈ.-யும் உள்ளன. இவை நீக்கி 10—14% புரதம்; 3—5% கார்போஹைட்ரேட்; 15—24% எண்ணெய் சத்து வேறு அடங்கியுள்ளன. ஆகையால் மற்ற மாவுகளோடு 22% வரை அதாவது சுமார் 5-ல் 1 பங்கு தவிடு கலந்த ரொட்டி சுடுவது உடல் நலத்துக்கு எவ்விதமும் கேடு செய்வதில்லை. ஏழு நாட்களுக்குட்பட்ட புத்தம் புதிய தவிடாக இருந்தால் ரொட்டியும் பொரு பொரு என இருக்கும். அதற்கு மேல் நாள்பட்ட தவிடானால் ரொட்டி அவ்வளவு தூரம் பொரு பொரு என இருப்பதில்லை எனத் தெரிய வந்துள்ளது.

துருப்போக்கும் நீர்

இரும்பால் செய்யப்பட்ட இயந்திரங்கள் இயந்திர உருப்புக்களில் துருப்பிடிப்பது பழக்கம். இத்துருவைப் போக்க சாதாரணமாக அரம் அல்லது உப்புக் காகிதத்தை உபயோகிப்பார்கள். ஆனால் அரத்தாலோ உப்புக் காகிதத்தாலோ துருவைத் தேய்த்துப் போக்க இயலாத பகுதிகளும் இயந்திர அமைப்பில் உண்டு. இப்படிப்பட்ட இடங்களில் பற்றியுள்ள துருவைப் போக்க, இப்பொழுது புதிதாத் துருப் போக்கும் நீர் ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறார். இந்த நீரைத் தயாரிப்பதும் சுலபம். உபயோகிப்பதும் சிரமமானதல்ல.

பாஸ்பாரிக் ஆஸிட்	...	35 பங்கு
பெட்ரோலியம் ஈத்தர்	...	12.5 ,,
ஈதிலின் கிளைக்கோல்	...	12.5 ,,
ஈதைல் மிதைல் கீடோன்	...	10.0 ,,
தண்ணீர்	...	30.0 ,,

மேலே கண்ட சரக்குகளை எல்லாம் ஒன்று சேர்த்து 60 டிகிரி செனடிகிரேடு வரை வெப்பப்படுத்தி அதில் துருயேறிய இயந்திரத்தையோ இயந்திர உருப்பையோ முக்கி வைத்தால் 3—4 நிமிடத்தில் துரு எல்லாம் கரைந்து நீங்கிவிடும். அளவுக்கதிகமாகத் துரு பற்றி இருந்தால் அதிக நேரம் முக்கி வைத்திருக்க வேண்டும்.

நீங்கள் கேட்டவை

பேனா மை தயாரிப்பதற்காக இரசாயனங்களை எங்கிருந்து பெறலாம்?

சு. முத்துசாமி, திருச்சி.

கீழ்க்கண்ட விலாசங்களில் பெறலாம்.

(1) S. K. Kabbur Private Ltd.
3, Bastion Road,
Fort, Bombay—1

(2) Bhavanidas Gangadas & Co. (P) Ltd.,
233-35, Samuel Street
Bombay-3

(3) Small Industries Service Institute
Shahjehan Road,
New Delhi.

அன்றாட
அலுவல்களை



அதிசக்தியுடன்
ஆற்றல் புரிய

காமதேனு
வனஸ்பதி!

சாஸ்த்ரீய முறையில் தயாரிக்கப்பட்டது. வைடமின் A, D, கலக்கப்பட்டது. நெய்யிற்கு சமமானது, ஆனால் விலை குறைவானது.

காமதேனு வனஸ்பதி சுத்தமானதும், ஆரோக்யம் அளிக்க வல்லதுமான சிறந்ததோர் சமையல் சாதனம்.

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்டரியல் கார்ப்பொரேஷன் லிட்.
மேட்டூர் அணை R S. சேலம் ஜில்லா
மானேஜிங் ஏஜண்ட்ஸ் · **சேஷசாயி பிரதர்ஸ் பிரைவேட் லிமிடெட்**

MC-634

எஸ். விஜயா

தெரிந்துகொள்ளுங்கள்

(1) தலைக்குச் சோப்புப் போட்டுக் கொண்டால் தலை மயிற்றிலும். மண்டைத் தோலிலும் மெல்லிதாக சோப்புப் படலம் ஒன்று பற்றிக்கொண்டுவிடும். இது தலை மயிற்றிற்கும் மண்டைத் தோலுக்கும் கெடுதல் செய்யக்கூடியது. ஆகையால் இதைப் போக்க ஒரு வாளி நீரில் இரண்டு தேக்கரண்டி வினிகர் சேர்த்து அந் நீரால் தலையைச் சுத்தம் செய்து, மறுபடியும் கடைசியாக சுத்தமான ஜலத்தால் ஒரு முறை தலையை ஸ்நானம் செய்தல் வேண்டும்.

(2) மயிர் அதிகமாக உதிர்வதற்குக் காரணம், உடலில் போதுமான அளவு வைட்டமின் 'ஸி' இல்லாததேயாகும். வைடமின் 'ஸி' அதிகமாக அடங்கியுள்ள கொய்யா, நெல்லி, முருங்கை, பச்சைமிளகாய், கொத்தமல்லி, பசலைக் கீரை போன்றவைகளை உணவோடு அதிகமாக சேர்த்துக்கொண்டால் மயிர் உதிர்வது குறைந்துவிடும்.

(3) உதட்டு சாயத்தை மெல்லிய பிரஷினால் பூசிக்கொண்டால் அது அதிகநேரம் பளபளப்பாக இருக்கும்.

(4) சூரிய ஒளிபட்டு முகம், கழுத்து, கை போன்ற இடங்கள் கருத்துப் போயிருந்தால் தினசரி காலை மாலை இருமுறை எலுமிச்சம்பழச்சாறு கலந்த நீரால் அப்பகுதிகளைக் கழுவி வரவேண்டும். இவ்விதம் தவறாமல் தொடர்ந்து செய்து வந்தால் படிப்படியாகக் கருமை மாறிவிடும்.

பாத்திரப் பாலிஷ்கள்

வீட்டில் உள்ள பாத்திரங்களைப் பளபளப்பாக்க "விம்" 'பிராஸோ' போன்றவைகளை வாங்கி உபயோகிப்பதைவிட நீங்களே சொந்தமாக கீழ்க்கண்ட வகைகளில் பாலிஷ்கள் தயாரித்துக் கொள்ளலாம் உங்கள் பாத்திரங்களை புத்தம் புதிதைப் போல் தக தக என மின்னச் செய்யலாம்.

(1)

மங்களூர் ஓட்டுத்தூள்	3 அவுன்ஸ்
பெட்ரோல்	14 ,,
டார்டாரிக் ஆஸிட்	1 டிராம்

பங்களூர் ஓட்டை சீமை ஓடு என்றும் சொல்லுவார்கள். இந்த ஓட்டை இடித்து துணியில் நன்கு சலித்துக் கொள்ளவும். சலித்த பவுடரோடு டார்டாரிக் அமிலத்தை முதலில் கலக்கவும், பிறகு பெட்ரோலைக் கலந்து கொள்ளவும், ஓட்டை சல்லடையில் சலிப்பதானால் 200 மெஷ் சல்லடை உபயோகிக்கவும்.

(2)

பிரசிபீடேட் சாக் டவுடர்	2 அவுன்ஸ்
மங்களூர் ஓட்டுத்தூள்	1 ,,
ஓலிக் அமிலம்	3 ,,
பெட்ரோல்	8 ,,

பெட்ரோலில் பிரஸிபிடேட் சாக் பவுடர் ஓட்டுத்தூள், ஓலிக் அமிலம் மூன்றையும் கலந்து கொள்ளவும்.

(3)

எட்டவுன்ஸ் ஒலிக் அமிலத்தோடு எட்ட வுன்ஸ் பெட்ரோலைக் கலந்து கொள்ளவும். பிறகு அவற்ருேடு கால் அவுன்ஸ் எடை உள்ள ஸ்டியரிக் அமிலத்தை ஒரு ஜல பாத் திரத்தில் வைத்து உருக்கி ஒன்ருகக் கலந்து கொள்ளவும். கடைசியாக இவற் ருேடு ஒரு அவுன்ஸ் பிரஸிபிடேட் சாக் பவுடர் கலந்து கொள்ளவும்.

வீட்டிற்கு விருந்தினர் வந்திருக்கும் போது, கல்யாணம் கார்த்திகை, பண்டிகை போன்ற சமயங்களில் பாத்திரங்களை பள பளப்பாக வைத்துக்கொள்ள நாம் விரும்பு வது இயல்பு. அக்காலங்களில் இந்த பாலிஷ்களை சொந்தமாக உடனுக்குடன் தயாரித்து உபயோகிக்கலாம். இதில் பெட் ரோல் கலந்திருப்பதால் தயாரித்து வைத் துக் கொள்ளுவதானுல் காற்றுப் புக முடி யாதபடி பாட்டில்களில் பத்திரப்படுத்தி வைப்பது நல்லது. இல்லாவிடில் பெட் ரோல் எல்லாம் ஆவியாகப் போய்விடும்.

குழந்தை வளர்ப்பு

குழந்தைகளுக்கு பூண்டு, வெங்காயம், ஏலம், கிராம்பு, மிளகாய் போன்ற கார மான வாசனைப் பொருள்களை எப்பொழு திலிருந்து உணவோடு சேர்த்துக் கொடுக் கலாம் எனப் பலருக்குத் தெரிவதில்லை. பெரும்பாலானவர் பால் குடியை நிறுத்தி யதுமே எல்லாமே உணவோடு சேர்க்கத் தொடங்கிவிடுகின்றனர். இது மிகவும் தவறு.

குழந்தைகளின் ஜீரண உறுப்புக்கள் மிகவும் மிருதுவானவை. வயது வந்தவர் களுக்கு உள்ளதைப் போல் அவை உறுதி பெற்றிருப்பதில்லை. ஆகையால் அந்நிலை யில் அவற்றிற்கு காரமான பொருள்கள் கலந்த உணவைக் கொடுப்பதால், அவை அளவுக்கு அதிகமாக தூண்டப்பட்டு கெட் டுப்போக ஹேது உண்டு. நம் நாட்டில் வயது வந்தவர்களில் ஜீரணக் கோளாறு களால் அவதிப்படாதவர்களே இப் பொழுது பார்ப்பதென்பது அரிதாக இருக்கிறது. இவ்விதம் ஜீரணக் கோளாறு நம்மவர்களுக்கு அதி கமாக இருப்பதற்கு பிரதான காரணங் களில் ஒன்று சிறு பிராயத்தில் தெரியாத குறையால் பெற்ருேர்கள் காரமான உண வைக் கொடுத்து, ஜீரண உறுப்புகளை பலவீனப் படுத்திவிட்டதேயாகும்.

மேலே கூறிய காரமான வாசனைப் பொருள்கள் ஜீரண உறுப்புக்களைத் தூண் டும் இயல்புடையவை. வயதான காலத் தில் ஜீரண உறுப்புக்கள் தளர்ந்து, சரி யாக இயங்காதிருக்கும்போது, இந்தப் பொருள்கள் அவற்றைத் தூண்டுவதற்குத் தேவையே. ஆனுல் தூண்டுதல் எதுவும் தேவையில்லாத சிறுவயதிலேயே கண் மூடித்தனமாக இவற்றை குழந்தைகளின் உணவோடு சேர்ப்பதால், தீமை தான் ஏற்படுகிறதே தவிர, நன்மை எதுவும் ஏற்படுவதில்லை.

ஆனுல் பெரும்பாலான குழந்தைகள் தங்களுக்கு அளிக்கப்படும் உணவு கமகம என வாசனையாக இருந்தால் தான் பிரிய மாகச் சாப்பிடும் இப்படிப்பட்ட குழந்தை களுக்கு பெரியவர்களுக்குச் சேர்க்கும் அளவில் கால் பங்கு வேண்டுமானுல் இப் பொருள்களைச் சேர்க்கலாம், ஏழாவது வயதில் பல் விழுந்து முளைக்கும் வரை கூடுமான வரை இவ்வித வாசனை கலந்த உணவுகளை குழந்தைகளுக்குக் கொடா திருப்பதே நல்லது. இந்த ஒரு விஷயத்தில் நாம் கவனம் செலுத்தினுலே பிற்காலத்தில் நம் குழந்தைகளுக்கு ஏற்படக்கூடிய வயிற் றுக் கோளாறுகளில் முக்கால் வாசியை வராதே தடுத்துவிடலாம்.

சமையற் கலை

எள் லட்டு!

எள்ளினுல் லட்டு செய்யலாம். செய் முறையும் மிகச் சுலபம்தான். எள்ளை நீரில் நனைந்து தோல் போக்கி உலர்த் திக் கொள்ளவும். இப்படி உலர்த்தி எடுத்த எள் எவ்வளவிருக்கிறதோ அதே அளவு பால்கோவா வாங்கிக் கொள்ளவும். எள்ளை அடுப்பேற்றி சிவக்க வருத்து, சுடச்சுட உரலில் போட்டு நயமான பவுட ராக இடித்துக் கொள்ளவும். பிறகு கோவா வைத் தனியாக சிவக்க வருத்தெடுத்துக் கொள்ளவும். இடித்த எள் பவுடரில் கோவாவைக் கலக்கவும். அதோடு சர்க் கரையையும் இடித்துக் கலந்து லட் டாக உருட்டிப் பிடிக்கவும். பிஸ்தா பருப்பு, முந்திரிப்பருப்பு கிஸ்மிஸ்ஸும் சேர்த்துக் கொள்ளலாம். வாசனைக்காக

ரோஸ் வாடரும் தெளித்துக் கொள்ளலாம். கால்படி எள்ளுக்கு கால்படி சர்க்கரை சேர்க்க வேண்டும். 5 தோலா முந்திரிப் பருப்பும் சேர்த்துக் கொள்ளலாம்,

முள்ளங்கி லட்டு

இது உடம்புக்கு நல்லது. வயிற்றுக் கோளாறுகளைப் போக்கி பசியையும் தூண்டக் கூடியது. இதைத் தயாரிக்க கீழ்க் கண்ட பொருட்கள் தேவைப்படும்.

முள்ளங்கி	...	2	ராத்தல்
நெய்	...	2	,,
ரவை	....	1	,,
கடலை மாவு	....	½	,,
கோவா	....	1	,,
சர்க்கரை	....	2	,,

கடலைமாவு ரவை இரண்டையும் சிறிது நெய்யும் வெந்நீரும் சேர்த்துப் பிசைந்து மூடிவைத்து விடவும். முள்ளங்கியை தேங்காய் துருவி அல்லது இதற்கென்று விற்கும் கட்டையால் சீவி தூளாக்கிக் கொள்ளவும். இப்படிச் சீவிய முள்ளங்கியை அடுப்பேற்றி லேசாக வதக்கவும். ரவையையும் கடலை மாவையும் ஒரு சல்லடையில் வைத்துத் தேய்த்து உதிர்த்து வாணலியில் நெய்விட்டு பொன்நிறமாக வருத்தெடுத்துக் கொள்ளவும். இப்படி வருத்தெடுக்கும்போது வாணலியிலேயே அதோடு பால் கோவாவையும் சேர்த்துக் கொள்ளலாம். வதக்கிய முள்ளங்கியையும் பொன் நிறமாக வறுத்துக் கொள்ளவும். பிறகு சர்க்கரையை இரண்டிழைப்பாகாகக் காய்ச்சி அதில் ரவை, கடலைமாவு, முள்ளங்கி முதலியவைகளைச் சேர்த்து கிளரி லட்டாக உருட்டிக் கொள்ளவும். விருப்பம் போல் முந்திரி, கிஸ்மிஸ் சேர்த்துக் கொள்ளலாம். வாசனைக்கு ஏலக்காயும் சேர்க்கலாம்.

பம்பாய் லட்டு

மராட்டியர்களிடையே மிகப் பிரபலமாக உள்ள இந்த லட்டைத் தயாரிக்க கீழ்க் கண்ட பொருட்கள் தேவை.

கடலைப் பருப்பு	...	கால்படி
பாசிப்பருப்பு	...	,,
ஜிலேபி பருப்பு	...	,,
தேங்காய் துருவல்	....	,,
நெய்	...	முக்கால்படி
சர்க்கரை	....	இரண்டுபடி

மூன்று பருப்புகளையும் தனித் தனியே 4 மணி நேரம் ஊறவைத்து அம்மியில் தனித் தனியே அரை குறையாக அரைத்துக் கொள்ளவும். வாணலியில் நெய்விட்டு மூன்று பருப்புகளையும் தனித் தனியே வருத்தெடுத்துக் கொள்ளவும். சர்க்கரையை இரண்டிழைப்பாகாகக் காய்ச்சி அதில் வருத்தெடுத்து வைத்துள்ள பருப்புகளை ஒன்றன்பின் ஒன்றுகப் போட்டுக் கிளரி முந்திரிபருப்பு, ஏலக்காய், கிஸ்மிஸ் சேர்த்து அடுப்பை விட்டிறக்கி ஆறியதும் லட்டுகளாக உருட்டிக் கொள்ளவும்.

யார் சொல்வது சரி? (விடை)

(1) இருவர் சொல்வதும் தவறு. 1694ல் வில்லியம் பீட்டர் என்னும் பிரிட்டிஷ் கொள்ளைக்காரன் ஒருவன் ஏற்படுத்தியது 'பாங்க் ஆப் இங்கிலண்டு'' என்பது. 1658 பிரிட்டனில் ஒரு குடியானவன் மகனுகப் பிறந்த அவன் பஹாமா தீவுக்கு ஓடிப்போய் கடற் கொள்ளைக்காரனுக மாறினன் இவ விதம் கொள்ளையடித்துச் சேர்த்த பணத்தைக் கொண்டே அவன் மேற்படி பாங்கை ஆரம்பித்தான். 1719ல் தனது 61 வயதில் அவன் இறந்தான். கொள்ளைக்காரனுக இருந்தாலும் அவன் தன் நாட்டுக்குச் செய்த சேவையைப் பாராட்டி அக்காலத்திய ஸ்காட்டிஷ் பார்லிமெண்ட் தீர்மானம் நிறைவேற்றியதோடு 18214 பவுன் அவனுக்கு வெகுமதியும் அளித்தது.

(2) ராமகுமாரி சொல்வதே சரி பிரிட்டிஷ் கெஜம் 0 914, 397,2 மீட்டர், கானடாகெஜம் 0.9144 மீட்டர், அமெரிக்கா கெஜம் 0.914,401,83 மீட்டர் நீளமுள்ளதாகும்.

(3) இருவர் சொல்லுவதும் சரியல்ல. உத்தர கண்டம் என்பது ஹரித்துவாரத்துக்கு வடக்கே உள்ள இமயமலைப் பிரதேசத்திற்கு வழங்கும் பெயராகும். இந்த உத்தர கண்டத்திலேயே பத்ரிநாத், கேதார்நாத், கங்கோத்ரி, யமுனேத்ரி ஆகிய தீர்த்த ஸ்தலங்கள் உள்ளன.

எத்தனை பேர் (விடை)

ஒருமர நிழலில் 5 பேர், மற்றெரு மர நிழலில் 7 பேர். மொத்தம் 12 பேர்.

8. ஓங்கி ஒரு குத்து

புரண்டு படுத்த துரைசாமி சிரித்தார். ஆகா! இந்த சிங்காரி நம் வலக்கையில் புகுந்தாலும் புகுந்தாள் என்னபாடு படுத்தி விட்டாள். அவளால் எவ்வளவு இரவுகள் தூக்கமின்றிக் கழிந்திருக்கின்றன.

கட்டிலின் சுருள் கம்பிகள் வாய்விட்டு அலறின, வெல்வெட் மெத்தை சுருங்கிக் கொண்டு சூடேறிப் பதைத்தது, அதன் மெல்லிய உறை ஈரமாயிற்று. அவர் அடிக்கடி புரண்டு புரண்டு படுத்தார். அடிபட்ட மனைவி அடித்த கையைத் தடவிக் கொடுப்பது போல் அந்த மெத்தை அவர் உடலைப் பல வகையிலும் மெல்லெனத் தடவிக் கொடுத்தது. அவர் உள்ளம் கற்பனைகள் கருத்துக்கள், கதைகளின் படுகளமாய்ப் புழுதி எழுந்தது, கண்கள் எரிய ஆரம்பித்தன.

எழுதிய கதையைச் சாய்வு நாற்காலியில் மல்லாந்து படுத்துப் படிக்கிறார்கள்; படுக்கையில் குப்புறப் படுத்துப் படிக்கிறார்கள்; இரவு போவது தெரியாமல், இருக்கும் வேலைகள் நினைவு இல்லாமல் படிக்கிறார்கள். இன்பம் பெறுகிறார்கள். பாராட்டக்கூட மனம் வராமல் குறை கூறவும் முன்வந்து விடுகிறார்கள். அவர்கள் கதை எழுதுகிற கலைஞன் வாழ்க்கையின் உண்மை வேதனையை, உடல்படும் சங்கடத்தை, உள்ளம் நோகும் உண்மையை எவ்வளவு தூரம் அறிவார்கள்? கதை எழுத ஆரம்பித்ததிலிருந்து முதன் முதல் இழப்பது கண்கள் தம் தூக்கத்தை, எவ்வளவு இரவுகள் தூக்கமின்றிக் கழிக்க நேர்ந்து விடுகின்றது.?

நொந்து பழக்கப்பட்ட உள்ளம் எதைக் கண்டாலும் நொந்து விடுகிறது. கற்பனைக்கு நோகும் உள்ளம் உண்மைக்கு நெகிழாமல் இருக்குமா?

கடிகாரம் உர் என்று சத்தம்விட்டது. துரைசாமியின் காதுகள் நிமிர்ந்து நின்றன. ஒன்று, இரண்டு, மூன்று.. அத்துடன் நின்று விடும் என்று நினைத்தார் அவர். அது நான் கடித்தே ஓய்ந்தது.

சரி தூங்காத இரவுகளுடன் இன்று ஒன்று என்று எண்ணினார். மீண்டும் அவருக்கு முன் ஒரு இரவு நினைவு வந்தது. கற்பனை, கனவு, வாழ்க்கையின் உண்மை மூன்றும் கலந்த அந்தக் கனவை அவர் மனக்கண் முன் பாய்ந்து நிறம் காட்டிற்று.

"அன்பே, வாருங்கள்"

"கனிரசமே! நீ பேசினாலும் இனிக்கிறது பேசாதபோனாலும்...!"

"இனிக்கிறது அதுதானே! இதோ இந்த வேப்பங்காய் மாதிரி!" என்று சொல்லி அவள் சிரித்தாள். இதில் சிரிப்பதற்கு என்ன இருந்ததென்று அவருக்குப் புரியவில்லை.

"ஏன் சந்தேகப்படுகிறாய்?" என்று கேட்டார் அவர். இருவரும் தனியாக ஒரு சோலையில் தனியாக இருந்தனர். அக்கம் பக்கத்தில் யாருமே கிடையாது. நாவல் மரத்தில் ஓடி ஏறும் ஓணான், அத்தி மரத்தில் தாவிக் குதிக்கும் அணில், சரசர என்று ஓடிக்கொண்டிருக்கும் அரணை இவைதான் அவர்களைக் கவனிக்க முடியும். மேலே பறவைகள் சில மரங்களின்மேல் இருந்தன உண்மை. ஆனால் அவை இரட்டை இரட்டையாய் அமர்ந்திருந்தபடியால் இவர்களைக் கவனிக்க அவை தயாராயில்லை.

"வா இப்படி அமரலாம்!" என்றார், துரைசாமி.

அவள் தயங்கினாள்.

பெரிய அரசமரம் ஒன்று அந்தச் சோலையின் நடுவே இருந்தது. அது புதிதாக நகர சபையாரால் 'பார்க்' ஆக்கப்பட்டுவரும் இடம். நகருக்கு நடுவே முக்கோணமாகக் கொஞ்சம் இடம் இருந்தது. அதன் நடுவே ஒரு அரச மரம் நன்றாகக் கிளைவிட்டு செழுங்கிளை தாங்க எதிர்பார்க்கப்படும் செல்வந்தர்போல் கொழு கொழு என்று வளர்ந்து இருந்தது. அதன் கிளைகள் மிகவும் நீண்டு வளர்ந்திருந்தன. கொப்பும் கிளையுமாய் அது வளர்ந்திருக்கவே அநேக பறவைகள் குடி ஏறின. அவை எல்லாம் முதலில் கிராமத்தில் இருந்தவைதான். கிராமங்கள் எல்லாம் குன்றிவிடவே பட்டண மோகம் உள்ள சில பறவைகள் தங்கள் பேடைகளை அழைத்துக்கொண்டு வந்தன. வசதியாக இந்த அரச மரம் நகருக்கு நடுவே இருக்கவே எல்லாம் சுகமாகக் குடியேறின. "பட்டணவாசம் பலே ஜோராக!"க் காணப்படவே, அவை அங்கேயே தங்கிப் பெருகி வாழ்ந்தன. அநேகம் பறவைகளுக்குச் சொந்த ஊரே மறந்துவிட்டது. பம்பாய்க்குப்போன தென்னிந்தியர்கள் மாதுங்கா, சயான், தாதர் பகுதிகளைத் தாம் பெற்ற பிள்ளைகளாலும் ஊரிலிருந்து அழைத்துவந்த உறவினர்களாலும் நிறைத்து வைத்திருப்பதுபோல் இந்தப் பறவைகளும் மரத்தை அடைத்துக்கொண்டன. இரவில் பார்த்தால் இலைகளா பறவைகளா என்று தெரியாதவண்ணம் அவை நிரம்பி வழிந்தன. இந்த அழகில் அவைகளுக்கும் பல சாதிகள் வேறு. கழகங்கள் அமைத்துச் சில சமயம் உரக்கவும் சில சமயம் மௌனமாயும் சண்டையிட்டு ஊரை நாசம் செய்யும் மனிதர்கள் போல் அவைகளும் அடிக்கடி ஆர்ப்பாட்டம் செய்ய ஆரம்பித்தன. ஆனந்த ஆரவாரமோ, சண்டை ஆர்ப்பாட்டமோ, உற்சவ வெறியோ, சொல்ல முடியாது, நமக்கு அவற்றின் மொழி தெரியாது. ஆகவே நிச்சயமாய்க் காரணம் சொல்ல முடியவில்லை. அது எதுவாய் இருந்தாலும் இந்தப் பறவைகள் இரவு நேரத்தில் போட்ட சத்தம் ஒரு மைலுக்கு அப்பால் உள்ளவர்களையே அலறிப்புடைத்து எழவைத்துவிடும்; தூக்கத்தை வராமலேயே விரட்டிவிடும். பட்டணக்கரையிலா கேட்கவா வேண்டும்? நெருங்கி நெருங்கி வீடுகள். வீடுகளில் மனிதப் பறவைகள் வாழ்கின்றன. பாவம்? மனிதப் பறவைகளும் சத்தம் போடும். ஆனால் அவற்றிற்குப் பட்சிகளின் குரலை அடக்கவோ, அவற்றை விரட்டவோ செய்யுமாறு சத்தம் எப்படிப் போடமுடியும்? சங்கடம் தாளாத அவர்கள் முனிசிபாலிட்டியாருக்குப் பெடிஷன் போடுவது தவிர வேறு வழியில்லை.

* * *

அன்று ஆபீசுக்கு வந்தவுடன் கமிஷனர் எசமான் நேராகக் "கான்பரென்ஸ் ரூமு"க்குச் சென்றார். ஒவ்வொரு பகுதித் தலைமை அதிகாரியான எல்லா அதிகாரிகளும் ஏற்கனவே வந்து குழுமியிருந்தனர். கமிஷனர் அரைமணி நேரம்தான் தாமதமாக வந்திருந்தார். ஆகவே மன்னிப்புக் கேட்டுக்கொள்வது அவசியமில்லை என்று தோன்றிற்றுபோலும்; கேட்டுக்கொள்ளவில்லை.

வந்த உடனே அவர் அலுவலகத் தலைமைக் குமாஸ்தாவின் பக்கம் பார்வையைச் செலுத்தினார். செலுத்திக்கொண்டே கொஞ்சம் நிமிர்ந்து உடலை இடது பக்கம் சாய்த்து, அவர் தன் கையை வலது சட்டைப் பையில் செலுத்தி ஏதோ ஒன்றை எடுத்தார். அது ஒரு சாவி. மிகவும் மரியாதையாகக் கைகளை நீட்டிக்கொண்டிருந்த தலைமைக் குமாஸ்தாவிடம் அவர் அந்தச் சாவியைக் கொடுத்தார். அவர் சாவியை எடுத்துக்கொண்டு வெளியே போனார், திரும்பி வரும்போது சுமார் பத்து கடிதங்களை உடன் எடுத்துவந்தார். அவை எல்லாம் நகரவாசிகள் எழுதி அனுப்பியிருந்த புகார் கடிதங்கள்.

அவற்றை வாங்கி ஒவ்வொன்றாகப் படித்தார் அவர். "எல்லாமே அதுதான்" என்றார். உடனே கமிஷனர் "இதை எவ்வாறாவது தீர்த்துவிட வேண்டும்" என்று 'டவுன் பிளானிங் இலாகா' அதிகாரியைப் பார்த்தார். அவர் 'கிளைகளை வெட்டிவிடலாம்' என்று சொன்னவுடன் எல்லோருமே தலையசைத்தனர். அவர்கள் தலையசைப்பு இந்த அரசமரத்தின் தலையிலுள்ள கிளைகளின் கழுத்தில் கோடாரியாகவும், அரிவாளாகவும் விழுந்தது. அன்று இரவிலிருந்து அந்த

வட்டாரத்திலிருந்து பட்சிகளின் அலரல் வெளியே கேட்டதில்லை, எல்லோரும் தூங்க வாவது தூங்கினார்களா? சத்தத்திற்கிடையே தூங்கிப் பழக்கப்பட்டவர்களா? மீண்டும் மௌனத்துக்கிடையே தூங்கப் பழக்கிக் கொள்கிறவரையில் சங்கடந்தான் பட்டார்கள். அது போகட்டும், திடீர் என்று மின் நின்றுவிட்டால் ஊர் மாற்றிவிடும் தொழிலாளிகள் போலப் பறவைகளும் எங்கோ சென்றுவிட்டன.

அந்த அரசமரத்தைச் சுற்றி இரும்பு வேலி அமைந்தது. 'நாம் என்ன குற்றம் செய்தோம்' என்று அரசமரம் அழவில்லை. மனிதர் குற்றம் செய்தால் சிறைக்கு அவனை அனுப்பலாம். மரம் குற்றம் செய்தால் சிறையைத் தானே அதற்கு வெளியே அதைச் சுற்றி அமைக்கவேண்டும்! என்றெல்லாம் எண்ணிக் கண்ணீர் சொரியாமல் அது மரமாய் நின்றது; மொட்டை மரமாய் நின்றது.

அந்த மரத்தைச்சுற்றிலும், அந்த வேலிக்கு உள்ளடங்கி அமைந்திருந்த அந்தப் பார்க்குக்குள்ளேதான் அவர்கள் இருவரும் வந்திருந்தார்கள். ஏன் அதற்குள் வந்தார்கள் என்று அவருக்குத் தெரியவில்லை. மிகவும் இனிய நல்ல இடங்கள் பல இருந்தன. தனிமை இனிமைபெறச் செய்யும் சிறந்த இடங்கள் இருந்தும் அவர்கள் ஏனோ இங்கே வந்திருந்தார்கள்? அதுமட்டுமல்ல, அவர் ஏனோ இங்கே 'பார்க்' ஏற்பட்ட விதத்தையும் விஸ்தாரமாக நினைத்துக்கொண்டார். அதனுல்தான் இவ்வளவையும் சொல்லிக் கதை படிப்பவர்களைத் தொந்தரவு செய்யவேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டது நமக்கு!

'வா போகலாம்' என்று அழைத்தார் அவர் 'வாருங்கள் போகலாம்!' என்று அழைத்தாள் அவள். ஆனுல் அவர் அழைத்தது அரசமரத்தின் கீழே இருந்த சிமெண்டு மேடைக்கு, அவள் அழைத்தது வெளியே.

அவள் இன்னும் நாணப்படுகிருள்! என்று நினைத்தார் அவர்.

'ஏன் இன்னும் இந்த மொட்டு மலரவில்லை?' என்று அவர் உள்ளம் அவர் மனதைக் குடைந்தது. திறந்ததே இல்லையா? திறந்து மூடியது, மறுபடியும் திறக்காதா?

'ஏன் அவசரப் படுகிருய்? அங்கெல்லாம் தான் அது இது என்று காரணம் சொல்லி ஏமாற்றி விடுகிருய், ஓடி விடுகிருய்! இங்கே தான் ஒருவருமில்லையே !

'ஊம்! எனக்கு என்னவோ பயமாயிருக்கிறது!'

'என்ன பயம்! காரணமில்லாமல் பயப்படுவது எனக்குப் பிடிக்கவில்லை. வா போகலாம். கொஞ்சநேரம் உட்கார்ந்து பேசி விட்டுப் போகலாமே!'

அதற்கென்ன பொருள்? வெறும் பேச்சுடன் நிறுத்தக் கூடாது என்று சொல்கிருளா? இருந்தாலும் அதைக் கேட்க இன்னம் பழக்கம் போதாது என்று எண்ணினார் அவர். அவசரப்பட்டுக் காரியத்தைக் கெடுத்துக் கொள்ள அவர் விரும்பவில்லை ஆகவே, 'கண்ணே! உட்கார்ந்து பேசுவதில் உள்ள இன்பம் நடந்து கொண்டே பேசுவதில் இருக்காது வா!' என்று கொஞ்சம் பிடிவாதம் காட்டவே, இருவரும் சென்று அமர்ந்தனர். அப்பொழுதும் அவள் உட்காரத் தயங்கினாள். அவர் அவளை வலுக்கட்டாயமாய் அமர்த்தி வைத்தார், பிறகு ஏதோ நினைத்தவர் போல் அப்பாற் போனுர்.

'எங்கே போகிறீர்கள்?' என்று சிணுங்கினுள் அவள்.

'அது அவருக்கு இன்பமாயிருந்தது.'

'எங்கேயும் இல்லை என் கிளியே! ஒரு ரோஜா மலர் பறித்து வருகிறேன்.!

'இங்கே பறித்தால் தோட்டக்காரன் வையமாட்டானு, வேண்டாம், வாருங்கள்!'

'வேலைக்காரனு? என்னையா? அப்படியே வைதாலும் நல்லதுதான்!'

'எதனுல் நல்லது என்கிறீர்கள்!'

'வந்து சொல்கிறேன்!' என்றவர் அப்பால் ரோஜாச் செடிகள் இருந்த பகுதியை நோக்கிப் போனுர், போகும்போதே தனக்குள் எண்ணிக் கொண்டே போனுர்.

'இது நல்ல அனுபவம்தான். நாகரத்தினம் காட்டின நாணத்தில் ஒரு வகை இனிமை இருந்தது, அப்பொழுது அடிப்படையில் நம்முடைய உரிமைப் பொருள் என்றும் மடக்கி விடலாம்! என்ற உரிமை எண்ணம் அந்த இனிமையின் முழு அளவையும் அனுபவிக்க விடவில்லை. இவளிடம் நமக்கு உரிமை இல்லை. அவள் இதய மலரும் முழுவதும் திறக்கவில்லை. ஒரு முறை திறந்து பாதியிலேயே சாத்தப்பட்ட கதவு, உள்ளேயும் அவள் தாளிட்டுப் பழக்கி விட்டாள் வெளியேயும் உறவினர்களும் சமூகமும் நன்கு தாளிட்டு வைத்திருக்கிறது. வெளித்தாளை உடைக்கவே இவ்வளவு நாளாகிவிட்டது! அப்பப்பா! எவ்வளவு பிரயாசை! இருந்தாலும் இதில் ஒரு இனிமை இருக்கவே செய்கிறது. ஆகவே விடக்கூடாது, அவள் கையாலேயே உள்தாளைத் திறக்கச் செய்தாக வேண்டும்!' என்று மனதில் முடிவு செய்து கொண்டார்.

ரோஜாப் பாத்திகளிடம் வந்தவர், மலர்ந்திருந்த மலர்களைப் பார்த்தார். ஒரு ரோஜா மலர் நல்ல சிகப்பு நிறம் கொண்டு மலர்ந்து பெரிதாக இருந்தது. பச்சை இலைகள் பின்னணியில் இருந்து, அதன் அழகை அதிகப்படுத்தின. முட்கள் பின்னுல் இருந்து அதன்

மதிப்பை உயர்த்திக் கொண்டிருந்தன. அதைத்தான் பறிக்க வேண்டும் என்று அவர் முடிவு செய்தார்.

முடிவு செய்தவுடனேயே உள்ளத்தில் ஒரு பரபரப்பு ஏற்பட்டது. கையை நீட்டிக்கொண்டே லவுக்கென்று குனிந்தார்.

'ஊம்'

இது என்ன?

குனிந்த அவர் முதுகில் ஓங்கி ஒரு குத்து விழுந்தது.

9. சொப்பனம் அப்பா!

'நம்மைத் குத்துவது யார்?' என்று எண்ணிய அவர் திரும்பிப் பார்த்தார். அவர் தூக்கம் கலைந்து, கனவும் கலைந்து, கண்கள் விழித்துக் கொண்டன.

பார்த்தார் - பக்கத்தில் படுத்துக் கொண்டிருந்த அவர் பையன் அமிர்தலிங்கம் எழுந்து, அமர்ந்து கொண்டு பேந்தப் பேந்த விழித்துக் கொண்டிருந்தான்.

கோபம் ஓங்கி வந்தது துரைசாமிக்கு.

வெகு நாட்களுக்குப் பிறகு சில நாட்களாகத்தான் அவர் தம் மகனை தம் அருகே படுக்கவைத்துக் கொண்டிருந்தார்.

முதல்நாள் இரவு நடந்தது அவருக்கு நினைவுக்கு வந்தது. அதை அடக்கிக் கொண்டு 'ஏண்டாலே! ஏன் குத்தினே?' என்றார் தன் மகனைப் பார்த்து.

பேந்தப் பேந்த விழித்து அப்பொழுதே நிறுத்திய அவன் 'அப்பா உங்களையா குத்தினேன்? என்றான்.

பின்னே என்ன உங்க ஆத்தாளையா குத்தினே? அவள்தான் உலகம் தெரியாமே தூங்கிக் கிட்டிருக்காளே!'

'அப்படியா அப்பா மன்னிச்சுக்குங்க அப்பா, மன்னிச்சுக்குங்க!'

'என்னடாலே இது. ஏதாவது சொப்பனம் கண்டியா? ஆமாம் அப்பா!'

என்ற அவன் அப்படியே சுருண்டு படுத்துத் தூங்கி விட்டான்.

அவனை அணைத்துக் கொண்டார் தந்தை.

வெகு நாட்கள் கழித்து அமுர்தலிங்கம் அன்று இரவு அப்பாவிடம் வந்து நின்றான்.

'ஏண்டாஅமுர்தலிங்கம் படித்துவிட்டாயா?

'படித்து விட்டேன் அப்பா!'

'பால் கொடுத்தாங்களா அம்மா?'

'கொடுத்துட்டாங்க அப்பா!'

'சரி போய்ப் படுத்துக் கோயேன்!'

'வந்து அப்பா வந்து...

அவன் ஏதோ சொல்ல வந்திருக்கிறான் என்று எண்ணினார் அவர். பேனாவையும் மூடி வைத்துவிட்டு அவர் அவனிடம் பேசத் தயாரானார்.

'என்னடா அமுர்தம்...!'

'அப்பா அக்கா சொல்லுது...!'

'அக்கா சொல்லுதா, அம்மாவா?

'அம்மா இல்லைப்பா. ரஜனி அக்காதான் சொல்லுது.

'என்ன சொல்லுது!"

"உனக்கு, அப்பா, எங்கிட்ட ஆசையேயில்லையாம்!'

துணுக்கென்றது அவருக்கு.

இந்தக் குழந்தைகள்கூடக் காணும்படியா அவர் மாறிவிட்டார். அப்படியானால் நாகரத்தினத்துக்குமட்டுமா தெரியாமல் இருக்கிறது? அல்லது அவளே தெரிந்துகொண்டும் மறைத்துக் குழந்தைகளிடம் சொல்லியிருக்கிறாளா? ஏதோ பெண்கள் உள்ளத்தைத் திறந்த புத்தகம் படிப்பதுபோல் அறிந்து கொண்டிருக்கிறார் என்று ரசிகர்கள் எழுதுகிறார்களே! அதெல்லாம் பொய்தானே! அவள் உள்ளத்தைமட்டும் என்னால் கண்டுபிடிக்க முடியவேயில்லையே!

சிந்தனையைத் தடை செய்தது நாகரத்தினத்தின் குரல்.

"ஏ அமுர்தலிங்கம், வாடா. அப்பா கதை எழுதுவாங்க, தடை செய்யாதே!"

"ஏய் நாகம், வா இங்கே!"

கொஞ்சும்போதுதான் துரைசாமி அப்படிக் கூப்பிடுவது வழக்கம், நாகமா இருந்து சுற்றி நாகத்தின் கடியிலிருந்து காப்பாற்றியவள் அவள் என்ற அமுத நினைவு அந்த நாகம் என்ற சொல்லில் அமிழ்ந்திருந்தது.

"ஏன்? என்ற அவள் கையில் பாலையும் எடுத்துக்கொண்டு உள்ளே வந்தாள்."

"பால் இருக்கட்டும்! நீ இப்படி உட்கார்."

"ஏன்?" அவள் அருகே வந்தாள். கொஞ்சம் நெருங்கியே நின்றுகொண்டு எதற்குக் கூப்பிட்டீங்க?

சற்றுநேரம் அவளைப் பார்த்தார் அவர். வயது முப்பதே இருக்கும் அவளுக்கு. ஆனாலும் வாழ்க்கைப் பாதையில் கொஞ்சமே நடந்திருந்தாலும், பாதையின் பொல்லாத் தன்மையால் களைப்படைந்திருக்கிறாள்போல் காணப்பட்டாளு அவள்.

ஆனால் முகத்தில் ஒரு அமைதி இருந்தது. அதன் ஆதரவிலும் அரவணைப்பிலும் எழுந்து வளர்ந்த ஒரு அழகும் இருந்தது. அகன்ற நெற்றியில் இடப்பட்டிருந்த சாந்துப் பொட்டு, முகத்தைச் சந்திரன் உவமைக்குத் தயார் செய்து வைத்திருந்தது. இப்பொழுதும் அவள் களைப்படைந்த கண்களில் ஒரு சிறுபிள்ளைத்தனமும் கபடமற்ற வெளளைத் தன்மையும் பளிச்சிட்டு நின்றன. தாகம் கொண்டவன் தண்ணீர் சாப்பிட்டவுடன் காணப்படுவதுபோல் அவள் அழகு களைப்படைந்தும் காற்று உண்ட வழிப் போக்கன்போல் நிமிர்ந்திருந்தது. அவள் கண்களைப் பார்த்தார் அவர். அவள் கண்களில் உஷாவின் கண்களின் ஆழம் இல்லை. மங்களத்தின் கண்களின் மேடு இல்லை.

"என்ன அப்படிப் பாக்கிறீங்க!"

அவர் விழித்துக்கொண்டார்.

"எதுக்குக் கூப்பிட்டீங்க?"

"அதுவா, உன் அமுதம் என்ன சொல்கிறான், கேட்டாயோ? அவன் என்மேல் குற்றம் சாட்டுகிறான்."

"எலே! என்னடா சொன்னே அப்பாவை? அப்பா பெரிய எழுத்தாளரடா! பெரிய பெரிய போலீஸ்காரர் மனைவி எல்லாம் போற்றும் பெருமையடா அவருக்கு. ஏதாவது சொல்லி வைக்காதே" என்று சிரித்தாள் அவள். ஒழுங்காக அமைந்திருந்த அவள் பல் வரிசையின் ஒளி அவர் உள்ளத்தில் பாய்ந்தது.

"பரிகாசம் இருக்கட்டும்! அவன் குற்றச் சாட்டு என்ன என்றுதான் கேளேன்."

"என்னடா கண்ணு சொல்றே!"

"இல்லை அம்மா, ரஜனி அக்கா சொன்னாள்—

"இல்லை, அப்பா உன்னைத் தன் அருகில் படுத்துக்கொள்ள விடமாட்டார்" என்று.

கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர். நாணத்தால் மனைவியும் குற்ற உணர்ச்சியால் புருஷனும் ஒருவர் பார்வையிலிருந்து மற்றவர் தப்ப முயன்றனர்.

அவர்கள் இருவரும் சேர்ந்து படுத்து ஆண்டுகள் பல ஆயின.

"இரவில் எப்பொழுதும் விழித்துக்கொள்வேன்; உனக்குத் தொந்தரவாயிருக்கும்!" என்று காரணம் சொல்லி அவர் ஒதுங்கினார். பல நாட்கள் சாப்பிட்ட பிறகு வெளியே போவார். இரவு எப்பொழுது வருவார் என்று தெரியாது. அவரே வந்து வாயிற் புறத்தில் பூட்டப்பட்டிருக்கும் பூட்டை இரண்டாவது சாவி போட்டுத் திறந்து மாடிக்குச் சென்று விடுவார், மாடிக் கதவை வெளிப்பக்கம் தாளிட்டுத் தூங்கச் சொல்லி உத்தரவிட்டிருந்தார் அவர். ஆகவே மாடிக்கு யாராவது திருடன் வந்தாலும் அவன் கீழே இறங்கி வரமுடியாது.

முதலில் சில நாட்கள் அவள் காரணம் கேட்டாள் 'கதை எழுதச் சினிமாப் பார்க்க வேண்டும்!' என்று அவர் காரணம் கூறிவிட்டார். சில சமயம் இதற்குமேல் நமக்குக் குழந்தைகள் வேண்டுமா? என்று அவளைக் கேட்டார். அவள் புத்திசாலி, கடைசியில் தீர்மானம் செய்து கொண்டு விட்டாள். எழுத்தாளருக்கு வாழ்க்கைப்பட்டுவிட்டு இதற்கெல்லாம் நொந்து கொள்வதில் புண்ணியமில்லை. ஏதோ இரண்டு குழந்தைகளை ஆண்டவன் கொடுத்துவிட்டார். இவைதான் நமக்குக் கிடைத்தவைபோலும்! என்று அவள் முடிவு செய்து கொண்டு தன்னைத் தயாராக்கிக் கொண்டு விட்டாள். இந்த விஷயம் குழந்தைகளுக்குப் புரிந்து விட்டதா? 'யாரையடா?' என்றார் துரைசாமி'

குழந்தை சொன்னான்.

இல்லை அம்மா, அப்பாவுக்கு எங்கள் மேல் ஆசை குறைந்து விட்டதாம்! என்னை அவர் அருகே படுத்துக்கொள்ள விடமாட்டாராம்!"

இருவரும் துணிந்து ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள்.

இறுதியில், தந்தையின் தந்தைத் தன்மைக்கு அடையாளமாகவும், தன் சூள் வெற்றி பெறவேண்டும் என்பதற்காகவும் தான் அப்பாவினிடம் படுத்துக்கொள்ள அனுமதிக்கப்படவேண்டும் என்ற வேண்டுகோளை அவள் வயதிற்கே உரித்தான பாணியில் கெஞ்சியும் கொஞ்சியும் விடுத்துக் கொண்டாள்.

"அவ்வளவுதானே" என்ற அவர், அருகே வந்து அவள் முதுகில் தட்டிக் கொடுத்தார். அதுவும் போதாதென்று அவனை அப்படியே அலாக்காகத் தூக்கிக் கட்டிலின்மேல் விட்டார். தாயின் உள்ளம் பூரித்தது. அவர் பெருமிதமும் செம்மாப்பும் குலுங்க ஒருபுத்தி மதியைச் சொன்னார். "தகப்பனும் மகனும் கீழேயே படுத்துக்கொள்ளுங்கள்" "அதுவும் சரிதான். புரண்டு கீழே விழுந்து விடுவான்!" என்று சொன்ன தந்தை தனயனுடன் அன்று கீழே படுத்துக்கொண்டார்.

அந்த விதம் வந்து படுத்துக்கொண்டிருந்தான் அவன்.

அவருக்குச் சிரிப்பு வந்தது. கட்டிலின் கீழே குனிந்து பல நாட்களுக்கு முன் தானும் தனயனும் படுத்திருந்த அந்த இடத்தைப் பார்த்தார். தொடர்ந்து அவன் குத்தின இடத்தையும் தடவிப் பார்த்துக்கொண்டார். இன்றுதான் குத்தினது போலிருந்தது. மனதின் தன்மை அப்படி!

அவர் தன் மனைவியிடம் கேட்டதும் நினைவில் நிறைந்தது.

"ஏண்டி, உன்னிடம் படுக்கிறானே இந்தப் பயல் தினந்தோறும் இப்படி அடிக்கிறானா?"

"இல்லையே! ரஜனியாவது அப்புறம் இப்புறம் புரளுவாள். காலை மேலே போடுவாள். இவன் பொட்டணம்போல் தூங்குவானே!"

"சரிதான் யாரோ அடித்ததுபோல் கனவு கண்டானும். விட்டேனா பார்!" என்று கொடுத்தானும் ஒரு குத்து.

"உங்கள் முதுகில்" என்று வாக்கியத்தை முடித்தாள் நாகரத்தினம்.

இருவரும் மனம் விட்டுச் சிரித்தனர்.

களங்கமற்ற அந்த நிலைக்கு மனது வந்தவுடன் அதிசயம் நிகழ்ந்ததுபோல் களைப்பும் ஆராட்டமும் நீங்கி, துரைசாமி தூங்கிவிட்டார்.

10. மங்கையும் மாங்கல்யமும்

மறுநாள் காலையில் அவர் எழுந்திருக்கும் போது மணி ஏழரையாகி விட்டது. மாசி மாதம் ஆனபடியால் விடியற்காலம் பனியின் மூட்டம் அப்பொழுதுதான் ஒதுங்கிக் கொண்டிருந்தது. பரிதியின் உக்கிரம் இன்னும் அதிகமாக ஆரம்பிக்கவில்லை, படுக்கையில் இருந்தபடியே முதல்நாள் இரவு தன்னை வாட்டி எடுத்து, நைத்துத் தொல்லை தந்த நினைவுகள் பெரிய நிலப்பகுதி, சிறிய அளவுப் படத்தில் தோன்றுவதுபோல் மீண்டும் மொத்தமாக நினைவுக்கு வந்தன. மரம், புல்வெளி, ஆறு, மலை, காடு, எல்லாம் எல்லா வகைப் பகுதிகளும் சிறு அளவுப் படத்தில் தோன்றினால் அது எப்படி இருக்கும்? சற்று நேரம் அவர் அதைச் சுவைத்தார், பிறகு உதறி, போர்வையைத் தள்ளி விட்டு எழுந்தார்.

படுக்கையறையைத் தாண்டி எழுந்து ஹாலுக்குள் வந்து வெளியே வர இருக்கும் சமயத்தில் அமுர்தலிங்கம் மேலே ஏறி வந்தான். "அப்பா" என்ற அவன் குரல் காதில் விழுந்ததும், 'இதோ வந்து விட்டேனடா!' என்று சொல்லிக்கொண்டே இறங்க ஆரம்பித்தார் அமுர்தலிங்கமும் முன்னால் இறங்க ஆரம்பித்தான்.

கீழே இறங்கி வந்த அவர் பல் துலக்கி விட்டுப் பலகாரம் சாப்பிட அமர்ந்தார். எவர்சில்வர் தட்டில் பூப் போன்று மிருதுவான இரண்டு இட்லிகள் அமர்ந்து அவரை வரவேற்றன. அமர்ந்த அவர் நிமிர்ந்து பார்த்தார். மிளகாய்ப் பொடியுடன் நீண்ட கைகளுக்கு உரிய அந்தச் சந்திர வட்ட முகத்தைக் கண்டார்.

நாகரத்தினம் ஸ்நானம் செய்திருந்தாள். தலை மிகவும் தொள தொள என்று நுனியில் முடியப் பட்டிருந்தது. நெற்றியில் வட்டமான குங்குமப்பொட்டு இருந்தது. முகத்தில் ஒரு எக்களிப்பு இருந்தது,

"என்ன விசேஷம் ரத்தினம்" என்றார்.

"இன்று உங்கள் பிறந்த நாளப்பா!" என்றாள் ரஜனி.

"எனக்கா, உங்கள அம்மாவுக்கா?"

ரத்தினம் அவர் முகத்தைப் பார்த்த பார்வைக்குப் பொருள் 'ஆம் எனக்கும்தான்!' என்று சொல்லும்படியாகவே இருந்தது. 'அது சரி. இப்பொழுது நானும் முழுக வேண்டும் என்று சொல்வாயோ!'

உங்கள் இஷ்டம்! எப்பொழுது வேண்டுமானாலும் செய்யுங்கள் என்றாள் ரத்தினம்.

ரஜனி—'எண்ணெய் தேய்த்து முழுகாமல் மட்டும் உங்களுக்குச் சாப்பாடு கிடைக்காது அதை தெரிந்து கொள்ளுங்கள்!' என்றாள், சிரித்துவிட்டு மேலே போய்விட்டார் அவர்.

மேலே சென்றவர் ஏதாவது எழுதலாமா என்று எண்ணினார், படிக்கலாமா என்று அந்த எண்ணத்தை ஒதுக்கினார். பேசாமல் சற்று நேரம் படுத்துக் கொண்டார். மீண்டும் எழுந்து நாற்காலியில் அமர்ந்தார். இந்தச் சேஷ்டைகளையெல்லாம் செய்து சுமார் இரண்டு மணி நேரங்கள் ஒழிந்தன. பிறகு அவர் ஒரு ஆங்கில ஆசிரியர் எழுதிய ஒரு நாவலை எடுத்து வாசிக்க ஆரம்பித்தார். மணி சுமார் பதினொன்று இருக்கும், திடீர் என்று படிப்பதை நிறுத்தினார். கண்கள் கலங்கி நீர் நிறைந்தன. துடைத்துக் கொண்டு எழுந்தார். எதையோ நினைத்துக் கொண்டு கீழே இறங்கி வந்தார்.

வரும்போதே 'ரத்தினம்!' என்று கூப்பிட்டார். இதோ வந்துவிட்டேன் என்ற சத்தம் அடுக்களையிலிருந்து கேட்டது. அவர் தன் பிறந்த நாளை மறந்து விட்டிருந்தார். அவள் குரல் அடுக்களையிலிருந்து கேட்டதும் கோபமும் வெறுப்பும் கலந்து அடித்துக் கொண்டு வந்தன.

அவருக்கு சரஸியின் ஞாபகம் வந்தது. 'சனியன் எப்பொழுதும் இப்படித்தான்' என்று முணுமுணுத்த 'அவர், என்ன செய்கிறாய் அங்கே?' என்றார்.

அவள் சலுகையுடன், ஏன் ஆண்பிள்ளை, சமையல் அறைப்பக்கம் வரக்கூடாதென்று எழுதியிருக்கிறதா?" என்று உள்ளிருந்தே இனிமையாக அதட்டினாள்.

அவர் உள்ளே சென்றார். அவள் உள்ளேயிருந்து தந்த காட்சி அவர் வெறுப்பையே அதிகமாக்கிற்று. இரக்கம் கூட அவருக்கு ஏற்படவில்லை.

அடுப்பு கன ஜோரராக எரிந்துகொண்டிருந்தது, வாணலியில் ஏதோ தள தள என்று கொதித்துக் கொண்டிருந்தது. அவள் கையில் ஒரு இருப்புத் துடுப்புடன் காட்சி அளித்தாள். வாதாம்பருப்பு, பால், நெய், பச்சைக்கற்பூரம், குங்குமப்பூ, எல்லாம் கலந்த மணம் கம்மென்று வீசி இண்டு இடுக்கு எல்லாம் நிறைந்து கொண்டிருந்தது. அடுக்களை முற்றத்தில் அமர்ந்து ரஜனியும் எதையோ வரட்டு வரட்டு என்று தேய்த்துக் கொண்டிருந்தாள். அவளும் தன் தந்தையைப் பார்த்தாள். ரத்தினமும் தன் கணவனைப் பார்த்தாள்.

துரைசாமி பார்த்தார். அவள் நெற்றி முழுவதும் வியர்வை துளித்துக்கொண்டிருந்தது. உடம்பில் கட்டியிருந்த பழம் புடவை சில இடங்களில் கிழிந்து அழுது வழிந்துகொண்டிருந்தது. அதையும் அவள் மிகவும் கவனக் குறைவாகக் கட்டிக்கொண்டிருந்தாள். ஒருபுறம் புடவை தூக்கிச்செருகி இருந்தபடியால் உள்பாவாடை அதன் அழுக்கு நிறத்தையும், ரத்தினத்தின் அசட்டையையும் தண்டோரா போட்டுக்கொண்டிருந்தது; குனிந்து நின்று இடுப்பில் பின்புறமாக இடது கையை மடித்து வைத்துக் கொண்டு, அவள் வலது கையால் அடுப்பைக் கிளறிக் கொண்டிருந்தாள். அந்த நிலையில் தான் அவள் முகத்தை மட்டும் திரும்பிப் பார்த்தாள். அந்த முகத்தில் எல்லாம் உங்களுக்காகத்தான் என்ற சமர்ப்பணத்தில் பெற்ற பெருமை கூவி எக்களித்துக்கொண்டிருந்தது.

"பார்த்தீர்களா? என்றும் கேட்டாள் அந்தப் பெண்மணி.

எதை, இதோ உன் அலங்காரத்தையா? அல்லது ஒன்றாகப் படித்து நாலுபேருக்குப் பெருமையாக வாழவேண்டும் என்று நான் வளர்க்கிற அந்தக்குழந்தையைச் சாக்கடையில் முழுக்காட்டி எடுக்கிறாயே அந்தப் பெருஞ் செயலையா? இதைப்பார்க்கத்தான் என்னைக் கூப்பிட்டாயா?

அவர் வார்த்தைகள் மிகவும் சூடாக வந்தன. அவள் அடிபட்ட நாகம்போல் துடித்து அந்தப் பக்கம் திரும்பினாள். அவளுக்கு அடுப்பு எரிவதுகூட மங்கி வந்தது! ஏதோ அனுமானத்தைக்கொண்டு இயந்திரம்போல் கிளற ஆரம்பித்தாள்.

துரைசாமி "ரஜனி!" என்று அதட்டினார்.

"ஏன் அப்பா?"

"மணி என்ன தெரியுமா?"

"பதினொன்று"

"ஏன் பள்ளிக்கூடம் போகவில்லை?"

"பள்ளிக்கூடம் போகவில்லை. லீவு எடுத்துக்கொண்டேன்."

"ஏன்?"

காலையிலே சொன்னேனே அப்பா, இன்று உங்கள் பிறந்த நாள் அப்பா. துரைசாமி சற்றுத் தணிந்தார். அவருக்குத் தன் வாழ்க்கையில் ஒரு ஞாபகம் வந்தது.

மணம் ஆன பிறகு முதல் பிறந்த நாளன்று அவர் தன் மாமனார் வீட்டுக்குப் போயிருந்தார். அப்பொழுது அவன் கல்லூரியில் படிக்கும் பையனாயிருந்தார். துரைசாமிக்கும் நாகரெத்தினத்திற்கும் கலியாணம் அவர்கள் விருப்பத்தின்படி நடக்கவில்லை. விருப்பத்தின்படி நடப்பதாயிருந்தால் இருவருக்கும் நடந்திருக்குமா என்பது ஐயத்துக்குரிய கேள்விதான். நடந்திருந்தாலும் அப்பொழுது நடந்திருக்காது.

எப்படியும் புதுமாப்பிள்ளையின் நிலை உள்ளத்தில் ஒரு குறுகுறுப்பை ஊட்டுவதாக இருந்தது. அவன் போனான். கல்லூரிக்கு இரண்டு நாட்கள் லீவு எழுதிப் போட்டுவிட்டுப் போனான். முதல் நாள் காலையிலேயே ஊருக்குப் போய்ச் சேர்ந்துவிட்டான்.

அவனுக்கு மாமனார் ஊர் புதிதில்லை. அது திருச்சி ஜில்லாவில் உள்ள ஒரு குக்கிராமம். பெயர் பந்தலடி என்பது. எதற்கு, எப்பொழுது அந்தப் பெயர் வைத்தார்கள் என்று ஒன்றும் காரணம் சொல்ல முடியாது. அந்த ஊரின் ஒரு புறத்தில் ஒரு பிள்ளையார் கோவில் உண்டு. அதற்கருகே ஒரு தாமரைக் குளம் உண்டு. அதன் கரையில் தாழம் புதர்கள் வளர்ந்து குளத்தை மறைத்துக் கொண்டிருந்தன. தாழம்

உங்களுக்கும் சினிமா நட்சத்திரங்களின் பூந் தளிர் மேனியழகு

"மேனியழகின் பராமரிப்புக்கான சாதனங்களில் மிகச் சிறந்ததென நான் கருதுவது லக்ஸ் டாய்லெட் சோப்பே; வாசனையும் சுத்தமும் மிகுந்தது அது!" என்கிருர் அழகுநட்சத்திரம் பி. சரோஜாதேவி. நவநவமான மெருகிடும் அதன் தன்மைக்கு அவரது எழில் மேனியே சிறந்த எடுத்துக்காட்டு. தூய, வெண்மையான லக்ஸ் சோப்பின் உதவியால் உங்கள் மேனியும் அதே அழகுடன் மிளிர முடியும். மறவாதீர்கள், லக்ஸ் டாய்லெட் ஸ்நானமே ஓர் இன்ப அனுபவம்!

தூய, வெண்மையான **லக்ஸ் டாய்லெட் சோப்**

சினிமா நட்சத்திரங்களின் அழகுசாதன சோப்

ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு

LTS. P. 1-X52 TM

புற்றுக்குள் நல்லபாம்பு உண்டென்று சொல்லுவார்கள்.

அந்த ஊருக்குப் போவதென்றால் இரயிலில் கரூரில் இறங்கி பஸ்ஸில் ஆறு மைல் போய் மீண்டும் மூன்று மைல் நடந்து போக வேண்டும். அந்தக் கிராமத்தில் நாட்டாண்மையாயிருந்தவர் துரைசாமியின் தாய்மாமன். துரைசாமி மதுரை ஜில்லாவில் பிறந்து வளர்ந்தவன். திருச்சி ஜில்லா கொஞ்சம் நீர் வளம் உள்ள ஊர்தான். அதுவும் பந்தலடி நீர் தாழ்ந்த பூமி. எங்கும் தோப்பும் துறவுமாக இருக்கும் நாகரத்தினம் அவனை இழுத்து வந்தாளா என்று சொல்ல முடியாது. ஆனால் அந்த ஊரில் இயற்கைத் தேவியின் பசுமையும் அழகும் அவனை இழுத்து வந்தது உண்மை. குளத்தைப் பார்க்கும் போது அவன் அந்த ஊரின் முகமாகக் கற்பனை செய்வான். தாழம்புதரை தலைமயிர்க் கற்றைகளாகக் கற்பனை செய்வான். கோயிலின் கோபுரத்தை அவள் தலையில் அமர்ந்த மகுடமாக எண்ணுவான். அவனுக்கு அந்தக் குளத்தில் நீந்துவதென்றால் பிரமாத விருப்பமாயிருக்கும்.

மாமன் வீட்டுக்கு அடுத்த வீட்டில் வளர்ந்தவள் நாகரத்தினம். நாகரத்தினத்தின் தாய் தந்தையையும், துரைசாமியின் மாமாவும் அத்தையும் மிகவும் நெருங்கிப் பழகியவர்கள். துரைசாமியின் அத்தைக்குப் பெண் குழந்தை கிடையாது. அதற்காக அவள் குறைப்பட்டது உண்டு. அதுவும் துரைசாமியைப் பார்த்த காரணத்தினால்தான் அக்குறை ஏற்பட்டது. அந்தக் குறையை நீக்க விரும்பினார். அது எவ்வாறு முடியும்? நாகரத்தினத்தைக் கொடுக்கச் செய்து அதை நிரப்ப விரும்பினாள் அவள். அந்த ஆசை அவளை நாகரத்தினத்தை மகள்போல் வளர்க்கத் தூண்டிற்று. மகள்போல் வளர்த்த குணம் துரைசாமிக்கு மணம்செய்து வைத்துப் பார்த்துவிட வேண்டும் என்று புரட்சி செய்தது. நல்லபெண், குடும்பப் பாங்கானபெண் கண்ணுக்கும் பங்கறை இல்லை. 'சொத்தும் பத்தும்' உள்ள இடம். கூடப்பிறந்தவர்களும் உண்டு, தனிக் கட்டையில்லை.' பிறகு என்ன வேண்டும்? துரைசாமியின் தாயும் தன் சகோதரனிடமும் அவன் மனைவியிடமும் நீங்கள் வளர்த்தீர்கள் என்றால், அதில் சொல்வதற்கு என்ன இருக்கிறது?' என்று சொல்லி விட்டார்கள்.

துரைசாமி பி. ஏ. முதல்வகுப்புப் படிக்கும் போது நடந்தது கலியாணம். கலியாணத்தின் போது மாட்டு வண்டிகளின் வரிசை, திருச்சியில் இருந்து வந்திருந்த இழக்குதிரை ஊர்வலம், அந்த ஊர்ப் பல்லக்கு ஊர்வலம், நாதசுரக்கச்சேரி எல்லாமே பழமையின் ரசத்தைக்கொண்டு அவன் உள்ளத்தை நிரப்பிற்று. நாகரத்தினம் அணி, உடை, நடை எல்லாமே அவளைப் பழையகாலப் பதுமையோ என்று எண்ண வைத்தன. தலையில் தாங்க முடியாமல், கழுத்தில் சுமக்க முடியாமல், உடலில் தூக்க முடியாமல், காலில் இழுக்க முடியாமல் அவள் போட்டுக் கொண்டிருந்த நகை எல்லாம் அவனுக்குச் சிரிப்பு மூட்டின. கலியாணத்தை முடித்துக் கொண்டு மறுவீடு வருதல் முதலிய உற்சவங்கள் எல்லாம் முடிந்த பிறகு நாகரத்தினம் தன் வீட்டுக்கும், துரைசாமி தன் காலேஜுக்கும் வந்து விட்டான்.

இப்பொழுது மீண்டும் மாமன், மாமனார் விருப்பத்தின் மேல் அங்கே போயிருந்தான. காலை சுமார் எட்டுமணிக்கு அவள் ஊருக்குப் போய்ச் சேர்ந்தான். மாட்டு வண்டி பஸ் நிற்கும் சாலைக்கு வந்திருந்தது. அவன் அதில் ஏறவில்லை. நடந்தே வந்தான்.

வாசலில் ஜல்ஜல் என்று சலங்கைச் சத்தம் கேட்டவுடன் நாகரத்தினம் உள்ளே ஓடி ஒளிந்து கொண்டாள். அவர் இறங்கி உள்ளே வருவதாக இல்லை. வாசலில் ஏதோ பேச்சுக்குரல் கேட்டது. வெளியே வந்தாள். அவள் வெளியே வந்த சமயமும் எதிரே தலையில் முண்டாசு கட்டி இடுப்பு வேட்டியை மடித்து கட்டிக்கொண்டு கையில் ஒரு காமிராப் பெட்டியுடன் துரைசாமி வந்து முனங்கு திரும்புவதற்கும் சரியாக இருந்தது.

'என்ன அப்பா, அவர் ஏன் அப்பா வரவில்லை?' என்று இடிஇடித்த குரலில் அவள் கேட்டது கண்டிப்பாய் அவர் காதில் விழுந்திருக்கும். ஒரேயடியாக வெட்கம் வந்து விட்டது அவளுக்கு. கண்ணை மூடிக் கொண்டு அவள் உள்ளே ஓடினாள். எதிரே தாய் வந்து கொண்டிருந்தாள். அவள் எதிரே சென்ற வேகத்தில் அவள் மேல் மோதினாள். தாயார் கையில் தாம்பாளத்தில் ஆரத்தி நீர் இருந்தது. அது தளும்பியது மட்டுமல்ல; அதன் நுனிபட்டு நாகரத்தினம் வயிற்றில் கொஞ்சம் கிழித்தும் விட்டது. இது ஒரு அபசகுனம் என்று கருதினர் எல்லோரும். துரைசாமி பரிகசித்து மறைத்து விட்டான். ஆனால் பிற்பாடு அவனுக்கே அச்சம் தரும் படியான ஒரு நிகழ்ச்சி நடந்துவிட்டது.

(தொடரும்)

பொட்டுப் போல் வண்ணில் தோன்றிய விமானம் உருவமெடுத்து இதோ தரையில் வந்திறங்கியும் விட்டது. பெங்களூர் விமான நிலையத்தில் அதை வரவேற்கக் காத்திருந்தவரிடையே பரபரப்பும் ஆர்வமும் காணப்பட, வெளி நாட்டாரும் அரசியல் மேதைகளும் நடிக நட்சத்திரங்களுமாய் பிரயாணிகள் பலரும் அதினின்று இறங்கினர். பிளேனில் அதை ஓட்டிவந்த காப்டன் ராஜேந்திரனும் அவன் சகாக்களும் மட்டும் எஞ்சியிருந்தனர்.

“அப்பாடா, கடைசியில் வந்து சேர்ந்தாயிற்று! இன்னும் இரண்டு வாரங்களுக்கு காற்றோ மழையோ புயலோ இஞ்சின் கோளாறோ எதுவுமில்லாமல் நிம்மதியாயிருக்கலாம்” என்றவண்ணம் நெடுமூச்சொன்றை உதிர்த்தான் உதவி பைலட் அச்சுதமேனன். நீண்ட நாட்களுக்குப் பின் தன் வீட்டுக்குச் செல்லும் உற்சாகம் தளும்பியது அவன் பேச்சில்.

ராஜேந்திரனுக்கு அவன் மேலும் தம் சுற்றத்தாருடன் மகிழ்ந்து குலவும் ஏனையோர் மேலும் பொறாமை தோன்றியது. பதினைந்து நாட்கள் லீவு! அதை இன்புறக் கழிப்பதற்குத்தான் அவனுக்கு வீடு என்று ஒன்றில்லை.

“என்ன காப்டன்! உங்கள் அபிமானி உங்களிடம் விடை பெற்றுக் கொண்டாளா? அல்லது வழக்கம்போல் எல்லாருக்கும் ‘டிம்கி’ கொடுத்து விட்டீர்களா?” விமானத்தில் அவனுடன் பிரயாணம் செய்த வட நாட்டழகி ஸோன்யா சட்டர்ஜீயைப் பற்றித்தான் மேனன் கேட்கிறானென்று அவனுக்குத் தெரியும்.

ஆறடி உயரமும் அரும்பு மீசையும் அகன்ற நெற்றியுமாய் கம்பீரமான தோற்றமுடைய ராஜேந்திரன் சுபாவத்தில் மிகுந்த சாது—சங்கோஜியும் கூட. பெண்களென்றால் ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. மேலும் தொடர்ந்தான் மேனன், “ஒரு கல்யாணத்தைப் பண்ணிக் கொள்ளுங்கள் காப்டன். அப்போதுதான் உங்களைச் சுற்றிவரும் இந்தத் தொல்லையினின்று விடுபடலாம்.”

கல்யாணம் என்பது தனக்கில்லை என்பது ராஜேந்திரனின் துணிபு. சிறு வயதிலேயே

பெற்றோரை இழந்துவிட்ட அவனை வற்புறுத்தி விவாகம் செய்துவைக்க நெருங்கிய சுற்றத்தாருமில்லை. மேனனின் கேள்விகளுக்குப் பதில் சொல்லாமல் சிரித்து மழுப்பி விட்டான்

ஆனாலும் வழக்கத்துக்கு மாருக இன்று சூழ்ந்திருந்த தனிமை அவனுடைய நெஞ்சில் பளு ஏற்றியது லீவு நாட்களைத் தன்னுடன் பகிர்ந்து வரும் அருமைத் தம்பி தன்னுடன் இல்லாததுதான் அதன் காரணமாயிருக்கலாம். ராஜேந்திரனைவிட பத்து வயது சிறியவன் சந்திரசேகர். இருவருக்குமிடையே அளப்பரிய நேசம் மதராஸ் வைத்தியக் கல்லூரியில் கடைசி ஆண்டுப் படிப்பு அவனுக்கு. இது பரீக்ஷை சமயமாதலால் தன்னுல் லீவு எடுக்க முடியாதென்று தெரிவித்திருந்தான் போன கடிதத்தில். அவன் படிப்புக்கு இடையூராக தான் இச்சமயம் மதருசுக்குள் செல்வதும் ராஜேந்திரனுக்கு உசிதமாகப் படவில்லை. லீவு நாட்களை பெங்களூரிலேயே கழித்து விடுவதாகத் திட்டமிட்டு விட்டான்.

ஹோட்டல் ஏர்லைன்ஸில் தனக்கென்று நியமிக்கப்பட்டிருந்த அறையினுள் நுழைந்ததும் அவன் கண்ணில் தென்பட்டது மறுபடியும் அவன் கடிதம்தான். டாக்டருக்குப் படித்தும் குழந்தைத் தனம் மாருத அவன் கையெழுத்தைக் கண்டு புன்னகை புரிந்தான் ராஜேந்திரன். கடிதத்தைப் பாதி வாசித்ததும் அம் முறுவல் மாறி நெற்றி சுருக்கங் கண்டது.

"அண்ணு, உன்னிடம் முக்கியமான விஷயம் ஒன்று தெரிவிக்க வேண்டும். போன வருஷம இக் கல்லூரியில் படித்த ஜெயந்தியுடன் நான் பழக நேரிட்டது இப்போது எம். பி. பி. எஸ். முடித்து பெங்களூரில் தன் தந்தையுடன் பிராக்டிஸ் நடத்துகிருள். மிகுந்த செளந்தர்யவதி மிகவும் நல்ல குணம். நல்ல குடும்பங்கூட. இம் மாதிரி கிடைப்பதற்கரிது உனக்கு ஏதும் ஆட்சேபனை இருக்காது என்ற தைரியத்தில் கோடை விடுமுறையின் போது விவாகத்தை வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறேன். நீ அவளைக் கட்டாயம் போய்ப் பார்த்து உன் அபிப்பிராயத்தை எழுது. விலாசம் கொடுத்திருக்கிறேன். எனக்காக இதைச் செய் - கலயாணத்துக்கு வேண்டிய முயற்சிகளைச் செய்வாயென்றும் நம்புகிறேன்..."

அதிர்ந்துபோய் நின்ருன் ராஜேந்திரன். கல்யாணமா! இந்தப் பொடிப் பயலுக்கா? படிப்புக்கூட இன்னும் முற்றுப்பெருதிருக்கும்போது! பெண் அவனுக்கு முன்பே பிராக்டீஸ் பண்ண ஆரம்பித்துவிட்டாள். அப்போது வயதிலும் மூத்தவள்தானே! சை... இது என்ன அசட்டுத்தனம்? உடனே அந்த ஜெயந்தியைப் பார்த்து இரண்டிலொன்று தீர்த்துவிட வேண்டுமென்று நினைத்துக்கொண்டான்.

மணி ஐந்தடிப்பதற்கும் ராஜேந்திரன் ஜெயந்தியின் வீட்டு வாசலில் வந்து நிற்பதற்கும் சரியாக இருந்தது. 'கேட்'டின் ஒரு மருங்கில் கறுப்புச் சலவைக்கல்லில் டாக்டர் (மிஸ்) ஜெயந்தி, எம். பி. பி. எஸ். என்று பளிச்சென்று பொறித்திருந்ததை ஒரு கணம் நோக்கி நின்ருன். கண்ணுக்கினிய அழகிய பங்களா. சுற்றிலும் கவின்மலர்ப் பூங்கா. ரோஜாவும், மல்லிகையும், மருக்கொழுந்தும் மணத்தையும் அழகையும் சிந்தி நின்றன குங்குமச் சிவப்பும் தீர்க்க மஞ்சளுமாய பலப் பல வர்ணங்களில் அடுக்கடுக்காய் மலர்ந்து நின்ற சந்திரகாந்திப் புஷ்ப வரிசைகளின் பின்னுலிருந்து மலர்களிடையே மாமலராய் மலர் முகம் ஒன்று எட்டிப் பார்த்தது. மறுகணம் வேகமாய் அவன் முன்னுல் வந்து நின்று கரங்குவித்து வரவேற்றது

"வாருங்கள்..."

"நான் .. சந்திரசேகரின் .."

"தெரியும். உங்கள் தம்பி எழுதியிருந்தார். உள்ளே வாருங்கள்"

அடக்கமும் பண்பும் நிறைந்த மென்குரல் சொக்கவைக்கும் அதிரூப செளந்தர்யம இல்லையெனினும் இனிமையும் குளுமையும் நிறைந்த லாவண்யம். இவளா தன் தம்பியை மயக்கியிருப்பாள்! தன் கற்பனைக்கு ஒவ்வாத தோற்றமல்லவா இது, குழம்பிய உளளத்துடன் அவளைப் பின் தொடர்ந்தான்.

"உட்காருங்கள். இதோ அப்பாவையும் அழைத்துவருகிறேன்" என்றவள் உள்ளே மறைந்துவிட்டாள் நீண்ட பின்னல் அசைய அவள் நடந்துசென்ற அழகைக் கண்டான் ராஜா. இவளுடன் வாக்குவாதம் புரிவதெப்படி? "என் தம்பியை விட்டுவிடு என்று சொல்லமுடியுமா தன்னுல்? ஒரு வேளை இவள் சந்திரனை உண்மையாகவே காதலித்தால் ? வெற்று வேஷமோ பகட்டுப் பேச்சோ இவளை அண்டியிருக்க முடியாதென்று பார்த்த மாத்திரத்திலேயே தெரிந்துவிட்டது அவனுக்கு.

"அடாடா...வாருங்கள் வாருங்கள்" பிரதாப முதலியார், ஜெயந்தியின் தகப்பனர், அவனை ஆர்வத்துடன் வரவேற்ருர்.

"சந்திரன் கடிதம் எழுதியிருந்தான் உங்களைப் போய் பார்க்கும்படி..."

"ஆமாமாம்... ரொம்ப சந்தோஷம். குழந்தை கல்யாணம் செய்துகொள்வதாகச் சொன்னதே எஙகளெல்லோருக்கும் பரம

சந்தோஷம். அதிலும் போன வருஷம் அந்த டெல்லிப்...”

“அப்பா. போனில் யாரோ கூப்பிடுகிருர் கள்...” தந்தை எழுந்து சென்றுவிட்டார்.

க்ரீம் பிஸ்கட்டும் பீங்கான் கோப்பை களில் சுடச்சுட தேநீரும் ஏந்தி நின்ருள் ஜெயந்தி.

“சாப்பிடுங்கள்” என்று உபசரித்தாள்.

அமைதியும் சாந்தியும் தழுவும் இந்த இனிய குரலை எப்போதோ எங்கேயோ கேட்டிருப்பதாக அவனுக்குத் தோன்றியது. அந்த முகம் கூடத்தான்...? கமலக் கண் மலர்கள். பட்டுக் கன்னங்களில் நிழல் பூசும் அந் நீண்ட கண்ணிமைகள் .. பளிங்கு நுதல்... இவைகளை எங்கு பார்த்திருக்கிறோம்...? ராஜேந்திரன் சிந்தித்தான்.

"யாரும் இல்லையே போனில்?" உள்ளே சென்ற முதலியார் மீண்டும் வந்தார்.

"உங்கள் தம்பிக்கு உங்கள் மேல் அபார வாஞ்சை. பேச்செல்லாம் உங்களைப்பற்றித் தான் இருக்கும்."

உள்ளம் நெகிழ்ந்தது ராஜேந்திரனுக்கு. அதே சமயம் தான் இங்கு வந்திருப்பதின் நோக்கமும் தலை தூக்கியது.

"எனக்கிருப்பது ஒரே தம்பி . சகலமும் அவன் தான்..."

"ஆமாம்... உங்களுக்கு வேறு சுற்றத் தாரில்லை என்று தெரியும் ஜெயந்தியும் எங்கள் ஒரே குழந்தை. அவள் இஷ்டத் துக்கு மாறாக நான் எதுவும் செய்ததில்லை. போன வருஷம உங்கள் பிளேனில் ."

"டீ ஆறிப்போகிறது. சாப்பிடுங்கள்" குறுக்கே உபசரித்தாள் ஜெயந்தி.

சம்பாஷணை நீணடு சென்றது சந்திரனைப் பற்றி அநேக முறை பேச்செழுந்தும் அவன் திருமணத்தைத தடை சொல்ல ராஜாவின் வாய் மறுத்தது நேரம் செல்லச் செல்ல ஜெயந்தியின்மேல் ஒரு அபூர்வ வாஞ்சை ஏற்படுவதை உணர்ந்தான். தன் தம்பியின் மனைவியாகப் போகிறவள்! அபபோது சகோதர வாஞ்சை தானே அது!

போர்ட்டிகோவில் பிரம்மாண்டமான தொரு கார் வந்து நின்றது. முதலியார் எழுந்தார்.

இன்று "லால்பா"கில் புஷ்பக் காட்சி. போகலாமா எல்லாரும்! ராஜேந்திரனை நோக்கி வினவினார்.

"நேரமாகிவிட்டதே...இன்னொரு நாள்..."

"சரி. அப்படியானால் நாளை மத்தியானம் இங்கு நம் வீட்டில் நீங்கள் சாப்பிட்டுவிட்டு சாயங்காலம் அங்கு செல்லலாம் .."

"அல்லது சித்ரான்னங்களுடன் அங்கு போய்த்தான் சாப்பிடுவோமே பிக்னிக்மாதிரி இருக்கும். நீங்களும்..."

அவள் கண்களில் காந்தம் அவனை ஈர்த்தது. 'சரி' என்று அவன் உதடுகள் அசைந்தன.

மறுநாள் "லால் பாகில்," மனோகரமான அந்தச் சூழ்நிலையில் ஜெயந்தியின் தோற்றம் இன்னும் அவனை வசீகரித்தது. மெல்லிய மாருதம் வீச, சலசலவென்ற மென்னொலி யுடன் ஓடிக்கொண்டிருந்த ஓடையொன்றி னருகில் உணவு வகைகளைப் பரப்பினாள் ஜெயந்தி. அவனுக்குப் பரிமாறுகையில் பூம்பிஞ்சு போன்றிருந்த அவள் விரல்களையே பார்த்தான் தன் விரல்களுடன் அவைகளை இணைத்துக் கொள்ளவேண்டுமென்ற தாபம் எழுந்ததும் தன் நினைவுகளைக் கட்டுப்படுத் திக்கொண்டான்.

"அதோ தெரிகிறது பாருங்கள்......புதிய கட்டிடங்களாய் அதுதான் ஜெயநகர். ஜெயந்திக்காக அங்கு வீடு ஒன்று கட்டிக் கொண்டிருக்கிறேன். கல்யாணம் ஆனதும் அங்கு குடிபோய் விடலாம். கட்டிட வேலை யெல்லாம் அநேகமாய் முடிந்த மாதிரிதான். நாளைக்கு வாருங்களேன்..... சாவகாசமாய் போய் பார்த்து வரலாம்" ஜெயந்தியின் தந்தை கேட்டார்.

அடிக்கடி அவளைப் பார்ப்பது ஆபத்தில் கொண்டுவிடும் என்று அவன் உள்ளுணர்வு அவனை எச்சரித்தது

"நீங்கள் வீட்டைப் பார்த்தால்தானே உங்கள் தம்பிக்கும் அதைப்பற்றி எழுத லாம்?" வற்புறுத்தினாள் ஜெயந்தி. ராஜேந் திரன் மீண்டும் வருவதாக ஒப்புக்கொண் டான்.

ஜெயநகரில், மழை பெய்து அப்போது தான் விட்டிருந்தது. சம்பகப் பூக்களின் நறுமணம் சில்லென்ற காற்றுடன் கலந்து வந்தது

"இதை பெட்ருமாக வைத்துக்கொள் வோமா? காற்று நன்றாக வரும்..." முதலி யார் கேட்டுக்கொண்டிருந்தார். எல்லாவற் றுக்கும் யந்திரம்போல் தலையை ஆட்டிவைத் தான் ராஜேந்திரன்.

சிந்தனை புயல் வீசியது! தம் தம்பியும் ஜெயந்தியும் வாழ்க்கை நடத்தப்போகும் வீடு! வருங்காலத்தில்...இருவர் மட்டுமா! குழந்தைகள் . அவற்றின் தளர்நடை ..மழ லைப் பேச்சு ..

தன்னையும் மீறி எழும் கற்பனைப் போராட் டத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் தவித்த

போது இனிமேல் இவளுடன் பழகுவது தவறு என்று உறுதி பூண்டான்.

இரண்டு நாட்களாய் அந்தப் பக்கமே தலை காட்டவில்லை அவள். மூன்றாம் நாள் தபாலில் அக்கடிதம் வந்தது. ஜெயந்தியின் தந்தை எழுதியிருந்தார். ஜெயந்தியின் பிறந்த நாளாம் நாளை மறுநாள். அவசியம் வர வேண்டுமென்று கேட்டிருந்தார். இரண்டு நாட்களாய் கட்டுப் படுத்தியிருந்த ஆவல் கடிதத்தைக் கண்டதும் பொங்கியெழுந்தது. போகக் கூடாதென்றும் நினைத்தான். ஆனால் போகாவிட்டால் மரியாதைக் குறைவாகப் படுமோ... அவர்கள் காட்டிய அத்தனை உபசரிப்புக்குப் பின்;

பிறந்தநாள் பரிசாக சரோஜினி நாயுடுவின் "செங்கோலின் கீதத்தையும் தாகூரின் "பிறைமதி"யையும் வாங்கிக் கொண்டு ஜெயந்தியின் வீட்டை நாடிவரும் போதே பெண்கள் பாலரின் உல்லாசக் கேளிக்கைகளும் அவன் காதில் விழுந்தன. கூட்டத்தில் பலர் அவனை உன்னிப்பாகக் கவனிப்பதையும் பாராமல் ஜெயந்தியை அணுகினான்.

பன்னீர் தெளித்த பட்டு ரோஜாவைப் போல் அவள் முகம் பொலிவுற்றிருந்தது, ல்லிய தூய்மையான அந்த அழகைப் பருகி நின்றான் ராஜேந்திரன். லிப்ஸ்டிக்கோ, கன்னத்துப் பூச்சோ ஒய்யாரக் கொண்டையோ எதுவுமில்லை அவளிடம். கண்களில் தேங்கிக் கிடந்த ஆழ்கடலின் அமைதிதான் அவனை வசீகரித்தது. நிலவின் மோகன ஒளியிலே அவனுக்கு வெகு அருகாமையில் அவள் அமர்ந்திருந்தபோது, அவள் அணிந்திருந்த இளநீலக் காசிப் பட்டுபுடவை அவன் மேல் இழைந்தபோது அவள் கூந்தலில் சூடியிருந்த மல்லிகையின் சுகந்தம் அவனைத் தாக்கியபோது அவன் நெஞ்சம் படபடத்தது.

"என் தம்பி பாக்கியசாலி... இதையே திரும்பத் திரும்பத் தனக்குள் கூறிக் கொண்டான். அந்த எண்ணம் அவனுக்குக் கிஞ்சித்தும் சந்தோஷத்தைக் கொடுக்கவில்லை! சே... நான் ஒரு கிராதகன்... இருந்திருந்து அவனுக்கா இந்தத் துரோகம்!"

ராஜேந்திரன் ஒரு முடிவுக்கு வந்து விட்டவனாய் விருந்தினர் விடைப்பெற்றுச் சென்றதும் ஜெயந்தியை அணுகினான்.

"நான் நாளை ஊருக்குப் புறப்படுகிறேன்... மதராசுக்கு"

"நாளைக்கா? நாளைக்கேயா..? ஜெயந்தியின் குரலில் பதட்டம். "இன்னும் ஒருவாரம் லீவு இருக்கிறதே..."

"ஆமாம்... ஆனால் சந்திரனிடம் என் மனப்பூர்வமான ஆசிகளைத் தெரிவிக்க நேரிலேயே போகிறேன்... உங்களுக்கும் என் வாழ்த்துக்கள் .. ஆனால் கல்யாணத்துக்கு நான் வர இயலுமென்று தோன்றவில்லை,"

வெள்ளி முலாம் பூசபபட்ட தென்னை ஓலைகளின் பின்னாலிருந்து பூரண சநதிரன் நகைத்தான். மெல்லிய, மிக மெல்லிய ஓசை ஒன்று ராஜேந்திரனின் செவிகளில் விழுந்தது. மின் சாரத்தால் தாக்குண்டவன் போல் அவளை நோக்கினான். விம்மலா அது! அவன் நெஞ்சைப் பிடித்து உலுக்கியே விட்டது.

"ஜெயந்தி..." ஆவேசம் வந்தவன்போல் அவள் கையைப் பற்றினான். அவனை அறியாமல் அவன் மனத்தின் எண்ணங்கள் வார்த்தைகளாய்க் கொட்டின. "நான்...நீ எனக்கு வேண்டும் .. என் தம்பிக்குக் கொடுக்க முடியாது..."

பேசிய மறுகணம் விக்கித்துப் போய் நின்றான். ஆனால் ஜெயந்தியோ...? மழைக் கண்ணினூடே மின்னலைப் போல் புன்னகை ஒளிர்ந்தது அவள் வதனத்தில். ஆயிரமாயிரம் ஒளிக் கிரணங்கள் நர்த்தனமாடின அவள் கண்களில்.

"உங்கள் தம்பிக்கு நான் வேண்டாம். வேண்டும் என்று ஒரு நாளும் அவர் சொன்தில்லை... நம்முடைய கல்யாணத்துக்குத்தான் உங்களை ஏற்பாடு செய்யச் சொல்லி எழுதினார்.

திகைப்பும் மகிழ்வும் பொங்கிப் பூரிக்க ராஜேந்திரன் செயலிழந்து நின்றான். இது கனவா?... நினைவுதானா?

"உங்களுக்கு நான் தான் ஏற்றவள் என்பது உங்கள் தம்பியின் எண்ணம்... நீங்கள் கல்யாணத்துக்கு சம்மதிக்க மாட்டீர்கள் என்றும் அவருக்குத் தெரியும். ஆகவே தனக்காகப் பெண் பார்க்கும்படி சொல்வது போல் உங்களுககுக் கடிதமெழுதினா. நீங்கள் என்னுடன் பழகினால் ஒரு வேளை உங்கள் மனம் மாறும் என்று..."

"மனம் தான் எப்போதோ மாறிவிட்டதே ஆமாம், நீ எனக்கு ஏற்றவள் என்று என் தம்பிக்குத் தெரியும். ஆனால் நான் உனக்கு எற்றவன்தானா என்பது உனக்கு எப்படித் தெரியும்? நான் முரடனாயிருந்தால் ..? உன் பண்புக்கு ஒத்துவராதவனாயிருந்தால் ? என்னை முன்பின் பார்த்தறியாமல், பெரியவர்கள் ஏற்பாடு எதுவுமின்றி என் தம்பி ஒருவனின் வார்த்தையைக் கொண்டே எப்படி இந்த விபரீத ஏற்பாட்டுக்குச் சம்மதித்தாய்?"

ஜெயந்தியின் நளின நயனங்கள் சிலிர்த்து விரிந்தன.

"உங்களை எனக்குப் போன வருடமே தெரியும். போன ஏப்ரலில் இங்கிருந்து டெல்லிக்குப் போகையில் என்னையும் மற்ற மாணவிகளையும் உங்கள் 'பிளேனி'ல் ஏற்றிச் சென்றீர்கள்... அப்பாகூட அதைப் பற்றி உங்களுக்கு முதல் நாள் கூறிவிடப் பார்த்தார். நான் பேச்சை வேறு வழியில் திருப்பிவிட்டேன்..."

ஆஹா! முதல் நாள் எங்கு பார்த்திருக்கிறோம்; இவளை - அவன் வியந்தது நினைவுக்கு வந்தது.

"உங்களைச் சுற்றிலும் மொய்த்த என் சக மாணவிகளைக் கண்ணெடுத்துப் பார்க்கவில்லை நீங்கள். அவர்கள் உங்களைக் கேட்ட அசட்டுக் கேள்விகள்! எதையும் நீங்கள் சட்டை செய்யவேயில்லை. அப்போதே உங்கள் நடத்தை என்னைக் கவர்ந்துவிட்டது. என் உள்ளத்தையும் உங்களுக்கே அர்ப்பணித்துவிட்டேன். அப்புறம்... காலேஜில் உங்கள் தம்பியைப் சந்தித்ததும் உங்களைப் பற்றி எல்லாம் கூறினார். என் எண்ணத்தையும் ஒருவாறு புரிந்து கொண்டார். நம்மை ஒன்று சேர்த்து வைப்பதற்கு ஒரு யுக்தி செய்வதாகக் கூறி, தான் உங்களுக்கு எழுதியிருந்த கடிதத்தைப்பற்றியும் எனக்குத் தனியே எழுதியிருந்தார்."

"போக்கிரி ராஸ்கல்" வாயார. மனமாரத் தன் சகோதரனை வாழ்த்தினான் ராஜேந்திரன்.

சிறையில் அறிவுரை

நா. பார்த்தசாரதி

"சிறைச்சாலையிலுள்ள கைதிகளுக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் ஒரு அறிவுரைச் சொற்பொழிவுக்கு ஏற்பாடு செய்து வருகிறோம். சமூகத்தில் மீண்டும் மீண்டும் குற்றம் செய்துவிட்டுச் சிறைக்கு வருபவர்களின் தொகை குறையவேண்டும் என்பது எங்கள் நோக்கம். அதனால்தான் இந்தப் புதிய ஏற்பாட்டைத் தொடங்கியிருக்கிறோம். இந்த வாரம் வருகிற ஞாயிற்றுக்கிழமை நீங்கள் வந்து சொற்பொழிவு செய்ய வேண்டும்" சப் ஜெயிலின் சூபரெண்டெண்ட் (கண்காணிப்பாளர்) அன்புடன் இப்படி வேண்டிக்கொண்டபோது என்னால் மறுக்க முடியவில்லை.

* * *

ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு என்னை அழைத்துக்கொண்டுபோக வந்துவிட்டார் சிறைச்சாலை அதிகாரி. சிறையை அடைந்ததும் திடீரென்று எதிர்பாராத விதமாகப் புதிய அறிமுகம் ஒன்றைச்

செய்து வைத்தார். அங்கே ஒரு இளம்பெண் எங்களுக்கு முன்பே வந்து காத்துக்கொண்டிருந்தாள். "இவரை உங்களுக்குத் தெரியுமோ? ரேடியோவில் அடிக்கடி இசைக் கச்சேரிகள் செய்து புகழ் பெற்றவர். நளினி என்று பெயர். உங்கள் சொற்பொழிவு முடிந்ததும் கைதிகளுக்காகச் சில பாடல்களைப் பாட ஏற்பாடு செய்திருக்கிறோம்"—அதிகாரி அறிமுகப்படுத்தியபோது தாமரை மொட்டுப் போன்று சிவந்து, மோதிரம் ஒளிரும் கைகளைக்கூப்பி வணங்கினாள் அந்தப் பெண்.

பதிலுக்கு வணங்கிவிட்டு, "ஓகோ! நான் கூட ரேடியோவில் அடிக்கடி கேட்டிருக்கிறேன். நேரில் இப்போதுதான் முதல் முதலாகப் பார்க்கிறேன்."—என்றேன் நான். நம்மிடம் சொல்லாமலே அறிவுரைச் சொற்பொழிவுக்குப் பின்னால் பாட்டுக்கச்சேரிக்கு வேறு ஏற்பாடு செய்துவிட்டார்களே! அடுத்தாற்போல் பாட்டோ, நாடகமோ, இருக்கிறதென்று தெரிந்தபின்னாலும்சொற்பொழிவை யாராவது சுவைத்துக் கேட்டுக்கொண்டிருப்பார்களா? இந்த அதிகாரியின் ஏற்பாடு வம்புத்தனமாக இருக்கிறதே என்று எண்ணினேன்,

இனிமையான குரலும், அழகான தோற்றமுமுள்ள ஒரு இளம்பெண் நன்றாக அலங்கரித்துக்கொண்டு பாடுவதற்கு வந்திருக்கிறாள. அவள் பாட்டுக்கு இருக்கிற அவ்வளவு வரவேற்பு என்னுடைய பேச்சுக்கு இருக்க முடியுமா?

சிறைச்சாலைக்குள் திறந்த வெளியான ஒரு பகுதியில் மரநிழலில் கைதிகள் வரிசையாக உட்கார்த்தி வைக்கப்பட்டிருந்தார்கள். பாதுகாப்புக்காகப் போலீஸ்காரர்களும் சுற்றி நின்று கொண்டிருந்தனர். சொற்பொழிவுக்காக அங்கு மேஜை நாற்காலிகள் போடப்பட்டிருந்தன.

சிறை அதிகாரி முதலில் என்னை அழைத்துக்கொண்டு போனார். முன்னுரை என்ற பெயரில் எதையோ கூறிவிட்டு, என்னைச் சொற்பொழிவு செய்யச் சொன்னார். நான் எழுந்து நின்றுகொண்டு என்முன்பு தரையில் உட்கார்ந்திருப்பவர்களைக் கண்களால் அளந்தேன்.

குற்றவாளிகளாய், கைதிகளாய், சட்டத்தின் எல்லைக் கோட்டிலிருந்து விலகிச் சிறை கூண்டிற்குள் அடைபட்டுக் கிடக்கும் அவர்களுடைய தோற்றங்களைப் பார்த்தேன். எத்தனை விதமான முகத் தோற்றங்கள்? பயங்கரமும், குரூரமும் காட்டுபவை சில; ஏக்கமும் சோகமும் காட்டுபவை சில; திமிர், செருக்கு, முரட்டுத்தனம் இவற்றோடும் சில; அந்தக் குற்றவாளிகளின் சிறிய கூட்டத்தில் மனிதக் குணங்களின் வகை வகையான சாயைகளைக் கண்டேன்.

எழுந்து நின்ற நான் சில விநாடிகள் வரை பேசவே இல்லை. அந்த முகங்களைப் பார்க்கும்போது எனக்குப் பேச்சு எழவில்லை. பேச்சினால் மட்டும் திருந்திவிடும் கூட்டமா அது? அழைப்பை ஏற்றுக்கொண்டு அங்கே போனதற்காக ஏதோ பேசினேன். இரண்டு மூன்று திருக்குறளைச் சொன்னேன். "குற்றங்களைச் செய்து செய்து குற்றமற்ற வாழ்க்கையைப் பழகிக் கொள்ளவேண்டும். நீங்கள் ஒருமுறை, இருமுறை தவறியது பிழைஅல்ல, என்றும் தவறிக்கொண்டே இருக்கக்கூடாது. ஒருமுறை செய்த தவற்றை மீண்டும் செய்வதற்குச் சந்தர்ப்பங்கள் நேரலாம். செய்துவிடக்கூடாது."

கால் மணி நேரத்தில் சுருக்கமாக எனது பேச்சு முடிந்துவிட்டது, நான் எதுவும் உணர்ந்து தெளிவாகப் பேசியதாக எனக்குத் தோன்றவில்லை. ஆனால் சிறை அதிகாரி முடிவுரையில் கைதிகளின் எதிர்கால வாழ்க்கையையே முற்றிலும் மாற்றி அமைத்து விடக்கூடிய கருத்துக்களை நான் கூறிவிட்டதாக வானளாவப் புகழ்ந்தார்.

இந்த நிகழ்ச்சி முடிந்தபின் அதுவரை உள்ளேயே இருந்த அந்த ரேடியோ புகழ் நளினி பாடுவதற்கு வந்தாள். சிறைக் கைதிகளின் மனம் திருந்தும்படி தேவாரம், அருட்பா, திருவாசகம், போன்றவற்றிலிருந்து உருக்கமான பாடல்களைக் கல்லும் கனிந்துருகும்படி அவள் பாடுவாள் என்று சூபரெண்டெண்டு என்னிடம் கூறினார்.

நீலநிற வாயில் புடவை தரையில் படிய அழகாக நடந்து கைதிகளின் கூட்டத்திற்கு முன்னால் வந்து நின்றாள் அவள். நின்றவுடன் கூட்டத்திலிருந்த யாரையோ பார்த்து அஞ்சி மிரள்வது போன்ற ஒரு பயத்தையும், மருட்சியையும் அவள் முகத்தில் காண முடிந்தது. நான் அப்போது அவளை நன்கு கவனித்தேன். அவள் உடல் சிறிதே நடுங்கியதைக் கூட என்னால் காண முடிந்தது. யாரைக்கண்டு அவள் அப்படி நடுங்குகிறாள் என்பதை உடனே என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. அப்போது அவளைப் பார்ப்பதற்குப் பரிதாபமாக இருந்தது. சிறை அதிகாரி இதையொன்றும் கவனிக்காதவர் போல, "ஏன் தயங்குகிறீர்கள்? நீங்கள் பாடலாமே?"—என்று துரிதப்படுத்தினார். அப்படியும் அவள் மிரண்டு தயங்கி நின்றாளே ஒழியப் பாடவில்லை. மறுகணமே அவளுடைய தயக்கத்திற்கும் பயத்துக்கும் காரணமான விபரீத நிகழ்ச்சியொன்று அங்கே நிகழ்ந்துவிட்டது. இரண்டாவது வரிசை நடுவில் உட்கார்ந்து கொண்டிருந்த கிழட்டுக் கைதி ஒருவன், "அடி பாதகி! நீதானா பாட

வந்திருக்கிறாய்? என்னைத் தூக்குப் போட்டுக் கொன்றாலும் கொல்லட்டும்! உன் கழுத்தை நெரித்துவிட்டு மறு வேலை பார்க்கிறேன்,"— என்று கூப்பாடு போட்டுக்கொண்டே எழுந்து அவள் நின்ற இடத்தை நோக்கிப் பாய்ந்துவிட்டான். ஆனால் நல்ல வேளையாகக் காவலுக்கு நின்றுகொண்டிருந்த போலீஸ்காரர்கள் ஓடிவந்து அந்தக் கிழவனைப் பிடித்துக்கொண்டனர். நானும், ஜெயில் சூபரெண்டெண்டும் திடுக்கிட்டு அதிர்ச்சியடைந்தோம்.

நளினி என்ற அந்த இளம் பாடகி வீறிட்டு அலறி, முகத்தை இரண்டு கைகளாலும் பொத்திக்கொண்டு உள்ளே ஓடிவிட்டாள். பின்பு எவ்வளவோ மன்றாடிக் கேட்டுக் கொண்டும் அன்று பாட மறுத்துவிட்டாள். குறிப்பிட்ட அந்தக் கிழட்டுக் கைதியை மட்டும் லாக் அப்பில் வைத்துவிட்ட பின்பும் அவள் பாடவில்லை. காரணம் கேட்டபோதும் அவள் சொல்ல விரும்பவில்லை, "என்னிடம் ஒன்றும் கேட்காதீர்கள். என் மனம் குழம்பியிருக்கிறது. நான் உடனே வீட்டிற்குப் போகவேண்டும்."— என்று எழுந்து போய் விட்டாள். பாட்டு இல்லாமலே வெறும் சொற்பொழிவோடு அந்த ஞாயிற்றுக்கிழமைக் கூட்டம் சிறையில் அரை குறையாக முடிந்துவிட்டது.

கதாசிரியனுக்கே உரிய என் சிந்தனை வேலை செய்தது. 'அந்தக் கிழட்டுக் கைதிக்கும், பாடகி நளினிக்கும் ஏதோ ஒரு வகையில் தொடர்பு இருக்காவிட்டால் இந்த எதிர்பாராத விபரீதம் நடந்திருக்க முடியாது'— என்று எனக்குத் தோன்றியது. அதை முற்றிலும் தெரிந்துகொண்டு விடவேண்டுமென்று என் உள்ளம் ஆர்வங் காட்டியது.

"சார்! இன்று பாட வந்தாளே, இந்தப் பெண் நளினி இதற்கு முன்பு இங்கே பாடுவதற்கு வந்திருக்கிறாளா?"— என்று சிறை அதிகாரியிடம் கேட்டேன்.

"இல்லை! இந்த மாதிரிக் கூட்டங்கள் நடத்திக் கைதிகளுக்கு நேர்மையில் நம்பிக்கை உண்டாக்கவேண்டுமென்று சமீபத்தில்தான் எங்கள் இலாகா தீர்மானித்தது. இதற்கு முன்பு நடந்த இரண்டொரு கூட்டங்களில் வேறு பெண்கள் வந்து பாடியிருக்கிறார்கள். இவள் வந்தது இதுதான் முதல் தடவை. இப்படி ஆகுமென்று நான் நினைக்கவில்லை. அந்த முரட்டுப்பயல் எதற்காக அவளைக் கொன்றுவிடுவேன் என்று துள்ளிப் பாய்ந்தான்?"—என்றார் அவர்.

"நீங்கள் எனக்கு ஒரு உதவி மறுக்காமல் செய்யவேண்டும். இந்த விநோத நிகழ்ச்சியில் ஒரு சுவையான கதை மறைந்து கிடப்பதாக எனக்குப் படுகிறது. தயவு செய்து நான் மட்டும் தனியே 'லாக்-அப்பில்' அந்தக் கைதியைச் சந்தித்து ஒரு அரைமணி நேரம் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுங்கள். அதைத் தெரிந்துகொண்டு விடுகிறேன்."—என்றேன்.

"ஓ! தாராளமாகச் செய்கிறேன். உங்கள் மூலமாக அவனை அடிக்காமல், உதைக்காமல் நானும் அதைத் தெரிந்துகொண்டால் நல்லது"-என்று சொல்லி அந்தக் கிழக் கைதி இருந்த வார்டுக்கு ஒரு கான்ஸ்டேபிளுடன் என்னை அனுப்பினார். "இன்று சிறைச் சாலைக்குச் சொற்பொழிவு செய்ய வந்தது வீண் போய்விடவில்லை, விறுவிறுப்பும், சுவையும், இன்னதென்று அறிந்து கொள்ளத் தூண்டும் ஆவலும், நிறைந்த சம்பவம் ஒன்றைத் தெரிந்துகொள்ளப் போகிறோம்— என்ற ஆர்வத்தோடு அந்தக் கைதியைச் சந்திக்கச் சென்றேன். நாங்கள் அவன் இருந்த அறையை அடைந்தபோது அறையின் ஒரு மூலையில் உட்கார்ந்து அவன் குமுறிக் குமுறி அழுதுகொண்டிருந்தான். கான்ஸ்டேபிள் அறைக் கதவைத் திறந்ததும் நிமிர்ந்து பார்த்தான், அவன் கண்கள் அழுது அழுது சிவந்திருந்தன. நான் கான்ஸ்டேபிளை ஒதுக்குப் புறமாக நின்றுகொள்ளுமாறு குறிப்புக் காட்டிவிட்டு அறைக்குள் நுழைந்தேன்.

உட்கார்ந்து அழுதுகொண்டிருந்தவன் என்னைக் கண்டதும் மெல்ல எழுந்து நின்றான்.

"பரவாயில்லை உட்கார்ந்துகொள்"—என்றேன். நான் உட்கார்ந்து கொள்வதற்காகக் கான்ஸ்டேபிள் வெளியிலிருந்து ஒருநாற்காலியைக் கொண்டுவந்து போட்டான். நான் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டதும் கைதி தரையில் உட்கார்ந்தான்.

"ஏன் அப்பா அந்தப் பெண்ணைக் கண்டதும் அப்படி ஆத்திரமாக நடந்துகொண்டாய்?"

அவன் என்னுடைய கேள்விக்குப் பதில் சொல்லாமல் ஏறிட்டுப் பார்த்தான். அவன் எதையோ எண்ணித் தயங்குவது போலிருந்தது.

"எதுவாயிருந்தாலும் நீ என்னிடம் மனம் விட்டுப் பேசுவதற்குத் தயங்க வேண்டுவதில்லை. என்னை உனக்கு மிகவும் வேண்டிய தன்மையான மனிதனாக நினைத்துக்கொள்"— என்று அவனை வழிக்குக் கொண்டுவருவதற்காக ஆறுதலளிக்கும் சொற்களைக்கூறினேன்.

"ஐயா நீங்களெல்லாம் பெரிய மனிதர்கள், படித்தவர்கள். எங்களைப் போன்றவர்களுக்குப் புத்தி சொல்லிக் கொடுத்தால் மட்டும் போதுமா? ஒவ்வொருவனும் தவறு செய்வதற்கு ஒரு முக்கியமான காரணம் இருக்கிறது. அந்தக் காரணத்துக்குத் தண்டனை கிடைப்பதில்லை. அதற்கு ஆளாகிவிடுகிற நாங்கள்

அகப்பட்டுக் கொள்கிறோம். 'எய்தவனிருக்க அம்பை நோகிறார்கள்.''—துயரம் தோய்ந்த குரலில் அவன் மறுமொழி கூறினான். மேலும் சிறிது நேரம் அவனோடு பேசி அன்று அவன் நடந்துகொண்டதன் காரணத்தை அறிந்து கொள்ள முயன்றேன். என்னிடமிருந்து கேள்விகள் ஒவ்வொன்றாகப் புறப்பட்டன.

"அந்தப் பெண்ணுக்கும் உனக்கும் ஏதாவது சொந்தப் பகைமை உண்டா?"

"........."—பதில் இல்லை.

"அவள் உனக்கு எந்த வகையிலாவது உறவா?"

"என்னுடைய மகள்"

அவன் இப்படிக் கூறியதும் எனக்குத் தூக்கிவாரிப்போட்டது. அதை என்னால் நம்ப முடியவில்லை. சொந்த மகளிடமா அப்படி முரட்டுத்தனமாகக் கொலை வெறியோடு நடந்துகொண்டான்? நான் அவனுடைய முகச் சாயலைக் கூர்ந்து கவனித்தேன். குழிகளும், சுருக்கங்களும், முதுமைக்கோலங் காட்டிய அந்த முகத்தில் நோய் விழுந்த சவுக்குமரப் புற்கள் மாதிரித் தாடியும் மீசையும் அடர்ந்து வளர்ந்திருந்தன.

"என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்? 'என்னுடைய முகச் சாயலுக்கும், அந்தப் பெண்ணின் முகச் சாயலுக்கும் கொஞ்சங்கூட ஒற்றுமை இல்லையே?'—என்று சிந்திக்கிறீர்களோ?"

நான் திகைத்தேன், என் மனத்தில் ஏற்பட்ட சந்தேகம் அதற்குள் இவனுக்கு எப்படித் தெரிந்தது? நான்தான் ஏதோ கதை எழுதுகிறேன்; மனித அனுபவங்களை, இதயத்து உணர்ச்சியின் மெல்லிய அலைகளை, நெற்றியின் கோடுகளிலிருந்து கண்டுபிடிக்கும் ஆற்றல் எனக்குக் கைவந்த பழக்கமாகியிருக்கிறது. ஆனால் இந்தக் கிழட்டுக் கைதி உள்ளுணர்ச்சிகளைச் சாமர்த்தியமாக மறைக்கத் தெரிந்த என்மனத்தையே கண்டுபிடித்து விட்டானே?

"அவள் என்னுடைய சொந்த மகள் இல்லை. வளர்ப்புப் பெண்." என்னுடைய சந்தேகத்தை அவன் பதில் தீர்த்துவிட்டது. இதன் பின்தொடர்ந்து அவனிடம் கேட்ட கேள்விகள் மூலம் நான் தெரிந்துகொண்ட கதையைக் கீழே தருகிறேன்.

* * *

நாகப்பன் நாயர் பிரசவ ஆஸ்பத்திரியில் இரவுக்காவல்காரனாக வேலைபார்த்து வந்தான். நாயருக்கு இருபது வயதாக இருக்கும்போது ஏற்றுக்கொண்ட வேலை அது. பன்னிரண்டு ஆண்டுகள் அந்த வேலையை இயந்திரம்போல் செய்து பழகிவிட்டான் அவன். எத்தனை இரவுகளில் எத்தனை புதுக் குழந்தைகள் பிறந்து அழும் ஒலியை அவன் கேட்டிருக்கிறான். எத்தனை பெண்கள் அவன் கண்காணத் தாயாகி வெளியேறியிருக்கிறார்கள். எத்தனை ஆண்கள், அவன் கண் முன்பு தந்தையான மகிழ்ச்சியோடு தங்கள் குழந்தைகளைக் கொஞ்சியிருக்கிறார்கள். முப்பது முப்பத்தைந்து வயது வரை மலட்டுப்பட்டம் தாங்கிவிட்டுப் பின்பு அபூர்வமாகக் குழந்தை பெற்றுத் தாய்மை அடைந்த பெண்களையும் அவன் பார்த்திருக்கிறான். அற்புதமான உலகத்தில் மனித உயிர் வர்க்கங்கள் பிறந்து வளரும் ஒரு கோயிலின் வாயிற் காப்போன் போன்ற பெருமிதம் அவனுக்கு உண்டு.

ஆனால் அந்த முப்பத்திரண்டு வயதிலும் அவன் ஒற்றைக் கட்டைதான். ஒரு பெண்ணைத் தாயாக்கித் தானும் தந்தையாகும் எத்தனையோ ஆண்களை அன்றாடம் தன் இடத்தில் நின்றுகொண்டே கண்டிருந்தும் தான் தந்தையாக வேண்டுமென்ற ஆசை மட்டும் அவனுக்கு ஏற்படவில்லை. அந்த நீளமான கால வெள்ளத்தில்—பன்னிரண்டு ஆண்டுகளில்—நூற்று நாற்பத்து நான்கு மாதங்களில் ஒரு சிறிய சபலமாவது மனத்தில் துளிர்ந்திருக்க வேண்டுமே! கிடையாது. ஆசைகளையும், பாசங்களையும் பார்த்துக் கொண்டே அவை இல்லாமல் இருந்தான் அவன். பயங்கரமான ஒரு மழை இரவில் ஏழ்மையும், துன்பமும் நிறைந்த ஒரு அனாதைப்பெண் அந்தப் பாசத்தை அவனுக்குக் கொடுத்துவிட்டுப் போய்விட்டாள்.

பத்து மணிக்கு வழக்கமாக ஆஸ்பத்திரி வாயிற் கதவை அடைப்பதற்காக வெளிப் பக்கம் வந்த நாகப்பன் நாயர் காம்பவுண்டுச் சுவரோரமாக முக்கலும், முணகலுமாக வலியையும் துன்பத்தையும் புலப்படுத்தும் ஒரு ஒடுங்கிய பெண் குரலைக் கேட்டான். நல்ல மழை இருட்டு. அவன் மனத்தில் சந்தேகமும் குழப்பமும் ஏற்பட்டன. டார்ச் விளக்கின் உதவியால் சுவரோரமாகப் பார்த்தவன் ஒருகணம் திகைத்தான். வெட்கப்பட்டுக் கூச்சத்தோடு கண்களை மூடிக்கொண்டான்.

சுவரருகில் பிரசவ வேதனையினால் நிலைகுலைந்து விழுந்து துடித்துக் கொண்டிருந்தாள் ஒரு பெண்! "பாவம், யாரோ உற்றார் உறவினரல்லாத அனாதை போலிருக்கிறது. தனியே புறப்பட்டு வந்திருக்கிறாள். சுவரருகே வந்ததும் தாங்க முடியாமல் நிலைதடுமாறி விழுந்துவிட்டாள்."—என்றெண்ணிக் கொண்டு உள்ளே ஓடிப்போய் நர்ஸுகளையும் லேடி டாக்டரையும் கூட்டிக்கொண்டு வந்தான், நாகப்பன் நாயர். எல்லோருமாகச் சேர்ந்து அந்தப் பெண்ணை ஆஸ்பத்திரியில் ஒரு பிரசவ வார்டுக்குள் இருக்கச் செய்தார்கள்.

நீண்ட நேர வேதனைக்குப் பின் இரவு ஒரு மணி சுமாருக்கு அந்தப் பெண்ணுக்கு அழகான பெண் குழந்தை பிறந்தது. குழந்தை பிறந்த சிறிது நேரத்திற்கெல்லாம் ஊர் பேர் தெரியாத அந்தத் தாய் இறந்துவிட்டாள். அத்தனை காலம் துறவிபோல் வாழ்ந்துவந்த நாகப்பன் நாயரின் மனத்தில் தங்கச்சிலை போன்ற அந்தப் பெண் குழந்தை ஆசையைக் கிளறிவிட்டது. அவன் பொய் கூடச் சொல்லுவதற்குத் தயாராகிவிட்டான். அந்தப் பெண் குழந்தையின் இறந்துபோன தாய் தனக்கு ஒரு வகையில் உறவு என்றும், குழந்தையைத் தன்னிடம் கொடுத்துவிடவேண்டுமென்றும் ஆஸ்பத்திரியில் அவன் கேட்டான். குழந்தை அவனுக்குக் கிடைத்துவிட்டது, ஆசையையும், பாசத்தையும், அன்பையும், எங்கே செலுத்துவதென்று தெரியாமலிருந்த அவனுக்கு இப்போது அவற்றைச் செலுத்த ஒரு இளம் உயிர் கிடைத்துவிட்டது. தந்தையாகும் அனுபவம் மட்டுமா அந்தக் குழந்தையின் மூலம் அவனுக்குக் கிடைத்தது? அந்தக் குழந்தை அவனைத் தாயாகவும், தந்தையாகவும், ஒருங்கு மாற்றிவிட்டது. சுவையில்லாத தனது வறட்டு வாழ்க்கையில் அவன் ஒரு மாபெரும் காரியத்தைச் சாதித்துவிட்டான்.

நாகப்பன் நாயருடைய ஐம்பதாவது வயதில் அவனுடைய வளர்ப்புக் குழந்தை நளினி என்ற பெயரில் பதினெட்டு வயது வாளிப்பாக வளர்ந்து உலாவிக் கொண்டிருந்தது. பள்ளிக்கூடத்தல் படிப்பைக் காட்டிலும் பாட்டு அவளுக்கு நன்றாக வருகிறது என்று வாத்தியாரம்மா கூறியதனால் ஒரு பாட்டு வாத்தியாரிடம் கொண்டுயோய்ச் சேர்த்தான், நளினி இசைக்கலையின் சிகரத்தில் ஏறிக் கொண்டுவந்தாள்

நாகப்பனுக்கு ஐம்பத்தைந்து வயது வரை ஆஸ்பத்திரியில் வேலை உண்டு. சட்டப்படி அதற்குமேல் ஓய்வு பெற்றுவிடவேண்டியது தான் .ஆனால் ஐம்பத்து மூன்றாவது வயதி லேயே வேலையைவிட்டு நீக்கிவிட்டார்கள். ஒருநாள் இரவுக் காவலின்போது அவன் தூங்கிவிட்டான். அந்தக் குற்றத்திற்காகப் பத்து நாள் 'சஸ்பெண்டு' செய்தார்கள். பதினோராவது நாள் ஆஸ்பத்திரிக்கு வந்ததும் காவலைக் கவனிக்காமல் இரண்டாவது ஆட்டம் சினிமாவுக்குப் போய்விட்டான். பெரிய டாக்டருக்கு அவன்மேல் அளவு கடந்த கோபம்; மறுநாள் காலையில் அவனை வேலை யிலிருந்தே நீக்கிவிட்டார்.

மின்சார விசிறி வேகமாக ஓடிச் சுற்றிக் கொண்டிருக்கிற வரை அதிலுள்ள பிளவுகள் தெரிவதில்லை. சுற்றாமலிருக்கும்போது அதன் பிளவுகள் தெரிவதுபோல் மனிதனுக்கு வேலை குறைந்து ஓய்வு அதிகமானால் புற்றி லிருந்து புறப்படும் பாம்புகளைப்போல் மறைந்து கிடக்கும் தீய உணர்வுகள் தலை யெடுக்கின்றன.

வேலையிலிருந்து நீக்கப்பட்டபின் நாகப்பன் பலவகையிலும் கெட்டுப்போனான். முதலில் பொழுது போகாமல் சூதாட்டம், பின்பு காசு வைத்துச் சூதாட்டம், காலிகளுடைய நட்பு, எல்லாம் சேர்ந்தன. நளினி தன்னால் தந்தை யைத் திருத்த முடியாதென்று தெரிந்து கொண்டாள்.

வர வர தகப்பனுடைய போக்கு நன்றாக இல்லை. பேச்சு, பார்வை, எல்லாம் களங்கம் நிறைந்தவையாக மாறிக்கொண்டு வந்தன. தகப்பன் மகளிடம் பேசுகிற பேச்சா அது? தகப்பன் மகளைப் பார்க்கிற பார்வையா அது? நிலைமை அத்து மீறிவிட்டது. ஒருநாள் குடிவெறியில் அவளிடமே தவறாக நடந்து கொண்டான் அவன். அவள் பயந்துவிட் டாள். அன்றிரவே தன்னை வளர்த்து ஆளாக் கிய கிழவனைவிட்டு அவள் சொல்லாமல் வெளியேறிவிட்டாள்.

வெளியூரில் ஒரு பள்ளிக்கூடத்தில் பாட்டு வாத்தியார் வேலை கிடைத்தது நளினிக்கு. அவளுடைய இசைக் கலையிலும், அழகிலும் மயங்கி ஒரு செல்வக் குடும்பத்தைச் சேர்ந்த இளைஞன் அவளைத் திருமணம் செய்துகொண டான். திருமணத்திற்குப் பின் கணவன் விருப்பப்படி அவள் வேலையை விட்டுவிட் டாள். பொருளும், புகழும், மிகுந்த கணவ னின் செல்வாக்கினால் கச்சேரிகளுக்கும் ரேடி யோவிற்குமாக, அவள் இசைக்கலை உயர்ந்த முறையில் பயன்பட்டது.

நாகப்பன் நாயர் அவளுடைய அந்த நல் வாழ்வையும் கெடுத்துவிட்டான். ஒருநாள் அவளுடைய கணவன் பெயருக்கு ஒரு மொட் டைக் கடிதம் வந்தது. அதில் என்ன எழுதி யிருந்ததோ, அதை அவள் கணவன் அவளி டம் காண்பிக்கவில்லை; ஆனால் அன்றிலிருந்து கணவன் அவளிடம் கலகலப்பாகப் பழகு வதை நிறுத்திவிட்டான். இன்னொரு நாள் இரவு நளினியின் கணவன் ஊரில் இல்லாத போது நாகப்பனே நேரில் வந்துவிட்டான். தனக்குக் கொஞ்சம் பணம் வேண்டுமென் றும் அதை அவள் கொடுக்காவிட்டால் அவ ளுடைய கணவனிடம் அவளைப்பற்றித் தாறு மாறாகச் சொல்லி வாழ்க்கையைக் கெடுத்து விடுவதாகவும் அவளைப் பயமுறுத்தினான். இரவு ரயிலில் ஊர் திரும்பியிருந்த அவள் கணவன் அந்த நேரத்திலா வந்து சேர வேண்டும்?

நேரமும் சூழ்நிலையும் விளைவுகளை விபரீத மாக்கிவிட்டன. நாகப்பன் நாயரைப் போலீ ஸில் பிடித்துக் கொடுத்ததோடு அந்த மனித ருக்குக் கோபம் அடங்கவில்லை. பொழுது விடிந்ததும், "உன் சாமான்களை எடுத்துக் கொண்டு நீ இந்த வீட்டைவிட்டு வெளியேறு. கௌரவமான குடும்பப்பெண் என்று உன் னைக் கலியாணம் செய்துகொண்டேன். உன் நடத்தையும், உனக்கு இருக்கிற கெட்ட சாக வாசங்களும் என் குடும்பப் பெயரைக் கெடுத்துவிடும்"— என்று அவள் எவ்வளவோ மன்றாடியும் கேட்காமல் துரத்திவிட்டான்.

கணவன் கைவிட்டாலும் கலை அவளைக் கைவிடவில்லை. இரண்டு மூன்று ஆண்டு களில் புகழும். பொருளும் சேர்த்துவிட்டாள். குடியிருக்கத் தனி பங்களா, கார், வேலையாள் எல்லாப் பெருமையும் அவளை வந்தடைத்து விட்டன. நாகப்பன் நாயர் அப்போது சிறை வாசம் அனுபவித்துக் கொண்டிருப்பது இவ ளுக்குத் தெரியாது.

* * *

அந்த நிலையில்தான் இப்படி ஒரு விபரீத மான சந்திப்பு ஏற்பட்டிருக்கிறது. நாகப்பன் அந்தச்சிறையில் இருப்பதுமட்டும் நளினிக்குத் தெரிந்திருந்தால், அவள் சிறை அதிகாரியிடம் அங்கே பாட வருவதற்காக ஒப்புக்கொண்டிருக்கமாட்டாள்.

இந்த விபரங்களை எல்லாமே நான் நாகப்ப னிடம்தான் கேட்டுத்தெரிந்துகொள்ள நேர்ந் தது என்று நேயர்கள் நினைத்தால் அது தவறு. அவன் என்னிடம் வேண்டுமென்றே சில உண்மைகளைமறைத்துவிட்டான். அவன் மறைத்தவற்றை நளினியின் வீட்டுக்குப் போய் விசாரித்துத் தெரிந்துகொண்டேன், நளினி மறைத்த சில செய்திகளை ஏற்கெனவே அவன் கூறியிருந்தான்.

"இந்தச் சம்பவங்களில்—இவற்றில் மறைந்திருக்கும் வாழ்க்கையில் எந்தப் புதுமையும் இல்லையே; கதையாக எழுதினால் யார் படிக்கப் போகிறார்கள்?"—என்று சில நாட்களில் மறந்துவிட்டேன். சில மாதங்கள் கழிந்த பின்பு நான் சிறையில் அறிவுரை கூறச் சென்றதும், அங்கே நாகப்பன் என்ற கைதியிடமும், நளினி என்ற பாடகியிடமும் அறிந்து கொண்டவையும்—எனக்கு நன்றாக மறந்து போய்விட்டது. அதற்குப்பின் மற்றொரு ஞாயிற்றுக்கிழமைகூட என்னைச் சொற்பொழிவுக்கு அழைத்தார் ஜெயில் சூபரென்டெண்டு. எனக்கு வேறு வேலை இருந்ததனால் நான் இணங்கவில்லை.

* * *

இரண்டொரு வருடங்களுக்குப் பின் என் நண்பர் ஒருவரின் மகள் திருமணத்திற்குக் கச்சேரி ஏற்பாடு செய்வதற்காக நளினிக்குப் போன் செய்தேன். தன்னுடைய ஆபீஸ் மானேஜரிடம் வந்து கச்சேரி—சன்மானத்தொகை எல்லாம் பேசிக்கொள்ளுமாறு அவள் பதிலுக்குப் போனில் கூறினாள்,

"அட! இவளுக்கு ஒரு ஆபீஸ், அதற்கு ஒரு மானேஜர். வேடிக்கைதான்,"—என்று நினைத்துக்கொண்டே அங்கே சென்றேன்,

அங்கே மானேஜராயிருந்த ஆள் யாரென்று நினைக்கிறீர்கள்? அந்தக் கிழவன் நாகப்பன் நாற்காலியில் உட்கார்ந்து ஆபீஸ் நடத்திக் கொண்டிருந்தான்.

நான் ஆச்சரியப்படவில்லை! சர்வ சாதாரணமான விஷயங்களுக்கெல்லாம் ஆச்சரியப்பட்டு என் ஆச்சரியத்தின் தரம் குறையவிடாதவன் நான்.

இன்றல்ல! நேற்றல்ல!

50 ஆண்டுகளாகப் புகழ்பெற்றது

ஆர். எஸ். பதி மருந்து

(Regd.)

தலைவலி, ஜலதோஷம், கைகால்வலி, ஜுரம் முதலிய வியாதிகளுக்குக் கைகண்ட மருந்து.

இது வீட்டில் இருந்தால் உங்கள் அருகே ஒரு டாக்டர் இருப்பது போலாகும்.

புட்டி 1-க்கு விலை 75 காசுகள்

எங்கள் இதர தயாரிப்புகளுக்கு விரிவான இலவச கேட்லாக் வேண்டுவோர் எழுதவும்.

தயாரிப்பவர்கள்:

ஆர். எஸ். பதி அண்டு கோ

(ஸ்தாபிதம்: 1909)

த. பெ எண் 99 ... 214 & 215 மேலமாசி வீதி, மதுரை

திருச்சி, தஞ்சை இவ்விரு ஜில்லாக்களில் உள்ளவர்கள் மட்டும் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுக

மெஸர்ஸ் சுகுமாரி ஏஜன்ஸீஸ்

தபால் பை எண் 172 .... 213, மேலமாசி வீதி, மதுரை - 1.



விஞ்ஞானத் துணுக்குகள்

நா. கி. நாகராசன்

விலங்குகளின் கோபம்

புவியிலிருந்து அனுப்பும் வாணம் சுமார் இருபது லட்சம் மைல் தொலைவு சென்று சந்திரனைத் தாக்கும் அளவுக்கு விஞ்ஞானம் வளர்ந்துவிட்டது. கடலிலும், வானிலும் கப்பலோ, விமானமோ தன் வழி செல்ல உதவும் விஞ்ஞானக் கருவிகள் உள்ளன. அவற்றின் நுணுக்கத்தைக் கண்டு வியப்படைகிறோம். இத்தகைய கருவிகளின் உதவியால் வழி தேடிச் செல்வது கடினமல்ல. ஆனால் திருத்தமான தேசப் படங்களும், நுணுக்கமான திசை காட்டிபோன்ற கருவிகளும் இல்லாமல் பழங் காலத் தமிழன் ஆயிரக்கணக்கான காத தூரம் கடலிலே தன் கலத்தைச் செலுத்தினான். அவனது மீகாமத் திறமையை நாம் வியலாமல் இருக்க முடியாது. ஆனால் அதைவிட நமக்கு வியப்புத் தருவது பறவைகளும், சில மீன் இனங்களும் பெற்றிருக்கும் திறமை. குளிர்காலம் வந்ததும் வெப்பப் பகுதிகளை நோக்கிப் பல நூறு மைல் சென்றுவிடும். பறவைகள் வசந்தத்தின் அறிகுறிகள் தென்பட்டதும் தமது பழைய இடத்தைத் தேடிவந்து காதல் வாழ்க்கை நடத்தி, இனப் பெருக்கத்தில் ஈடுபடுகின்றன. சில பறவைகள் திரும்பத் திரும்ப ஒரே தோட்டத்துக்கும் ஒரே மரத்துக்கும் கூட ஆண்டுதோறும் திரும்பி வருகின்றன என்று பறவையியல் நிபுணர்கள் கூறுகிறார்கள். இது எவ்வாறு முடிகிறது? பறவைகளுக்கு எவ்வாறு இவ்வளவு திருத்தமாக வழி தெரிகிறது? சில மீன் இனங்களும் இதே வகையில் கடலிலிருந்து ஒவ்வோராண்டும் திரும்பி வந்து தமது பிறப்பிடத்தை யடைந்து, முட்டையிடுகின்றன, இதன் காரணம் இப்போது ஒருவாறு விளங்கியிருக்கிறது. ஒளி என்பது அலை வடிவானது. ஒளி அலைத்துடிப்பு எத்திசையில் வேண்டுமாயின் நிகழலாம். ஆனால் பிரதிபலித்துவரும்ஒளியும், சில படிகங்களின் வழியே வந்த ஒளியும் சில திசைகளில் மட்டுமே துடிக்கும் அலையாக மாறி விடுகிறது. இவ்வினைவுக்கு 'ஒருமுனைப்பருதல்' (Polarisation) என்பார்கள். ஒருமுனைப்பட்ட ஒளியின் உதவியால் இயங்கும் விஞ்ஞானக் கருவிகள் தற்காலத்தில் ஆராய்ச்சியிலும், தொழிலிலும் பல வகையில் பயன்படுகின்றன. பறவைகளின் கண்களும், மீன்களின் கண்களும் இத்தகைய ஒளியை ஏற்று, அதற்கேற்ற உணர்ச்சிகளை மூளையில் தோற்றுவிக்கும் திறன் வாய்ந்தவை. இதன் உதவியால் அவை சற்றும் பிறழாது தம் வழி நோக்கிச் செல்கின்றன என்று ஜெர்மானியர் கண்டறிந்திருக்கிறார்கள். பல ஆண்டுகள் நடந்த ஆராய்ச்சிகளின் பயனாக இயற்கை நூலில் பெரு மர்மமாக உள்ள இந்த அதிசயத்துக்கு விடை கிடைக்கலாம்.

விவசாயத்தில் எக்ஸ் கதிர்கள்

எக்ஸ்-கதிர்கள் என்றதும் நமக்கு அவற்றின் மருத்துவப் பயன்களே நினைவு வரும். தொழிற்சாலையில் அவை பயன்படுவது பலருக்குத் தெரிந்திருக்கும். ஆனால் அவை வேளாண்மையிலும் பலவாறு பயன்பட முடியும் என்பது சற்று வியப்பை அளிக்கக்கூடும். ஆனால் எக்ஸ்-கதிர்களை வித்துக்களின் மேலும், செடிகளின் மேலும் விழச் செய்வதால் அவற்றில் நிலையான மாறுதல்கள் நிகழலாம். வெள்ளைத் தக்காளிச் செடியின்மேல்

எக்ஸ்-கதிர்களை வீழ்த்தி அவை செங்கிறமான பழங்களை அளிக்குமாறு ஒரு விஞ்ஞானி செய்தார். பருத்திக்கொட்டையை எக்ஸ்-கதிர்களால் தாக்கி இருபுது பருத்தி இனங்களைத் தோற்றுவித்திருக்கிறார்கள். இவற்றுள் ஒன்றில் பருத்தி இழை வித்துடன் இணையாமல் தனியே இருக்கும். ஆகையால் வித்து நீக்கிப் பஞ்சைப் பெற்று நூலாக நூற்பது மிக எளிதாகிறது. இன்னொரு வகைச் செடியில் பருத்தியின் தரம் மிக உயர்ந்ததாக இருப்பதோடு, கொட்டையின் உணவுச் சத்தும் மிக அதிகமாக இருக்கிறது. இதனால் இப்பருத்திக்கொட்டை கால் நடைகளுக்கு மிகவும் ஏற்றது. பூச்சி அழிப்பதிலும் எக்ஸ்-கதிர்கள் பெரிதும் பயன்படுகின்றன. தானியங்களை நாசம் செய்யும் சிலவகைப் பூச்சி புழுக்களைப் பூண்டோடு அழிப்பதற்கும் வேறெவ்வகையிலும் இயலாவிட்டால் எகஸ்-கதிர்கள் சிறந்த சாதனமாகப் பயனபடுகின்றன. தானியப் பாதுகாப்புக்கு இவை மிகவும் ஏற்றவை. பழங்களின் தரத்தை மதிப்பிடவும், தானியங்களில் கலந்துள்ள வேறு பொருள்களைக் கண்டறியவும் இம் மாயக் கதிர்கள் பயன்படுகின்றன. கோதுமைப் பயிர்களை அழிக்கும் ஒருவகைப் பூச்சியை அழிப்பதற்கு அமெரிக்க அரசாங்கம் விந்தையானதொரு முறையைக் கையாளுகிறது. ஆண் பூச்சிகளைச் சோதனைச் சாலையில் வளர்த்து அவற்றை எக்ஸ்-கதிர்களைக் கொண்டு தாக்குகிறார்கள். இதனால் அந்த ஆண்கள் மலடாய்விடும். இதன் பின்னர் அவற்றை வயலில் விட்டுவிடுவார்கள். அவை எங்கெங்கும் பரவிப் பெண் பூச்சிகளை நாடிச் செல்லும். அவை கூடியபின் பெண் பூச்சிகள் கருவுற முடியாது. அதனால் அவை முட்டையிடாமலே இறந்துவிடும். இவ்வாறு பூச்சியின் பெருக்கம் தடைபட்டு மிக விரைவில் பூண்டோடு போய்விடும். பூச்சிக் கொல்லிகளைப் பயன்படுத்துவதைவிட இம்முறை மிக்க பயனுள்ளது.

பெற்றோர் கவனிக்க

“சில விஷயங்களையாவது அவர்களாக ஆராய்ந்து தெரிந்துகொள்ள வாய்ப்பளிக்காமல் எப்போதும் குழந்தைகளைத் தம் இமையில் வைத்துக் காப்பாற்ற முயலும் பெற்றோர் அவர்களுக்குத் தீமையையே செய்கிறார்கள்” என்று டாக்டர் வியோகான்னர் என்னும் மனநூல் பேராசிரியர் கூறுகிறார். “உடல் நலத்தைப்பற்றிய அறிவு பரவியபின் பெற்றோர்க்கு குழந்தைகளை நோயினின்றும் காக்கும் கிலி அதிகமாய்விட்டது. இல்லாத அபாயத்தை யெல்லாம் அவர்கள் கற்பனை செய்துகொண்டு, குழந்தைகளை எதுவும் செய்யவிடாமல் தடுத்து, அவர்களது அபிவிருத்திக்குத் தடையாக நிற்கிறார்கள்” என்றும் அவர் கூறுகிறார். குழந்தைகளை இடைவிடாது கண்காணிக்கவேண்டும் என்று நாம் எண்ணுவது தவறு. வேறு சிலரோ இதற்கு நேர் எதிர். நாம் செய்வதை யெல்லாம் குழந்தைகளும் செய்யவேண்டும், செய்யக் கற்கவேண்டும் என்று அவர்கள் அவசரப்படுகிறார்கள். ஏதாவது ஒன்றை ஒரு குழந்தை செய்ய முடியாவிட்டால், அதை நாம் குறை கூறுகிறோம். இதனால் அதற்குத் தன்னம்பிக்கை குறையுமே யொழிய நல்ல பயன் எதுவும் இராது. பல விஷயங்களையும் குழந்தை கற்க உதவி, அது பெரியவன் ஆனதும் தானாக வாழ்க்கைப் போராட்டத்தைச் சமாளிக்க வகை செய்வதே அதன் பெற்றோர் அதற்குச் செய்யத்தக்க முக்கிய நன்மையாகும். குழந்தைகளது உள்ளம் சரியானவாறு அபிவிருத்தியடைய வேண்டுமானால் அது பெற்றோரைப் பற்றிப் பின்வருமாறு நினைக்கவேண்டும் என்று மேற்கூறிய நிபுணர் கூறுகிறார்:—

“என் பெற்றோர்க்கு என்னிடம் அன்பு, நான் இருப்பது அவர்களுக்கு மகிழ்ச்சி தருகிறது. என்மேல் அவர்களுக்குத் திருப்தி.”

சூரியனுக்கு இறக்கம்

புவியும், மற்றக் கோள்களும் சூரியனிலிருந்து தோன்றியவை என்றும், சூரிய குடும்பத்தில் தந்தை சூரியன் என்றும் இதுவரை நம்பி, முழுமுதற் கடவுளாக விளங்கி, ஒளியும் வெப்பமும் தந்து நம்மைக் காக்கும் கதிரவனுக்கு நாம் மரியாதை செலுத்தி வந்தோம். ஆனால் டாக்டர் டேவிட் லேஸர் என்னும் அமெரிக்க வான நூலறிஞர் கூறுவது உண்மையாயின் சூரியனை நாம் ஒருபடி இறக்கி வைத்துவிட வேண்டும்! அவர் கருத்துப்படி புவியும் கோள்களும் சூரியனது குழந்தைகள் அல்ல, அவை அனைத்தையும் உடன் பிறந்தோர் என்று வேண்டுமானால் சொல்லலாம். அப்படிச் சொன்னால் புவி சூரியனது அண்ணா ஆகும். சுமார் 400 கோடி ஆண்டுகட்கு முன் வான வெளியில் தூசு போன்ற பொருள் மிதந்து கொண்டிருந்தது. காலப் போக்கில் தூசுத் துகள்கள் ஒன்று திரண்டு நட்சத்திரங்களும், கோள்களும் தோன்றின என்று அவர் கணக்கியல் முறைகளால் கூறுகிறார். புவியைப் போன்ற கோள்கள் சூரியனைப் போன்ற நட்சத்திரங்களைவிடப் பன்மடங்கு சிறியவை. ஆகையால் அவையே முதலில் தோன்றியிருக்கவேண்டும். அதற்கு வெகு காலத்துக்குப் பின்னரே சூரியன் தோன்றியிருக்கவேண்டும் என்று அவர் கூறுகிறார். வான நூலில் இப்போது வழங்கும் கருத்துக்களுக்கு இது முற்றிலும் மாறுனது. சூரியனின் அருகே வேறொரு நட்சத்திரம் வந்ததால்

அதில் பெரும் அதிர்ச்சிகள் நேர்ந்து மிகப் பெரும் தீப்பிழம்பு ஒன்று வெளிப்பட்டுப் பிரிந்தது என்றும், அதுவே குளிர்ந்து கிரகங்களாக மாறியது என்றும் இதுவரை கருதி வந்திருக்கிறோம். இப்புதுக் கருத்து ஏற்புடையதாயின்,வான நூலில் பெரும் புரட்சி நிகழக்கூடும்.

பாடல்கள் புனையும் எந்திரம்

வருமானவரிப் பாரங்களைச் சரிபார்த்து, சரியாக வரி கொடாமல் தப்பப் பார்ப்போரைக் கண்டு பிடிக்கும் சாதனம் ஒன்றை அமெரிக்காவில் அமைத்திருக்கிறார்கள் என்று அண்மையில் படித்தேன். இதைப்பற்றி என் மனைவியிடம் கூறியபொழுது அவளுக்குச் சற்றுக் கவலையாகி விட்டது. ஏனெனில் வருமான வரி இலாகாவில் எந்திரங்களை அமைத்துவிட்டால், என் கதி என்ன என்று அவளுக்கு அச்சம்! சினிமாவுக்குப் பாட்டுக் கட்டும் தொழிலில் நல்ல பணம் சம்பாதிக்கும் சிலருக்குக் கூட அபாயம் நேரும் போலிருக்கிறது. "இம்மென்னு முன்னே இருநூறு" கவிகளை நமது காளமேகம் பாடினார் என்று கூறக் கேட்டிருக்கிறோம். இது கற்பனை. ஆனால் ஒரு மணிக்கு 1,000 புதிய மெட்டுக்களை உற்பத்தி செய்யவல்ல 'எந்திர மூளை' ஒன்றை விஞ்ஞானிகள் அமைத்திருக்கிறார்கள். இதை அமைக்கச் சுமார் 12 லட்சம் ரூபாய் செலவாகியது. இதைக் கணக்கியல் ஆராய்ச்சிக்காகவே அமைத்திருக்கிறார்களே யொழிய, நமது திரைப்படம் தியாகய்யர்களுக்கும், புரந்தரதாசர்களுக்கும் போட்டியாக அல்ல! ஏகாந்தமும், கடற்காற்றும், மல்லிகையின் நறுமணமும் தமது பாடல் ஆக்கத்தை ஊக்குவிப்பதாக நமது பாடல் அமைப்பாளர் பெருமையாகக் கூறுவார்கள்; (மேனாட்டு இசைத் தட்டுக்கள் அவர்களை எவ்வளவு தூரம் ஊக்குகின்றன என்று அவர்கள் கூறுவிட்டாலும் நமக்குத் தெரியும்!) இவை யாவும் எந்திரத்துக்குத் தேவையில்லை. ஏதோவொரு எண்ணைக் கொடுத்துவிட்டால் அது இதை அடிப்படையாகக் கொண்டு இசை மெட்டுக்களை அமைத்துக் குவித்துவிடும். இது அமைக்கும் பாடல்களை நேரே பாடவல்ல இசைக் கருவிகளை அமைக்கவும் இப்போது முயன்று வருகிறார்கள்! இதுவும் வந்துவிட்டால் மனித உதவியின்றியே இன்னிசை தோன்றும் காலம் பூரணமாக வந்துவிடும்!

பெட்டிக்குள் வீடு

ஒரு சிறு பெட்டிக்குள் போட்டு நம்முடன் எடுத்துச்செல்ல ஏற்ற சிறு வீடு ஒன்றை அமெரிக்க ராணுவத்தினர் அமைத்திருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான மக்கள் வீடு இல்லாமல் அவதிப்படும் பம்பாய் நகரத்துக்கு இதைப்போன்ற வீடுகள் மிகவும் அவசியம். நண்பர்களது வீட்டில் பெட்டியை வைத்துவிட்டு இரவு தூங்கப் போகுமுன் திறந்த வெளியில் இதை அமைத்துக் கொண்டு குடியிருக்கலாம்? இதன் எடை 160 ராத்தல். இதை ஒரு மனிதன் அதிகச் சிரமமின்றித் தூக்கிச் செல்லலாம். ஒரு மனிதன் இதை மூன்று நிமிட நேரத்தில் அமைத்துவிடலாம். ரப்பர், ரப்பர்த்துணி ஆகிய பொருள்களால் ஆன இது, பைபோல் இருக்கும். இதற்குள் காற்றை அடைத்தால் இது 30 அடி நீளம், 20 அடி அகலம், 9 அடி உயரமுள்ள வீடாக ஆகிவிடும். கீழே தரைக்கு ஏற்ற விரிப்பும், ஜன்னல்களும் இதில் உள்ளன வேண்டும்போது கதவுகளையும் மூடிவிடலாம். காற்றும் மழையும் இவ்வீட்டை அசைக்க முடியாது. இந்த 'வீட்டுக்கு' விலை என்ன என்று தெரியவில்லை. இதில் சுமார் 30 பேர் மிகச் சவுகரியமாக வாழ முடியும் என்று அமெரிக்க ராணுவ இலாகா கூறுகிறது.

காவேரி சந்தா விகிதம்

	இலங்கை, பர்மா & உள்நாடு ரூ.	நயா பைசா	மலேயா முதலிய வெளிநாடுகளுக்கு ரூ.	நயா பைசா
ஒரு வருஷம் (தீபாவளி மலர் உள்பட)	7	50	9	00
தனிப் பிரதி	0	50	0	62

சிவோகம்! சச்சிதானந்தம்!

நாது

(மாலை சுமார் ஆறு மணி. விளக்கேற்றும் நேரம். திருவாளர் வேலாயுதம் தமது வீட்டுத் திண்ணையில் சாய்ந்தவண்ணம் அமர்ந்திருக்கிறார். பிற்பகல் மூன்று மணிக்கு வெறுங் காப்பி மட்டுமே அருந்தியிருந்த வேலாயுதத்துக்கு வயிறு பசிக்கிறது. ஆகவே அவர் உள்பக்கம் திரும்பி தமது மனைவியைக் கூப்பிடுகிறார்.)

வேலாயுதம்:—சௌந்தரம்...ஏ சௌந்தரம்!... (உள்ளே இருந்து பதிலே வரவில்லை. ஆகவே சுருதியைச் சற்று உயர்த்தி, வேலாயுதம் கத்துகிறார்,)

"ஏ சௌந்தரம்!... எங்கேடி தொலைஞ்சி போனே?"

(தன் கணவனின் குரலைக் கேட்டதும், விரைவாக வந்துகொண்டே)

சௌந்தரம்:—சந்திர மண்டலத்துக்கு! இந்த வீட்டுக் காத்துதான் எப்போதுமே சூடாயிருக்கே! அதுக்காகக் குளிர்ந்த காத்து வாங்கலாமுன்னு சந்திர மண்டலத்துக்குப் போயிட்டு வரேன்...

வேலாயுதம்:—என்னடி வெளையாட்டு? மூணு தடவைக் கூப்பிட்டும் பதிலே வரல்லி



யேன்னு கேட்டாக்க, ஏதோ கிண்டல் பன்றியே? ஒன்னே இன்னும் பச்சைப் புள்ளேன்னு நெனச்சுக்கிட்டிருக்கியா?

சௌந்தரம்:—போதும் போதும், வாயை மூடுங்க. குண்டு மாதிரி இருந்த புள்ளே யெத்தான் அப்படியே வாரிக் குடுத்துட்டு வந்துட்டீங்க. இனிமே எங்கிட்டே புள்ளே யெப் பத்தின பேச்சையே எடுக்காதீங்க. (அழ ஆரம்பிக்கிருள்.)

வேலாயுதம்:—ஏய்? என்னடி வெளக்கு வைக்கிற நேரத்துலே ஒப்பாரி வைக்கிறியே? ஓம் புள்ளேயே நானுடி வாரிக் கொடுத்தேன். ஆண்டவன் கொடுத்தான் ஆண்டவனே வாங்கிக்கிட்டான். அதுக்கு நானுடி பொணே? கூப்பிட்ட வெசயத்தே நேரேக் கேக்காமே, ஏதோ எடக்குப் பன்றியே?...

சௌந்தரம்:—(புடவைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக்கொண்டே) நான் ஒண்ணும் எடக்குப் பண்ணலே, கெடக்கு சொல்லுங்க; எதுக்காகக் கூப்பிட்டீங்க?...

வேலாயுதம்:—வயத்தைப் பசிக்குதடி. வீட்டிலே ஏதாவது பலகாரம் இருக்கா?

சௌந்தரம்:—இந்நேரத்துலே ஏதுங்க பலகாரம்?...(சிறிது யோசித்து விட்டு) அம்... காலையிலே வார்த்த தோசை இருக்கு, கொடுக்கட்டுங்களா?

வேலாயுதம்:—காலையிலே வார்த்ததா? .. சரி, கொண்டாந்து தொலே.

(சௌந்தரம் உள்ளே சென்று ஒருதட்டில் நாலைந்து தோசைகளையும், ஒரு சொம்பில் தண்ணீரையும் கொண்டுவந்து தருகிருள். வேலாயுதம் தட்டை முன்னுக்கு இழுத்து ஒரு தோசையில் பாதியைக் கிள்ளி வாயிலே போடுகிருர்.)

வேலாயுதம்:—ஏய்? இது என்ன தோசையா, இல்லே 'லப்ப'ராடி? இதை ஒரு மனுஷன் திங்க முடியுமா? இல்லே, 'திங்க முடியுமா' ன்னு கேக்கறேன்?

சௌந்தரம்:—எதுக்காக எரிஞ்சி விழுறீங்க? நான்தான் அப்பவே சொன்னேனே, காலங்கார்த்தாலே வார்த்த தோசைன்னு, வேணும்னு தின்னுங்க, வேண்டாம்னு பட்டிநாய்க்குப் போடுங்க, இல்லாட்டி பிச்சைக்காரனுக்கு கொடுங்க....

(அதே சமயம் அங்கு ஒரு பண்டாரம் வருகிருர்.)

பண்டாரம்:—சக்தி வடிவேலா, கந்தப்பா! ஒரு பிடி சோறு போடப்பா! சிவோகம்! சச்சிதானந்தம்!

(வேலாயுதம் பண்டாரத்தைக் கண்டதும், "ஏ பண்டாரம், இங்கே வாய்யா. சரியான சமயத்துலேதான் வந்திருக்கே. இந்தா பிடி!" என்று கூறி, தட்டிலிருந்த தோசைகளைத் தருகிருர். பண்டாரம் வாசற்படியிலேயே அமர்ந்து அவைகளைத் தின்றுவிட்டு, "சாமி, கொஞ்சம் தண்ணி ஊத்துங்க!" என்று கூறி தமது பையிலிருந்து ஒரு தகரக் குவளையை எடுத்து நீட்டுகிருர். வேலாயுதம் சொம்பிலிருந்த நீரை அந்தக் குவளையில் ஊற்றுகிருர். அப்பொழுது பண்டாரம் வேலாயுதத்தின் கைகளை உன்னிப்பாகக் கவனித்தவண்ணம், "சாமி! ஒங்க கையைக் கொஞ்சம் காட்டுங்க!" என்று சொல்லியபடியே எழுந்து மெதுவாகத் திண்ணையில் அமருகிருர்.)

வேலாயும்: ஏனேய்யா. ஒனக்கு சோசியம் கீசியம் தெரியுமா?...

பண்டாரம்:—சோசியம் தெரியாதுங்க, கொஞ்சம் கைரேகை பார்ப்பேனுங்க!

(வாசற்படியில் நின்று கோண்டிருந்த சௌந்தரம் தன்கணவனை நோக்கி) ஒங்களைத் தானே! கையைக் காட்டிக் கேளுங்க, ஒங்க சாதகத்துலே கொளந்தெ குட்டி ஏதாவது இருக்கான்னு...

வேலாயுதம்:—அடி நீ ஒண்ணு! இந்தப் பஞ்சக் காலத்துலே புள்ளேக்குட்டி ஏதுக்கடி? நீ சித்தே சும்மா இரேன்.

(வேலாயுதம் கையை நீட்டுகிருர். பண்டாரம் அதைச் சிறிது நேரம் பார்த்துவிட்டு)

பண்டாரம்:—சாமீ! ஒங்களுக்கு நல்ல காலம் பொறக்கப் போகுது .. பறிபோன செல்வம் பறந்து வரப்போகுது... இந்த வீட்டுலே பால் பொங்கப் போகுது...

வேலாயுதம்:—(எரிச்சலுடன்)ஏய் பண்டாரம்! ஒனக்கு தோசை தின்ன திமிராய்யா? எல்லாரும் பாடற பல்லவியையே பாடிக்கிட்டு இருக்கியே? சும்மா இங்கே 'டுப்' விடாதே, வந்த வழியேப் பார்த்துக்கிட்டு 'கம்' னு போய்ச் சேரு.

பண்டாரம்:—சாமீ! கோவிச்சுக்காதீங்க. சத்தியமாச் சொல்றேனுங்க, ஒங்களுக்கு நல்ல காலம் பொறக்கப் போகுது... நான் ஒங்க கையைப் பார்த்து வெவரமாச் சொல்லிக்கிட்டே வரேன், நீங்க 'சரியா, இல்லையா' என்கிறதை மட்டும் சொல்லிக்கிட்டே வாங்க.

(பண்டாரம் வேலாயுதத்தின் கைரேகைகளை நன்ருகப் பார்த்து விட்டு) நாலு வருசத்துக்கு முன்னலே ஒங்களுக்கு ஒரு பெரிய கண்டம் வந்திருக்கணுமே?

வேலாயுதம்: (திடுக்கிட்டு நிமிர்ந்து உட்கார்ந்து) ஆமாம்.

பண்டாரம்:—அப்போவே ஒங்க உயிரு போயிருக்கணும், ஆனு பொளேச்சிட்டீங்க, என்ன சரிதானே?

வேலாயுதம்:—ரொம்ப சரி.

நாளுக்கு நாள்
நாளுக்கு நா
ரெக்ஸோனு
சோப்
உங்கள் சருமத்தை எழிலோங்கச் செய்கிறது
ரெக்ஸோனுவில் இருப்பது கேடில்-சரும எழிலுக்கான பற்பல எண்ணெய்கள் இணைந்த விசேஷத் தைலமாகிய 'கேடில்' உங்கள் சருமத்திற்கு ஊட்டமளித்து, அதிகமென்மையுடனும், அழகுடனும் மிளிரச் செய்கிறது.
உங்கள் எழிலுக்கான சோப் ரெக்ஸோனு!
Rexona
BLENDED WITH CADYL

RP. 161-X52 TM

(பின்னர் சிறிது யோசித்துவிட்டு, பண்டா ரத்தைப் பரிசோதிப்பதற்காக) ஜொரமாகப் படுத்திருந்தேனே அதைத்தானே சொல் றீங்க?

பண்டாரம்:—இல்லே. ரயில் விபத்தைத்தான் சொல்கிறேன். அந்த ரயில் விபத்துலே நீங்க, இந்த அம்மா, ஒங்க ஒரு வயசுப் புள்ளே ஆக மூணு பேரும் சிக்கினீங்க. என்ன இதுவும் சரிதானே?...

(வேலாயுதம் பண்டாரத்தின் பேச்சைக் கேட்டு வியப்படைந்தவராக) ஆமாம் பண்டாரம். நீங்க சொல்றது ரொம்ப சரி. அந்த விபத்திலேருந்து நாங்க ரெண்டுபேரும் தப்பிச்சுட்டோம். ஆனா புள்ளேயைத்தான் பறி கொடுத்துட்டோம்.

பண்டாரம்:—இல்லே. நீங்க நெனெக்கிறது தப்பு. ஒங்க புள்ளெ சாகல்லே.

வேலாயுதம்:—(ஆச்சரியத்துடன்) என்ன, என் புள்ளெ சாகல்லியா? அப்பொ.. என்னய்யா பேத்தறே? இந்தக் கையாலே குழி வெட்டிப் புதைச்சிருக்கேன், கொழந்தை சாகல் லேங்கறியே?...

பண்டாரம்:—இல்லே, இல்லே, இல்லே. ஒங்க கொளந்தே சாகவே இல்லே. இன்னமும் உசிரோடே இருக்கு.

வேலாயுதம்:—அப்பொ நான் எடுத்துக்கிட்டுப் போய் பொதைச்சது.. ?

பண்டாரம்:—அது வேறு யாருடைய கொளந்தையோ! உருத்தெரியாம ஒங்க பக்கத்துலே கெடந்த கொளந்தையே சொந்தப் புள்ளென்னு நெனெச்சிக்கிட்டு...

வேலாயுதம்:—ஆச்சரியமாக இருக்கிறதே. அப்பொ என் கொளந்தை?...

பண்டாரம்:—அது ஆத்து வெள்ளத்துலே தூக்கி எறியப்பட்டது. அப்பொ பரிசல்லே போய்க்கிட்டே இருந்த ஒரு குடியானவரு அதைக் காப்பாத்தி, கூடவே எடுத்துக்கிட்டுப் போய், நொண்டியூரு மடத்துலே ஒரு சாமியாருகிட்டே விட்டுட்டுப் போயிட்டாரு. அந்த சாமியாருதான் இப்பொ கொளந்தையே வளர்த்துக்கிட்டு வராரு.

வேலாயுதம்:—இதெல்லாம் ஒனக்கு எப்படி ஐயா தெரியும்?

பண்டாரம்:—எனக்கு எப்படித் தெரியுமா? நான்தான் நாடோடியாச்சே. ஊர் ஊராத் திரியறதுதானே என் வேலே. பத்து நாளைக்கு முன்னாலே நொண்டியூருக்குப் போயிருந்தேன், ராவுக்கு அந்த ஊரு மடத்துலே தங்கினேன். அங்கே ஒரு சாமியாரு இருந்தாரு. அவருக்கு என்ன சங்கடமோ ஏதோ தெரியாதுங்க, எனக்கு சோசியம் தெரியுமான்னு அவரு என்னைக் கேட்டாரு. தெரியும்னு சொல்லிப்பிட்டு நான் அவரு கையைப் பார்த்துச் சொல்லிக்கிட்டே வந்தபோது. அஞ்சாறு வயசுப் புள்ளே ஒண்ணு "அப்பா, அப்பா"ன்னு கத்திக்கிட்டே ஓடியாந்து அவரைக் கட்டிக்கிட்டது. எனக்கு ஆச்சரியம் தாங்கல்லே. ஏதுடா, இவரு சந்நியாசியா, இல்லே சம்சாரியான்னு தெரியாமே முளிச்சிக் கிட்டு இருந்தேன். ஆனா நான் சந்தேகப் பட்டதை அவரு எப்படியோ தெரிஞ்சிக் கிட்டாரு. ஒடனே அந்தப் புள்ளேயைப் பத்திச் சொன்னாரு. 'நாலு வருஷத்துக்கு முன்னாலே நொண்டியூருக்குப் பக்கத்துலே ரயில் கவுந்தது. புள்ளே ஆத்துத் தண்ணியிலே தூக்கி எறியப்பட்டது, அதை ஒரு குடியானவரு காப்பாத்தி மடத்துலே கொண்டாந்து விட்டது, ஆக எல்லா விவரத்தையும் சொன்னாரு. கூடவே இதையும் சொன்னாரு. 'ஏ பண்டாரம்! இந்தப் புள்ளேயே அதன் தாய் தந்தை கிட்டே சேர்க்கறத்துக்கு எத்தனையோ முயற்சி பண்ணினேன். ஆனா முடியல்லே நீங்க ஊரு ஊராப் போறீங்களே, சோசியம் வேறே பாக்கறீங்களே, இந்தப் புள்ளெயோட தாய் தகப்பன் யாருன்னு கண்டு பிடிச்சி எனக்கு ஒடனே தெரியப்படுத்துங்க. நான் புள்ளேயே அவங்ககிட்டே சேர்த்துப்புடறேன். அப்பொத்தான் என் மனசு நிம்மதி அடையும்' ன்னாரு. நான் 'சரி'ன்னு ஒத்துக்கிட்டேன். இப்பொ ஒங்க கையைப் பார்த்தபோது, அந்த நெனெவு வந்ததுங்க. அவரு சொன்னதுக்கும், ஒங்க கைரேகை சொல்றதுக்கும் ரொம்ப ஒத்துமை இருக்குங்க. நொண்டியூரு மடத்துலே இருக்கிறது ஒங்க புள்ளேயேதான், சந்தேகமில்லே.. சரி, நான் போய் சாமியாரையும் புள்ளேயையும் கூட்டியாரேன். (பண்டாரம் எழுந்து வேகமாக நடக்கிறார்.)

வேலாயுதம்:—பண்டாரம், பண்டாரம், கொஞ்சம் நில்லய்யா. சொல்றதைக் கேட்டுட்டுப் போய்யா.

பண்டாரம்:—முன்னாலே கடமை...பின்னாலே தான் பேச்சு. (பண்டாரம் ஓடோடிச் செல்லுகிறார்.

சௌந்தரம்:—பார்த்தீங்களா! குடுக்கிற தெய்வம் கூரையெப் பிச்சிக்கிட்டுல்ல கொடுக்குது!

வேலாயுதம்:—ஆமாண்டி ஆமாம். ஆனா நீ இதுக்குள்ளாற சந்தோசப்பட்டு, ஊரெல்லாம் தமுக்கடிக்காதே, போனவரு புள்ளேயோட திரும்பி வரட்டும், அப்புறம் பாத்துக்கலாம்...

சௌந்தரம்:—அது சரி, இம்மா நாளு நம்ம கொழந்தையேக் காப்பாத்தி வளர்த்து வந்தி

ருக்காரே, அந்த சாமியாருக்கு எதுனச்சும் சம்மானம் கொடுக்க வேண்டாம்?...

வேலாயுதம்:—என்னடி, 'எதுனச்சும்'னு மெதுவாச் சொல்றே? நல்லா பெரிய சம்மானம்தான் கொடுக்கணும். கொளந்தையேக் காப்பாத்தி இருக்காரு, அவரு கடவுளுடி... சரி. நான் இப்பவே போய் நம்ம செட்டியாரைக் கண்டு, பணம் வாங்கிட்டு வரேன். அவங்க வந்தாக்க திண்ணையிலே உக்காரச் சொல்லு. என்ன புரிஞ்சதா?

சௌந்தரம் :— புரிஞ்சதுங்க... நீங்க போய் சீக்கிரம் வந்துடுங்க.

(வேலாயுதம் போகிறார்.)

(அன்றிரவு சுமார் பத்து மணி, வேலாயுதத்தின் வீட்டுக் கதவு தட்டப்படுகிறது. சௌந்தரம் வந்து கதவைத் திறக்கிறாள். வாசலில் பண்டாரம், ஒரு சாமியார், மற்றும் ஒரு சிறு பையன் நின்றுகொண்டிருக்கின்றனர்.)

பண்டாரம்:—அம்மா! சாமி இருக்காருங்களா?

சௌந்தரம்:— யாரு, பண்டாரமா? வாங்க வாங்க. அவரு வெளியிலே போயிருக்காரு இப்பொ வந்துடுவாரு. சித்தெ உக்காருங்க.

பண்டாரம்:— சரி அவரு மெதுவா வரட்டும் ..ம் ...இவரைத் தெரியுங்களா? இவருதான் நான் சொன்ன சாமியாரு. ஒங்க புள்ளெயெ வளர்த்து வர்ரவரு... இதோ ஒங்க புள்ளேயும் வந்திருக்கு பாருங்க... போடா கண்ணு அம்மா கிட்ட...

சௌந்தரம்:—வாடா கண்ணு அம்மாகிட்டே (சிறுவனைத் தூக்கி எடுத்து மார்போடு தழுவிக்கொண்டு) என்னடா செல்வமே, என்னை மறந்துட்டியா? என்னைவிட்டு எப்படிடா இத்தனை வருஷம் பிரிஞ்சி இருந்தே? ஒன்னைப் பார்க்காமே என் கண்ணெல்லாம் பூத்துப் போச்சே! என் தங்கமே! (சிறுவனைப் பலதடவை முத்தமிடுகிறாள்.)

(இதற்குள் அங்கு வேலாயுதம் வந்து சேருகிறார்.)

வேலாயுதம்:— வாங்க பண்டாரம். ரொம்ப நாளியாக் காத்துக்கிட்டு இருக்கிறீங்களா?

பண்டாரம்:— இல்லீங்க, இப்பத்தான் வந்தோம்... இவருதான் நொண்டியூரு மடத்து சாமியாரு. ஒங்க புள்ளையெ வளர்த்த புண்ணியவான் இவருதானுங்க.

(வேலாயுதம் கையெடுத்துக் கும்பிடுகிறார்)

வேலாயுதம்:— வணக்கம் சுவாமிகளே, வணக்கம்.

சாமியார்:— சிவோகம்! சச்சிதானந்தம்! முதலில் உங்கள் பாலகனை ஏற்றுக்கொண்டு, என் சிரத்தின்மேலுள்ள பாரத்தைக் குறையுங்கள்.

வேலாயுதம்:— தங்கள் ஆணை, ஸ்வாமிகளே! (வேலாயுதம் சிறுவனை அருகில் அழைத்து அன்புடன் பார்த்துவிட்டு, மார்புறத் தழுவிக் கொள்ளுகிறார், பின்னர் அவனைத் தம் மனைவியிடம் அனுப்பிவிட்டு)

வேலாயுதம்:—ஸ்வாமிகளே! தங்களுக்கு நாங்கள் மிகவும் கடமைப்பட்டுள்ளோம். தங்களது இந்தப் பேருபகாரத்தை நாங்கள் என்றுமே மறக்க முடியாது. முற்றும் துறந்த முனிவராகிய தாங்கள் எந்தப் பிள்ளையையோ சொந்தப் பிள்ளையைப் போல் பராமரித்துப் பெரியவனாக்கி பெற்றோரிடம் சேர்த்திருக்கிறீர்களே இதை விடப் பெரிய புண்ணியம் உலகில் உண்டா! இதற்காகத் தாங்கள் எத்தனை இன்னல்களைப் பொறுத்திருக்க வேண்டும்? எத்தனை இடையூறுகளை சகித்திருக்க வேண்டும்? இதற்கு நான் என்ன கைம்மாறு செய்யட்டும்? எத்தனை பொருள் கொடுக்கட்டும்? கட்டளை இடுங்கள்...

சாமியார்:— சிவோகம்! சச்சிதானந்தம்! பச்சைப் பிள்ளையை வளர்த்து, பெற்றோரிடம் சேர்த்ததற்குக் கூலியா? நன்றாகக் கூறினீர் ஐயா, நன்றாகக் கூறினீர்! இது எங்குமே கேட்டிராத விந்தையாகவல்லவோ இருக்கின்றது...காசு ஒரு பிசாசு அப்பனே, பணம் ஒரு பிணம் அப்பனே! அதை நான் மனசாலும் எண்ணமாட்டேன்; கரங்களாலும் தீண்ட மாட்டேன்....

வேலாயுதம்:— ஸ்வாமிகளே! தாங்கள் அப்படிச் சொல்லக்கூடாது. இந்த ஏழை அளிப்பதை ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும். (தம் மடியிலிருந்து கற்றை நோட்டுக்களை எடுத்து) இதோ ஐந்நூறு ரூபாய், தாங்கள் செய்த உதவிக்கு இது ஈடு இல்லை தான். ஆனாலும், என் மனசுக்கு சாந்தி ஏற்படுவதற்காக இதை அளிக்கிறேன்; மறுதளிக்கக்கூடாது. காணிக்கையை ஏற்றுக்கொண்டு இந்த அடிமையைக் கிருதார்த்தனாக்க வேண்டும், ஸ்வாமிகளே!

சாமியார்:— வேண்டாம் அப்பனே, வேண்டாம். அந்தப் பணம் உன்னிடமே இருக்கட்டும். என் கடமை முடிந்து விட்டது, இப்பொழுது எனக்கு விடை கொடுத்தனுப்பு.

வேலாயுதம்:— பண்டாரம், என்னய்யா பார்த்துக்கிட்டே பேசாமே இருக்கே. எனக்கு ஒதவி பண்ணய்யா, பணத்தெ வாங்கிக்கச் சொல்லய்யா.

பண்டாரம்:— சாமி! அவரு விசயம் ஒங்களுக்குத் தெரியாதுங்க, உலகப்பற்று இல்லாத இந்த உத்தமரையா உங்க பணத்தை வாங்கிக்கச் சொல்றீங்க? அதற்கு அவர் உயிர் போனாலும் சம்மதிக்க மாட்டாரே!

வேலாயுதம்:— அவர் சம்மதிக்க மாட்டாரென்றால், நானும் சம்மதிக்க மாட்டேனே!

பண்டாரம்:— சிவோகம்! சச்சிதானந்தம்! இறைவா! இந்தச் சங்கடத்திலிருந்து என்னை விடுவிக்க மாட்டாயா?...ம்...சாமி, ஒண்ணு செய்றீங்களா? அதனாலே ஒங்களுக்கும் திருப்தி, அவருக்கும் மனசு நிம்மதி அடையும்...

வேலாயுதம்:— என்னய்யா?...

பண்டாரம்:— இந்தப் பணத்தை அவரு கையிலே கொடுக்காதீங்க. மடத்துலே எத்தனையோ அனாதைப் புள்ளைங்க இருக்கு அவங்களுக்குப் பயன் படறத்துக்காக இதை மடத்துக்கு அனுப்பிச்சுடுங்க. இல்லே, ஒங்களுக்கு என்பேரிலே நம்பிக்கை இருந்தா, என்கிட்டே கொடுங்க. சிரமத்தெப் பார்க்காமே நான் போய் அதைக் கொடுத்துட்டு வரேன்... என்ன, என்னை நம்பிக் கொடுப்பீங்களா?

வேலாயுதம்:— என்னங்க பண்டாரம் அப்படிச் சொல்றீங்க. ஒரு பிரதிபலனையும் எதிர்பாராமே காணாமப் போன என் புள்ளையே எங்கிட்டெ கொண்டாந்து சேர்த்தீங்க, அப்படிப்பட்ட தொண்டரையா நான் நம்ப மாட்டேன்? அவ்வளவு பாவியல்ல நான்... இந்தாங்க, பிடியுங்க பணத்தை. (பணத்தைக் கொடுக்கிறார்.)

பண்டாரம்:— (பணத்தை வாங்கிக்கொண்டே சிவோகம்! சச்சிதானந்தம்!

வேலாயுதம்:— ஸ்வாமிகளே! தாங்கள் இன்று எங்கள் இல்லத்தில் விருந்துண்டுதான் போக வேண்டும்.

சாமியார்:— என்ன விருந்தா? மண்ணோடு மண்ணாகப் போகும் இந்த என் சாண் உடம்பை வளர்க்க விருந்தா? சிவோகம்! சச்சிதானந்தம்! மன்னிக்க வேண்டும், நாங்கள் போய் வருகிறோம். (இருவரும் கிளம்புகிறார்கள்)

வேலாயுதம்:— சரி, அப்போ நான் தங்களை வற்புறுத்தவில்லை. வேதனையால் விண்டு போயிருந்த உள்ளத்தில் தாங்கள் பால் வார்த்ததற்கு எங்கள் உளங்கனிந்த நன்றி...

சாமியார்:— நன்றியை எனக்குச் செலுத்தாதீர். எல்லாம் வல்ல அந்த இறைவனுக்குச் செலுத்தும். எல்லாம் அவன் செயல். சிவோகம்! சச்சிதானந்தம்!

(இருவரும் போகிறார்கள். அவர்களை வழியனுப்ப வேலாயுதமும் அவர்களுடன் சிறிது தூரம் போகிறார்.

(மறுநாள் காலை, போலீஸ் ஸ்டேஷன் இன்ஸ்பெக்டர் ஒரு நாற்காலியில் அமர்ந்திருக்கிறார். எதிரிலுள்ள நாற்காலியில் வேலாயுதம் உட்கார்ந்திருக்கிறார். அருகில் சௌந்தரமும் சிறுவனும் நின்றுகொண்டிருக்கின்றனர். இன்ஸ்பெக்டர் எதிரிலுள்ள போலீஸ்காரரை நோக்கி, "210, முப்பத்தேழு, முப்பத்தெட்டைக் கொண்டா" என்று கட்டளை இடுகிறார். உடனே கைவிலங்கு பூட்டப்பட்ட இரு குற்றவாளிகள் கொண்டு வந்து நிறுத்தப் படுகின்றனர். அவர்கள் வேறு யாருமில்லை. பண்டாரமும் சாமியாரும்தான்.)

இன்ஸ்பெக்டர்:— ஏ பண்டாரம்! (வேலாயுதத்தைக் காட்டி) இவரு யாரு தெரியுமா? அந்தப் புள்ளை யாரு தெரியுமா? எல்லாத்தையும் உள்ளது உள்ளபடியே சொல்லிவிடு, இல்லாட்டி முதுகுத் தோலு உரிஞ்சி போகும்...

பண்டாரம்:— ஐயையோ, வேண்டாமுங்க. நேத்தி ராத்திரி பட்ட ஒதையே ஏழு ஜன்மத்துக்குக் காணுங்க. உண்மையைச் சொல்லிப்புடறேனுங்க, எங்களுக்கு 'இம்போர்ட் எக்ஸ்போர்ட்' வியாபாரங்க அதாவது, இங்கே இருக்கிற புள்ளையே அங்கே கடக்கறது; அங்கே இருக்கிற புள்ளையே இங்கே விக்கிறது. இந்தத் தாடிச் சாமியார்தான், இல்லீங்க, மாஜி தாடிச் சாமியார்தான் எங்க திட்ட கமிஷனருங்க. இரண்டு நாளைக்கு முன்னாலே இந்த ஊருக் கோவில்லே உட்கார்ந்திருந்தேனுங்க, அப்போ இந்த அம்மா இன்னொரு அம்மாகிட்டே தன் புள்ளை ரயில் விபத்துலே இறந்துபோன விசயத்தைப் பத்திச் சொல்லிக்கிட்டிருந்தாங்க. அவங்க சொல்வதையெல்லாம் என் மனசுலே

தொண்டை
மற்றும் மார்பு
உபாதைகளுக்குக்
குணமளிக்கும்

பெப்ஸ் வில்லைகளை

உட்கொண்டால், உங்கள் இருமல் உடனேயே அகலும்.

பெப்ஸ் வில்லைகளைச் சுவைத்து, குணமளிக்கும் ஆவி போன்ற அதன் சத்து வேதனையைக் குறைக்கவும், தொண்டைப் புண், ப்ராங்கைடிஸ், இருமல் மற்றும் ஜலதோஷத்திற்கும் காரணமான கிருமிகளைக் கொல்ல உதவியளிப்பதற்கான வேலையைச் செய்வதை உணருங்கள். உடனடி நிவாரணமளிக்கவும் கிருமிகளை அகற்றவும் பெப்ஸ் உதவிபுரிகிறது.

பிராங்கைடிஸ்,
தொண்டைப்புண்,
மண்டைநீர்,
அடைப்பு,
ஜலதோஷம்
மற்றும்
இருமலுக்கு
உடனேயே
நிவாரண
மளிக்கிறது.

எல்லா மருந்து
வியாபாரிகளிடமும்
கிடைக்கும்.

ஸி. இ. புல்போர்ட் (இந்தியா) பிரைவேட் லிட்.

FPY.55-TAM

சோல் ஏஜண்டுகள்:-
தாதா அண்டு கம்பெனி,
86, நைனியப்ப நாய்க் தெரு — சென்னை-3.

'நோட்' பண்ணிக்கிட்டு, அவங்க பின்னுலேயே போய், வீட்டையும் பார்த்துக்கிட்டு வந்தேனுங்க, அப்புறம்தான் இப்படி ஒரு பிளான் போட்டு, அவருகிட்டேயிருந்து பணம் வாங்கினோம். அவரும் சந்தோசமாத்தான் கொடுத்தாரு, எசமான். ஆனால் இந்த விசயம் எப்படியோ போலீசுக்குத் தெரிஞ்சி, எங்களை ராவுக்கு ராவே வளைச்சி உள்ளே தள்ளிட்டாங்க. இவ்வளவுதானுங்க நடந்தது; சத்தியமாச் சொல்றேனுங்க...

இன்ஸ்பெக்டர்:— என்னய்யா சாமியாரே.

சாமியார்:— (அடி வாங்கிய முதுகைத் தடவிப் பார்த்துக்கொண்டே) தீய தொழில் புரிந்தாலும் யாம் பொய் உரையோம், அப்பனே! எமது தோழர் கூறியது முக்காலும் சத்தியம்! சிவோகம்! சச்சிதானந்தம்!

இன்ஸ்பெக்டர்:— மிஸ்டர் வேலாயுதம். இவர்கள் திருட்டுப் பசங்க என்று உங்களுக்கு எப்படித் தெரிஞ்சது?

வேலாயுதம்:— முதல்லே பண்டாரம் வந்து என் கையைப் பார்த்துச் சொன்னபோது உண்மையென்றே நான் நம்பினேன். பிள்ளை மட்டும் கெடைச்சிட்டா அதைக் காப்பாத்தி வளர்த்த சாமியாருக்குக் கொறைஞ்சது 500 ரூபாயாவது தருவதுன்னு தீர்மானிச்சி, என் நண்பரான செட்டியாருகிட்டே போய், அந்தத் தொகையே வாங்கியாந்தேன். அப்பொ இரவு பத்து மணி இருக்கும். எங்க வீட்டு வாசற்படியிலே யாரோ நின்னுகிட்டு இருந்தது தெரிஞ்சதுங்க, பக்கத்துலே ஒரு சிறு பிள்ளையும் நின்னுக்கிட்டிருந்தது. மங்கின வெளிச்சத்துலே ஒருத்தர் பண்டாரம்னு தெரிஞ்சிக்கிடேன். தாடியோடே இருந்த மற்றவரு என்ன செய்தார் தெரியுமா, தாடியெ எடுத்து, மறுபடியும் மாட்டிக் கிட்டாரு, அப்பொத்தான் தெரிஞ்சது அது பொய்த்தாடின்னு. 'சரி, இதுலே ஏதொ சூது இருக்கு. சாக்கிரதையா இருக்கணும்'னு தெரிஞ்சுக்கிட்டேன். ஒரு அஞ்சு நிமிஷம் அங்கேயே நின்னுக்கிட்டு இருந்து, அப்புறம் வீட்டுப் படியேறினேனுங்க...

இன்ஸ்பெக்டர்:— அது சரி, இந்தப் புள்ளை இல்லேன்னு எப்படி ஐயா தெரிஞ்சிக்கிட்டீங்க?

வேலாயுதம்:— கேளுங்க இன்ஸ்பெக்டர். என்னுடைய கொளந்தே இருந்ததே, அதுக்கு ரெட்டை மண்டைங்க. ஆனா இந்தப் பையனுடைய தலை நல்லா ரவுண்டா இருக்குங்க. தவிர என் மவனுக்கு ஒரக்கண் பார்வை. இவனோ நல்லாப் பாக்கறானுங்க ஆகையினாலே இவன் என் புள்ளை இல்லேன்னு நிச்சயமாத் தெரிஞ்சிடுத்துங்க. ஆனாலும் அதை நான் வெளிக் காட்டிக்காமெ, ஐந்நூறு ரூபாய் கொடுத்தபோது சாமியாரோடே கண்களைத்தான் கவனிச்சேன். அந்தக் கண்களிலே வெறிக்குறி காணப்பட்டது. இந்தக் காரணங்களாலே இவங்க ரெண்டு பேரும் திருட்டுப் பசங்கன்னு தெரிஞ்சிட்டது. நாடகத்தைத் தொடர்ந்து நடத்தி, வழியனுப்பப் போகிற மாதிரி இவங்க பின்னலேயே போய், சட்டுனு போலீஸ் ஸ்டேஷனுக்குப் போன் பண்ணி, இவங்களைப் பிடிக்கச் செய்தேனுங்க...

இன்ஸ்பெக்டர்:— இந்த விஷயத்தைச் சொல்லுங்க மிஸ்டர் வேலாயுதம், உங்க மனைவிக்கு மட்டும் ஏன் தெரியல்லே, இது தன் பிள்ளை இல்லைன்னு?

வேலாயுதம்:— அவளுக்கு எப்படித் தெரியுங்க. நாலு வருசமா அவ 'புள்ளை புள்ளைன்னு' ஏங்கிக்கிட்டு இருந்தா. பெத்து வளர்த்த பாசம் அவ கண்களை மூடி விட்டதுங்க. தவிரவும் ரொம்பநாளு பிரிஞ்சு இருந்ததனுலே, அவளுக்கு அவ்வளவாத் தெரியலேங்க.

பண்டாரம்:— அடப்பாவி! எங்களைவிடப் பெரிய திருடனு இருக்கானே இவன். இது அப்பவே தெரிஞ்சிருந்தா, இவனையும் நம்ப கூட்டாளியாச் சேர்த்துக் கிட்டிருக்கலாம்; நம்ப 'பிஸினஸு'லேயும் மண்ணு விளுந்திருக்காதே! நாமொண்ணு நெனைக்கக் இந்தத் திருடன் ஒண்ணு நெனைச்சுட்டானே! அடக் கடவுளே!

சாமியார்:— சிவோகம்! சச்சிதானந்தம்!

இன்ஸ்பெக்டர்:— இருநூற்றுப்பத்து. இந்த ரெண்டு பேரையும் உள்ளே கொண்டுப் போய்த் தள்ளு... மிஸ்டர் வேலாயுதம், ரொம்ப நாளாக நாங்க தேடிக்கிட்டு இருந்த திருட்டுப் பசங்களைப் பிடிக்க நீங்க உதவி செஞ்சதுக்கு ரொம்ப வந்தனம்.. இப்பொ நீங்க ரெண்டு பேரும் போகலாம், ஒங்க பணத்தைப் பத்திக் கவலைப்படாதீங்க. அது எங்கேயும் போகாது... பிள்ளையே மட்டும் இங்கேயே விட்டுட்டுப் போங்க ..

வேலாயுதம்:— சரிங்க. வணக்கம், (போகிறார்)

(போகும் வழியில் சிறிது நின்று)

சௌந்தரம்:— என்னங்க, என்னை மன்னிச்சுடுங்க. ஊருலே இருக்கிற ஆம்புள்ளைங்க மாதிரி ஒங்களுக்கு அறிவு இல்லே, நீங்க சுத்த 'மக்கு'ன்னு நெனைச்சுக்கிட்டு இருந்தேன். இன்னிக்குத்தான் தெரிஞ்சது. ஒங்களுக்கும் ஆண்டவன் புத்தி கொடுத்திருக்காருன்னு. என்னங்க, என்ன பேச மாட்டேங்கறீங்க? மன்னிப்பீங்களா, மாட்டீங்களா?... சொல்லுங்க...

வேலாயுதம்:— (சௌந்தரத்தை அருகில் இழுத்து அணைத்தவாறு) யாம் இந்த அடியாளை மன்னித்து ஆட்கொண்டு விட்டோம்! சிவோகம்! சச்சிதானந்தம்!

(இருவரும் சிரிக்கிறார்கள்.)

நெ. 10 பல்டன் பஜார்

உருது மூலம்:
பேராசிரியர் அம்ருத் பே.தில்

தமிழாக்கம்:
ஷக்கர் நகர் சேகர்

ராஜன் இரண்டாவது வகுப்பு பெட்டிக்கதவை திறந்தான். பெட்டி காலியாக இருந்ததைக் கண்டு மகிழ்ச்சியடைந்தான். காரணம் இப்பொழுதெல்லாம் இரண்டாவது வகுப்பின் மதிப்பே குறைந்து விட்டது. தன் ஸூட்கேஸை உள்ளே வைத்து கதவருகில் நின்றுகொண்டு ஒரு சிகரட்டைப் பற்றவைத்தான். அவன் பார்வை பிரயாணிகளின் கூட்டத்தில் லயித்திருந்தது. சிறிது நேரங்கழித்து வண்டி மெதுவாக நகரவாரம்பித்தது. இதுவரை வேறுயாரும் இந்தப் பெட்டியில் ஏறவில்லை. அப்பொழுது ஒரு இளம்பெண் பிளாட்பாரத்திற்குள் நுழைவதைக் கண்டான். வண்டி நகர்ந்து கொண்டிருப்பதைக் கண்டு அதைப் பிடிக்க ஓடலானாள், ஆனால் இதுவரை ராஜனுடைய பெட்டி-அது தான் கடைசிப்பெட்டி-'கேட்'டிற்கு எதிரே வந்து விட்டது. அந்தப் பெட்டியையும் பிடிக்க முயற்சி செய்தாள். ஆனால் அது மெயில் வண்டியாக இருந்தது. இதுவரை அது தன் வேகத்தையும் அதிகப்படுத்த வாரம்பித்தது. அவள் சிறிதாவது தன் பெட்டி பக்கம் வந்து விட்டால் அவள் கையைப் பிடித்து உள்ளே இழுத்துப் போட்டு விடலாம் என்று ராஜன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். ஆனால் அவள் அவன் பெட்டிற்குச் சிறிது தொலைவில்தான் இருந்தாள். அவனுக்கு என்ன தோன்றிற்றோ? அவன் உடனே அபாயச் சங்கிலியை இழுத்தான், வண்டி சிறிது தூரம் ஓடி பிறகு நின்றது. கார்டு இறங்கி ராஜன் இருக்கும் பெட்டி பக்கமாக வந்தார். அவனும் பெட்டியை விட்டுக் கீழே இறங்கியிருந்தான்.

கார்டு அருகில் வந்ததும்" சங்கிலியை நீங்கள் இழுத்தீர்களா? என்று கேட்டார். "ஆமாம் சார்" என்றான் ராஜன். ஏன் இழுத்தீர்கள்?"

"என் மனைவி பின் தங்கி விட்டாள். ஓடும் வண்டியில் ஏற முடியவில்லை" என்று ராஜன் அந்தப் பெண் பக்கமாக கையை நீட்டியபடியே பதிலுரைத்தான். அந்தப்பெண்ணும் அருகில் வந்து விட்டாள், ஒருகால் அவளும் ராஜன் கூறியதை கேட்டிருக்கலாம். அவன் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப அவள் பக்கம் திரும்பி" எங்கே தொலைந்து விட்டாய்? 'பிரயாணம் செய்யும்போது 'கேர்லெஸ்ஸாக இருக்காதே' என்று எவ்வளவு தரம் சொல்வது" என்று கோபமாக கடிந்து விட்டு"ஏறு வண்டிக்குள்ளே, சனியனே!" என்று அவள் கையை பிடித்து உள்ளே தள்ளினான். பிறகு கார்டு க்கம் திரும்பி "கார்டு சார், ஐ யாம் வெரி சாரி, என் மனைவியால் உங்கள் எல்லோருக்கும் தொந்திரவை கொடுத்து விட்டேன். என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்" என்று வேண்டிக் கொண்டான்.

"இல்லை! இல்லை!! மன்னிக்க என்ன இருக்கிறது" கார்டு ராஜனின் வார்த்தைகளை நம்பி விட்டார். "இனி மேலாவது ஜாக்கிரதையாக இருக்கும்படி சொல்லுங்கள்" என்றார்.

"மிகவும் நன்றி" என்று ராஜன் கார்டுக்கு தன் நன்றியை தெரிவித்துவிட்டு வண்டிக்குள் ஏறினான். வண்டி மறுபடியும் நகர வாரம்பித்தது, அவன் உள்ளே வந்து அவளுக்கு எதிரிலுள்ள சீட்டில் அமர்ந்து கொண்டான். அவளை நன்றாக மேலிருந்து கீழாக ஒருதரம் பார்த்தான். அவள் முகத்தில் சாந்தி நிலவியிருந்தது! கஷ்டமே இல்லை!! அவள் பார்வை தரையை நோக்கியிருந்தது. ஒருகால் அவள் ஏதாவது யோசித்துக் கொண்டிருக்கலாம்! அவளுடைய உடையும் சாதாரணமாகவே இருந்தது.

ராஜன் அவளைப் பார்த்துக் கொண்டே "என்னை மன்னியுங்கள். நான் அந்த மாதிரி அதிகப்பிரசங்கித்தனமாகப் பேசியதற்காக மிகவும் வருந்துகிறேன். ஆனால் இதைத் தவிர வேறு வழியே இல்லை. தவிர தற்சமயம் என்னிடம் ரூ. 50- கூட இல்லை, உண்மை பேசுவதற்கு" ராஜன் புன்முறுவல் செய்தான்.

"மன்னிப்பு நான் அல்லவா கேட்கவேண்டும். எனக்காக நீங்கள் அனுவசியமாக தொந்திரவுக்குள்ளானீர்கள். நான் உங்கள் உதவியை என்றும் மறக்க மாட்டேன்"

பெண்ணின் பார்வை இன்னும் கீழேயே நோக்கிருந்தது.

"இதில் நீங்கள் நன்றி தெரிவிப்பதற்கு ஒன்றுமில்லை; இது என் கடமை."

பெண் தன் பார்வையை உயர்த்தி ராஜனைப் பார்த்தாள்! இருவர் கண்களும் ஒருகணம் சந்தித்தன!! மறுபடியும் அவள் பார்வை தாழ்ந்தது.

சிறிது நேரம் மௌனம் நிலவியது. பெண் தரையையே நோக்கிக் கொண்டிருந்தாள். ராஜன் அவளையே கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தான். அவள் ஒன்றும் அவ்வளவு அழகல்ல, ஆனால் அவளுடைய களையான முகம் மிகவும் கவர்ச்சியாகக் காணப்பட்டது, அவன் எவ்வளவுக்கெவ்வளவு அவளைப் பார்த்துக் கொண்டிருந்தானோ அவ்வளவுக்கவ்வளவு அழகாகக் காணப்பட்டாள்! அவள் குழலின் இருகற்றை அவள் கன்னங்களில் தவழ்ந்து கொண்டிருந்தன, வயது பதினாறு அல்லது பதினேழுதான் இருக்கும்- நல்ல குடும்பத்தினளாகக் காணப்பட்டாள்.

ராஜன் அவள் மௌனத்தால் மிகவும் அவதிப்பட்டுக் கொண்டிருந்தான். அவன் அவளுடன் பேச ஆசைப்பட்டான். கடைசியில் ராஜன் "ஒருகால் நீங்கள் தவறாக நினைக்காவிட்டால்—ஒரு பேச்சு சொல்லட்டுமா? என்று நகைத்தவாரே கேட்டான்.

"சொல்லுங்கள்"— அவள் தன் பார்வையை உயர்த்தினாள்.

"தற்சமயம் உலகத்தாரின் பார்வையில் நாம் இருவரும் கணவன் மனைவி. ஆனால் என்ன ஆச்சரியம் பாருங்கள், ஒருத்தருக்கும் மற்றவர் பெயர் தெரியாது!

இதைக் கேட்டதும் பெண்ணின் முகம் நாணத்தால் சிவந்தது. பிறகு அவள் தன் பார்வையை தாழ்த்திக்கொண்டாள். ராஜன் சிரித்துக்கொண்டே கூறலானான்.

"நாம் இருவரும் ஒருவருக்கொருவர் நன்றாக அறிந்து கொண்டால் தவறு ஒன்றுமில்லையே! பிறகு சம்பாஷணையில் பிரயாணமும் சீக்கிரத்தில் முடிந்துவிடும்." பெண் இதுவரை பேசவில்லை. மற்றும் அவள் பார்வை கீழேயே நோக்கியிருந்தது.

ராஜன் மறுபடியும் கூறலானான், "என் பெயர் ராஜேந்திரகுமார், ஆனால் என்னை எல்லோரும் ராஜன்" என்றுதான் கூப்பிடுகிறார்கள். உங்கள் பெயர்?

"ஜீ......!"

இப்பொழுது அவள் பார்வை உயர்ந்தது.

"ஒருகால் உங்களுக்கு ஏதாவது தடையிருந்தால் வேண்டாம்"

"இல்லை! அப்படியொன்றுமில்லை!! என் பெயர் நிர்மலா"

"உங்கள் பெயர் மிகவும் அழகாக இருக்கிறது! எதுவரை போகிறீர்கள்?

"அம்பாலா. நீங்கள்?"

"நானோ ஜலந்தர் போகிறேன், நீங்கள் அம்பாலா எதற்காகப் போகிறீர்கள்?"

"அங்கேயேதான் வசிக்கிறேன். இங்கே வெறுமனே சுற்றி பார்க்க வந்தேன்."

ஒருகால் நீங்கள் படித்துக் கொண்டிருக்கிறீர்கள் போலிருக்கு— எந்த வகுப்பில்?"

"நான் தேர்ட் இயரில் படித்துக் கொண்டிருக்கிறேன்"

சிறிது நேரத்தில் இருவரும் சகஜமாக பழகலானார்கள்.

அடுத்த ஸ்டேஷனில் வண்டி நின்றது. ராஜன் இரண்டு கோகோ கோலாவை வரவழைத்தான். நிர்மல் ஒன்றும் மறுத்துக் கூறவில்லை. இருவரும் ஒருவருக்கொருவர் வெகு நாட்களாகவே அறிந்தவர்கள்போல் காணப்பட்டார்கள். ராஜன் ஸூட் கேஸிலிருந்து சீட்டுக்கட்டை எடுத்தான். பிறகு இருவரும் சீட்டு விளையாட ஆரம்பித்தார்கள்.

ஆடிக்கொண்டிருக்கும்போதே ராஜன் விவாக விஷயமாக உங்கள் அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டான். "யாருடைய விவாக விஷயமாக?" என்று நிர்மல் சீட்டை போட்டுக் கொண்டிருந்தவள் நிறுத்திவிட்டு கேட்டாள்.

"யாருடையதாக இருந்தால் என்ன? முதலில் காதல் பிறகு கல்யாணமா? அல்லது முதலில்

கல்யாணம் பிறகு காதலா? நீங்கள் எது நல்லது என்று நினைக்கிறீர்கள்?"

"அது சமயா சந்தர்ப்பத்தைப் பொறுத்தது."

"நீங்கள் சொல்வது எனக்கு புரியவில்லை."

"நீங்கள் எந்த கட்சி?"

"நானே லவ் மேரியேஜ் கட்சி, முதலில் காதல் பிறகு விவாகம்"

"ஒருகால் எந்தப் பெண்ணும் உங்களை காதலிக்காமல் போனால் என்ன செய்வீர்கள்?"

"அப்படியானால் கல்யாணமே செய்து கொள்ளப் போவதில்லை, அப்படித்தானே?"

"அப்படி இல்லை. அது வேறு விஷயம்"—நிர்மல்.

"அப்படியானால் நம் சமூகத்தில் ஆண்களும் பெண்களும் காதலிக்க அவ்வளவு சுதந்திரம் இல்லை என்று நினைக்கிறீர்களா? ஆகையால் தான் நம் சமூகத்தின் நோக்கங்களை மாற்ற வேண்டும் என்று நான் சொல்கிறேன். ஒருத்தருக்கொருத்தர் சந்திக்க எந்தத்தடங்கலும் இருக்கக்கூடாது"

"ஒரு விஷயம் கேட்கட்டுமா?" நிர்மல் கேட்டாள்.

ஓ, எஸ்!" ராஜன் சிரித்துக்கொண்டே கூறினான்.

"உங்களுக்கு யாருடனாவது காதல் உண்டா? விவாகத்திற்கு முன் உங்களுக்கு வரப் போகும் மனைவி வேறு ஒருவனை காதலிக்கிறாள் என்று அறிய நேரிட்டால் என்ன செய்வீர்கள்? என்ன நீங்கள் அவளை மணந்து கொள்வேளா?"

"இல்லை, இல்லவே இல்லை."

"ஒருகால் கல்யாணம் ஆன பிறகு தெரிந்து விட்டால் உங்களுக்கு மிகவும் வேதனை கொடுக்கும். நீங்கள் எப்பொழுதும் அவளை சந்தேகக் கண்களுடன் நோக்குவீர்கள்"

"வேதனைக்குள்ளாவது இயற்கைதானே இந்த மாதிரி சந்தர்ப்பத்தில்"

"இப்படிக்கூட ஆகலாம், பெண்ணும் ஆணும் ஒருவருக்கொருவர் காதலித்த பிறகு அவர்கள் காதல் கைகூடா விட்டால் அப்பொழுது பெண்ணின் நிலைமை என்ன ஆகும் தெரியுமா? அவனே எப்படியும் நிரபராதியாகிவிடுவான். பெண்ணின் வாழ்க்கையே நாசமாகிவிடும். பிறகு அவளை யாரும் மணக்க முன்வர மாட்டார்கள். நம் எண்ணங்களும் நோக்கங்களும் பண்படாதவரை இந்த சுதந்திரம் நல்லதல்ல."

"நீங்கள் கூறுவது முற்றிலும் உண்மை"

"ஒருநாளில் யாருடைய நோக்கத்தையும் அறிந்து கொள்ள முடியாது. இதை அறிந்து கொள்ள சிறிது சமயமும் வேண்டும், அந்த 'சமயம்' நம் தேசத்தில், நம் சமூகததில் சில பேருக்குத்தான் கிடைக்கிறது. இதெல்லாம் பணக்காரரிடையேதான் முடியும். பிறகு நம் தேசத்தில் பணக்காரர்கள் அதிகமில்லை. ஏழைகள்தான் அதிகம். ஆகையால் தற்சமயம் 'முதலில் கல்யாணம் பிறகு காதல்'— இதுதான் முடியக்கூடியது. பிறகு இந்தக் காதலே கணவன் மனைவி ஒருவர் மற்றவருக்காக தியாகம் செய்து ஒருத்தருக்காக மற்றவர் விட்டுக்கொடுக்க உதவி செய்யும். என் நோக்கம் என்னமோ அதுதான். நீங்கள் என்னைவிட அதிகமாக யோசனை செய்ய முடியும்" என்று ஒருகுட்டி பிரசங்கம் செய்தாள்.

"உங்கள் நோக்கம் முற்றிலும் உண்மை. நான் உங்கள் நோக்கங்களை மதிக்கிறேன்"

பிறகு இப்படியே பேசிக் கொண்டிருக்கும் போதே 'அம்பாலா கண்ட்' வந்து விட்டது.

நிர்மல் எழுந்து "சரி எனக்கு அனுமதி கொடுங்கள். உங்களுடன் 'டயம்' நன்றாக பாஸாயிற்று. மிகவும் நன்றி" என்று சொன்னாள்.

"நீங்கள் இறங்கிப்போய் விடுவதை என் உள்ளம் விரும்ப மாட்டேங்கிறது. உங்கள் பேச்சையே எப்பொழுதும் கேட்டுக் கொண்டிருக்க விரும்புகிறேன். எவ்வளவு உயர்ந்த நோக்கங்கள் உங்களுடையது! எவ்வளவு நல்லவள் நீங்கள்!! கடைசி வார்த்தையை கேட்டு நிர்மலின் முகம் நாணத்தால் சிவந்தது!

"நீங்கள் வெறுமனே என்னைப் புகழ்கிறீர்கள். நான் ஒரு சாதாரணப்பெண். என் விலாசம்: 10 பல்டன் பஜார், அம்பாலா கண்ட். நீங்கள் தவறாக நினைக்காவிட்டால் உங்கள் விலாசத்தையும் கொடுங்கள்" என்று கூறினாள்.

ராஜன் நிர்மலின் விலாசத்தைக் குறித்துக் கொண்டு, தன் விலாசத்தை எழுதிக் கொடுத்தான்.

"மறுபடியும் உங்களை சந்திப்பேன் என்று நம்புகிறேன்"

"எப்பொழுது முடியுமோ! இன்று நீங்கள் இங்கேயே இருந்து விடுங்கள்"

"தாங்க்ஸ்" என்று ராஜன் சொன்னான். ஆனால் அவன் உள்ளம் அதையே விரும்பிற்று.

"எப்பொழுதாவது அம்பாலா வந்தால் என்னை பார்க்கத் தவறாதீர்கள்."

அப்பொழுது வண்டி ஊதி விட்டது.

"சரி, நமஸ்தே" என்று கூறி நிர்மல் தன் இரு கைகளையும் சேர்த்தாள். ராஜனின் கைகளும் தானாகவே சேர்ந்து கொண்டன. அவனுடைய பார்வை அவளிடம் லயித்து விட்டது. வண்டி மெதுவாக நகர வாரம்பித்தது. ராஜன் வண்டிக்குள் ஏறிக் கொண்டான். பிறகு தங்கள் தங்கள் கைகுட்டையை மற்றவர் உருவம் மறையும் வரை ஆட்டிக் கொண்டிருந்தார்கள்.

வழி முழுவதும் நிர்மலின் அழகிய உருவம் ராஜனின் கண்களில் சுற்றிக் கொண்டேயிருந்தது. 'அம்பாலா ஸ்டேஷன் வராமலேயே இருக்கக் கூடாதா' என்று அவன் அங்கலாய்த்துக் கொண்டான்.

வீடு வந்ததும் எதோ ஒன்றைப் பறிகொடுத்தவன்போல் காணப்பட்டான். தன் நண்பர்களுடனும் அதிகம் கலக்கவில்லை. தன் அறையிலேயே சதா அடைப்பட்டு யோசனையிலேயே ஆழ்ந்து கொண்டிருப்பான். அவன் நினைவெல்லாம் நிர்மலாவிடமே இழுத்துச் சென்றது. அவனுக்கு நிர்மலிடம் காதல் ஏற்பட்டுவிட்டது! அவன் ஒவ்வொரு நாளும் அவளுக்கு கடிதம் எழுத எண்ணினான். ஆனால் "விவாகத்திற்கு பிறகுதான் காதல்"—நிர்மலின் வார்த்தைகள் அவன் காதுகளில் அடிக்கடி ரீங்காரம் செய்து கொண்டிருந்தன.

கடைசியில் தன் வசம் இழந்து அவளுக்கு கடிதம் எழுதினான்.

நிர்மல்ஜி,

சில நாட்களுக்கு முன் நாம் இருவரும் அகஸ்மாத்தாக டெல்லி ஸ்டேஷனில் சந்தித்திருக்கிறோம் என்பதை உங்களுக்கு ஞாபகம்கூட இருக்கமுடியாது. நீங்கள் அம்பாலா ஸ்டேஷனில் இறங்கிய பிறகும் உங்கள் அழகிய முகம் என் கண்கள் முன் சுற்றிக் கொண்டிருக்கிறது. அன்றிலிருந்து உங்களுக்குக் கடிதம் எழுத வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருக்கிறேன். ஆனால் எழுத முடியவில்லை. இன்று என் உள்ளம் நிர்ப்பந்தம் செய்ததின் பேரில் இக்கடிதம் எழுத தைரியம் வந்தது. உங்களுடன் சிறிது நேரம் கழித்ததும் உங்கள் உயர்ந்த நோக்கங்களும் என்னை பிரமிக்கச் செய்கின்றன. உங்களுடன் மறுபடியும் கலக்க என் உள்ளம் விரும்புகிறது. ஏன் இப்படி என் உள்ளம் விரும்புகிறது? காரணம் தெரியவில்லை! நீங்கள் சௌக்கியம் என்று நம்புகிறேன். இன்றையிலிருந்தே உங்கள் பதிலை எதிர்பார்க்கும்,

உங்கள்,
ராஜன்.

ஒரு வார தவிப்பிற்குப் பிறகு அவனுக்கு பதில் கிடைத்தது. ஆனால் அதனால் அவனுக்கு திருப்தி கொடுக்கவில்லை. நிர்மலுக்கு தன்னிடத்தில் இழுப்புயிருக்குமா என்று அவனால் தீர்மானம் செய்ய முடியவில்லை.

மிஸ்டர் ராஜன்,

உங்கள் கடிதம் கிடைத்தது. நான் ஒன்றும் அப்படிபட்டவளில்லை உங்களை பிரமிக்கச் செய்ய. நீங்கள் சுகம் என்று நம்புகிறேன். நான் உங்களை மறக்கவில்லை,

தங்கள் தற்காலிக
நிர்மல்

ராஜன் மற்றொரு கடிதம் நிர்மலுக்கு எழுதினான். அது ஒரு காதல் கடிதமாக இருந்தது. அதில் தன் உள்ளத்தை விண்டு எழுதியிருந்தான். ஆனால் அதற்கு பதில் ஒன்றும் வரவில்லை. இரண்டு வாரங்களுக்கு பிறகு மறுபடியும் ஒரு கடிதம் எழுதினான். அதற்கும் அதே பலன் தான்.

7, 8 கடிதங்கள் எழுதிய பிறகும் பதில் கிடைக்கவில்லை. உள்ளம் சோர்ந்து விட்டான்.

இப்படியிருக்க ஒருநாள் ராஜனின் தந்தை தன் மனைவியிடம் லூதியானாவிலிருக்கும் ராய் பகதூர் ராம் குமாரி தம் பெண்ணை ராஜனுக்கு கொடுக்க விரும்புவதாகச் சொன்னார். அவர் மனைவிக்கு நம்பிக்கையே ஏற்படவில்லை. எங்கே ராய் பகதூர்! எங்கே நாம்!! ஆனால் ராஜனின் தந்தை அவளுக்கு ராய் பகதூரின் கடிதத்தைப் படித்து காட்டியதும் அவளுக்கு சந்தோஷம் தாள முடியவில்லை. அவள் ராய் பகதூரின் பெண்ணை 7, 8 வருஷங்களுக்கு முன் பார்த்திருக்கிறாள்.

சாயந்திரம் தாயார் ராஜனிடம் லூதியானா சம்பந்தத்தைப் பற்றி பிரஸ்தாபித்தபோது ராஜன் "இப்பொழுது நான் கல்யாணத்திற்கு தயாராக இல்லை" என்று கூறிவிட்டான். ஆனால் அவள் அதிகம் பிடிவாதம் செய்ததின் பேரில் "கொஞ்சம் நாள் அவகாசம் கொடு, யோசித்து சொல்கிறேன்" என்று மழுப்பி விட்டான்.

ராஜன் மறுநாளே அம்பாலாவுக்கு புறப்பட்டு விட்டான், தன் அதிர்ஷ்டத்தை பரிசோதிக்க. தன் நண்பன் ஒருவன் விவாகத்திற்கு போவதாக வீட்டில் சொல்லிவிட்டான். அம்பாலா அடைந்ததும் ஒரு ஹோட்டலில் தங்கினான். பிறகு 10, பல்டன் பஜார், அம்பாலா கண்டோன்மெண்டைத் தேடக் கிளம்பினான். 10வது நம்பர் பங்களாவை அடைந்ததும் உடனே உள்ளே புக தைரியம் வரவில்லை.

'யாரைக் கூப்பிடுவது? யாரைக் கலப்பது? யாராவது 'நீங்கள் யார்' என்று கேட்டால் என்ன பதிலுரைப்பது? இதே நினைவில் அவன் அந்த பங்களா முன் எவ்வளவு தரம் நடந்தானோ! நிர்மலா எதிரில் தோன்றமாட்டாளா என்ற நம்பிக்கையில் பல தடவைகள் அவன் பங்களா முன் நடந்தான். கடைசியில் ஒரு வழியாக தைரியத்தை வரவழைத்துக் கொண்டு வீட்டு வாசலில் வந்து நின்று கொண்டு உள் பக்கம் தன் பார்வையை விடுத்தான். சிறிது நேரம் கழித்து ஒரு மாது — அவள் வயது முப்பது இருக்கும் — வாசல் பக்கம் வந்தாள். ராஜனைப் பார்த்து "யாரைப் பார்க்கிறீர்கள்?" என்று கேட்டாள். இதைக் கேட்டதும் ராஜன் பயந்து விட்டான்! மறுபடியும் தைரியத்தை வரவழைத்

துக் கொண்டு அவளை கேட்டான் "இங்கே ஷியாம் லால்ஜி வசிக்கிறாரா?"

"எந்த ஷியாம் லால்ஜி?"

"அவருடைய பெண் பெயர் நிர்மல். 3வது வருஷம் படிக்கிறாள்"

"இங்கு அப்படி யாரும் இல்லை"

"10, பல்டன் பஜார் இதுதானே?"

"ஆமாம்"

"நீங்கள் இங்கு எவ்வளவு நாளாக வசிக் கிறீர்கள்?"

"ஏறக்குறைய இரண்டு வருஷமாக"

"மன்னித்துக் கொள்ளுங்கள், நம்பர் தப்பாக எழுதிக் கொண்டு விட்டேன்" என்று சொல்லி விட்டு ராஜன் திரும்பி விட்டான்.

அவன் யோசனை செய்யலானான். இரண்டு வருஷங்களாக நிர்மல் எனனும் பெயருடைய வள் இங்கு யாருமில்லை. இந்த விலாசத்திற்குத் தான் கடிதம் எழுதினேன். இதே விலாசத்தி லிருந்தும் பதிலும் வந்திருக்கிறது. இதெல் லாம் மூன்று மாதத்திற்குள்தான நடந்திருக் கிறது. ராஜன் ஆறு நாட்கள் தங்கி பல்டன் பஜார், ஒவ்வொரு வீதி, சந்து பொந்துகள் எல்லாம் அலசிப் பார்த்து விட்டான், நிர்மல் கண்ணில் தென்பட மாட்டாளா என்று. ஆனல் எல்லாம் வியர்த்தமாகி விட்டது. ஏழாவது நாள் வெறுத்துப் போய் ஜலந்தர் திரும்பி விட்டான். தனக்குள் எண்ணினான்; ஏமாற்றம் பச்சை ஏமாற்றம்!! சிறிதும் ஈவு இறக்கம் இல்லாமல என உள்ளம், என் ஆசைகளுடன் விளையாடியிருக்கிறாள். என்னை மடையன் ஆக்கிவிட்டாள்; அவனுக்கு ஞாபகம் வந்தது— 'முதலில் கல்யாணம பிறகு காதல்'.

இரண்டு வாரங்களுக்கு பிறகு ராய் பகதூர் மறுபடியும் ஒரு கடிதம் எழுதினார் சீக்கிரமாக பதில் கிடைக்கும்படி எழுதியிருந்தார். அதில் மற்றும் எழுதியிருந்தார்—ஒருகால் மாப்பிளளை பெணணை பாாக்க விரும்பினல் அதுவும் காட் டத் தயார். ராஜனை மறுபடியும் கேட்டாாகள். அவன் வெறுமனே 'சரி' என்று சொலலி விட்டான். பெண்ணைப் போய் பார்க்கும் விஷய மாக கேட்டதற்கு "என் விஷயத்தில் எந்த பெண்ணும் எனக்கு சம்மதமதான். நீங்கள் பார்த்திருந்தால் அதே போதும்" என்று சொல்லி விட்டான்.

சம்பந்தம் கூடி நிச்சயத்தார்த்தம் ஆகிவிட் டது. இதற்கு ஒரு வாரம் கழித்து ராஜனுக்கு நீலகலரில் ஒரு கவர் வந்தது. கையெழுத்தை பார்த்து அவன் உள்ளம் 'பட்பட்' என்று அடித் துக் கொண்டது. அவசர அவசரமாக கவரை உடைத்து கடிதத்தை படிக்கலானான்.

நெ. 10, பல்டன் பஜார்

அம்பாலா கண்ட்.

15—9—'55

மிஸ்டர் ராஜன் நமஸ்தே,

உங்கள் சம்பந்தம் ராய் பகதூர் ராம்குமார் பெண்ணுடன் ஏற்பட்டிருக்கிறது என்று கேட்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். என்னுடைய மனமார்ந்த வாழ்த்தை ஏற்றுக் கொள்ளுங்கள். இந்தச் சமயத்தில் என்னை மறந்து விட்டீர்கள் ஆனல் நான் உங்களை மறக்கவில்லை. எப்படி மறக்க முடியும்! விவாகத்தின் போது என்னை அழைக்க வேண்டும். அப்படி நீங்கள் மறந் தாலும் நானாகவே புறப்பட்டு வந்து விடுவேன். எனக்கு இதெல்லாம் எப்படித் தெரியும் என்று உங்களுக்கு ஆச்சரியம் ஏற்படலாம். ஆனல் இதற்கு பதில் மிகவும் தெளிவானது. அது என்னவென்றல் உங்கள்......

தற்காலீக

நிர்மல்

ராஜனுக்கு விலாசத்தைப் பார்த்து மிகவும் ஆச்சரியம் ஏற்பட்டது. எதுவும் யோசிக் காமல் கொள்ளாமல் உடனே அம்பாலாவுக்கு புறப்பட்டு விட்டான்!

ஆனல் 10, பல்டன் பஜாரில் அவனுக்கு முன்பு கிடைத்த பதிலே கிடைத்தது!

ராஜனுடைய நிலைமை ஒரு தனி விதமாகத் தான் இருந்தது. இந்தப் புதிர் அவனுக்கு புரியவே இல்லை. அவன் எவ்வளவு யோசனை செய்கிறானே அவ்வளவு கவலைக்குள்ளாகிறான். கடைசியில் அவன் யோசிப்பதையே விட்டு விட்டான். மிகவும் மனம் சோர்ந்து காணப் பட்டான்.

இரண்டு பக்கங்களிலிருந்தும் கல்யாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந் தன. கல்யாண நாளும் வந்து விட்டது. ஆனல் ராஜன் யாரை மிகவும் ஆவலுடன் எதிர் பார்த்தானே அவள் வரவில்லை. அவன் அவளுக்கு ஒரு வாரத்திற்கு முன்பே தந்தியும், ஒரு கல்யாணப் பத்திரிகையும் அனுப்பியிருந் தான்.

சீர் வரிசைகள் ஊர்வலத்துடன் சென்று மணப் பெண்ணுடன் திரும்பியது.

விவாகத்தின்போது அவன் முகத்தில் சந்தோஷக்களையை யாராலும் காணமுடிய வில்லை. யார் இதற்குக் காரணம் கேட்டாலும் எதோ சொல்லி மழுப்பி விட்டான்.

முதல் இரவின் மாலைப்பொழுது எங்கும் சந்தோஷ ஆரவாரம் எழும்பிக் கொண்டிருந்தது. மணப்பெண்ணின் அறையை அலங்கரித்துக் கொண்டிருந்தார்கள். மணப்பெண் ஒரு அறையில் உட்கார்ந்திருந்தாள். இதுவரை அவளைப் பார்த்தவர்கள் மிகவும் புகழ்ந்தார்கள். ஆனால் ராஜன் மாடியில் தனியாக விரக்தியுடன் ஏதோ யோசனையில் ஆழ்ந்து கொண்டிருந்தான். அப்பொழுது ஒரு வேலைக்காரன் ஒரு பொட்டலத்தை கொண்டு வந்து ராஜனிடம் கொடுத்து "நாட்டுப் பெண்ணின் தோழி ஒருவள் வந்திருந்தாள், அவள் போகும்போது இதை இப்பொழுதே உங்களிடம் கொடுத்து விடும்படி சொல்லிவிட்டுப் போய் விட்டாள்" என்றான். ராஜன் பொட்டலத்தை அவிழ்த்தான். அதிகமான துணிகளை அகற்றிய பிறகு உள்ளே ஒரு சிறு டப்பா இருந்தது. டப்பாவை திறந்து அதிலிருந்து இரண்டு காகிதங்களை எடுத்தான். ஒரு காகிதம் அவன் அம்பாலா ஸ்டேஷனில் நிர்மலுக்கு தன் விலாசம் எழுதிக் கொடுத்த காகிதத்துண்டு! மற்றொரு காகிதத்தில் பின் வருமாறு எழுதியிருந்தது.

நெ. 10, பல்டன் பஜார்
அம்பாலா கண்ட்.
12—12—55.

என் அன்புள்ள ராஜன்,

நமஸ்தே, உங்கள் திருமண சமயம் என் மனமார்ந்த வாழ்த்துக்கள். உங்கள் திருமணப் பத்திரிகை கிடைக்கப் பெற்றேன். நான் உங்கள் திருமணத்திற்கு வந்தும் விட்டேன். கடவுள் உங்கள் ஆசைகளை பூர்த்தி செய்யட்டும். மற்றும் உங்கள் எதிர்கால வாழ்க்கை ஆனந்தமாகக் கழியட்டும். நான் உங்கள் திருமண சமயம் எதைக் கொடுப்பது! ஒன்றும் புரியவில்லை!! உங்கள் விலாசத்தை வாபஸ் செய்கிறேன். இனி அதற்கு அவசியம் இல்லை என்று நினைக்கிறேன். மற்றும் உங்களுக்கு இப்பொழுது நிரந்தர........

உங்கள் தற்காலிக,
நிர்மல்.

கடிதத்தை படித்து முடித்ததும் ராஜன் ஒரு பெருமூச்சு விட்டான். நினைத்தான் 'இனி என்ன ஆசைகள் இருக்கிறது கடவுள் பூர்த்தி செய்ய! ஒருவித ஆசையும் கிடையாது!! உண்மையில் இனி என் விலாசத்தின் அவசியம் உனக்கில்லைதான். வாழ்க்கை எப்படியும் கடந்து விடும் — சந்தோஷமாக அல்லது கவலையாக!

இரவு ராஜன் மணப்பெண் அறையில் நுழைந்தான். மணப்பெண் ரோஸ் கலரில் புதுப்பட்டுப் புடவை ஜொலிக்க கட்டிலின் மீது உட்கார்ந்திருந்தாள். நாணத்தால் அவள் உடல் ஒடுங்கியிருந்தது. நீண்ட முக்காடு அவள் முகத்தை முழுவதும் மறைத்திருந்தது. ராஜன் மெதுவாக அடிகளை வைத்துக் கொண்டு கட்டிலருகில் வந்தான். சிறிதுநேரம் நின்றான். பிறகு மணப்பெண் அருகிலேயே உட்கார்ந்து கொண்டான். அவள் எதுவும் அசைந்து கொடுக்கவில்லை! தரையை நோக்கியவாறு ராஜன் கூறலானான் "ரஜினி! சில மாதங்களாக என்னிடத்தில் ஒரு ரகசியம் மறைந்திருக்கிறது. மற்றும் இந்த ரகசியம் இப்பொழுது என் உள்ளத்தில் ஒரு பெரிய புண்ணாகிருக்கிறது. அது என்னை அரித்துக் கொண்டிருக்கிறது. நான் உனக்கு இந்த ரகசியம், இந்த புண்—காட்டிவிட விரும்புகிறேன். ஒருகால் இதனால் வலி குறையட்டும். புண்ணும் ஆறிப்போகட்டும். பிறகு நீயும் என்னை நன்றாகப் புரிந்து கொள்வாய். ஆனால் என்னுள் மறைந்திருக்கும் ரகசியம், புண் இவைகளை உனக்குத் திறந்து காட்டுவதற்கு முன் உன் முக்காடை அகற்றிவிடு. அதனால் நான் உன் மதிவதனத்தை நன்றாகப் பார்க்க முடியும். பிறகு நீ என் புண்ணை...... என்று சொல்லிக் கொண்டே ராஜன் அவள் பக்கம் திரும்பி தன் இருகைகளையும் நீட்டி அவள் முக்காடை அகற்றினான். முக்காடை அகற்றியதும் ராஜன் வாயிலிருந்து உடனே 'நிர்மல்' என்று புறப்பட்டது. பிறகு அவன் இரண்டு அடி பின்வாங்கினான்.

மணமகளின் வதனத்தில் குறும்பான சிரிப்பு தவழ்ந்தது. அவள் தன் உதட்டின் மேல் விரல் வைத்துக் கொண்டே கூறினாள். 'நிர்மல் இல்லை, ரஜினி. அவளோ தற்காலிகம்..."

ராஜனுக்கு இப்பொழுது எல்லாம் புரிந்து விட்டது. அவன் நடுவில் கத்தினான் "செ...... ரஜினி..." மற்றும் அவன் உள்ளத்தில் ரஜினிக்காக—நிர்மலுக்காக அளவில்லாத காதல் பொங்கிற்று.

இப்பொழுது நீங்களே முடிவு செய்யுங்கள்—முதலில் கல்யாணமாயிற்றா அல்லது காதலாயிற்றா?



காட்சி எங்கே?

ரா. வேங்கடசாமி

பாத்திரங்கள்

லலிதா	— ஒரு கம்பெனி டைப்பிஸ்ட்
சங்கர்	— போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர்
பரந்தாமன்	— பிரபல எழுத்தாளர்
அருணசலம்	— வீட்டு சொந்தக்காரர்
P. C. 1003	— கான்ஸ்டேபிள்
ராமதிலகம்	— ஹாஸ்டல் வார்டன்
ராகவன்	— போலீஸ் சூப்பரின்டெண்டெண்ட்
டாக்டர் ஜோசப்	— பைத்தியக்கார ஆஸ்பத்திரி டாக்டர்

(மாலதி–மானசிக நடை பாத்திரம்)

[போன் மணி அடிக்கிறது]

பெண் குரல்: [பதட்டத்துடன்] போலீஸ் ஸ்டேஷன்தானே? சரி... யார் பேசுவது?... சப்-இன்ஸ்பெக்டரா?... சார் நான் இங்கே பெருமாள் பிள்ளைத் தெருவில் இருக்கும் அம்மணி விலாசத்திலிருந்து பேசுகிறேன்... என் பெயர் லலிதா... விஷயமில்லாமல் உங்களுக்குப் போன் செய்ய எனக்குப் பைத்தியமா?... அதுவும் இந்த நேரத்தில்? மேல் மாடியில் என் படுக்கை அறைக்கு நேர் எதிராக எதிர் வீட்டு மாடியிலும் ஓர் அறை இருக்கிறது...சார்... நான் சொல்வதைக் கேட்டுவிட்டு பிறகு நீங்கள், உங்கள் சந்தேகங்களைக் கேளுங்கள்... இப்போது இரவு இரண்டு மணி என்று எனக்குத் தெரிந்து கொண்டுதான் பேசுகிறேன்... எதிர் மாடி அறையில் எழுத்தாளர் பரந்தாமன் குடி இருக்கிறார்... சற்றுமுன்... பத்து நிமிஷங்களுக்குள், என்று வைத்துக் கொள்ளுங்கள்... அவர்...... ஒரு பெண்ணின் கழுத்தை நெறித்துக் கொண்டிருந்தார். அவள் உயிருக்குப் போராடி, கடைசியில் துவண்டு கீழே விழுந்து விட்டாள்... பிணமாகி இருப்பாள் என்றுதான் நினைக்கிறேன். கொலைகாரன்—கொலை செய்யப்பட்டவள் — சாட்சி ஆகிய மூவரும் இங்கு இருக்கிறார்கள்... தயவு செய்து நீங்கள் உடனே புறப்பட்டு வந்து பாருங்கள்... என்ன இந்த நேரத்தில் நான் அதை எப்படிப் பார்த்தேன் என்கிறீர்களா? தண்ணீர் குடிக்க எழுந்தேன். அகஸ்மாத்தாக அப்பக்கம் திரும்பினேன்... இக்காட்சி என் கண்களில் பட்டு விட்டது. நான்கைந்து நிமிடங்கள், நான் தடுமாறிப் போய்விட்டேன். பிறகு சமாளித்துக் கொண்டு உங்களுக்குப் போன் செய்கிறேன்... தயவு செய்து நீங்கள் பேசி நேரத்தை வீணாக்காமல் உடனே வந்து பாருங்கள்... மேற்கொண்டு உங்கள் கேள்விகளுக்கு பதில் சொல்லத்தான் நான் இங்கேயே இருக்கிறேனே... வருகிறீர்களா? சரி உடனே வாருங்கள்...

[போன் கீழே வைக்கப்படுகிறது]

காட்சி 2

(ஜீப்கார் வந்து நிற்கிறது — பலர் மாடிப்படி ஏறிவரும் சப்தம்—கதவை ஒரு கை தட்டுகிறது)

ஒரு குரல்: யாரது?

இரண்டாவது குரல்: நான் சப்-இன்ஸ்பெக்டர் சங்கரன் பேசுகிறேன்... கொஞ்சம் கதவைத் திறக்க முடியுமா?

முதல் குரல்: இதோ வந்து விட்டேன்...

(அடுத்த வினாடி கதவு திறக்கப்படுகிறது)

சப்-இன்ஸ்பெக்டர் சங்கரன்: நீங்கள்தானே பிரபல எழுத்தாளர் பரந்தாமன்?

பரந்தாமன் (முதல் குரல்): ஆமாம்... என்ன இங்கே இந்த நேரத்தில்?

சங்க: உங்களுக்கு தொந்தரவு கொடுப்பதற்காக மிகவும் வருந்துகிறேன் மிஸ்டர் பரந்தாமன்... மன்னியுங்கள். இந்த அறையில் ஒரு கொலை நடந்ததாக எங்களுக்குப் போனில் செய்தி கிடைக்கவே... இங்கு வந்திருக்கிறோம்...

பரந்த: கொலையா? (வியப்புடன்) என் அறையிலா? என்ன விசித்திரமாக இருக்கிறதே...

சங்க: எங்களுக்கும் வியப்பாகத்தான் இருக்கிறது... இருந்தாலும் கடமை இருக்கிறதே! தயவுசெய்து உங்கள் அறையையும், உடமைகளையும் சோதனை செய்ய எங்களுக்கு அனுமதி அளிப்பீர்கள் என்று நம்புகிறேன்...

பரந்: தாராளமாகச் செய்து கொள்ளுங்கள் சார்... மடியில் கனமில்லையே... எனக்கென்ன பயம்?

சங்க: நன்றி மிஸ்டர் பரந்தாமன்... இந்தாப்பா 1003, நீயும் கான்ஸ்டேபிள் ரங்கசாமியும் அடுத்த அறைகளில் பாருங்கள்... நான் இந்த அறையைப் பார்க்கிறேன.

[நாற்காலிகள் நகர்த்தப் படுகின்றன... கதவுகள் திறந்து மூடப்படுகின்றன... திரைச்சீலைகள் நகர்த்தப் படுகின்றன—பரபரப்பான இசை]

பரந்: ஏன் சப்-இன்ஸ்பெக்டர்... இப்படி ஒரு புகாரை உங்களுக்குப் போனில் சொன்னது யார்?

சங்க: அதுவா? உங்களுக்கு எதிர்த்த வீட்டு மாடியில் குடியிருக்கும் லலிதா என்னும் பெண்மணி.

பரந்: [கேலியாக] ஏதோ கனவு கண்டிருப்பாள் போலிருக்கிறது.

சங்க: இங்கு நடந்ததை ஜன்னல் வழியாகப் பார்த்ததாகச் சொன்னதால் வந்தோம்.

பரந்: வந்ததுதான் வந்தீர்கள் எல்லா வேலைகளையும் ஒழுங்காகச் செய்து விட்டுப் போங்கள். என்ன ஏட்சார், எல்லாவற்றையும் நன்றாகப் பார்த்து விட்டீர்களா?

1003: அறைகள் இரண்டும் சுத்தமாகத்தான் இருக்கின்றன சார்... ஒரு பெண் இங்கு வந்து போன அடையாளமே இல்லை! எல்லா மூலைகளையும் பார்த்து விட்டோம்! நீங்களும் வேண்டுமானாலும் பாருங்கள் சார். அந்தக் குறை பிறகு இருக்கக் கூடாது பாருங்கள்.

சங்க: இங்கும் சந்தேகப்படும்படி எதுவும் இல்லை— அறைகளை நான் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை...புறப்படுங்கள் போகலாம்... மிஸ்டர் பரந்தாமன் உங்களுக்கு வீண் தொந்தரவு...

பரந்: பரவாயில்லை... அதனுலென்ன? உங்கள் கடமையை நீங்கள் செய்தீர்கள்... தயவு செய்து போகும்போது அந்த அம்மாளிடம், இங்கு எந்த விதமான கொலையும் நடக்கவில்லை என்று சொல்லிவிட்டுப் போங்கள்... என்ன இருந்தாலும், மற்றவர்கள் விவகாரத்தில் ஒரு பெண்ணுக்கு இவ்வளவு அக்கறை கூடாது!

சங்க: ஆமாம்!... சரிசார், சொல்லிவிட்டுப் போகிறேன்... வரட்டுமா? வணக்கம்.

[போகிறார்கள். கதவுமூடி தாளிடப்படுகிறது]

பரந்: [தனக்குள் பலமாகப்பேசிக்கொள்கிறார்] நான் மட்டும் மாடியிலிருந்து போலீஸ்காரர்கள் வருவதைப் பார்த்தவுடன் நடு அறையில் கிடந்த பிணத்தைக், காலியாக பூட்டப்பட்டிருக்கும் பக்கத்துப் போர்ஷனில் அதைத் திறந்து கொண்டு போய், மறைத்து வைத்திருக்காவிட்டால், இந்நேரம் என்ன ஆகியிருக்கும்?... அப்பாடா பிழைத்தேன்... ஆமாம்... இந்தப் பெண் லலிதா யார்?

காட்சி 3

லலிதா: (வியப்படைந்த குரலில்) என்ன சப்-இன்ஸ்பெக்டர் சார்... போன வேகத்தில் திரும்பி விட்டீர்கள்? அதற்குள் எல்லா காரியங்களும் முடிந்து விட்டனவா?

சங்க: (சலிப்பாக) அங்கே கொலையும் நடக்கவில்லை, ஒன்றும் நடக்கவில்லை அம்மணி... உங்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டு போய், ஒரு கௌரவமான மனிதரின் தூக்கத்தைக் கெடுத்ததுதான் மிச்சம்!

லலிதா: (அதிக வியப்பாக) என்ன சார் இது? என் கண்ணால் பார்த்ததைப் பொய்யாக்கி விட்டீர்களே... பிணத்தை எங்காவது மறைத்து வைத்திருப்பார்... நன்றாக சோதனை செய்து பார்த்தீர்களா?

சங்க: அவர் குடி இருக்கும் அறைகளையெல்லாம் அங்குலம் விடாமல் சோதனை போட்டாகி விட்டது... அதற்குப் பிறகு என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள்? (கிண்டல் தொணிக்கிறது) அந்த மாடி வீட்டில் பல குடும்பங்கள் இருக்கின்றன. எல்லாருடைய கதவுகளையும் தட்டி இம்மாதிரி விசாரிக்க முடியுமா?

லலிதா: (கவலையாக) அதற்குள் பிணம் எங்கே போயிருக்கும்?

சங்க: கொலையே நடக்கவில்லையென்கிறேன்... நீங்கள் பிணத்தைப் பற்றிப் பேசுகிறீர்களே? (எரிச்சலாக)

லலிதா: மன்னியுங்கள் சப்-இன்ஸ்பெக்டர், இதில் ஏதோ தவறு நடந்து விட்டிருக்கிறது. என் கண்கள் குருடாக இல்லை...

சங்க: கொலை, கொள்ளை முதலிய விஷயங்களைப் பற்றி போலீசுக்குத் தகவல் கொடுப்பது நல்ல காரியந்தான். ஆனால் இம்மாதிரி பொய்த் தகவல்கள் இனிமேல் தரவேண்டாம் என்று உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன் மிஸ் லலிதா!

லலிதா: (வருத்தப்பட்டுக்கொண்டு) ஐயா, நான் மிகவும் வருந்துகிறேன். நடந்த கொலை, எப்படி நடக்காத கொலையாகி விட்டது என்றுதான் எனக்குத் தெரியவில்லை... பொழுது விடிவதற்குள் என்னென்ன நடக்குமோ?

சங்க: இம்மாதிரி விவகாரங்களுக்கெல்லாம் தகுந்த சாட்சி வேண்டும் மிஸ் லலிதா... அவரை உங்களுக்கு ஏற்கனவே தெரியுமா? தெரிந்தால் உங்கள் இருவருக்கும் விரோதமா?

லலிதா: அப்படியெல்லாம் ஒன்றும் கிடையாது! சொல்லப் போனால், அவரை நான் சரியாகக் கூட பார்த்தது கிடையாது, அவர் ஒரு பெரிய எழுத்தாளர், சினிமா கதை வசன கர்த்தா என்று மட்டும் எனக்குத் தெரியும்!

சங்க: சரி... உங்களைத் தவிர இந்த வீட்டில் யாரும் இல்லையா?

லலிதா: இல்லை.

சங்க: உங்கள் பெற்றோர்கள்?

லலிதா: ஊரில் இருக்கிறார்கள். நான் ஒரு கம்பெனியில் டைப்பிஸ்டாக இருக்கிறேன்.

சங்க: இவ்வீட்டின் கீழ் பகுதியில் யார் இருக்கிறார்கள்?

லலிதா: யாரோ இருக்கிறார்கள். எனக்கும் அவர்களுக்கும் பரிச்சயமில்லை... நான் மாடிக்கு வருவதே வெளியில் தனியாக உள்ள படிக்கட்டுகள் மூலமாகத்தான்! ஏன் அவர்களிடம் ஏதாவது கேட்க வேண்டுமா!

சங்க: இல்லை...

லலிதா: சரி... நீங்கள் எதிர் வீட்டில் நடந்த கொலையைப் பற்றி விசாரிக்க வந்தீர்களா... இல்லை என்னைப் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்ள வந்தீர்களா?

சங்கரன்: இரண்டுக்குந்தான் ... உங்களுக்குத் தொந்தரவு கொடுக்கிறேன் போலிருக்கிறது... நான் வருகிறேன்.

லலிதா: (சிரித்துக் கொண்டே) போய் வாருங்கள்... அடுத்த தடவை, பிணத்தை வைத்துக் கொண்டே போன் செய்கிறேன்.

சங்கரன்: அப்போது நானும் சாட்சி கேட்க மாட்டேன்... வருகிறேன்...

[போகிறார்கள்]

லலிதா: (தனக்குள்) இறந்துபோன - அதாவது கொலை செய்யப்பட்ட - பெண்ணின் பிரேதம் என்ன ஆயிற்று? எங்கே மறைத்திருப்பார் அந்த நபர்?... இப்படிப்பட்ட ஒருநபர் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பலாமா?...பார்க்கலாம் ஓணான் ஓட்டம் வேலி வரையில்தானே? எவ்வளவு நாட்கள் ஏமாற்ற முடியும்?

காட்சி 4

[காலை. மணி ஆறு அடிக்கிறது]

லலிதா: (தனக்குள்... வியப்பான குரலில்) எழுத்தாளர் பரந்தாமன் எங்கே இவ்வளவு சீக்கிரம் கிளம்பி விட்டார்? அதென்ன அவ்வளவு பெரிய பெட்டியைத் தூக்க மாட்டாமல் தூக்கிக்கொண்டு வருகிறார். காரில் வைக்கிறார்... ஓ! பெட்டியினுள் அந்தப் பெண்ணின் பிணம் இருக்குமோ? கொலைக்காரனுக்கு வசதியாகப்பெட்டியுமல்லவா இருக்கிறது-போதாத குறைக்கு அதைச் சுமக்க கார் வேறு! ஆமாம்...இதை எங்கே கொண்டுபோகிறார்?... அடேடே... கார் புறப்பட்டு விட்டதே (சப்தம்) இப்போது நான் என்ன செய்ய முடியும்? அவர் பிணத்தைக் கொண்டுபோய் எங்காவது போட்டு விட்டால், செய்த கொலைக்கு ஆதாரமில்லாமல் போய்விடுமே! என் சாட்சி போதவில்லை சப்-இன்ஸ்பெக்டருக்கு... என்ன செய்வது? இப்படிக் கொலை செய்து மறைக்கும் நபருக்கு வெளி உலகத்தில் பெரிய மனிதன் என்கிற பெயர்... பிரபல வசன கர்த்தா என்ற பட்டம்... உம்... இவ்வளவுக்கும் அருகதை உள்ள ஒருநபர் கொலைகாரன் என்பதை நான் எப்படி நிரூபிப்பது? சாட்சி எங்கே என்று கேட்கும் போலீஸ்காரர்களிடம் சாட்சியை வைத்துக் கொண்டல்லவா பேச வேண்டும்?

காட்சி 5

லலிதா: நீங்கள் தானே இந்த மாடி வீட்டின் சொந்தக்காரர் அருணாசலம்?

அருணா: ஆமாம்! என்ன வேண்டும் உங்களுக்கு உங்களைக்கூட எனக்குத்தெரியுமே!... எதிர்த்த வீட்டு மாடியில் தானே குடியிருக்கிறீர்கள்?

லலிதா: ஆமாம்!... இங்கே மாடியில் பரந்தாமன் என்று ஒரு எழுத்தாளர் இருக்கிறார் அல்லவா?

அருணா: (உற்சாகமாக) ஆமாம் இருக்கிறார்... அவர் இருக்கும் போர்ஷனுக்குப் பக்கத்தில் வேறொரு போர்ஷன் காலியாக இருக்கிறது... அதைப் பார்க்க வந்தீர்களா?

லலிதா: (திகைத்தபடி)... ஆமாம்! அதைப் பார்க்கத்தான் வந்தேன்... கொஞ்சம் காட்டுகிறீர்களா?

அருணா: ஆகா! பேஷாக... வாருங்கள் போகலாம்! [மாடிப் படிகளைக் கடக்கிறார்கள்]

மாடி கொஞ்சம் உயரம்... அதனால்தான் படிகளை அதிகமாகவே வைத்திருக்கிறேன்.

லலிதா: கீழிருந்து கடைசி மாடியை அடைய குறைந்தது ஐந்து நிமிடமாவது ஆகும் போலி ருக்கிறதே!

அருண்: ஆகும்... ஆகும்... காற்று வசதிவேண் டாமா? இதோ வந்து விட்டோம்... இப்படி வலதுபுறம் வாருங்கள்... இந்தப் போர்ஷன் தான்! [கதவு திறக்கப்படும் சப்தம்] பாருங் கள் இது முன் ஹால்,... இதைத் தொடர்ந்து இரண்டு அறைகள்... அவைகளை அடுத்து சிறிய சமையலறை, அதற்குள் குழாய் இருக் கிறது... இவ்வளவுக்கும் வாடகை முப்பது ரூபாய் தான்!

லலிதா: வீடு நன்றாகத்தான் இருக்கிறது...மிஸ் டர் பரந்தாமன் இருக்கும் போர்ஷனும் இப்ப டித்தான் இருக்குமா?

அருண்: ஆமாம்!... அவர் இந்தப் போர்ஷனைக் கூட எடுத்துக் கொள்ளுவதாகச் சொல்லிக் கொண்டு இருந்தார்... இன்று காலைவரை சாவி கூட அவரிடம்தான் இருந்தது... அதென் னமோ பிறகு சொல்கிறேன் என்று கூறி சாவியைத் திருப்பித் தந்து விட்டார்...

லலிதா: (வியப்பை வெளிக் காட்டாமல்) அப்ப டியா?... நேற்று இரவு இந்தப் போர்ஷனின் சாவி அவரிடம்தான் இருந்தது இல்லையா?...

அருண்: ஆம்... அம்மா... ஆம்! ஏன் இப்போது கூட அவர் போர்ஷன் சாவி என்னிடம்தான் இருக்கிறது. வேலைக்காரி வந்தால் தரச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்.

லலிதா: (கெஞ்சும் குரலில்) எனக்கு ஒரு உப காரம் செய்வீர்களா?

அருணா: (ஆதரவாக) என்ன வேண்டும் சொல்லுங்கள்?

லலிதா: மிஸ்டர் பரந்தாமன் குடி இருக்கும் போர்ஷனையும் நான் கொஞ்சம் பார்க்க முடியுமா?...

அருணா: (அலட்சியமாக) ப்பூ! இதென்ன பிரமாதம்... வாருங்கள்... காட்டுகிறேன் (நடக்கிறார்)

லலிதா: (தனக்குள்ளாக) இந்தப் போர்ஷனில் தரையில் ஏதோ கனமான வஸ்துவை இழுத்துக்கொண்டு போனதுபோல் அடையாளம் தெரிகிறது... நிச்சயம் அந்தப் பிணத்தைத் தான் இப்படி பரந்தாமன் இழுத்துக்கொண்டு போயிருக்கிறார்... இந்த இடத்தில் மறைத்து வைத்திருந்தால் போலீஸ்காரர்களுக்கு அது நிச்சயம் தெரிய நியாயமில்லை... முன்னேற்பாடாகத்தான் சாவியைக்கூட வாங்கி வைத்திருக்கிறார் போலிருக்கிறது...

[குரல் வருகிறது)

அருணா: இப்படி வருகிறீர்களா அம்மா?

லலிதா: [அவசரமாக] இதோ வந்துகொண்டே இருக்கிறேனே...

அருணா. நன்றாகப் பாருங்கள்... இதுதான் எழுத்தாளர் பரந்தாமன் போர்ஷன், அவர் ஐம்பது ரூபாய் வாடகை கொடுக்கிறார்.

லலிதா: ஏன் தரமாட்டார்? ஏராளமாக வரும்போது! போர்ஷனைக்கூட நன்றாக அலங்காரம் செய்து வைத்திருக்கிறாரே... இங்கு அவர் தனியாகதான் இருக்கிறார் போலிருக்கிறது... ஏன் சார் அவருக்கு இன்னமும் திருமணம் ஆகவில்லையே?

அருணா: இல்லை... இனிமேல்தான் ஆகும்... அவருக்கென்ன நினைத்தால் எத்தனையோ பெண்கள்...

லலிதா: வீட்டை நான் சுற்றிப் பார்க்கலாமா?

அருணா: நீங்கள் நன்றாகப் பாருங்கள்... நான் வேலைக்காரி வந்திருக்கிறாளா என்று பார்த்து விட்டு வருகிறேன்...

லலிதா: (திருப்தியுடன்) சரி... போய் வாருங்கள். (கதவை மூடிக்கொண்டு போகிறாள்)

லலிதா: (தனக்குள்) இந்த சமயத்தில் ஏதாவது சமயம் கிடைக்கிறதா என்று பார்த்துக் கொள்ள வேண்டும். இதை விட்டால் வேறு சந்தர்ப்பம் எனக்கு நிச்சயம் கிடைக்காது... கிடையாது! பார்ப்போம்... (மேஜை டிராயர்களை இழுத்துப் பார்க்கும் சப்தம்)...உம்... எங்கு பார்த்தாலும் காகிதங்கள்... எழுத்தாளர்களின் இருப்பிடம் இப்படித்தான் இருக்குமோ?... இதென்ன புத்தகம் "பழிவாங்கு" என்கிற தலைப்பில்...? ஓகோ! இதை எழுதிய வரும் இவர்தானா?... தலைப்பைப் பார்... "பழிவாங்காம்... பழிவாங்கு"... அதனால்தான் நேற்றிரவு அந்தப் பெண்ணை 'பழிவாங்கி' விட்டார் போலிருக்கிறது... புத்தகத்தைத் தொடவே கை கூசுகிறது... எடுத்த இடத்திலேயே வைத்து விடலாம்... அடே... புத்தகம் இருந்த இடத்தில் ஒரு ஜதை கம்மல்கள் இருக்கின்றனவே... வைரக்கம்மல் மாதிரி தெரிகிறது...இது அந்தப் பெண்ணினுடையதாகத் தான் இருக்கவேண்டும்... எடுத்துக்கொண்டு போவோம்... இதுவும் ஒருவிதமான தடயம் தானே? கல்யாணமாகாத நபர் வீட்டில் "கம்மல்கள்" எங்கிருந்து வந்தன? (கதவு திறக்கப்படும் சப்தம் -அருணாசலம் வருகிறார்)

அருணா: என்னம்மா புறப்படுவோமா?

லலிதா: பார்த்து விட்டேன்... போக வேண்டியதுதான் [கதவை இழுத்து மூடும் சப்தம்]

பரந்தாமன்: [தனக்குள்] நான் வந்ததை... இவர்கள் இருவருமே கவனிக்கவில்லை போலிருக்கிறது!... நல்லவேளை... ஏதேது ...இப்பெண் என்னை நிம்மதியாக இருக்க விடமாட்டாள் போல் தோன்றுகிறதே... அறைக்குள் போய் பார்த்தால்தான் எதைப் பார்த்திருக்கிறாள்... எதைத் தொட்டிருக்கிறாள் என்று தெரியும்... அடே... சாவியை அருணாசலத்திடம் கொடுத்து விட்டேனே... உம் கீழே போய் அதைக்கொண்டு வர வேண்டும்...

காட்சி 6

[போலீஸ் ஸ்டேஷன்]

சப்-இன் சங்கரன்: வாருங்கள் மிஸ் லலிதா... உங்களைத்தான் எதிர் பார்த்துக் கொண்டிருந்தேன்...

லலிதா: எதிர் பார்த்தீர்களா? வியப்பாக இருக்கிறதே!... இதோ பாருங்கள் ஒரு ஜதைக் கம்மல்கள்... இவைகளாவது உங்களுக்கு சாட்சியமாக இருக்கும் என்று நம்புகிறேன்...

சங்கர: (கேலியாக) நன்றாகச் சொல்லுகின்றனவே நீங்கள் ஆளில்லாத நேரத்தில் ஒருவருடைய வீட்டில் புகுந்து இவைகளைக் கிளப்பிக் கொண்டு வந்திருக்கிறீர்கள் என்று... என்ன ஆச்சர்யப்படுகிறீர்கள்? நீங்கள் வைத்திருக்கும் கம்மல்கள் திருட்டுப் போன சொத்து... ஆம்! அப்படித்தான் எனக்குப் புகார் வந்திருக்கிறது எங்கே இவைகளை எடுத்தீர்கள் மிஸ் லலிதா? எழுத்தாளர் பரந்தாமன் வீட்டில்தானே?

லலிதா: [வியப்பான குரலில்] ஆமாம் அது எப்படி உங்களுக்குத் தெரிந்தது?... இந்தக் கம்மல்கள் நேற்றிரவு கொலை செய்யப்பட்ட பெண்ணினுடையதாக இருக்க வேண்டும் என்று நான் யூகித்தேன்... அதனால்தான் சாட்சி கேட்க உங்களிடம் இதைக் கொண்டு வந்து கொடுத்தேன்— இதன் அஸ்திவாரத்தில் நீங்கள் வேலை செய்யலாமல்லவா? பிரம்

மச்சாரியாக இருக்கும் ஒருவருடைய அறையில் கம்மல்கள் எப்படிவந்தன என்பது ஆராய்ச்சிக் குரிய விஷயமல்லவா?

சப் இன்ஸ் சங்க மிஸ் லலிதா... நீங்கள் நிறைய துப்பறியும் நாவல்கள் படிப்பது உண்டா?

லலிதா: படிப்பேன்... ஆனல் அதற்கும் இதற்கும் சம்பந்தமே இல்லை. நடந்துவிட்ட ஒரு காரியத்திற்கு நான் ஆரம்பம் தேடிக் கொண்டிருக்கிறேன்... நீங்களோ அதன் "சீரியஸ்னஸ்சை" புரிந்து கொள்ளாமல் என்னைப் பற்றியே கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள்?

சங்கரன்: நல்லது மிஸ் லலிதா நான் சீரியஸ்சாகவே பேசுகிறேன்... இந்தக் கம்மல்களை மிஸ்டர் பரந்தாமன் தன்னுடைய எதிர்கால மனைவியும், நிகழ்கால சினிமா நட்சத்திரமுமான மிஸ் வாசவிக்கு பரிசளிக்க வாங்கி வைத்திருந்தாராம். அது காணமல் போய் விட்டது என்று சற்று முன்புதான் போன் செய்தார். பின்னலேயே நீங்கள் அதை எடுத்துக்கொண்டு வந்து என்னிடம் தருகிறீர்கள்... இப்போது என்ன சொல்லுகிறீர்கள் மிஸ் லலிதா?... இதோ... மிஸ்டர் பரந்தாமனே இங்கு வந்து விட்டார்... வாருங்கள் மிஸ்டர் பரந்தாமன்... கம்மல்களை, இந்த அம்மாள் என்னிடம் கொண்டு வந்து கொடுத்தார்கள்... நான் அவைகளை வாங்கி வைத்திருக்கிறேன்... நீங்கள் எழுத்து மூலமாக ஒரு "கம்ப்ளெண்ட்" கொடுத்தால் நான் சட்டப்படி மேற்கொண்டு எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்கிறேன்...

பரந்தாமன்: (சிரத்தையில்லாமல்) அதெல்லாம் ஒன்றும் வேண்டாம் சார்! அதுவுமில்லாமல் நான் இப்போது ஒரு என்கேஜ்மெண்டுக்கு அவசரமாகப் போய்க் கொண்டிருக்கிறேன். கம்மல்களை என்னிடம் கொடுத்துவிட்டு, அனவசியமாக பிறர் விவகாரத்தில் தலையிட வேண்டாம் என்று இந்த அம்மாளுக்கு புத்திமதி சொல்லி அனுப்புங்கள்.

லலிதா: (கோபத்தோடு) அதற்கொன்றும் அவசியமில்லை மிஸ்டர் பரந்தாமன். கண்ணல் கண்ட ஒரு கொலைக்கு நான் சாட்சியோ தடயமோ இல்லாமல் தவிக்கிறேன்... நீங்கள் எனக்குப் புத்திமதி சொல்லுகிறீர்களா... புத்திமதி? எனக்கு, எவ்விதமான தடயத்தையும் அளிக்காத அதே சூழ்நிலை, உமக்கு சட்டத்தின் பிடியிலிருந்து தப்பவும் வழி செய்திருக்கிறது... அதனல் நீர் ஆட்டம் போடுகிறீர்... ஆனல் முடிவில் நான்தான் வெற்றி அடையப் போகிறேன்...

சங்க: (படபடப்பாக) என்ன மிஸ் லலிதா பைத்தியம் பிடித்த பெண்ணைப்போல பேசிக் கொண்டு...

லலிதா: (முன்னிலும் அதிக கோபமாக) எனக்குப் பைத்தியம் பிடிக்கவில்லை சார்... என் பேச்சை நம்பாமல் இருக்கும் உங்கள் நிலையைப் பற்றித்தான் நான் சந்தேகப்படுகிறேன். நேற்று இரவு நான் ஒரு கொலை நடந்ததைப் பார்த்ததும் மெய்தான்...... 'பெண்ணின் பிணத்தை இந்த நபர் பக்கத்துப் போர்ஷனில் ஒளித்து வைத்துவிட்டு, உங்களிடம் ஒன்றுமறியாதவர்போல நாடக மாடியதும் மெய்தான்... காலை ஆறு மணிக்கு பிணத்தை ஒரு பெரிய பெட்டியில் மறைத்துக் கொண்டு காரின் உதவிகொண்டு அதை அப்புறப் படுத்தியதும் மெய்தான்... அப்பெண்ணின் கம்மல்களை நான் இங்கு கொண்டு வந்திருப்பதும் மெய்தான்... ஆனல்...

சங்க: (கேலியாக) இவைகளை... அதாவது உங்கள் கற்பனையெல்லாம் நிரூபிக்க சாட்சியங்கள்தான் இல்லை... இல்லையா மிஸ் லலிதா? சாட்சியங்கள் இல்லாமல் போனல் போகட்டும்... எங்களுக்கு பிணமாவது கிடைத்தால் போதுமே... பெண்ணைக் காணமென்று புகாரும் வரவில்லை... உங்கள் பேச்சின் ஆதாரத்தைக்கொண்டு எவ்விதமான நடவடிக்கையும் எடுக்க முடியாத நிலைக்கு வருந்துகிறேன்.

பரந்தாமன்: (உஷ்ணமாக) சார்... யார் இந்தப் பெண்? மிகவும் 'ஓவராகப்' பேசுகிறளே... நான் எவ்வளவுதான் பொறுப்பது? நான் செய்யாத குற்றத்தை... (நான்) செய்ததாகவே கற்பனை செய்து விட்டாளே!

லலிதா: (கேலி நிறைந்த குரலில்) ஆமாம்... நானும் கற்பனையை காசு பண்ணும் எழுத்தாளிதானே?

சங்க: (சமரசமான பாவனையில்) மிஸ்டர் பரந்தாமன் நீங்கள் எங்கோ போக வேண்டும் என்று சொன்னீர்களே... போய் வாருங்கள் மிஸ் லலிதாவை நான் கவனித்து அனுப்புகிறேன்.

பரந்தாமன்; (நாற்காலியை பின்னல் தள்ளி எழுந்து) உங்கள் உதவிக்கு மிகவும் நன்றி சப்-இன்ஸ்பெக்டர்... நான் வாசவியின் வீட்டில்தான் இருப்பேன். வேண்டுமென்றல் போன் செய்யுங்கள்...

சங்க: சரி சார்.

பரந்தா: வருகிறேன்... வணக்கம் (போகிறர்) காலடி சப்தம்.

சங்க: மிஸ் லலிதா... நான் சொல்வதைக் கொஞ்சம் தயவுசெய்து கேட்கிறீர்களா?

லலிதா: நான் பொய் சொல்லுகிறேன் என்று மட்டும் சொல்லாமல் வேறு எதை வேண்டுமானலும் சொல்லுங்கள்...

சங்க: நீங்கள் பொய் சொல்லுவதாக நான் ஆரம்பத்திலிருந்தே சொல்லவில்லையே...

கண்ணம்மாவின் உரிமை

அண்ணாவையும் மன்னியையும் ரெயிலேற்றி அனுப்பிவிட்டு வீட்டுக்கு வந்ததும், கட்டிக்கொண்டிருந்த புடவையைக் களைந்து வைக்க மனமின்றி நின்றேன். என் மன்னி கண்ணம்மாவின் ஞாபகம் அதிலே பளிச்சிட்டது. தங்கியிருந்த ஒரு வார காலத்தில் சிட்டுக் குருவி போல எப்படியெல்லாம் வீட்டு வேலைகளுக்கு அவள் ஒத்தாசையாயிருந்தாள் என்பதை நினைவூட்டியது அப் புடவை. குறிப்பாக, ரெயிலுக்குப் புறப்படுவதற்கு சற்று முன்பு..........

“அதெல்லாம் எனக்குத் தெரியாது. இனிமேல் நான் உடுத்தவேண்டிய புடவைகளை என்னைத் தவிர வேறு யாரும் தேர்ந்தெடுக்க விடமாட்டேன்”

“ஏதேது, மீனா, நாளைக்கு உனக்குக் கலியாணமாகி, ஆசையோட உன் அகத்துக்காரர் உனக்கொரு புடவை பொறுக்கியெடுத்தால் கூட....”

“...வேண்டாம்னுடுவேன், ஆமாம். நான் உடுத்தற புடவைகளைத் தேர்ந்தெடுக்கிற உரிமை என்னோடதே!” என்றேன்.



* * *

... அது சமயம், என் ரவிக்கைக்குப் பொருத்தமான புடவைக்காகப் பெட்டியில் தேடிக்கொண்டிருந்தேன். சில மாதங்களுக்கு முன்பு அண்ணா அனுப்பியிருந்த அந்த ‘வரிக்குதிரை’ப் புடவை கண்ணில் படவே, அதை வெறுப்புடன் ஒதுக்கினேன்; வேறு புடவையே இல்லையோ என்று துணுக்குற்றபோது நல்லவேளையாக ‘எனக்கு ரொம்பவும் பிடித்தமான பெங்களூர் தலைப்புப்போட்ட அரக்குக் கலர்ப் புடவை அகப்பட்டது. ஆனால் அதைப் பிரித்ததும் அந்த ஏமாற்றத்தை என்னவென்பது! நாலு விரற்கடை யளவுக்குக் கிழிசல் வாயைப் பிளந்திருந்தது! “மத்த புடவையெல்லாம் அழுக்குலே கிடக்கேம்மா. இனிமேலே அந்தப் புலிவேஷப் புடவைதான் பாக்கி!” என்று முனகினேன்.

“அதுக்கு என்ன குறை, மீனா? எனக்காக ‘அவர்’ பொறுக்கியெடுத்த ஜோடியிலேதான் ஒண்ணு அனுப்பினோம் உனக்கு” என்றாள் மன்னி.

“தேர்ந்தெடுக்கற உரிமை நிச்சயம் உண்டு. ஆனால் பாதுகாக்கற உரிமை?”

“அப்படின்னா?”

“எந்த மாதிரி சோப் போட்டு எப்படிப்பட்ட வழியிலே துவைக்கறதுங்கற உரிமை உனக்குக் கிடையாதா, மீனா? இதோ நீயே பார், உனக்குப் பிடித்த இந்தப் புடவைக்கு நேர்ந்த கதியை! சரியான சோப் போட்டு சரியான வழியிலே துவைத்திருந்தா துணியைக் காப்பாத்தியிருக்கலாம் இல்லையா?”

‘துணியைக் காப்பாற்றும் சோப்’ என்றால் என்ன

S/P. 6A-X52 TM

வென்று எனக்குப் புரிபடவில்லை; அதற்குக் கண்ணம்மா பதிலளித்தாள் :

" சுத்தமான சோப் எதுவோ, அடித்துத் துவைக்காமலேயே அழுக்கை அடியோடு போக்கும்படி கொள்ளை கொள்ளையாக நுரை தருகிற சோப் எதுவோ அதுவே துணிகளைப் பாதுகாக்கிற சோப். ஸன்லைட் சோப்பாலே சலவை செய்தால், துணிகளை அது கிழியாதபடி வெகு காலம் காப்பாற்றும். "

இது என் சிந்தனையைத் தூண்டியது: துணிகளின் மோஸ்தர், நெசவு, நிறம் முதலியவற்றைத் தேர்ந்தெடுப்பதோடு எனது உரிமை தீர்ந்துவிடுவதில்லையென்றும், துணிகளைக் காப்பாற்றும் உரிமையும் எனக்கு உண்டென்றும் உணர்ந்துகொண்டேன். பார்க்கப்போனல் என் துணிகளுக்கு உகந்த சோப் எது என்பதைத் தீர்மானிப்பதுகூட நானல்ல, வேறு யாரோ?

உடுத்துவதற்கு வேறு துணியில்லாமல் நான் விழித்த நிலையில், புன்னகை முகத்துடன் மன்னி "இந்தப் புலிவேஷப் புடவை உனக்கு வேண்டாமானல் விடு. அதோ அந்த அலமாரியில் பார் உன் புடவைகளை !" என்று அலமாரியைக் காண்பித்தாள். பார்த்தமாத்திரத்தில் பிரமித்தே போனேன். அழுக்கு மூட்டையிலிருந்த என் துணிகளெல்லாம் பளிச்சென்று சலவையாகி, கண்ணைப் பறிக்கும் ஒளியுடன் வீற்றிருந்தன. மன்னி சொன்ஞள்:

"அழுக்குத் துணிகளை ரெயிலில் சுமப்பானேன் என்று எங்கள் துணிகளை நேற்று நான் துவைத்தேனல்லவா ? அப்படியே கையோடு கையாக உன்னுடை துணிகளையும் துவைத்தேன் !" ......

★ ★ ★

. . . . ஆச்சரியமும் மகிழ்ச்சியும் நன்றியுணர்ச்சியும் பொங்க, அப்போது நான் உடுத்திய புடவை ! இப்போது அதைக் களைந்து வைக்க மனமின்றி நின்றேன். ரெயில் வண்டி நகர்ந்து மறையும்வரை அவள் கையில் ஊசலாடிய கைக்குட்டையின் ஒளி என் நினைவிலே பளிச்சிட்டது, அலமாரியிலிருந்த துணிகளில் அந்த ஒளி பளிச்சிட்டது; நான் உடுத்தியிருந்த புடவையில் பளிச்சிட்டது; என் உள்ளத்தில் பளிச்சிட்டது !

அலமாரியில் மன்னியின் சாமான்கள் வைத்திருந்து இப்போது காலியாகியிருந்த அந்த இடத்தை நோக்கினேன். சதுர வடிவமாக ஏதோ ஒரு பொருள் ! ஒரு வேளை ஸன்லைட் சோப்பின் வில்லையா ? ஆம், அதுவேதான் ! அவ்வளவு துணிகளை வெளுத்த பிறகு, சோப் மிச்சமிருக்காது என்று நான் நினைத்ததற்கு மாருக ஒரு பாதி வில்லை இன்னும் பாக்கியிருந்தது. அளவுகடந்த நுரை கொழிக்குமாதலால் சிறிதளவு சோப் ஏராளமான துணிகளை வெளுத்துவிடுமென்றும் அடித்துத் துவைக்காமலேயே வெண்மையும் பிரகாசமும் தரும் என்றும் உணர்த்தியது அவ்வில்லை ; வீட்டுத் துணிகள் அதிக காலம் உழைத்து அதிக சிக்கனம் அளிக்கப்போவதற்கு இது எத்தகைய சுப சூசகம் !



இந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு

S/P. 6B-X52 TM

லலிதா: அப்படியென்றால்... (வியப்பாக)

சங்க: நீங்கள் சொல்வதை நான் நம்பி நட வடிக்கை எடுக்க வேண்டுமென்றால்... உங்களைத் தவிர வேறொரு சாட்சி வேண்டும்... தடயம் வேண்டும் இல்லையென்றால் பிணமே வேண்டும்... எதுவும் இல்லாமல்...

லலிதா: (வருத்தப்பட்டு) அப்பெண்ணின் துரதிஷ்டம் போயிருக்கிறது... எந்தவிதமான தடயமும் கிடைக்கவில்லை.

சங்க: இதை எப்படி நான் ஏற்று நடத்த முடியும், அம்பலத்திற்குக் கொண்டு வந்து?

லலிதா: முடியாது... ஆனால் பயனுள்ள வாதங்கள் உதவாதோ?

சங்க: (ஆவலாக) எப்படி?

லலிதா: சினிமா நடிகை வாசவியை மணந்து கொள்ளத் தடையாக இருந்த முதற் காதலியை பரந்தாமன் கொன்றிருக்கலாம்... என்று வாதாடலாமே...!

சங்க: சரி... அப்படியே வாருங்கள்! அந்தப் பெண் யார்? அவள் உண்மையில் பரந்தாமனின் காதலியா? என்றெல்லாம் நிரூபிக்க வேண்டுமே மிஸ் லலிதா?

லலிதா: (பதில் இல்லை...)

சங்க: ஏன் மிஸ் லலிதா பேசவில்லை...?

லலிதா: எனக்கு தலை சுற்றுகிறது... வீட்டுக்குப் போகலாமென்று பார்க்கிறேன்...

சங்க: (ஆதரவாக) உங்கள் நிலையை என்னால் நன்கு யூகிக்க முடிகிறது மிஸ் லலிதா... போய் வாருங்கள்... நான வேண்டுமானால் வீட்டு வரைக்கும் துணை வரட்டுமா?

லலிதா: வேண்டாம் சார்... வேண்டாம்... உங்கள் அன்புக்கும் ஆதரவுக்கும் நன்றி...நானே போய்க் கொள்ளுகிறேன்.

சங்க: நீங்கள் சொன்ன விஷயங்கள் என் மூளைக்கும் வேலை கொடுத்து விட்டது... நானும் முயற்சிக்கிறேன். தகவல் கிடைத்தால எனக்குப் போன் செய்யுங்கள்... இல்லையெனில் நேரில் வாருங்கள்.

லலிதா: அவசியம் வருகிறேன்... வணக்கம்.

[கதவு மூடப்படுகிறது]

காட்சி 7

[கார் போய்க்கொண்டே இருக்கிறது]

பரந்தாமன் (தனக்குள்) என்ன, இந்தப் பெண் லலிதா என்னைப் போலீசில் பிடித்துக் கொடுக்கும் வரை ஓயமாட்டாள் போலிருக்கிறதே!... நடந்ததையெல்லாம் நேரில் பார்த்தது போல், அவள் ஒப்புவிப்பதைக் கேட்கும் போது... எனக்குக்கூட நெஞ்சு "திக் திக்" கென்று அடித்துக் கொள்ளுகிறது! அந்த பயத்தில், எங்கே நானே எல்லாவற்றையும் உளறி விடுவேனோ என்று திகிலாகவும் இருக்கிறது. ஓயாத பயம் மென்னியைப் பிடிக்கிறது... இந்த நிலைமை நீடிக்க விட்டால், என் எதிர்காலம் சூன்யமாக அல்லவா போய்விடும்? சே... சே... இப்படி நடுங்கிக் கொண்டு இருக்கவா திட்டம் போட்டு வேலை செய்தேன். ஒருத்தியைத் தொலைத்து விட்டால், ஆனந்தமாக வாசவியைத் திருமணம் செய்து கொண்டு காலந்தள்ளலாம் என்றல்லவா கோட்டை கட்டியிருந்தேன்... ஏன் முளைத்தாள் இப்பெண் என் ஆசைகளுக்கெல்லாம் எதிரியாக? நான் இவளுக்கு என்ன கெடுதல் செய்தேன்...

[ஒரு தடவை ஹாரன் சப்தம்]

நான் நிம்மதியாக இருக்க வேண்டுமென்றால் இவளுக்கும் ஏதாவது ஒரு முடிவைத் தேடியாக வேண்டும்! கொலை செய்து விடலாமென்றால்... அது வெளியில் தெரிந்துவிடக்கூடும்... ஒரு கொலையை மறைத்து விடலாம்... இன்னொன்றை மறைப்பது கடினந்தான்! கொல்லக் கூடாதென்றால் பிறகு வேறுவழி என்ன இருக்கிறது? அவள் என் வழிக்கு வரக்கூடாது... அதற்கு ஏதாவது ஏற்பாடு நிச்சயம் செய்து தான் ஆகவேண்டும்... என்ன ஏற்பாடு? என் இருப்பிடத்தை மாற்றிக் கொள்ளட்டுமா? சே... எலிக்குப் பயந்து கொண்டு வீட்டைக் கொளுத்துவதா? பயமுறுத்தி வைக்கலாமென்றால் அதுவும் ஆபத்தாக முடியும்... சே...என்ன இந்த சமயத்தில் ஒரு வழியும் புலப்படமாட்டேன என்கிறதே? (ஹாரன் சப்தம்) எதற்கும் அவளை, அவள் இருப்பிடத்தில் சந்திக்கிறேன்... அதுவரை எனக்கு நிம்மதியே கிடையாது.

[கார் போய்க் கொண்டே இருக்கிறது]

காட்சி 8

[போன் மணி அடிக்கிறது]

லலிதா: யார் பேசுகிறது...? நான இங்கே லலிதா பேசுகிறேன்... ஓ! சப்-இன்ஸ்பெக்டரா? என்ன திடீரென்று? ஏதாவது தகவல் உண்டா? இல்லையா? சரி... என் வீட்டிற்கு வருகிறீர்களா? வாருங்கள்... நானு கொஞ்சம் பைல்களை டைப் செய்து கொண்டிருக்கிறேன். தொந்தரவாக இருக்காது... வாருங்கள்... விஷயமில்லாமல் வருவீர்களா... சரி... சரி...

[போன் கீழே வைக்கப்படுகிறது. தொடர்ந்து டைப் மிஷின் வேலைசெய்கிறது]

[வெளிக் கதவை யாரோ தட்டுகிறார்கள்]

லலிதா: யாரது?

குரல்: (முரட்டுத் தனமாக) திறந்து பாருங்கள்.

லலிதா: பெயரைச் சொல்லாமல் தட்டுவது நாகரீகமல்ல... [கதவைத் திறக்கிறாள்] நீங்களா மிஸ்டர் பரந்தாமன் (பயம் தொனித்தல்)

பரந்: (சிரித்துக் கொண்டே) நானே தான்... ஏன் வரக்கூடாதா?

லலிதா: வேண்டாமென்று சொல்லவில்லை... வாருங்கள். உள்ளே வாருங்கள் இப்படி அமருங்கள்.

பரந்: உபசாரம் இருக்கட்டும் மிஸ் லலிதா. நான் உங்களுக்கு என்ன கெடுதல் செய்தேன்?

லலிதா: அப்படி எதுவும் நான் சொல்ல வில்லையே?

பரந்தா: பிறகு ஏன் போலீஸ் ஸ்டேஷன் சென்று என்மீது வீண்பழி சுமத்திக் கொண்டிருக்கிறீர்கள்?

லலிதா: அதுவா... (அலட்சியமாக) நான் கண்ணால் பார்த்த ஒரு பயங்கரத்திற்குப் பரிகாரம் தேட வேண்டாமா? அதனால்தான்!

பரந்: கண்ணால் பார்த்ததும் காதால் கேட்பதும் பொய்யாகி விடுகிறதே சில சமயங்களில்.

லலிதா: இருக்கலாம். அவைகள் சூழ்நிலையைப் பொறுத்து மறையக்கூடும் அல்லவா? நீங்கள் ஒரு பெண்ணின் கழுத்தை நெறித்ததையும், அவள் போராடிய பிறகு துவண்டு விழுந்ததையும் நான் பொய்யாக நினைக்கவில்லை.

பரந்: சரி போகட்டும், நடந்ததை உண்மையென்றே வைத்துக் கொள்வோம். நீங்களும் போலீஸ் ஸ்டேஷனுக்கு விடாமல் போய் என்னைப் பற்றிப் புகார் செய்தீர்கள் அல்லவா?

லலிதா: செய்தேன், செய்து கொண்டே இருக்கிறேன்,

பரந்: அப்படியிருந்தும் நான் கொலைகாரன் என்பதை உம்மால் நிரூபிக்க முடிந்ததா?

லலிதா: ... ...

பரந்: என்ன மிஸ் லலிதா பதில் சொல்லாமல் இருக்கிறீர்கள்?

லலிதா: பதில் சொல்ல என்ன இருக்கிறது...? தகுந்த சாட்சியங்களும் இல்லை... அதனால் நீங்கள் இன்னும் வெளியே உலவி வருகிறீர்கள்!

பரந்: (கோபமாக) உலவி வருகிறேன்... உள்ளே போகிறேன்... அதைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம் என்கிறேன். எனக்கு சமூகத்தில் உள்ள அந்தஸ்தையும்... செல்வாக்கையும் நான் எவ்வழியில் வேண்டுமானாலும் உபயோகித்துக் கொள்ள முடியும்... நீங்கள் என் விரோதத்தை வளர்த்துக் கொள்வதினால் முடிவு விபரீதமாகப் போனாலும் போகக்கூடும்

லலிதா: (கோபம் தொனிக்கும் குரலில்) என்னை பயமுறுத்திப் பார்க்கிறீர்களா?

பரந்: அப்படியும் வைத்துக் கொள்ளலாம்...

லலிதா: முடிந்தவரை பாருங்கள்...

பரந்: ஒரு கொலைக்கு சாட்சி இல்லாததுபோல் இன்னொரு கொலைக்கும் சாட்சி இல்லாமல் செய்துவிட முடியும் என்னால்...

லலிதா; நீங்கள் போகலாம்...

பரந்த: (கதவைத் திறக்கிறான்) அப்படியென்றால் என் பாதையை விட்டு விலக மாட்டீர்கள்?

லலிதா: அதைவிட நீங்களும் வாசவியும் மணந்து கொள்வதற்குத் தடையாக இருக்கிறேன்...

பரந்த: (கோபத்துடன்) சரி... என் கோபத்தை கிளறிவிட்டு விட்டீர்கள்... இனி விளைவுகளை வரவேற்கத் தயாராக இருங்கள்...வருகிறேன்

பரந்: உம்... (உறுமுதல்)

கதவைப் படீரென அடித்துக்கொண்டுபோகிறான்.

காட்சி 9

[டைப் அடிக்கும் சப்தம்]

சங்கரன்: அடியேன் வந்திருக்கிறேன்... உள்ளே வரலாமா? (கேலியாக)

லலிதா: (சிரித்துக்கொண்டே) யாரோ வாசலிலேயே நின்று தடுப்பது போலல்லவா கேட்கிறீர்கள்? வாருங்கள்!

சங்: (நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு) நீங்கள் சாப்பிட்டாகி விட்டதா?

லலிதா: ஏன் இவ்வளவு அக்கரையோடு விசாரிக்கிறீர்கள்?

சங்கரன்: கோபித்துக் கொள்ளாமல் இருந்தால் ஒன்று சொல்லுகிறேன்—

லலிதா: சொல்லுங்கள்.

சங்க: உங்களை எப்பொது பார்த்தேனோ... அப்போதிருந்து உங்கள்மீது தனி அக்கரை விழுந்துவிட்டது... அதனால் கேட்டேன் சாப்பிட வருகிறீர்களா?

லலிதா: அக்கரை இருக்கிறதென்றால்...முதலில் மரியாதை கொடுப்பதை நிறுத்துங்கள்...

சங்க: நிறுத்திக் கொள்கிறேன். சரி லலிதா சாப்பிட வருகிறாயா?

லலிதா: வருகிறேன். என்ன விசேஷம் என்று சொல்லவில்லையே?

சங்க: உன்னிடம் தனியாக சில விஷயங்கள் பேசவேண்டும்.

லலிதா: ஏன் இங்கேயே பேசலாமே!

சங்க: அறையின் சுவர்களுக்கு காதுகள் இருந்து விட்டால் தொந்தரவு!

லலிதா: சரி வெளியே போவோம், ஆனால் விரைவில் திரும்பிவிட வேண்டும். ஆபீஸ் வேலை தலைக்கு மேல் இருக்கிறது. நிறைய 'டைப்' செய்ய வேண்டும்!

சங்க: சீக்கிரம் வந்துவிடலாம். உடனே கிளம்பு. ஸ்பெஷல் மேக்கப் ஒன்றும் தேவை இல்லை.

லலிதா: நடந்தா போகிறோம்?

சங்க: இல்லை வெளியில் ஜீப் நிற்கிறது.

லலிதா: சரி வாருங்கள் போகலாம், நான் இப்படியே புறப்படுகிறேன்,

[நாற்காலிகள் நகர்த்தப் படுகின்றன, கதவு மூடப்படுகிறது. கார் புறப்படுகிறது]

பரந்தாமனின் குரல் வருகிறது-

சப் இன்ஸ்பெக்டர் சங்கரன் லலிதாவை இந்த நேரத்திற்கு . எங்கே அழைத்துக் கொண்டு போகிறார்? என் விஷயமாக இருக்குமோ? உம் எது எப்படி இருந்தால் எனக்கென்ன? நான் போட்டுள்ள திட்டப்படி இப்போது திருட்டுச் சாவி போட்டு லலிதாவின வீட்டுக்குள் நுழைந்து வேணடியதைச் செய்து கொள்ள வேணடியதுதான். என்னிடம் சவால் அல்லவா போடுகிறாள்? பார்க்கலாம் யார் ஜெயிக்கிறார்கள் என்பதை! [அடுத்த இதழில் முடிவுறும்]

புவனேஸ்வரியின் லக்ஷியம்

"தற்கொலை! தேவி புவனேஸ்வரி எம். ஏ. எல். டி. தற்கொலை செய்துகொண்டார்!" என்ற விஷயத்தை அன்றைய பத்திரிகையிலே படித்ததும் நான் ஒரு நிமிஷம் பிரமித்து செயலற்று நின்றுவிட்டேன். இதைப் படித்த மற்ற ஜனங்களும் அதிசயத்திலே ஆழ்ந்திருப்பார்கள் என்பதில் சந்தேகமே இல்லை. ஆனால் ஜனங்களுடைய அந்த அதிசய உணர்ச்சி இரண்டொரு தினங்களில் மறைந்து விடக்கூடும். ஆனால்......ஆனால் என்னுடைய ஆச்சர்யம் என்னைவிட்டு அகலவே முடியாது. என்னுடைய அந்த உணர்ச்சி ஒரு எல்லையற்ற சாபம். அதிலே தெரிந்துக்கொள்ள முடியாத ஒரு புதிர் மறைந்திருந்தது. எவ்வளவுதான் முயன்றாலும் அதை அழிக்கவே முடியவில்லை.

எங்கள் ஊர் மகிளா வித்யாலயத்தின் தலைவிதான் தேவி புவனேஸ்வரி. படிப்பிலே உயர்ந்தவள். அறிவில் சிறந்தவள். சமூக புரட்சியில் தீவிர நம்பிக்கைகொண்டவள். நல்ல அழகி. தந்தப் பதுமை போன்ற உடல். ஆழ்ந்த ஞானம் நிறைந்த ஒளிவீசும் அந்தக் கண்களையும், இனிமையும், அழுத்தமும் கலந்த பேச்சையும் கண்டதுமே, எதிரேயுள்ளவர்களின் மனதிலே ஒரு வித பயமும், மரியாதையும், அன்பும் உண்டாகிவிடும்.

நான் அவளை அடிக்கடி சந்திப்பதுண்டு. ஆனால் ஒரு நாளாவது அவளை நேருக்கு நேராகப் பார்க்கக்கூடிய அவ்வளவு தைரியம் எனக்கு ஏற்படவில்லை. தன்னுடைய கன்னித்

"ஹரிணி"

தன்மையை வெகு பத்திரமாகப் பாது காத்துவந்த அந்தக் கன்னி தெய்வத்தைக் காணும்போதே ஒரு மதிப்பு உள்ளத்திலே தோன்றும். அவளுடைய வாழ்க்கையில் முயற்சியும், நம்பிக்கையும் நிறைந்திருந்தன.

ஆண்களுக்கும், பெண் குலத்திற்கும் அதிகார விஷயமாக ஏற்படும் சண்டைகளிலெல்லாம், புவனேஸ்வரிதான் பெண் சமூகத்தின் பிரதிநிதி. அவளுடைய ஆணித்தரமானப் பேச்சுக்கு எதிர்பேச்சுப் பேச யாருக்குதான் தைர்யமிருக்கும்?

மனிதனுடைய வாழ்க்கையே விசித்திரமானது க்ஷணநேர உணர்ச்சிக்கு வசப்பட்டு, பரஸ்பரம் மோதி உடையும் எண்ணங்களினால் ஆளப்படுகிறவன் தான் மனிதனே!

புவனேஸ்வரி தற்கொலை செய்துகொள்ளுவதற்கு முன்பாக எழுதின கடிதத்திலேயிருந்து இது நன்றாகத் தெரிய வருகிறது. அந்தக் கடிதம் யாருக்கும் எழுதப்படவில்லை. அதை ஒரு கடிதம் என்றுகூடச் சொல்ல முடியாது. கதையோ, கட்டுரையோ, என்று சொல்லும்படி அமைந்திருந்த அந்தக் கடிதத்தில் அவள் தன்னுடைய உணர்ச்சிகளை எல்லாம் அப்படியே அள்ளிக்கொட்டியிருந்தாள்.

"இன்றுதான் என்னுடைய முடிவுநாள். நான் என் வாழ்க்கையின் கடைசி யாத்திரைக்குப் புறப்பட்டுவிட்டேன். நன்றாகத் தீர யோசித்து, நிச்சயம் செய்த பிறகேதான் புறப்பட்டிருக்கிறேன். மன அமைதியுடனும், சுயபுத்தியுடனும்தான் இதை எழுதுகிறேன்.

"இப்பொழுது சில நாட்களாகவே என் மனதிலே ஏதோ ஒரு துன்பம், சகிக்க முடியாத வேதனை, என்னை நிலை கலங்கச் செய்துகொண்டிருக்கிறது. எப்போதும் உள்ளத் திரையிலே ஒரு கேள்விக்குறி. அது தோல்வியா? அல்லது மரணமா?' என்பதுதான். இன்று முடிவுக்கு வந்துவிட்டேன். ஆகவே என் மனது அமைதியுடன் இருக்கிறது. கடைசியாக மரணத்திலேதான் சாந்தி இருப்பதாக எனக்குத் தோன்றியது. வாழ்க்கையில் . இல்லை ..வாழ்க்கை என்பதே தோல்விதான்.

என்னுடைய நம்பிக்கை சிதறி உடைந்துவிட்டது. என் லக்ஷ்யம் தவறிவிட்டது. என்னுடைய பலஹீனமான, தோல்வியுற்ற நிலையை என்னால் சகிக்கமுடியவில்லை. ஆம் எனக்கு ஏற்றது மரணம்தான்.

இதோ என் வாழ்க்கையின் சம்பவங்கள் எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக என் கண் முன்னாலே தோன்றிக்கொண்டிருக்கின்றன. நான் எனக்கென்றே ஒரு தனி லட்சியத்தை ஏற்படுத்திக்கொண்டிருந்தேன். அது என் கண் முன்னாலே, அகலாமல் நின்றுகொண்டிருக்கிறது. அந்த லட்சியத்திலிருந்து விலகிச் செல்ல எனக்கு இஷ்டமில்லை. ஆகவே எனக்கு வேண்டியது மரணம்தான்.

"நான் சிறுமியாக இருந்தபோதே படிப்பில் மிகுந்த ஆர்வம். அப்பொழுதெல்லாம் இந்த உலகம் மிக்க அழகாகவும், ஆசைகள் நிறைந்ததாகவும், சுகபோகங்கள் நிறைந்ததாகவும் எனக்குத் தோன்றியது. சுறுசுறுப்பாகவும், உற்சாகமாகவும், முன்னேக்கிச் சென்றுகொண்டிருந்தேன். ஏதோ ஒரு முக்கியமாக வேலையைச் செய்வதற்காகவே நான் பிறந்திருப்பதாக நினைத்தேன். ஆனால் அந்த வேலைதான் என்னவென்று எனக்குத் தெரியவில்லை. என் உள்ளுணர்ச்சிமட்டும் அடிக்கடி "நீ முன்னேக்கிச் செல். உனக்கு முக்கியமான வேலை இருக்கிறது!" என்று தூண்டிக்கொண்டே இருந்தது. உலகத்திலேயுள்ள ஞானக் களஞ்சியம் எல்லாமே எனக்காகத் திறக்கப்பட்டிருப்பதாக நான் நினைத்தேன்.

"நான் மெள்ள மெள்ள வளர்ந்து வந்தேன். வளர, வளர, உணர்ச்சிகளுக்கு அடிமையாகி வருவதையும் மெதுவாக உணரத் தொடங்கினேன்.

"உலகம் கபடம் நிறைந்தது. சுயநலம் கலந்த யுத்தத்தின் மற்றொரு பெயர் உலகம். எதைத் தியாகம், சமர்ப்பணம், விருப்பம் என்று சொல்லுகிறார்களோ அது பலஹீனத்தின் அடையாளம். பலஹீனத்திற்கு அடிமை. பெண்களை அடிமைகளாகச் செய்த குற்றம் ஆண்களைச் சேர்ந்ததல்ல. ஸ்திரீகள் தாமாகவே இந்த எண்ணங்களுக்கு வசப்பட்டு அடிமையாக்கிக் கொள்ளுகிறார்கள், அடிமையாகாவிட்டால், வீரப் பெண்களாக இருக்கவேண்டும்" வீரப் பெண்மணிகளாக இருக்கவேண்டுமானால், வஞ்சனை, சுயநலம், பிறரை ஆட்டி வைக்கும் சக்தி, ஆகியவைகள் கட்டாயம் இருக்கவேண்டும்.

"நான் அப்பொழுது 'காலேஜி'ல் சேர்ந்து படித்துக்கொண்டிருந்தேன் தேசத்திலே, பெண்கள் விடுதலை என்ற கோஷத்தின் அலைகள் எங்கும் பரவி இருந்தன. நானும் அதிலே கலந்துகொண்டேன். மனிதத் தன்மையை நிலை நாட்ட என் வாழ்க்கையை அர்ப்பணம் செய்யவேண்டுமெனத் தீர்மானம் செய்தேன். ஸ்திரீகளை அடிமைத் தளையிலிருந்து விடுவிப்பது, அவர்களுக்கு அதிகாரத்தின் அவசியத்தைப்பற்றி எடுத்துச் சொல்லுவது, முதலான வேலைகள்தான் அப்போது என் லட்சியமாயிருந்தது. ஆண்களை நான் என்னுடைய ஜன்ம விரோதிகளாக நினைக்கவும் தொடங்கினேன்."

"மிகுந்த ஊக்கத்துடன் இன்றைய நிலையைப்பற்றி சிந்திக்க ஆரம்பித்தேன். சகிப்புத் தன்மையும், எல்லையற்ற தியாக உணர்ச்

சியும் தாம் பெண்களின் வீழ்ச்சிக்குக் காரணம் என்று தெரிந்தது, இந்தக் காரணங்களிஞலேதான் புருஷர்கள் பெண்களை வெறுக்கத்தக்க வாழ்க்கையை நடத்தக் கட்டாயப்படுத்துகிருர்கள், நான் அநேக விதவைகளையும், வேசிகளையும் கூடப் பார்த்திருக்கிறேன். எங்கும் புருஷர்கள் தான் அதிகாரிகள். எஜமானர்கள், ஏனே?"

"ஆம், அவர்கள் பெண்களை கௌரவிப்பதில்லை. அவர்களிடம் உண்மையான அன்பு வைப்பதில்லை. அவர்களைத் தம்முடைய அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டவர்கள் என்று தான் நினைக்கிருர்கள். தாயாருக்கும் அதே கதிதான். பாவம்! பெண்கள் எவ்வளவு பராதீனமாயிருக்கிருர்கள். எவனுக்காகத் தன்னுடைய சகல சுகத்தையும் தியாகம் செய்கிருளோ, எந்தவிதமான கஷ்டத்தையும் சகித்துக் கொள்ளுகிருளோ, அவன்—அதே புருஷன் மிருகத்திற்குச் சமானமாக நடந்து கொள்ளுகிருன்."

"ஆம். எதுவரை பெண்குலம் தன்னுடைய அதிகாரத்தையும், சக்தியையும் அறியவில்லையோ, அதுவரை அவர்கள் அடிமைகளாகத்தான் வாழவேண்டும் என்பது என் நம்பிக்கையாக இருந்தது. ஆகவே நான் இந்த விஷயங்களை பிரசாரம் செய்ய விரும்பினேன். அதற்கு ஏற்ற இடம் பெண்கள் படிக்கும் 'காலேஜ்' தான் என்று தீர்மானித்தேன்."

"என் பெற்ருேர்கள் எனக்கு விவாகம் செய்ய விரும்பினர். ஒவ்வொரு பணக்கார வீட்டுப்பிள்ளையும் என்னிடம் காதற் பிச்சை கேட்க வந்தார்கள். ஆனுல் நான் அதை உதைத்துத் தள்ளிவிட்டேன். என் காலடியிலே காவமுள்ள புருஷர்களுடைய பணம், சக்தி, ஞானம் எல்லாம் தோல்வியடைந்து நசுங்கி அழிந்து விட்டன. நான் என் பிடிவாதத்திலிருந்து நழுவவில்லை. விவாகம் செய்து கொள்ளாமல், என் லட்சிய சித்திக்காக முன்னேறிக் கொண்டிருந்தேன்."

"என்ன அதிசயம்! திடீரென்று ஒருநாள், என்னுடைய தவம் நஷ்டமடைந்து விட்டது. என் லட்சியம் பயங்கரமாக நசுக்கப்பட்டுவிட்டது"

"ஆறு மாதங்களுக்கு முன்ஞலேதான் இது நடந்தது. ஆம். அன்றுதான் அவன்—அந்த அழகான வாலிபன் தன்னுடைய தங்கையைக் 'காலேஜி'ல் சேர்ப்பதற்காக வந்திருந்தான். அந்த வாலிபன் என்னைக் கண்டதும் வணக்கமாக வந்தனம் செலுத்திவிட்டு எதிரேயுள்ள நாற்காலியில் அமர்ந்தான். பிறகு "நீங்கள்தான் இந்த வித்யாலயத்தின் தலைமை உபாத்தியாயினி புவனேஸ்வரி தேவியோ? நான் என் தங்கையை இங்கே சேர்க்க வேண்டுமென்று வந்திருக்கிறேன். என்ருன்."

"நான் அவனை லட்சியம் செய்யாமல் அவனருகிலே நின்ற அவன் தங்கையை உற்று கவனித்தேன். பெண் அழகாகவும். புத்திசாலியாகவும் காணப்பட்டாள்."

"உன் பெயரென்ன?" என்றேன். 'கல்யாணி' என்று மெதுவாகச் சொன்னுள். பிறகு அவளை பரிக்ஷை செய்வதற்காக மற்ருெரு உபாத்யாயினியிடம் அனுப்பினேன். அந்த வாலிபன் அங்கேயே உட்கார்ந்து கொண்டு பத்திரிகை படிப்பதில் ஈடுபட்டிருந்தான். நான் அவனை கவனித்தேன். அவன் படிப்பிலேயே ஆழ்ந்திருந்தான்."

"இந்த ஆண்பிள்ளைகளை எனக்கு நன்ருகத் தெரியும். யாராவது ஒரு அழகான பெண்ணைக் கண்டுவிட்டால், வெட்கம் இல்லாமல், பசியுள்ள புலியைப்போல் அவர்களை உற்றுப் பார்ப்பார்கள். ஆனுல் இந்த வாலிபனுடைய போக்கே தனியாக இருந்தது. அவனுடைய சாந்தமும், நாகரீகமான தன்மையையும் கண்டு நான் ஆச்சர்யத்தினுல் திகைத்துப் போய்விட்டேன்."

"பிறகு என்வேலையில் ஈடுபட்டிருந்தேன். சிறிது நேரத்திற்குப் பிறகு நான் தலை நிமிர்ந்து பார்த்தபோது, அந்த வாலிபன் வீட்டின் மேல்பகுதியைப் பார்த்தவண்ணம் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருப்பதையே பார்த்தேன். என்னுல் பேசாமல் இருக்க முடியவில்லை. சிரித்தபடியே, "என்ன! நீங்கள் பத்திரிகை படித்து முடித்துவிட்டீர்கள் போலிருக்கிறதே?" என்றேன். அவனும் சிரித்துக்கொண்டே, "அதிலே ஒரே ஒரு கட்டுரைதான் படிக்கத் தகுதியுள்ளதாக இருந்தது. மற்றவை உபயோகமில்லை. அதைப் படித்து முடித்துவிட்டேன்" என்ருன்.

"அவன் எதைப் படித்திருப்பானென்று எனக்குத் தெரியும்'' ஆனுலும் 'அது எது?' என்று ஒன்றுமே புரியாதவள்போல கேட்டேன்.

அவன் சற்று தயங்கினுன். பிறகு 'அது தான் தங்களுடைய 'ஆண்கள் மிருகங்கள்' என்னும் கட்டுரை. கூடவே பிரசுரகர்த்தரின் அபிப்பிராயத்தையும் படித்தேன்" என்ருன். "அதைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?'' என்று மெல்லக் கேட்டேன்.

"என்னுடைய அபிப்பிராயமா? ஆம், நீங்கள் கூறுவதிலும் கொஞ்சம் உண்மை இருக்கத்தானிருக்கிறது. ஆனுல் அதைப்பற்றி நான் ஒன்றும் கூறமுடியாது. ஏனென்ருல், ஸ்திரீகளிடம் விமர்சன விஷயமாகப் பேசக்கூடிய சக்தி எனக்குக் கிடையாது. தவிர, உண்மையை அறிந்துக்கொள்ளக்கூடிய

பொறுமையும் எனக்குக் கிடையாது. ஸ்திரீகளிடம் ஒரே ஒரு வஸ்துதானிருக்கிறது. அதுதான் உணர்ச்சி. அந்தப் பிரசுரகர்த்தரை நினைத்தால் எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது. அவர் தங்களைப் புகழ்ந்து இந்த சாரமில்லாத விமர்சனத்தை எழுதிவிட்டாரே'' என்றான்.

எனக்கு ஆத்திரம் பொங்கிக்கொண்டு வந்தது. நேருக்கு நேராக அவன் என்னை அவமானப்படுத்திவிட்டான். 'என்ன மனிதன் இவன் கொஞ்சம்கூட மட்டு மரியாதை தெரியாமல்' என்று எரிச்சலாக வந்தது. 'நீங்கள் உங்கள் சகோதரியை என்னுடைய பொறுப்பில் விடப்போகிறீர்கள், என் அபிப்பிராயமும் உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். ஆகவே, நான் உங்களை எச்சரிக்கை செய்கிறேன். யோசியுங்கள்' என்றேன் அழுத்தமாக. அவன் சிரித்தான். பதில் பேசவில்லை.

சற்று நேரத்திற்குப் பிறகு, "தேவி! படிப்புக்கும், மனோபாவத்திற்கும் சம்பந்தம் இல்லை. படிப்பினால் மனதிலேயுள்ள அபிப்ராயத்தை மாற்ற முடியாது, பெண்கள் சக்தி குறைந்தவர்கள். அவர்கள் சகாயமற்றவர்கள். அவர்கள் அடிமையாகத்தான் இருந்தாகவேண்டும், அவர்களுடைய அடிமைத்

தனத்தை நீக்க உங்களால் எப்படி முடியப் போகிறது?..."

இதற்குள் கல்யாணி உபாத்யாயினியுடன் அங்கே வந்தாள். ஆகவே அவன் பேச்சு முடிவடையாமல் நின்றுவிட்டது. நான் கல்யாணியின் பெயரைப் பதிவு செய்துகொண்டேன். பிறகு அவன் புறப்பட்டபோது, எனக்கு வந்தனம்செய்து, "தேவி! வந்தனம்! என்னுடைய பேச்சை முடித்துவிடுகிறேன், மன்னிக்கவேண்டும். ஸ்திரீ புருஷர்கள் விஷயத்தில் மட்டும் நீங்கள் ஏன் அடிமைத்தனத்தைப் புகுத்திப் பேசுகிறீர்கள்? அடிமைத்தனம் என்பது மனித குலத்துக்கே பிறப்புரிமை. ஸ்திரீ ஒரு புருஷனிடம் அடிமையாக இருப்பதற்கு ஏன் விரும்புகிறாள்? உங்களுக்கு விவாகம் ஆகவில்லை என்று நினைக்கிறேன். ஆகையால் நீங்கள் உங்கள் கணவருக்கு அடிமையாக இருக்கவேண்டிய நிலை ஏற்படவில்லை. ஆனால் இந்தப் பள்ளிக் கூடத்தின் மேலதிகாரிகளுக்கு நீங்கள் அடிமைதானே? அவர்கள் உங்களை மிரட்டலாம். இன்ஸ்பெக்டர் உங்களைக் கேள்வி கேட்கலாம். டைரக்டர் உங்களை உத்தரவிடலாம் அல்லவா?"

"புருஷர்களுக்கு மட்டும் என்ன? அவர்களுக்குத் தான் எத்தனை எஜமானர்கள்! பணத்தைச் சேகரிப்பதற்குள்ளாக எவ்வளவு அவமரியாதைகளைச் சகிக்கவேண்டியிருக்கிறது? இதைப்பற்றி எவ்வளவோ பேசலாம். மன்னித்துக் கொள்ளுங்கள். போய் வருகிறேன்." என்று கைகூப்பிய வண்ணம் புறப்பட்டு போனான்.

"வெகுநேரம் வரை அவன் சென்றபோது நின்ற நிலையையே நினைத்து பார்த்துக்கொண்டிருந்தேன். அன்று முழுவதும் என் உள்ளத்திலே ஒரே போராட்டம். அவன் என்னை அவமதித்துவிட்டான் என் உற்சாகமெல்லாம் மறைந்துவிட்டது. அன்று வெளிவந்த என் கட்டுரையைப் பற்றிய பாராட்டுக் கடிதங்கள் வந்துக்கொண்டிருந்தன. ஆனாலும், அந்த இளைஞனிடம் நான் அடைந்த அபஜயத்தை என்னால் மறக்க முடியவில்லை. படிப்பிலும் மனது செல்லவில்லை. அவனுடைய துணிச்சலைக்கண்டு நான் அதிசயமடைந்தேன். பழிவாங்கும் எண்ணம் பீறிட்டெழுந்தது. ஆனால் கூடவே என் மனதிலே இனம் தெரியாத ஒரு வேதனை முளைத்தெழுந்தது.

"நாட்கள் ஓடின, அவன் பிறகு திரும்பி வரவே இல்லை. நானும் மெள்ள மெள்ள அவனை மறக்கத் தொடங்கினேன். ஆனால் திடீரென்று ஒருநாள் அவனை மறுபடியும் சந்திக்க நேர்ந்தது. கடவுளின் எண்ணம் ஏனோ அப்படி இருந்தது.

"அன்று இரவு பதினோரு மணி, நானும் என் சிநேகிதியும் ஒரு விருந்துக்குச் சென்று திரும்பி வந்துக் கொண்டிருந்தோம். வண்டி கிடைக்கவில்லை. பேசிக் கொண்டே நடந்து போய்விடலாமென்று புறப்பட்டு விட்டோம். வழியிலேயுள்ள தோட்டத்தில் இருவர் உட்கார்ந்திருந்தனர். எங்களைக் கண்டதும் அவர்களில் ஒருவன் எழுந்தான். நான் பயந்தது சரியாகி விட்டது. என் தோழி கமலா நடுங்கிப்போய் ஓட ஆரம்பித்தாள். நானும் அவளைப் பின் தொடர்ந்தேன். உடனே அவன் ஓடிவந்து எங்களை வழி மறித்தான். என் தைரியமும், சக்தியும் எங்கேயோ ஓடி ஒளிந்துக் கொண்டன. நான் கூச்சலிட்டேன்.

"திடீரென்று என்னைப் பிடித்தவன் கீழே தள்ளப்பட்டான். மற்றவன் ஓடிவிட்டான். அப்போது அங்கே தோன்றிய அந்த மூன்றாவது மனிதன், "அம்மா உங்களுடைய தைரியத்தை நான் மெச்சுகிறேன்" ஆனாலும் இந்த வேளையில் நீங்கள் தகுந்த துணையின்றி இந்த வழியிலே வந்தது முட்டாள் தனம்." என்று இனிமையாகவும், கம்பீரமாகவும் சொன்னான்.

"இருட்டு-அவனைச் சரியாகப் பார்க்க முடியவில்லை. இருந்த போதிலும் அந்தக் குரல் ஒரு வினாடி பிரமிக்கச் செய்துவிட்டது. அவன்தான்-அந்த வாலிபன். கல்யாணியின் சகோதரன். என்னை அவமதித்த அதே பேர் வழி, அவன் மறுபடியும் "அம்மணி! மறுபடியும் இம்மாதிரி நேராமல் இருக்க வேண்டும். பள்ளிக்கூடம்வரை நான் உங்களுக்குத் துணையாக வருகிறேன்" என்றான். நான் பேசவில்லை. எங்கள் இருப்பிடம் சேர்ந்ததும், நாங்கள் அவனுக்கு வந்தனம் சொல்லக் கூட மறந்து, உள்ளே ஓடிவிட்டோம். அவ்வளவு பயம்.

"சற்று நேரத்திற்குப் பிறகு கமலா, அடாடா! அவருக்கு வந்தனம் கூட சொல்ல மறந்து விட்டோமே. இன்று மட்டும் அவர் வந்திருக்காவிட்டால்?" என்றாள். அவள் குரலில் நடுக்கம் காணப்பட்டது.

"அன்றிரவு முழுவதும் நான் தூங்கவேயில்லை. பலவிதமான-தொடர்ச்சியற்ற-அர்த்தமில்லாத எண்ணங்கள், என்னை அறியாமலே என் மனதின் அடித் தளத்திலே ஒரு ஆவல். அவனை மறுபடியும் பார்க்கவேண்டும்போலத் தோன்றியது. காலையிலே எழுந்ததும் கமலாவிடம் சென்று "அந்த வாலிபனை எனக்குத் தெரியும் நம்முடைய கல்யாணியின் அண்ணாதான் அவன்" என்றேன்.

"அப்படியானால் நாம் இருவரும் சேர்ந்து, நமது வந்தனத்தைத் தெரிவித்து அவருக்கு ஒரு கடிதம் எழுதலாமா?" என்றாள்.

"அவன் செய்த உதவிக்கு அதுகூடப் போதாது. ஒரு முறை விருந்துசாப்பாட்டுக்குக் கூப்பிட்டால் என்ன?" என்றேன்.

"அவள் என்னை உற்று கவனித்தாள். பிறகு, எனக்கு ஒரு ஆக்ஷேபமும் இல்லை. உனக்காகத்தான் தயங்கினேன். புருஷர்களைக் கண்டால்தான் உனக்கு........" என்று இழுத்தாள்.

"சரி! அதிருக்கட்டும், இப்போது ஆக வேண்டிய வேலையைப் பார்!" என்று சொல்லிக்கொண்டே வெளியே சென்றேன்.

அடுத்த நாள் சாயங்காலம், அவன் வந்தான். சாப்பாடு முடிந்தது. வெளி வராண்டாவில், உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம். நான் அவனைக் கண்கொட்டாமல் பார்த்தேன். அன்றுதான் முதன் முதலாக அவனுடைய அழகு என்னை வசீகரித்தது. அவன் நல்ல திடகாத்திரமாகவும், சாமர்த்தியசாலியாகவும் காணப்பட்டான்.

என் உள்ளம் என் பிடியிலிருந்து நழுவ ஆரம்பித்தது. நதியின் ஓட்டத்திலே சிக்கிய துரும்புபோல நான் இழுத்துச் செல்லப்பட்டேன். அவனை அடிக்கடி சந்திக்க ஆரம்பித்தேன். என் மனம் அவனிடமே சுற்றியது. நான் அதைத் தடுக்க முயன்றேன். ஆனால் முடியவில்லை. ஆரம்பத்தில், "இது சாதாரணமான நட்பு தான். இதில் பயப்படுவதற்கு ஒன்றுமில்லை" என்று என் மனதை ஏமாற்றிக் கொண்டிருந்தேன். ஆனால்...... ஆனால்...எவ்வளவு நாட்கள்தான் இப்படி ஏமாற்றமுடியும்?

அவனை ஒருநாள் பார்க்காவிட்டால் எனக்குப் பைத்தியமே பிடித்துவிட்டது போலிருக்கும். மனது கட்டுக்கடங்காது. அவனையே பார்த்துக்கொண்டும், அவனுடனேயே பேசிக்கொண்டும் இருக்கவேண்டும்போலத் தோன்றும். வேலையே ஓடவில்லை.

கடைசியில் சென்ற வாரம் நான் அவனைச்சந்தித்தபோது அவன் என்னை விவாகம் செய்துக்கொள்ளத் தீர்மானம் செய்திருப்பதாகவும், அதற்காக என்னுடைய சம்மதத்தையும் கேட்டான். அவனிடம் என்னதான் மந்திர சக்தி இருந்ததோ! முடியாது என்று சொல்ல என்னால் முடியவில்லை. என் சம்மதத்தைத் தெரிவித்துவிட்டேன்.

எந்த அடிமைத்தனத்தை நான் மிகவும் வெறுத்தேனோ, எதற்காக நான் இவ்வளவு

இப்பொழுதே அவன் ஈரலை உஷாராகக் கவனிக்கவும்

அது அவனுடைய ஆரோக்யத்தை ஆயுள் முழுவதும் கவனித்துக்கொள்ளும்

உடம்பில் மிகச் சிறந்த ஆராய்ச்சி சாலையாக விளங்குவது ஈரல். காலப் போக்கில் இதனுடைய வேலைகளில் பல மாறுதல்கள் நிகழ்கின்றன. தாய்ப் பாலுக்கடுத்தபடியாக வேறு உணவை மாறி உட்கொள்ளும்போது ஈரலுக்கேற்படும் சிரமம் மிக அதிகம். பல் முளைக்கும் வேளையில் ஏற்படும் மாறுதல்கள், சீராகவும், சரியாகவும் இல்லாத உணவு முதலியவற்றால் குழந்தையின் ஈரல் கோளாறடையலாம். இதனால் சிக்கல்கள் பல தோன்றும்.

ஜம்மியின் லிவர்க்யூர் கோளாறுகள் ஏற்படாது பாதுகாப்பதுடன், குழந்தைகளின் வளர்ச்சிக்கு டானிக்காகவும் உதவுகிறது.

ஜம்மியின் **லிவர்க்யூர்**

குழந்தைகளுடைய ஈரல் குலைக்கட்டி கோளாறுகளுக்கு...

அவனுடைய ஈரலைப் பரீட்சியுங்கள் ஜம்மியின் டாக்டர் உங்களுருக்கு அருகே உள்ள டவுனுக்குப் பிரதி மாதமும் விஜயம் செய்கிறார். சுற்றுப் பிரயாணத் திட்டத்துக்கு எழுதவும்.

ஜம்மி வெங்கட்ரமணய்யா & ஸன்ஸ்

J.V.56

சென்னை-4 — கும்பகோணம் — திருச்சிராப்பள்ளி

கடுமையாகப் பிரசாரம் செய்து, எழுதினேனே, அதே அடிமைத்தனத்தை நான் மிக்க சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்ளத் தயாராகிவிட்டேன் அப்பப்பா! என்ன பயங்கரமான வீழ்ச்சி.

இப்போது என் முன்னல் ஒரே ஒரு கேள்வி மட்டும்தான் பாக்கி நிற்கின்றது. நான் என் தோல்வியை ஒப்புக்கொள்ளுவதா என்பதுதான் அது. அவனை மணப்பது என்றால் என்ன? அது என்னுடைய தோல்விதானே! அதை என்னல் தடுக்க முடியாது என்றும் தெரிகிறது. அவன் என்னை எப்படி நடத்தினலும், அதிகாரம் செலுத்தினலும் சரி, நான் அதை மௌனமாக அலுக்காமல் சகித்துக் கொள்ளத் தயாராகிவிட்டேன். அவன் என் தெய்வம். அவனுக்கு என்னை சமர்ப்பணம் செய்துவிட்டேன், ஆம். இதோ, இன்றுதான் அந்தப் பயங்கரமான உண்மையைக் கண்டுக்கொண்டேன். ஸ்திரீ என்பவள் புருஷனுடைய அடிமையாக இருக்கவே படைக்கப்பட்டவள். ஆண் இல்லாமல் பெண்ணின் வாழ்வு ஒளி பெருது. அந்த அடிமைத்தனத்திலே தான் இன்பம் இருக்கிறது, கௌரவம் இருக்கிறது. சுகம் இருக்கிறது. என்ற உண்மையைத் தெரிந்துகொண்டேன்.

ஆனல் என் மனம் அலைபாய்ந்தது. என் முன்னே இரண்டே வஸ்துக்கள்தான் இருந்தன ஒன்று தோல்வி, மற்றது மரணம். தோல்வியில் இன்பம் இருக்கிறது. மரணத்தில் லட்சிய சித்தி இருக்கிறது. இந்த இரண்டிலே எனக்கு வேண்டியது எது? நான் வெகுநேரம் யோசித்துப் பார்த்தேன். கடைசியில் என் லட்சிய வெறி, வெகு நாட்களாக என் உள்ளத்திலே ஊறி வளர்ந்து, உடலுடன் ஒட்டிப் போய்விட்ட அந்த வெறி வெற்றியடைந்து விட்டது. ஆகவே இதோ நான் மன அமைதியுடன், மரணத்தையே தேர்ந்தெடுத்துக் கொள்ளுகிறேன்.

—'புவனேஸ்வரி'

இந்தக் கடிதம் ஒரு முடிவற்ற நீண்ட சம்பவத்தின் தொடர்ச்சி. அன்றுதான் நான் வெளியூரிலிருந்து திரும்பி வந்தேன். இரவு வெகு நேரமாகிவிட்டது. யாரோ தடதட வென்று கதவைத் தட்டினர்கள். டாக்டர்! டாக்டர்! உடனே வாருங்களேன். என்ற கூக்குரல்.

நான் கீழே சென்று கதவைத் திறந்ததும், கண்ணீர் ததும்ப நிற்கும் முனியனைக் கண்டேன். அவன்தான் மகிளா வித்யாலயத்தின் வேலைக்காரன் "என்னப்பா! என்ன விஷயம்?" என்றேன்.

"அம்மா விஷத்தைக் குடிச்சுட்டாங்க. சீக்கிரம் வாங்களேன்" என்ருன்..

நான் உடனே முக்கியமான மருந்துகளுடன் புறப்பட்டேன். அறைக்கு வெளியே பெண்கள் கூட்டமாக நின்று கொண்டிருந்தார்கள். உள்ளே புவனேஸ்வரி அலறிக் கொண்டிருந்தாள். என்னைக் கண்டதும் அவள், "டாக்டர்! என்னைக் காப்பாற்றுங்கள். என் ரமேஷ் வந்து விட்டாரா? அவரை இங்கே கூப்பிடுங்களேன். நான் சாகவிரும்பவில்லை. எனக்கு மரணம் வேண்டாம்," என்று கூச்சலிட்டாள்.

வாந்தி எடுப்பதற்காக ஒரு மருந்தைக் கொடுத்தேன். அவள் வேதனை தாங்காமல் கதறினள். "ரமேஷ்! ரமேஷ்!! சீக்கிரம் ஓடி வாயேன்" என்று கத்தினள். அடுத்த நிமிஷம் அவள் தலை தலையணையில் சாய்ந்துவிட்டது. பெண்களும், உபாத்யாயினிகளும் ஓவென்று அலறி அழுது கூக்குரலிட்டனர். என்னல் அங்கே நிற்கமுடியவில்லை.

(ஒரு ஹிந்திக் கதையைத் தழுவியது.)

வேஷம் பலித்தது!

சேஷ்டை...

மலர் பறித்தவன் கையில் 'சுருக்' என்று முள் குத்தினாற்போல் கடிகாரம் அடித்த சத்தம் பார்வதி அம்மாள் மனதைக் குத்தி நிறுத்திற்று. 'மணி ஏழரையா?'

குத்துவிளக்கு வெண்கலத்தாலானதுதான். சற்றுநேரம் முன் வரை அது இரும்போ என ஐயம் காட்டிக்கொண்டிருந்தது. இப்பொழுது பொன்னாக மாறிக்கொண்டிருந்தது. விளக்கைத் தேய்த்துக்கொண்டேயிருந்த பார்வதி அம்மாள் உள்ளத்தில் அந்த எண்ணமும் துலங்கி ஒளிவிட ஆரம்பித்தது. அந்த ஒளியில் புண் செய்யும் ஒரு குணமும் இருந்தது.

அவன் சொன்னான்: என்ன சொன்னான்?

“அக்கா! போ அக்கா!”

“என்னடா கண்ணா, அப்படி அலுத்துக்கொள்கிறாய்? புதிதாகக் கலியாணம் செய்துகொண்டவனா இப்படி இருக்கிறாய்?”

அவன் மீண்டும் சூள் கொட்டினான்.

நிமிர்ந்து பார்த்தாள் தம்பியை பார்வதி. நல்ல சிவப்பு நிறம்; நிமிர்ந்து அழகாக வளர்ந்திருந்த உடல்; புன்னகை தவழும் முகம்; சுருட்டை தாங்கும் கேசம். ஒளி சிதறும் நெற்றிக்கட்டு. தன் தம்பி, தன் ஒரே பெண்ணின் வாழ்வின் சூரியன்; தான் வளர்த்து ஆளாக்கிய தம்பி; தான் விரும்பி மருமகனாக்கிக்கொண்ட தன் தம்பி! அவன் ஏன் சோர்கிறான்?

“சொல்லடா கண்ணா! அக்காவின் உள்ளம் தெரியாதா உனக்கு? வாய் பேசாத துன்பம் தாளும் இதயமாடா எனக்கு?”

“ஒன்றுமில்லை அக்கா! நீ அதற்காக வீணில் நொந்து அலந்துவிடாதே...!

“பின் சொல்லேன்!”

“ஜனகத்துக்கு என்னிடம் ஆசையேயில்லை அக்கா!”

“ஊம்!”

“ஏனடா அப்படிச் சொல்கிறாய்? அவள் உன்னிடம் ஏதாவது தவறாக நடந்துகொண்டாளா?” அவள் கேள்வியில் வேதனை விம்மி நின்றது.

அவன் மேலே ஒன்றும் சொல்லவில்லை,

“ஓ ஜனகம்!” அவள் குரல் கொடுத்தாள்.

பதினெட்டு வருஷங்களில் அப்பழுக்கின்றி வளர்ந்த அழகைத் தாங்கிக்கொண்டு அதனாலேயே தளர்ந்த வெண்கலச் சிலைபோல் ஜனகம் வந்தாள், “ஏன் அக்கா?”

பெண்ணை நிமிர்ந்து பார்த்தாள் தாய்.

ஐப்பசி மாதத்திலும் வியர்வையை முத்து முத்தாக ஏந்தி நின்றது மகள் முகம். பறந்திருந்த மயிர் பின்ஒளியில் தங்கமயமாகத் தோற்றம் அளித்தது. புடவை கசங்கியபடியே இருந்தது, கையில் சற்றே அழுக்குப் படிந்திருந்தது. நகைகளில் சிலவற்றை அவள் கழுத்தில் காணோம்.

பார்வதிக்கு ஒரு கணம் தன் கண்களை நம்ப முடியவில்லை. கொஞ்சம் கோபம் வந்தது.

“ஏண்டி ஜனகம். இது என்னடி கோலம்?”

“ஏன் அம்மா!”

“ஏண்டி, ஏழரை மணிக்கு வண்டி வருகிறது. அவன் இன்னம் அஞ்சு பத்து நிமிஷத்துக்

கெல்லாம் வந்துவிடுவான். முதன் முதல் வீட்டுக்கு வருகிற கணவனை வரவேற்கிற அழகா இது?"

"அப்பாவி! என்னமோ ஏதோ என்று பயந்து போனேன்!" என்றவள் திரும்பினுள். சும்மா வாவது போனுளா? எல்லாம் நம்ப மாமாதானே அம்மா வருகிருர்!" என்றும் சொல்லிவிட்டுப் போனுள்.

பார்வதி அம்மாளுக்கு ஒரு வெளிச்சம் வேதனைப் படலத்தை இறைத்துக் கொண்டு கிளம்பியது போல் இருந்தது. ஆகா! இந்த அலட்சியம் தான் அவன் மனதைத் தொட்டிருக்கிறது!

பார்வதி மனது மீண்டும் துலங்க ஆரம்பித்தது. பழைய சிந்தனைச் சுடர் ஒளி வீச ஆரம்பித்தது.

அவன் அன்று சொன்னது உண்மையிலேயே அவன் மனதில் ஊன்றி வேர் விட்டுக் கிளைத்துத் தழைத்துவிட்டதோ?

நாளை விடிந்தால் தீபாவளி. விடிந்தால் என்ன? இன்று இரவே தீபாவளி இரவுதான்! அவன் வருகிறேன் என்று எழுதிய கடிதம் கூட பத்து நாட்களுக்கு முன் வந்தது தான். மனம் இருந்தால், புது மாப்பிள்ளையின் ஆர்வம் உயிர்த்திருந்தால், தலை தீபாவளி மனைவியைப் பார்க்கப் போகிறோம் என்ற குதூகலம் குதித்து எழுந்திருந்தால் அவன் இதற்குள் இரண்டு மூன்று தடவைகள்கூட எழுதியிருக்கலாமே!

புது வெள்ளம் பழைய வெள்ளத்தை அடித்துக் கொண்டு போன சேதியாக அக்கா என்ற அன்பையும் கூடக் கவிழ்த்துவிடுமா இந்தப் புது உறவு?

குத்துவிளக்கை பளபள என்று துடைத்து வைத்தாய் விட்டது. வெற்றிலைத் தட்டில் வெற்றிலை, பாக்கு, பழம் எல்லாம் எடுத்து வைத்தாய்விட்டது.

கூடத்துக்கு வந்தாள். மணி ஏழடித்து நாற்பத்தைந்து நிமிஷங்களும் ஆகிவிட்டன! ஆயிற்று வருகிற நேரம் தானே!

என்ன தொல்லையடா அப்பா! ஜனகத்தின் தந்தைக்கும் ஊரிலிருக்க முடியாமற் போய் விட்டது. அவரும் அவர் மகனும் பத்து மணி வண்டியில்தான் வருவார்கள்.

பார்வதிக்கு இன்னொரு கவலையும் பிடித்துக் கொண்டது. பழைய தம்பி அல்ல அவன். இன்று அவன் பெரிய உத்தியோகம் பார்க்கும் 'ஆபீஸர்;' வீட்டுக்கு வந்த மாப்பிள்ளை; தன்னை வரவேற்க ஒருவரும் வரவில்லையே என்று எண்ணுவானே!

அவள் மனம் குழம்பிக்கிடந்தது, கிடந்ததா? அலையடிக்கிறதே!

அந்த சமயம் பார்த்து ஜனகம் வாசலிலிருந்து வந்தாள். யாருடனே பேசிவிட்டு வருகிருள். துளியாவது பரபரப்பு இருக்கவேண்டுமே!

"ஜனகம்!" என்று அதட்டிக் கூப்பிட்டாள்.

"ஏன் அம்மா?" என்று மதர்ந்த நடையுடன் அருகில் வந்து நின்றுள் அவள்.

"உண்மையைச் சொல். உனக்கு உன் அகமுடையான் வரப்போகிறான் என்று குதூகலமே இல்லையா?"

"போ அம்மா! கேள்வியைப் பாரு!" அவள் உள்ளே போய்விட்டாள்.

* * *

டிரிங்! டிரிங்!

சைக்கிள் மணி.

வாசலில் சென்றாள் பார்வதி. தந்தி ப்யூன்!

"தந்தியா? தந்தியா? அடியே ஜனகம் வாயேன்" தாயின் உள்ளம் இனம் தெரியாமல் பறந்தது.

ஜனகம் வந்தாள்.

தந்தியை வாங்கியவள் பிரிக்காமலேயே தந்தி கொண்டுவந்தவனைப் பார்த்தாள். அவன் எங்கேயோ மேட்டுவளையைப் பார்த்தான். சைக்கிள் இருட்டில் வீட்டோரமாகச் சாத்தப் பட்டிருந்தது.

"என்னடி பிரியேண்டி!"

"இரு அம்மா" என்று அவள் கையெழுத்துப் போடவேண்டும் என்றான். தந்திச் சேவகன் ஒரு கடிதம் எடுத்தான். அதில் பதினாலாம் நம்பரில் விரலை வைத்துக் காட்டிவிட்டு அவன் நின்றான். அவள் கை எழுத்திட்டுவிட்டு நகர்ந்தாள். அவள் பதறவேயில்லை.

ரேழியிலேயே நின்றுகொண்டு பிரித்தாள் ஜனகம் தந்தியை. பார்வதி உயிர் ஆலாகப்பறந்து கொண்டிருந்தது.

"அம்மா, மாமா வரமாட்டாராம்!"

"ஆ!" என்ற பார்வதி அம்மாள் அப்படியே அசந்து நின்றுவிட்டாள்.

ஜனகம் தொடர்ந்தாள். "லீவு கிடைக்க வில்லையாம்!"

"நான் நினைத்தது சரியாகப் போயிற்று?" என்ருள் பார்வதி. ஜனகம் 'என்ன நினைத்தாய்?' என்று கேட்டாள். அவள் கடைக்கண் மட்டும் பதட்டமின்றி வாசலை நோக்கிக் கொண்டிருந்தது.

மேலே பேசப்போன தாயாரை ஜனகம் நிறுத்தினுள். "அம்மா தந்தி கொண்டு வந்தவர் இன்னம் போகவில்லை. அவருக்கெதிரேயே நம் வீட்டுச் சவரணைப் பேசவேண்டாம். நீ உள்ளே போ. ஏதாவது சில்லரை கொடுத்துவிட்டு வருகிறேன்!" என்று அவளை உள்ளே அனுப்பி வைத்தாள்.

பார்வதி உள்ளே சென்ருளே தவிர இருப்புக் கொள்ளவேயில்லை. சரி விதி சதி செய்துவிட்டது என்று நினைத்தாள். தம்பியையும் இழந்து விட்டோம் என்றும் முடிவு செய்துவிட்டாள்.

* * *

வாசலில் குதிரைவண்டி வந்து நின்ற சத்தம் கேட்டது. ஜனகம் தாயாரை அமர்த்திக் கொண்டிருந்தாள். குதிரை வண்டி சத்தம் கேட்ட பார்வதி ஒரு நப்பாசை உந்த எழுந்து வாசலுக்கு வந்தாள்.

அது யார் உள்ளே வருவது?

ஆம் அவனே தான். சாக்ஷாத் கண்ணனே தான். அவள் தம்பியே தான்.

"ஏன் அக்கா? அப்படி ஏன் முழிக்கிருய்?

"வாடா உள்ளே. வாடா கண்ணு!"

உள்ளே வந்தான் கிருஷ்ணசாமி. நேரே இருவரும் காம்ரா உள்ளுக்குச் சென்றனர். அதைப் பார்த்த தாயே திடுக்கிட்டாள். உள் மிக அழகாக அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. அதில் ஒவ்வொரு அணுவும் கண்ணனுக்குப் பிடித்தமானதை அறிந்து செய்த அன்பின் சின்னத்தைத் தாங்கித் துள்ளிக் கொண்டிருந்தது.

'அக்கா!' என்ருன் கண்ணன்.

'என்னடா?'

'ஏமாந்துபோனேன்! ஜனகம் பொல்லாதவள்!' அவன் குரலில் குறை இல்லை; பெருமை இருந்தது.

அதே சமயம் ஜனகம் உள்ளே நுழைந்தாள். பார்த்த தாயும் கணவனும் மீண்டும் திடுக்கிட்டனர்!

"ஏண்டி ஜனகம், என்னை ஏமாற்றவா இப்படி இருந்தாய்?"

"ஆமாம் உன் தம்பி மட்டும் என்ன செய்தாராம்?"

"இது என்னடா கூத்து — புரியும்படித்தான் சொல்லேண்டி!

"நான் சொல்கிறேன்!"

"ஊஹூம் நீங்கள் சொல்லப்படாது. நானே..."

"முடியாது ஊஹூம் நீ கூட்டிக் குறைத்துப் பொய் சொல்வாய்?"

"யார் பொல்லாதவர் என்று தானே புரிந்துவிடும். பேசாமல் கேளுங்கள். அம்மா இவரை அந்தத் தந்திக்காரன் உடை எங்கே கிடைத்ததென்று கேளேன்! பிறகு நான் கையெழுத்துப் போட்டுக் கொடுத்த அந்தக் கடிதம் என் உடைமை. என்னிடம் கொடுத்துவிடச் சொல்!"

பிளந்த வாய் மூடாமல் நின்ருள் பார்வதி அம்மாள்.

"தந்தி பாரமா? என்னிடமா? என்ன உளறுகிருள் இவள் என்று கேள் அக்கா."

உமேஷ் யோக தரிசனம்

(முதல் பாகம்)

ஆங்கிலம், ஹிந்தி, குஜராத்தி, மராட்டி

ஆகிய நான்கு மொழிகளில்

(ஸ்ரீ யோகிராஜ் உமேஷ்சந்திரஜி எழுதியது)

ஜீரணக்கருவி, நரம்பு, சுவாசகோசம், மூத்திர உறுப்புகள், மற்றும் வேறு அவயவங்கள் ஆகியவற்றைச் சீராக இயங்கவைக்கும் வழிவகைகளைக் கூறும் யோக சாஸ்திரத்தின் உண்மையைப் பற்றிய அருமையான விளக்கம். யோகம், இயற்கை வைத்தியம், ஜீவாணுக்களின் இயல்பான வல்லமை, மனத்தத்துவ சிகிச்சை முதலியவற்றின் வாயிலாகப் பல வேறு நோய்களை முற்றும் குணப்படுத்த முடியும் என்பதை, 108 அசல் யோகாசனப் படங்கள் நிரம்பிய இந்த நூல் நன்கு விளக்குகிறது.

ஆண்-பெண், இளைஞர்-முதியவர், ஆரோக்கியமுள்ளவர்-நோயாளி ஆகிய அனைவருக்கும் உபயோகமானது. ஒவ்வொரு வீட்டிலும் ஆஸ்பத்திரியிலும் வாசகசாலையிலும் கட்டாயம் இருக்கவேண்டிய புத்தகம் இது.

விலை: ரூ. 15/-; தபாற் செலவு ரூ. 2/- தனி. வி. பி. பி. கிடையாது.

யோகாசன சித்திரப்படங்கள்

வழவழப்பான ஆர்ட் காகிதத்தில் கண்ணைக் கவரும் விதத்தில் பெரிதாகச் சித்தரிக்கப்பட்ட வரைபடமும் இங்கே கிடைக்கும். இந்த யோகாசனங்களை உங்கள் வீட்டிலேயே எளிதாகச் செய்யலாம். அவை உங்கள் உடலுக்கு வலிவும் வனப்பும் அளிக்கும். **விலை** ரூ. 2-50. தபால் செலவு உள்பட மணியார்டர் மூலம் அனுப்பவேண்டும்.

யோகாசன வகுப்புகள்

காலையிலும் மாலையிலும் ஸ்ரீ ராம்தீர்த் யோகாஷ்ரமத்தில் தவறாமல் நடைபெறுகின்றன. பெண்மணிகளுக்குத் தனி வகுப்புக்கள் உண்டு. பெண் உபாத்தியாயர்களே பெண் மணிகளின் வகுப்பை நடத்துகிறார்கள்.

ராம்தீர்த் பிராமி தைலம்

ஸ்பெஷல் நெ. 1
ரிஜிஸ்டர்டு

பொடுகு, தலைமயிர் விழுதல் ஆகியவற்றை நீக்கும் ஒப்பற்ற இந்தக் கூந்தல் தைலம், சிறந்த மூலிகைகளைக் கொண்டு விஞ்ஞான முறையில் தயாராகிறது. மூளைக்குக் குளுமையும், உடலுக்கு வலுவும், சுகமான தூக்கமும், அளிப்பது. உடலைத் தேய்த்து, பிடித்து விடுவதற்கு மிகவும் உகந்தது. எல்லோருக்கும் எக்காலத்துக்கும் உபயோகமானது.

விலை பெரிய புட்டி ரூ. 4/-; சிறிய புட்டி ரூ. 2/-. எங்கும் கிடைக்கும்.

ஸ்ரீ ராம்தீர்த் யோகாஷ்ரமம்

தாதர், செண்ட்ரல் ரயில்வே, பம்பாய்-14.

போன்: 62899 தந்தி: "பிராணயாமம்"

ராம்தீர்த் பிராமி ஆயில் டெப்போ, 257, தங்கசாலைத் தெரு, சென்னை-1

நீயே கேள் அம்மா, யார் உளறுகிருள் என்று புரிந்துவிடும்! தந்திக்காரன் சைக்கிளில் வாடகை நம்பர் போட்டிருக்குமா என்று கேள்? கருப்பு நிறமாகவா இருக்கும் என்று கேள்! தந்தி பாரத்தில் ஏதாவது ஆபீஸ் அடையாளம் இருக்காதா என்று கேள். கேளேன் அம்மா! சும்மா நிற்கிருயே!"

பார்வதி அம்மாளுக்கு ஆனந்தம் பிடிக்க முடியவில்லை. பேசாமல் நகர்ந்தாள் அவள்.

"எது என்ன ஆனல் என்ன? வேஷம் நன்ருய் பலித்திருந்தது!"

"நல்லவேளை, எனக்கு நல்ல பலன் தந்துவிட்டது! அதைச் சொல். நான் ஏன் இதைச் செய்தேன் என்று தெரியுமல்லவா!"

"தெரியும், தெரியும். ஏழரை மணிக்கு வண்டியை விட்டு இறங்கியதைக் கேட்டபிறகு தாமதமானபோதே தெரியும்!"

"ஊஹூம், அப்படியா அது? யார் சொன்னது?"

"யார் சொன்னலென்ன? எட்டணுக் காசு கொடுத்து தாடையைப் பிடித்துக் கெஞ்சி, அந்தப் பையனை அனுப்பியதெல்லாம் பின் எதற்காக?"

"நிசமாக நீ இவ்வளவு ஆசையும் அன்புமாக இருப்பாயா என்பதைக் சோதிக்கத்தான்!" என்று சொல்லிக்கொண்டே அவன் நெருங்கினுன் அவளிடம்.

"நீங்கள் நாவலும் சிறு கதையும் வாசித்து வாசித்து என்னைத் தப்பாக எடை போட்டால் நான் என்ன செய்வது? பொங்கி வழிந்தால்தான் பாலுக்கு ருசியா? பதமாக பாத்திரத்துக்குள் காய்ச்சி எடுத்தால் ருசி இல்லையா!"

பார்வதி பார்த்தாள். அவர்கள் இருவருக்கும் இடை வெளியே காணேம்.

அவளுக்குத் தலை தீபாவளி. "ஜமா"தான் என்று உள்ளம் பேரானந்தம் அடைந்துவிட்டது.

தொடர் கதை

வஜ்ர வீணை

கே. சுந்தராம்பாள்

அத்தியாயம்-4

மத்யானம் பனிரெண்டு மணி சமயம். கட்டிலின் மீது அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தான் சசி. முத்து முத்தாக அவன் நெற்றியில் அரும்பின வேர்வையை கைக்குட்டையால் ஒற்றி எடுத்துவிட்டு, பக்கத்து ஸ்டூலிலிருந்த சிறிய மின்சார விசிறியை சுற்ற விட்டுவிட்டு, கட்டிலை ஒட்டினாற்போல் கிடந்த நாற்காலியில் உட்கார்ந்திருந்தாள் பாமினி.

அவனது அழகிய முகத்தையே உற்றுப் பார்த்தவண்ணம் உட்கார்ந்திருந்த பாமினியின் மனம் தீவிரமான சிந்தனையிலாழ்ந்தது. சசியின் உடலில் பலம் பிடித்துவிட்டது. சாப்பாடு, உறக்கம் யாவும் சர்வ சாதாரணமாகவே நடந்து வந்தது. ஆனால் தான் ஏன் இவ்விடத்திலிருக்கிறோம் என்ற பிரச்னையே அவனிடம் காணவில்லை. "சாப்பிட வா" என்றால் வருவது "ஸ்நானம் செய்" என்றால் செய்கிறான். இப்படியாக அவனாக செய்து கொள்ளவேண்டும் என்ற நினைப்பில்லாது தனது நிலைமை என்னவென்பதைப் பற்றி அறிந்துகொள்ளாமலிருக்கிறாரே!

உணர்வின்றி படுத்திருக்கும் பொழுது தான் நான் அவரைத் தொட்டுப் பணிபுரிய முடிந்தது. இப்பொழுதெல்லாம் என்னிடம் எவ்வளவோ அன்பாக இருக்கிறார். ஆனால் விரல் நுனிகூட மேலே படாமலிருக்கும்படி நடந்துகொள்வது அவர் அரிய பண்பிற்கு எடுத்துக்காட்டு. அம்மா சொல்லுகிறபடி இவர் என்னை ஏற்றுக்கொள்ள எப்படி நடந்துக்கொள்ளுவது? இவரை மயக்கி நம் வசமாக்குவது நியாயமாகுமா? அம்மா சொல்லுவதற்காகத்தானா? உனக்கு அவர்மீது ஏற்பட்டிருக்கும் அன்பிற்கு உவமை சொல்லப் பதமேயில்லை. நான் அவரை அடைவதில் என்ன தவறு, என் வாழ்வு மலர்ந்தால் அம்மாவின் மனம் சாந்தி பெறும்.

"இன்னொருத்தி வாழ்வை பாழாக்கி, உன் வாழ்வை வளம்பெறச் செய்வது நீதியா? என்றது அறிவு.

இப்படி அறிவிற்கும் மனதிற்கும் ஏற்பட்ட போராட்டத்தில் மனமே வெற்றி கண்டது. சரி. இவர் எழுந்திருந்ததும் நேற்றே புக் பண்ணி வைத்திருந்த ஒரு அரிய படத்திற்கு அழைத்துச் சென்றால், அதில் வரும் காதல் காட்சிகளைப் பார்ப்பதில் ஒரு சமயம் மனதில் சலனமேற்படலாம். பிறகு இன்று இரவே......மேலே சிந்தனை செய்ய முடியாதவண்ணம் நாணம் வந்து தடுத்தது. அவன் கண் விழித்ததும் டிபன் காபி கொடுத்துவிட்டு,

"இன்று ஒரு சினிமா பார்த்து வரலாம் வருகிறீர்களா?" என்றாள்.

"ஓ வருகிறேனே" என்றான். ஆர்வமோ வெறுப்போ ஒருவிதமான உணர்ச்சியுமின்றிய குரலில்.

இருவரும் உடுத்துக்கொண்டு புறப்பட்டார்கள்.

தனிப் பெட்டியில் போய் உட்கார்ந்து கொண்டார்கள். ஆனால் பாமினியின் சேலை கூடத் தன்மீது படாவண்ணம் அடக்கமாக உட்கார்ந்தான் சசி.!!

படம் ஒரே காதல் மயமான காவியம். வளைய வளைய ஆணும் பெண்ணும் கட்டிப் புரளுவதும் நடனமாடுவதுமாக, மனிதர்களின் மனத்தை சுழலவிடும் விதமாக அமைந்தது. சசியின் முகபாவத்தைக் கடைக்கண்ணால் கவனித்தவண்ண மிருந்

தாள் பாமினி. சலனமற்று ரசித்துக்கொண் டிருந்தான்.

அவள் நினைத்து எதிர்பார்த்து வந்த தொன்றும் அவ்விடம் அவர்களுக்கிடையில் நடைபெறவில்லை. வீட்டிற்கு வரும் வழியில் "படம் எப்படியிருந்தது?"என்று கேட்டாள்.

"ஸீனரியோ அபாரம். கதையின் கருத்து அற்புதம். ஆனால் கோமாளிக் கூத்தாக நடித்து விட்டார்கள்" என்றான்.

வீட்டிற்கு வந்து, சாப்பிட்டானதும் சசி படுக்கைக்குச் சென்றான். அறையில் படுக்கை புதிதாகப் போடப்பட்டிருந்தது. ஊதுவத்தியின் நறுமணம் மனோரம்யமாக இருந்தது. கட்டிலில் படுத்ததும் உறங்கி விட்டான். உள்ளே வந்த பாமினி வெற்றி லைத் தட்டையும் பாலையும் கட்டிலுக்கருகி லுள்ள மேஜைமீது வைத்துவிட்டு அவன் தோளைத் தொட்டு எழுப்பினாள். கண்ணை விழித்துப் பார்த்தான். அவன் மாரில் சாய்ந் தாற்போல் கட்டிலில் உட்கார்ந்தாள்.

அவள் தேகம் தன்மீது படாவண்ணம் சட்டென பின்தள்ளிப் படுத்துக் கொண்ட வன், "எதற்காக எழுப்பினாய்?" என்றான்.

"பால் சாப்பிடவில்லையே இந்தாருங்கள்" பால் டம்ளரைக் கையில் வாங்கி சாய்ந்த படியே மட மடவெனக் குடித்துவிட்டு, டம்ளரை அவள் கையில் கொடுத்தான்.

"வெற்றிலை போட்டுக் கொள்ளுகிறீர்களா?

"வேண்டாம் பாமினி" என்றவன் இவள் ஏன் உட்கார்ந்திருக்கிறாள் என்பதுபோல் அவளையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந் தான்.

"பாமினி! உனக்கு என்ன வேண்டும்?

"சொல்லு பாமினி என்னவோ யோஜிக் கிறாயே."

"ஊம் என்மீது உங்களுக்கு...

"அளவு கடந்த அன்பு பாமினி"

"அப்படியானால்...

"அப்படியானால் என்ன பாமினி?"

"என்னை உங்கள் மனைவியாக..." நாண மிகுதியினால் தலையை மறுபக்கம் திருப்பிக் கொண்டாள்

"மனைவி" மனைவி" மனைவி" ஹா! மனைவி"

"திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள் பாமினி.

சசியின் முகம் எதையோ தேடும் பாவனை யிலிருந்தது.

"என்ன சொல்லுகிறீர்கள்?"

"ஆம். பாமினி எனக்கு மனைவியிருக்கி றாளே.

ஒரு நிமிஷம் அவள் மனம் சந்தோஷத்தில் துள்ளிக் குதித்தது. தனது கேள்வியினால் அவனது சித்தம் தெளிந்து விட்டதா? அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் பேசவேயில்லை.

"எங்கேயிருக்கிறாள்?"

"எங்கோ இருக்கிறாள். இடம் புரியவில்லை. ஆனால் என் அந்தராத்மா எனக்கு மனைவியி ருக்கிறாள் என்றே சொல்லுகிறது. நீயும் நானும் ரொம்ப நாளாக ஒன்றாகவே இருக் கிறோம். உன்னை அளவுகடந்து நேசிக்கிறது என்மனம். என்னை மன்னித்துவிடு பாமினி. உன்னை என் சகோதரியாகவேதான் நினைக்க முடிகிறது நான் என்ன செய்வேன்"

அது சரி, உங்கள் மனைவி இருக்கு மிடத்தை நான் சொல்கிறேன். நினைவு வருகி றதா பாருங்கள்—வீணாவிகாரில், அத்துல்யா, மேகலா இவர்களுடன் உங்கள் மனைவி கலா இருக்கிறாள்.

"என்ன! வீணாவிகார்!" யோஜித்தான், அந்தப் பெயரையே நான் கேட்டதில்லை.

"சரி அது போகட்டும். நீங்கள் எப்படி இவ்விடம் வந்தீர்கள்?

"வந்தேனா? இல்லையே இங்கேதானே எப் பொழுதுமிருக்கிறேன். நீயும்தானே இருக் கிறாய்?

"இல்லை. நீங்களும் நானும் ரயிலில் சந்தித் தோம்; ரயில் விழுந்து ஆபத்தில் அகப்பட்டுத் தப்பித்தோம். அதற்கு முன் எங்கேயிருந் தீர்கள், நீங்கள் யார்? என்பதைச் சிந்தனை செய்து பாருங்கள். இன்னும் சொல்லப் போனால் நீங்கள் ஒரு சங்கீதமேதை" என மடமடவெனச் சொல்லி முடித்தாள்.

"என்ன! நான் சங்கீத மேதையா? ரயிலில் வந்தேனா! இல்லை! இல்லை! நீ பொய் சொல்லு கிறாய்".

"இல்லை நான் சொல்லுவது முற்றிலும் உண்மை. நன்றாக யோஜித்துப் பாருங்கள். மனைவி இருக்கிறாள் என்று சொல்லுகிறீர் களே அவள் இருப்பிடம் தெரியவேண்டாமா? "வீணாவிகார் என்ற பங்களாவில் சசிகலா என்ற உங்கள் மனைவி இருக்கிறாள், இரண்டு பேரும் சேர்ந்து பாடுவீர்கள், நினைத்துப் பாருங்கள்.

நாள்முழுவதும்
கவர்ச்சிகரமாக
தோற்றமளிக்க
"GOKUL"
SANTOL
POWDER
GOKUL
SANDAL
TOILET POWDER
ஸாண்டல்வுட் டாய்லட் பவுடர்
சுத்தமான தனி சந்தனத்தை
மென்மையாக்கப்பட்டது.
ஸாண்டால்
சந்தனத்துடன் கூடிய டால்கம் பவுடர்
டி.எஸ்.ஆர். & கோ
கும்பகோணம்
A.K. GOPAL & CO.

"என்ன? சசிகலா!" சற்று யோஜித்தான். மோவாயைச் சொரிந்து கொண்டான், கட்டில் அஸ்மானகிரியைப் பார்த்தான், பிறகு இல்லை, எப்படிப் பார்த்தாலும் அவளைப் பற்றிய புலனே தெரியவில்லை. ஏதோ பிரமையில் மனைவியிருக்கிருள் என்று சொல்லி விட்டேன்".

"சரி அப்படியானால் என்னை மனைவியாக ஏற்றுக் கொள்வதில் தடையென்ன?" படுக்கை மீது கிடந்த அவனது கையை, தன் கையிலெடுத்துக் கொண்டாள்.

சட்டென கையை இழுத்துக் கொண்டு, "இல்லை மன்னித்து விடு, நீ என் அருமைச் சகோதரிதான், அப்படியே எண்ணத்தான் என் மனம் பழகிவிட்டது. 'மனைவியிருக்கிருள துரோகம் நினைக்காதே' என்று ஏதோ ஒன்று என்னை எச்சரிக்கிறது" ஆனால் அவள் யார் எங்கிருக்கிருள் என்பது மட்டும் புரியவில்லை."

படுத்துக் கொண்டிருந்தவன் சட்டென எழுந்து உட்கார்ந்து கொண்டான். "நான் யார்? நான் யார்? யார் என் மனைவி? எங்கே அவள்? நாலா பக்கமும் சுற்றிச் சுற்றிப் பார்த்தான். இரண்டு கைகளினாலும் தலையை அமுக்கிப் பிடித்துக் கொண்டவன் ஐயோ! ஒன்றுமே புரியவில்லையே பாமினி.

"எங்கிருந்தோ வந்தேன்! எங்கேயிருந்து? எங்கேயிருந்து? இல்லை! இல்லை! இல்லை!" என்று விறிட்டு அலறியவன் அப்படியே மயக்கமாகச் சாய்ந்து விட்டான்.

"ஐயோ! சசி!" என்று அக்கட்டடமே அதிரும்படி அலறினாள் பாமினி.

காத்தியானி பம்பாய் சென்றிருந்தபடியினால் வேலைக்காரி தான் பாமினியின் அலறல் கேட்டு ஓடி வந்தாள்.

"என்னம்மா!" என்றவள் சசியின் நிலைமையைப பார்த்துவிட்டு "டாக்டருக்குப் போன் பண்ணுங்கள்?" என்று சொல்லி விட்டு,சசியின் முகத்தில் தண்ணீர் தெளித்தாள்

டாக்டர் வந்து ஏதோ ஒன்றை மூக்கில் பிடித்தார். ஒருதரம் கண் விழித்துப் பார்த்து விட்டு மறுபடியும் கண்களை மூடிவிட்டான்.

"டாக்டர்! ஆபத்து ஒன்றுமில்லையே! அழுதுவாறு கேட்டாள் பாமினி."

"உயிருக்கு ஆபத்தொன்றும் ஏற்படாது. மயக்கம் வருமுன் என்ன நடந்தது?"

நடந்த விஷயத்தை ஒளிவு மறைவின்றி அப்படியே சொல்லிவிட்டு, "டாக்டர்" மனைவியிருக்கிருள் என்று சொன்னவுடன் பழைய நினைவு வருகிறது போலும், நாம் நன்ருக நினைவுபடுத்தினால், நன்ருகப் புரிந்துகொள்ளுவார் என்று காரசாரமாகவே பேசிவிட்டேன் என்ருள்.

"உன்மீது தவறென்றுமில்லையம்மா. சில சமயம் நீ நினைத்தபடி குணமாகவும் வழியுண்டு. அதிர்ச்சியினால் மயக்கமுற்று, விழிக்கும்பொழுதும் குணங் காணலாம். அல்லது வலுவின்றி உணர்ச்சி தாங்காமல் மயக்கமெலாம் இப்பொழுது கண்விழித்த பின்பு அவள் நிலைமையைப் புரிந்து கொள்ளலாம். இரவு முழுவதும் தூங்கட்டும். அதிகாலையில் நான் வருகிறேன்."

அவனைப் பார்த்தபடியே நாற்காலியில் உட்கார்ந்திருந்தாள். வேலைக்காரியும் அவ்விடமே படுத்து உறங்கிவிட்டாள்.

சரியாக ஆறு மணிக்கு டாக்டர் வந்துவிட்டார். ஒரு ஊசி போட்டார். கண்களை விழித்தான். உடனே காபி கொடுத்தார்கள் சாப்பிட்டான். அவன் பேசப் போகிருன் என்று ஆவலே உருவாக நிற்கும் பாமினியைப் பார்த்து,

"பாமினி! பேசிக் கொண்டிருக்கும்பொழுதே தூங்கிவிட்டேனு?" என்று கேட்டவன், டாக்டர் நிற்பதைப் பார்த்துவிட்டு 'எங்கே வந்தார்' என்ருன்.

நிலைமையில் மாறுதலொன்றுமில்லையென்று புரிந்துகொண்ட டாக்டர் "பக்கத்து வீட்டிற்கு வந்தேன், அப்படியே உங்களையும் பார்த்துவிட்டுப் போகலாமே என்று சும்மாத்தான் வந்தேன்" என்ருர்.

பிறகு சற்றுநேரம் சாதாரணமாக எப்பொழுதும் பேசுவதுபோல் பேசிவிட்டுப் போனுர்.

குரல்: (1) பாமினி! உனக்கு நல்ல உதவி கிட்டியிருக்கிறது டாக்டரிடம் முழுவதும் எடுத்துச் சொன்னயானல் அதுல்யருக்கு கடிதம் பறக்கும் பிறகு பிரச்னை தீர்ந்தது

பத்துநாள் சென்றது. காத்தயாயனி கடுஞ் ஜுரத்துடன் வந்து சேர்ந்தாள். ஒரு மாதங்கழித்து ஜுரங் குறைந்தது. ஆனால் அத்துடன் ஒட்டிவந்த இருமல் அவளை எழுந்து நடமாட விடவில்லை. அதனால் இரு நோயாளிகளுடன் குடும்பப்

பாரமும் பாமினி தலைமீது இறங்கியது. என்றாலும், தனது அந்தரங்க வேலைக்காரி மூலம் பாமினி வெளியுலகுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளாவண்ணம் பாதுகாத்து வந்தாள.

தாயின் உடல் நிலைமையைப்பற்றி டாக்டர் அந்தரங்கமாக பாமினியினிடம் "உன்அம்மா விற்கு க்ஷயத்தின் அறிகுறி தென்படுகிறது. ஒரு மாதம் முயன்று பார்க்கிறேன். குணம் காணவில்லை யென்றால் சானட்டோரியத் தில் சேர்க்கவேண்டி வரலாம்" என்றார்.

அன்று இரவு பாமினிக்கு சிவராத்திரியாக இருந்தது. தாயை சானிடோரியத்திற்கு அனுப்பிவிட்டால், சசியை உரியவர்களிடம் சேர்த்துவிடலாம் என்ற திருப்தி ஒருபுறம். தனது ஒரே ஆதரவான தாயை இழந்து விட்டால் தனது எதிர்காலம் எப்படி அமை யும் என்ற கவலை மறுபுறம். எல்லாவற்றை யும்விட தாயின் அந்திமகாலம் சமீபத்தில் ஏற்பட்டு அந்த சமயம் சசியை மணந்து கொள்ளவேண்டுமென்று வாக்குறுதி கேட் டால் என்ன செய்வது? காதலில் ஏமாற்றம் அடைந்தவள் சாகும்பொழுதும் நிம்மதி யில்லாமலா செய்வது? மூன்று நாட்களாக இரவு பகல் இதே வேதனையில் உழன்ற வளுக்கு அன்று கண்களே இனி உறங் காவோ என்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது.

விடியற்காலை ஐந்து மணிக்கு சற்றே கண் அயர்ந்தாள். அவள் கண் விழிக்கும்பொழுது கட்டிலில் அவள் கால்மாட்டில் சசி உட் கார்ந்துகொண்டிருந்தான்.

திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தவள் நான் ரொம்ப நாழி தூங்கிவிட்டேனா? உங்களுக்கு என்னவேண்டும்?" என்றாள்.

கனவு கண்டேன் பாமினி, "அதைச் சொல் லவே வந்தேன்."

"என்ன கனவு கண்டீர்கள்?" பரபரப்பை அடைந்தது அவள் உள்ளம்.

"உனக்குக் கல்யாணம் நடந்தது. உன் கணவர் ரொம்ப ரொம்ப அழகாக இருந்தார். மாலையும் கழுத்துமாக ஜோடி நன்றாக இருந்தது".

"ஓ! அப்படியா? உங்களுக்குக் கல்யாணம் நடப்பதுபோல் நான் கனவு கண்டேன்.

"என்ன? எனக்குக் கல்யாணமா? இல்லையே எனக்கு மனைவி இருக்கிறாளே எனக்குக் கல்யாணமா" என்று இரண்டு மூன்று முறை சொல்லவே 'அன்றையப்போல் மயக்கம் வந்து விடுமோ வெனப் பயந்து:

"இல்லை இல்லை உங்களுக்குக் கல்யாண மில்லை எனக்குத்தான் கல்யாணம் நடக்கி றாப் போல கனவு கண்டேன், ஆமாம் எனக் குக் கல்யாணம்" என்று சற்று உரக்கவே சொன்னாள்.

"ஆம் அதுதானே கேட்டேன். நிஜமா உனக்குக் கல்யாணம் வந்துவிடும், அப்பொ நான் உன் சகோதரனில்லே நிறைய சீர் வகைகள் செய்வேன்"

"நான் பாக்யசாலி" என்றாள் இதுநாள் வரை சசி இவ்வாறு சேர்ந்தாப்போல் தானா கப் பேசியதில்லை. கேள்வி கேட்டால் பதில் சொல்லுவான். இன்று இந்த மாறுதல் பாமினியை ஆச்சர்யத்திலமிழ்த்தியது. அத னால் பேச்சை பாதியில் வெட்ட மனமில்லாத வளாக பல்தேய்க்க எழுந்திருக்காமல் உட் கார்ந்திருந்தாள்.

"பாமினி! உனக்கு என்னவெல்லாம் வேண்டும்' சொல்லு.

"நீங்கள் அன்புடன் ஏது வாங்கிக் கொடுத் தாலும் மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொள்ளு வேன்."

"சரி அப்படியானால் காப்பி சாப்பிட்டதும் கடைக்குப் போகலாம்."

"அடடா இன்னும் கல்யாண முகூர்த்தம் வைக்கவில்லையே, அதனால் பின்னால் பார்த் துக் கொள்ளுவோம், பல் தேய்த்து காபி சாப்பிடலாம் வாருங்கள்" என்று எழுந்தாள்.

வழக்கம் போல், மேஜையின் எதிரெதி ராக உட்கார்ந்து கொண்டார்கள். பாமினி பீங்கான் கப்பில் விட்டுக் கொடுத்த காப் பியை சுவைத்து உறிஞ்சிக் கொண்டிருந் தான் சசி.

அவன் ருஜித்துச் சாப்பிடுவதைப் பார்த்து ரசித்தவாறு தானும் கப்பிலுள்ள காப்பியை உறிஞ்சிக் கொண்டிருந்தாள். அது சமயம் வேலைக்காரி ஹிந்துப் பத்திரி கையைக் கொண்டு வந்து கொடுத்தாள். வலது கை காப்பிக் கோப்பையைப் பிடித் திருக்க, இடது கையினால் பத்திரிகையைப் பிரித்தாள். அவ்வளவுதான் அவள் முகம் ஆதவனைக் கண்ட ஆம்பலெனை மலர்ந்தது. சட்டென பாதி சாப்பிட்டுக் கொண்டிருந்த

காப்பியைக் கீழே வைத்துவிட்டு பத்திரிகையைப் படித்தாள்.

அதில் கண்ட விஷயம்:

"பம்பாய் தமிழ்ச் சங்கத்தில் ஸ்ரீமதி கலாவல்லி சசிசேகரின் பரதநாட்டியம். அவர் சகோதரி ஸ்ரீமதி லெக்ஷ்மி சசிசேகரன் பதம் பாடுவார். இரண்டு நாள் பரதநாட்டியம், மூன்ருவது நாள் இருசகோதரிகளின் பாட்டுக் கச்சேரி, கிராண்ட் டான்ஸ் அண்ட் ம்யூஸிக்" என்று முதல் பக்கம் முழுவதும் கொட்டையெழுத்தில் போட்டிருந்தது. கலா லெக்ஷ்மி படமும் வந்திருந்தது.

பாமினியின் ஆனந்தத்திற்கு உபமானம் சொல்லப் பதமே கிடையாது. பிறவிக் குருடனுக்குக் கண் திறந்ததைவிட பரம தரித்தரினின் முன்பு பவுன் குவியலைக் காட்டி இவ்வளவும் உனக்குச் சொந்தம் என்ருல், அந்த ஆனந்தத்தையும்விட அதிகம் அடைந்தாள் பாமினி. மூன்று நாட்களாக வேதனையில் வெந்து புழுங்கின அவள் உள்ளத்திற்கு, விடுதலை கிடைத்து விட்டது. பத்திரிகைப் படத்தை சசியின் முகத்திற்கு நேராகக் காண்பித்து இவர்கள் யார் தெரிகிறதா பாருங்கள்" என்ருள்.

சற்றுநேரம் உற்றுப் பார்த்திருந்துவிட்டு' "தெரியவில்லையே என்ருன்"

"இதை படித்துப் பாருங்கள்" என்ருள்.

குழந்தைகள் படிப்பது போல் மடமடவென வாய்விட்டுப் படித்தான்.

"இப்பொழுதாவது யாரென்று புரிந்ததா?" என்ருள்.

"எனக்கு ஒன்றுமே புரியவில்லை, குழப்பமாக இருக்கிறது"

மயக்கம் வந்துவிடுமோ என்று பயந்தவளாக, "சரி வேண்டாம் விட்டுவிடுங்கள். பம்பாயில் ஒரு டான்ஸ் கச்சேரி நடக்கப் போகிறது. நாம் போய் வருவோமா?"

"ஓ. நான் ரெடி, என்னிக்கு இன்னிக்கா?

"இல்லை இன்னும் பதினைந்து நாள் இருக்கிறது போகலாம்" என்ருள்.

ஏதோ மடமடவெனப் பேசுகிருனே அதுவே ஒரு மாறுதல் தானே கச்சேரிக்கு அழைத்துச் சென்று நேரில் கண்டால் ஒரு சமயம் சுய உணர்வு ஏற்படலாம். ஆனல் எப்படிப் போவது?

காத்யாயனியிடம் சொன்னல் கண்டிப்பாக போக விடமாட்டாள். சொல்லாமல் எப்படிப் போவது? முதலில் டிக்கெட் புக்பண்ணுவது எப்படி? இதே சிந்தனையில் இரண்டு தினங்கள் கழிந்து விட்டன. எவ்வளவோ சிந்தனை செய்து கடைசியில் டாக்டரின் உதவியை நாடுவதென்று தீர்மானத்திற்கு வந்தாள். ஆள்வசம் கடிதமனுப்பினுள் "முக்யமான விஷயமாதலால் உடனே வரவேண்டும், வாசல் வராந்தாவில் உங்கள் வரவிற்காக நின்றுகொண்டிருப்பேன்" என்பதே.

பதினைந்தாவது நிமிஷம் டாக்டர் பாமினியின் முன் நின்ருர்.

"வாருங்கள் டாக்டர்! இப்படி உட்காருங்கள்" என்று நாற்காலியைச் சுட்டிக் காட்டினுள்.

உட்கார்ந்துகொண்டு, "என்னம்மா விசேஷம்?"

சிறிது தயங்கியபடியே, "டாக்டர்! அன்ருருநாள் எனக்கு உதவி செய்வதாகச் சொன்னீர்களல்லவா?''

"அதிலென்ன சந்தேகம்? எப்பொழுதும் செய்யக் காத்துக்கொண்டிருக்கிறேன். நான் இன்று இவ்வளவு உன்னத நிலையிலிருப்பதற்கு மூல காரணகர்த்தா உன் அப்பா. என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள சந்தர்ப்பத்தைத்தான் நான் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். என்ன விஷயம்? தயங்காமல் சொல்லு.

"இன்று பத்திரிகையில் முதல் பக்கம் முழுவதையும் நிரப்பிக்கொண்டிருக்கும் விஷயத்தைப் பார்த்தீர்களா?"

"ஓ! பார்த்தேனே. பம்பாய்த் தமிழ்ச் சங்கத்திஞதரவில் டான்ஸ் அண்ட் மியூஸிக் புரோகிரும் நடப்பதாக இருக்கிறது. அதைத்தானே சொல்லுகிருய்?"

"ஆமாம். அந்த நிகழ்ச்சியைப் பார்க்க வேண்டும். இரண்டு டிக்கெட் ரிஸர்வ் பண்ணவேண்டும்."

"அட இதற்குத்தான? உன் அம்மாவின் பெயரைச் சொன்னல் டிக்கெட்டை இங்கேயே அனுப்பிவிடுவார்களே. ஏன்? சங்கத்திற்குப் போன் இருக்கிறது. நீயே போன் பண்ணினல் பிரசிடெண்டே வேண்டியதைச் செய்வார்."

"வீட்டில் போன் இருந்தால் உங்களைச் சிரமப்படுத்தியிருக்கமாட்டேனே. போன் பம்பாய் வீட்டிலேயே இருக்கிறது. இவ்விடம் கொண்டுவரவில்லை. நானும் வெளியே போக

முடியாது. எப்படிப் போன் பண்ண முடியும்?"

"டிஸ்பென்ஸரிக்கு வா! போன் பண்ணிவிட்டு வரலாம்."

"டாக்டர், ஒரு விஷயம்......"

"என்னம்மா தயங்கரே. தைரியமாகச் சொல்லு."

"வந்து...வந்து... நான் டான்ஸ் பார்க்கப் போவது அம்மாவுக்குத் தெரியக்கூடாது. போகிறவரை தெரியாமலிருந்தால் போரும். பிறகு தெரிந்து கோபித்துக்கொண்டால் பாதகமில்லை. நாங்கள் போவது தடைபடக் கூடாது."

"அம்மா உடம்பு சரியில்லையென்பதற்காகச் சொல்லுகிறாளா? நான் நர்ஸை ஜாக்கிரதையாகக் கவனிக்கச் சொல்லுகிறேன். பாமினி போய் வரட்டுமென்று அம்மாவிடம் சொல்லுகிறேன்.

"டாக்டர்! அதுவல்ல விஷயம். இப்பொழுது நடனமாட வரும் பெண்ணிற்கும், எங்கள் வீட்டிலிருக்கும் சசிக்கும் ஏதோ சம்பந்தமிருப்பதாக என் உள் மனம் கூறுகிறது. இவரை அழைத்துச் சென்றால் அவளைப்பார்த்ததும் சுய உணர்வு வந்தாலும் வரலாமென்பது என் உத்தேசம்."

"அப்படியுமிருக்கலாம். அம்மா ஏன் போகக்கூடாதென்று சொல்லுகிறாள்?"

அவள் ஒரேயடியாக "தனது தமையனின் பிள்ளை அந்தச் சசியில்லை. அடிபடுமுன் நான் பேசிப் பார்த்து கண்டுபிடித்திருக்கிறேன். நாளாக நாளாக சரியாகிவிடும். அவ்விடம் கூட்டிச்சென்று கலவரம் பண்ணக்கூடாது என்கிறாள். அதனால்தான்......"

"ஓ! அப்படியா விஷயம். சரி, நானே போன் பண்ணுகிறேன். என்ன செய்ய வேண்டுவென்று விபரமாகச் சொல்லு."

"முதல் வரிசையில் நடுமத்தியில் இருக்க வேண்டும். அதற்குரிய பணத்துடன் சங்கத்திற்கு டொனேஷனாக ஆயிரம்ரூபாய் கொடுப்பதாகச் சொல்லுங்கள்."

"என்ன? ஆயிரமா?"

"ஆம். ஆயிரம்தான். என் லக்ஷ்யம் நிறைவேறிவிட்டால், இந்த ஆயிரம், லக்ஷம் மதிப்பைப் பெறும் டாக்டர்."

. சற்றுநேரம் அவளையே பார்த்துக்கொண்டிருந்த டாக்டர், பாமினி! நான் இப்படி கேட்கிறேனென்பதற்காக மன்னித்துக் கொள். நீ எதிர்பார்க்கிறபடி இவர் அவர்களுடன் சென்றுவிட்டால் உன்னுடைய எதிர்காலம் வீணாகிவிடுமே?

"டாக்டர்! நீங்கள் சொல்லுவதின் அர்த்தம்?"

"வந்து......வந்து......நீ அவருக்குச் செய்த பணிவிடையினால்தான் உயிர் பிழைத்தார். உன்னுடைய கூட்டுறவினால்தான் அவர் உடல்நிலை தேறிவருகிறது. உன் தாய் நினைத்தபடி நீயும் அவரும் மண வாழ்க்கை நடத்திவிட்டு......வாக்கியம் முடிக்கவில்லை."

"டாக்டர்!" என அந்தக் கட்டிடமே அதிரும்படி அலறினாள்.

நடுநடுங்கிய டாக்டர், "என்னம்மா" என்றார்.

"இப்படிப் பேசினதற்கு, என் தந்தையைப்போன்ற நீங்களாக இருந்ததினால் பொறுத்தேன். வேறு யாராலுமானால் இவ்வளவு நேரம் பற்கள் உதிர்ந்து விழுந்திருக்கும். தன் உணர்வில்லாமல் தடுமாறும் ஒருவருக்கு ஒரு பெண் உதவியளித்தால் அதற்கு இப்படித்தானா அர்த்தம கற்பிப்பது? டாக்டர்! அவர் மனிதப் பிறவியல்ல. அவரைக் கைப்பிடித்தவள் மஹா பாக்கிய சாலி. தான் இன்னார் என்பதை உணராத நிலைமையிலும், மனைவி இருக்கிறாள் என்று உள்ளறிவு கூறுவதைச் செவி சாய்த்து பிற மாதரை தீண்டவும் அஞ்சும் மஹாத்மா அவர். கண் திறந்து பார்க்கும்வரை கைகால் அசைக்க முடியாத வரையில்தான் நான் அவரைத் தொட்டுப் பணிவிடை செய்வதற்கு அனுமதித்தார். பிறகு என் விரல் நுனிகூட அவர்மீது பட சம்மதிக்கவில்லை. டாக்டர்! அவரை தெய்வமாக, என் அண்ணனாக மதிக்கிறேன் டாக்டர்" என்று ஆவேசம் வந்தவள்போல் கூறி முடித்தாள். "பாமினி! தெய்வத்தை வணங்கி விட்டு உன்னிடம் மன்னிப்புக் கேட்கிறேன். நான் இவருக்கு ஆப்ரேஷன் செய்தால் குணமாகிவிடும்" என்று சொன்னபொழுது உன் தாயார் ஆப்ரேஷன் வெற்றியளிக்கும் என்பது என்ன நிச்சயம். பாமினியை அவனுக்கு மணம் செய்து வைக்கப் போகிறேன். இப்படியே இருந்தாலும் பரவாயில்லை. அவன் சம்பாதித்துச் சாப்பிடவேண்டிய அவசியமில்லையென்று சொன்னாள். முன்னேற்றப் பாதையில் நடந்து உனக்கு மறுமலர்ச்சியளிக்க வந்த உன் தாயின் மனப் பண்பை நினைத்துப் பெருமிதம் கொண்டேன். உன்னை மறுமணம் செய்து கொள்ள, சகல விதத்திலும் பொருத்தமான அரவிந்தன் கேட்டபொழுது, அடித்து விரட்டின உன் தாய், இப்பொழுது மனம்மாறி உனக்கு மணம் செய்யப் போகிறேன் என்று சொன்னால், நான் உன்னைபற்றி நினைத்தது தவறா சொல்லம்மா?

"அரவிந்தன்" என்ற பெயரைக் கேட்டதுமே பாமினி சிலையாக அமர்ந்து விட்டாள். சற்றுநேர மௌனத்திற்குப் பின் "டாக்டர்! பதற்றத்தில் படபடவெனப் பேசி விட்டேன் மன்னித்து விடுங்கள்." குரலில் ஜீவனே இல்லை.

"மன்னிப்பா? உன் தியாக மனப்பானமையை எண்ணி பெருமிதம்கொள்ளுகிறேன் பாமினி.

"நான் என்ன தியாகம் செய்து விட்டேன் டாக்டர். சசிகலா காதல் ஜோடிகளைப் பற்றி முன்பொருசமயம் கேள்விப்பட்டிருக்கிறேன். ஐந்து வயதிலிருந்து பாசத்தால் பிணைந்து வளர்ந்தவர்கள். தெய்விகக் காதலானபடியினால்தான் தன்னை மறந்த நிலைமையிலும் காதலை மறக்கவில்லை. அதனாலே அந்த ஜோடிகளின் ஒருவரான சசி இவரென்றுதான் நான் தீர்மானமாக நம்புகிறேன். இவரைக் கண்டுபிடிக்கவே அந்த அரங்கில் ஆடவந்திருக்கிறாள் என்றும் எண்ணுகிறேன். என்யூகம் சரியாக இருந்தால் இவர்களை ஒன்று கூட்டி வைப்பது கடமையா? தியாகமா? சொல்லுங்கள் டாக்டர்."

"சொல்ல என்ன இருக்கிறது. இந்த விஷயத்தில் நீ சூஸ்த்ரதாரி! நான் பொம்மை, அவ்வளவுதான்.

"டாக்டர்! இவ்வுதவியை ஒரு நாளும் மறக்க மாட்டேன்.

"எல்லாம் நல்லபடியாக முடியட்டும் பாமினி! பிறகு நாம் ஒருவர்க்கொருவர் நன்றி கூறிக் கொள்ளலாம்.

(தொடரும்)

சிறுவர் பகுதி

எஸ். விசாலாட்சி

உங்களுக்குத் தெரியுமா?

(1) நம் பாரதத்தில் மொத்தம் 3018 நகரங்கள், 558089 கிராமங்கள் உள்ளன. சதுர மைலுக்கு 312 மக்கள் வாழ்கின்றனர்.

(2) உலகில் கம்யூனிஸ்ட்டுகள் ஆட்சி செலுத்தும் நாடுகளின் மொத்த விஸ்தீரணம் 13519 250 சதுர மைல்கள். ஜனத்தொகை 94 கோடி 49 லட்சம்.

(3) வெள்ளை யானைகள் நாடு(The land of white elephants) என தாய்லந்துக்குப் பெயர் வெள்ளை யானைகள் என்பவை யானையில் ஒரு தனி ஜாதியல்ல. கறுப்பு யானைகளுக்கே சில சமயம் வெள்ளை குட்டிகள் பிறக்கின்றன.

(4) நம் நாட்டில் 84 விமான நிலையங்கள் உண்டு. இவற்றில் சாந்தாகுருஸ் (பம்பாய்), பாலம் (டில்லி), டம்டம் (கல்கத்தா) ஆகிய மூன்று மட்டுமே சர்வதேச விமான நிலையங்களாகும்.

(5) நம் ரயில்வேக்களில் 349 புக் ஸ்டால்கள் உள்ளன. தென் ரயில்வேயில் 91, மத்திய ரயில்வேயில் 66, வடக்கு ரயில்வேயில் 61, மேற்கு ரயில்வேயில் 41, வடகிழக்கு ரயில்வேயில் 40, கிழக்கு ரயில்வேயில் 29, தென்கிழக்கு ரயில்வேயில் 21 புக் ஸ்டால்கள் உள்ளன.

படியுங்கள்! சிரியுங்கள்

ஒரு வியாபாரிக்கு மூட்டை தூக்கக்கூடிய ஆள் ஒருவன் தேவையாக இருந்தது. ஒருவன் அந்த வேலைக்காக வியாபாரியிடம் வந்தான்.

"உன்னால் எத்தனை மணு இரும்பு தூக்க முடியும்?" எனக்கேட்டார் வியாபாரி.

"நான்கு மணு தூக்க முடியும் எஜமான்" என்றான் வந்தவன்.

"எத்தனை மணு பஞ்சு உன்னால் சுமக்க முடியும்?" என்றார் வியாபாரி.

"அதுவா? பத்து பதினைந்து மணு தூக்க முடியும் எஜமான்" என்றான் வந்தவன்.

* * * *

ஜெயிலர்: இந்த பாரத்தில் கையெழுத்துப் போடு.

கைதி: நான் தற்குறி. எனக்குத் கையெழுத்துப் போடத் தெரியாதே.

ஜெயிலர்: நீ எதற்காக ஜெயிலுக்கு வந்திருக்கிறாய் ஞாபகமிருக்கிறதா? பொய் கையெழுத்திட்டதற்காகத்தானே?

கைதி: ஆமாம்! அதற்கு நான் என்ன செய்யட்டும்! எனக்கு கையெழுத்துப் போடவே தெரியாது என எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். ஐட்ஜ் ஐயா கேட்டால் தானே?

* * *

கண்டக்டர்: இந்த எட்டணு செல்லாது?

கிராமவாசி: ஏன் செல்லாது? இதில் 1928-ல் அச்சடித்ததாகப் போட்டிருக்கு. அப்படினு 30 வருஷமா இந்த எட்டணு செல்லுபடியாகியிருக்கு. இப்பமாத்திரம் ஏன் செல்லாது?

* * *

எஜமான்: நான் உன்னிடம் கொடுத்த இரண்டு லெட்டரையும் போஸ்ட்செய்து விட்டாயா?

வேலைக்காரன்: போஸ்ட் செய்துவிட்டேன் எஜமான்!

எஜமான்: நான் அதில் ஒரு தப்பு செய்து விட்டேன், மலேயா கடிதத்துக்கு 25 நயா பைசா மெட்ராஸ் கடிதத்துக்கு 75 நயா பைசா ஸ்டாம்ப் தவறுதலாக ஒட்டிவிட்டேன்.

வேலைக்காரன்: நல்லவேளை! அதை நானும் பார்த்தேன். உடனே விலாசங்களை அடித்து சரியாக மாற்றி எழுதி போஸ்ட் செய்துவிட்டேன். கவலை வேண்டாம் எஜமான்.

பொன் மொழிகள்

நல்ல பெயர் வைத்துக்கொள்வதைவிட நல்ல பெயர் வாங்குவதே நல்லது.

* * *

உழைப்பின் கிளையில் இனிய கனிகள் காய்த்துக் குலுங்கும். சோம்பலின் கிளையில் கசப்புக் கனிகளே காய்த்துக் குலுங்கும்.

* * * *

நல்ல சிந்தனை தீயவனையும் நல்லவனுக்கும். தீய சிந்தனை நல்லவனையும் தீயவனுக்கும்.

* * *

நீங்கள் பிறருக்கு உதவுவது நல்லது. ஆனால் பிறர் உதவியை நீங்கள் எதிர்பார்ப்பது நல்லதல்ல.

நாம் சொல்லுவதை குழந்தை முதலில் கேட்கிறது. பிறகுதான் பேசுகிறது. நல்லவர்கள் பிறர் சொல்லுவதை முதலில் கவனமாகக் கேட்பார்கள். பிறகுதான் பேசுவார்கள்.

யார் சொல்லுவது சரி?

(1) இந்தியாவில் 'ரிசர்வ் பாங்கு' எப்படி அரசாங்க பாங்கோ அதேபோல் பிரிட்டனில் அரசாங்க பாங்கு 'பாங்கு ஆப் இங்கிலாந்து' (Bank of England) என்பது. இந்த பாங்கை பிரிட்டிஷ் அரசாங்கம் ஏற்படுத்தியது என்கிறான் கந்தன், பிரிட்டிஷ் பிரபு ஒருவர் ஏற்படுத்தியது என்கிறான் கண்ணன். இவர்களில் யார் சொல்லுவது சரி.

(2) நீட்டல் அளவையான கெஜத்தில் பிரிட்டிஷ் கெஜம், அமெரிக்கா கெஜம், கானடா கெஜம் என மூன்றுவகை உண்டு என்கிறாள் ராம்குமாரி. கெஜம் என்பது பிரிட்டிஷ் கெஜம் ஒன்றுதான். அமெரிக்கா, கானடா, இந்தியா, ஆஸ்ட்ரேலியா எல்லா நாடுகளிலும் வழங்குவது இந்த பிரிட்டிஷ் கெஜமேதான் என்கிறாள் கிருஷ்ணகுமாரி. இவர்களில் யார் சொல்லுவது சரி.

(3) முன் காலத்தில் சைபீரியாவுக்கு உத்தரகண்டம் எனப் பெயர் என்கிறான் ராமதாஸ். இப்பொழுது வட துருவமுள்ள பகுதியில் முன் காலத்தில் ஒரு பூபிரதேசம் இருந்ததற்குத்தான் உத்தரகண்டம் எனப் பெயர். இப்பொழுது அதை கடல்கொண்டுவிட்டது என்கிறான் கிருஷ்ணதாஸ். இவர்களில் யார் சொல்லுவது சரி.?

(விடை மற்றொரு பக்கம் காண்க.)

எத்தனை பேர்?

ஒரு பள்ளிக்கூடத்திலிருந்து மாணவர்கள் காவேரிக் கரைக்கு உல்லாச யாத்திரை போனார்கள், உச்சி நேரம். வெயிலுக்கு அஞ்சி அங்கிருந்த இரண்டு மாமர நிழலில் அவர்கள் பிரிந்து உட்கார்ந்தனர். அப்பொழுது ஒரு மாமர நிழலில் உட்கார்ந்திருந்தவர்கள் மற்றொரு மாமர நிழலில் உட்கார்ந்திருந்தவர்களைப் பார்த்து "உங்களில் ஒருவர் எங்களோடு வந்து சேர்ந்து கொண்டால் உங்களைப் போல் நாங்கள் இரண்டு மடங்காகிவிடுவோம்" என்றனர். "உங்களில் ஒருவர் எங்களோடு வந்து சேர்ந்து கொண்டால் இரண்டு பக்கமும் சரி சமமாகிவிடும். ஆகையால் உங்களில் ஒருவர் எங்களோடு வந்து சேர்ந்து கொள்ளுங்களேன்" என்றனர்.

அப்படியானால் ஒவ்வொரு மர நிழலிலும் எத்தனை மாணவர்கள் உட்கார்ந்திருந்தனர். மொத்த மாணவர் தொகை என்ன?

(விடை மற்றொரு பக்கம் காண்க)

பசியைப் போக்கிய முனி

முன் ஒருகாலத்தில் இந்திரனுக்கு பூலோக வாசிகள்மீது கோபம் வந்துவிட்டது. இதனால் பூலோகத்தில் மழையே பெய்யவில்லை. எங்கும் பஞ்சம் தாண்டவமாடத் தொடங்கியது. மக்களெல்லாம் தங்கள் தங்கள் வீடு வாசல்களை விடுத்து வனங்களுக்கு ஓடினர். அங்கே கந்த மூலாதிகளைச் சாப்பிட்டு வாழத் தலைப்பட்டனர் ஆனால் சில நாட்களிலேயே காடும் வரண்டது. கந்த மூலாதிகளும் கிடைக்க வழியில்லை. அது தான் கிடைக்கிறது என்றால் தவித்த வாய்க்குத் தண்ணீராவது கிடைத்ததா என்றால் அதுவுமில்லை. பசியாலும் தாகத்தாலும் மக்கள் துடிதுடித்துச் சாகத் தொடங்கினா மனிதனின் நிலையே இப்படியென்றால் மற்ற உயிர் பிராணிகளின் நிலையைக் கேட்கவா வேண்டும்?

இப் பஞ்சத்தின் காரணமாக விசுவாமித்திர முனிவரும் தன ஆசிரமத்தை விட்டுக் கிளம்ப வேண்டியதாயிற்று. தண்ணீர தேடி பல இடங்களைச் சுற்றி கடைசியில் கௌதமா நதிக்கரையை அடைந்தார். ஆனால் அங்கே ஓரளவு தண்ணீர் கிடைத்ததே தவிர பசியை ஆற்ற உணவு எதுவும் கிடைப்பதாக இல்லை. அதற்காக எவ்வளவு நேரம்தான் பட்டினி கிடக்க முடியும்? கௌதமா நதிக்கரையில் எங்கும் சுற்றிப் பார்த்தால் எதுவுமே உணவுக்கு அகப்படுவதாக இல்லை கடைசியில் ஒரு நாய் நதியோரமாகச் செத்துக் கிடந்தது அவர் கண்ணில் பட்டது. உடனே தம் சிஷ்யர்களை அழைத்து "இந்த நாயை வெட்டி அதன் மாமிசத்தைக் கழுவிச் சமையுங்கள். தேவர்களுக்கு இன்று இதைத்தான் ஆஹுதிசெய்யவேண்டும். பிதுருகளுக்கு தர்ப்பணம் செய்து திருப்திப் படுத்தவேண்டும் அதிதிகளுக்கும் குருஜனங்களுக்கும் பங்கிட்டதுபோக எஞ்சியதைத் தான் நாமெல்லோரும் பகிர்ந்து சாப்பிட வேண்டும்" என்றார். நாயின் மாமிசத்தை விசுவாமித்திரர் சமைக்கச் சொன்னது சிஷ்யர்களுக்கெல்லாம் திக்கென்று தானிருந்தது. குருவின் கட்டளை மீற வழியில்லை. என்ன செய்வார்கள் பாவம்!

முனிவரின் கட்டளைப்படியே சிஷ்யர்கள் நாயை வெட்டிச் சமைக்கத் தொடங்கினர். இதைப்பார்த்த அக்னி பகவான் உடனே

தேவலோகத்துக்கு ஓடிச்சென்று விஷயத்தை விளக்கிச் சொன்னார்.

"அவர் சமைத்து சாப்பிட்டால் சாப்பிடட்டுமே எங்களுக்கென்ன வந்தது?" என்றார்கள் தேவர்கள்.

"தான் சாப்பிடுவதற்குமுன் அவர் தேவர்களாகிய உங்களுக்குத்தானே ஆஹுதி செய்வார்கள்" என்றார் அக்னி பகவான்.

செய்தால் செய்யட்டும். நாங்கள் ஏற்றுக்கொள்ள மறுத்து விடுகிறோம்" என்றார்கள் தேவர்கள்.

"அதெப்படி முடியும்? மந்திரம் ஜெபித்து விதி பூர்வமாக அவர் ஆஹுதி செய்யும் போது நீங்கள் மாறுதல் ஒன்றும் நடவாது. அவர் மந்திர பலத்தால் உங்கள் வாயில் அது புகுந்துதானே தீரும்" என்றார் அக்னி பகவான்.

இதைக் கேட்ட தேவர்களுக்கு அப்பொழுதுதான் நிலைமை புரிந்தது. உடனே ஓட்டோடிப்போய் தங்கள் மன்னனாகிய இந்திரனிடம் முறையிட்டார்கள். என்ன அதிக்கிரமம்! தேவர்கள் நாய் மாமிசத்தைப் புசிப்பதாவது என்று சினந்தான் இந்திரன். ஆனால் சினந்து என்ன பயன்? இன்னும் சிறிது நேரத்தில் நானும் நாய் மாமிசத்தைப் புசித்தாகும் படியாக ஆகிவிடுமே! இதைச் சிந்தித்துப் பார்த்த இந்திரனுக்கு ஆத்திரம் பொங்கியது. ஆனால் என்ன செய்வது? இதில் கோபப்பட்டு எதுவும் ஆகப் போவதில்லை. ஆகையால் தந்திரமாகத்தான் இந்த ஆபத்திலிருந்து தப்ப வேண்டும் எனத் தீர்மானித்தான் இந்திரன்.

உடனே துளியும் தாமதமின்றி பூலோகத்துக்குக் கிளம்பினான் இந்திரன். இந்திரன், கௌதமி நதிக் கரையை அடைந்தான், அப்பொழுதுதான் சமையலை முடித்து முனிவரிடம் தகவல் சொல்லக் கிளம்பினார்கள் சிஷ்யர்கள். அது தான் சரியான சமயம் எனக் கருதினான் இந்திரன். தன்னை ஒரு பெரிய ராஜாளி உருவில் மாற்றிக்கொண்டான். மாமிசம் சமைத்திருந்த பாத்திரத்தைத் தூக்கிக்கொண்டு கிளம்பி விட்டான். இதற்குள் அங்கு திரும்பிய சிஷ்யன் ஒருவன் இராஜாளி ஒன்று மாமிசப் பாத்திரத்தை தூககிச் செல்லுவதைக் கண்டுவிட்டான். உடனே முனிவருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. முனிவரால் இதை நம்பமுடியவில்லை. என்னதான் ராஜாளியாக இருந்தாலும் மாமிசம் நிறைந்த அவ்வளவு பெரிய பாத்திரத்தை எப்படித் தூக்கிச் சென்றிருக்க முடியும்? அதன் அலகில் அவ்வளவு பெரிய பாத்திரத்தைப் பற்றித் தூக்கிச் செல்லுவதென்பது சாத்தியமல்லவே- ஆகையால் இதில் ஏதோ சூது நடந்திருக்கிறது எனச் சந்தேகப்பட்டார் முனிவர்.

உடனே தனது ஞான. திருஷ்டியால் நோக்கினார். இந்திரன் தான் ராஜாளி உருவில் மாமிசப் பாத்திரத்தைத் தூக்கிக் கொண்டு போகிறான் என்பது அவருக்குத் தெரிய வந்தது. கோபம் அவருக்குத் தாங்கவில்லை. இந்திரனைச் சபிக்கும் நோக்குடன் தன் கரத்தில் ஜலத்தை எடுத்தார் இதை அறிந்த இந்திரன் நடுநடுங்கிப்போனான்.தான் தூக்கிச் சென்ற பாத்திரத்தை முனிவர் காலடியில் வைத்து மன்னிப்புக்கேட்டான். அப்பொழுது அந்தப் பாத்திரத்தில் மாமிசம் எதுவுமில்லை. அமிர்தம் நிறைந்திருந்தது.

"இந்த அமிர்தம் எதற்காக இந்திரா?" என்று வினவினார் முனிவர்.

"தங்களுக்குத்தான் முனி சிரேஸ்டரே! தாங்களும் தங்கள் சிஷ்யர்களும் இதைக் கொண்டு பசியாற்றலாம்" என்றான் இந்திரன்.

"பசியாலும் தாகத்தாலும் துடிதுடித்து மக்கள் எல்லாம் மடியும்போது நானும் என் சிஷ்யர்களும் மட்டும் அமிர்தம் சாப்பிடுவதாவது? என்னைப் போலவே எல்லோருக்கும் அமிர்தம் கொடு. இல்லாவிட்டால் என் நாய் மாமிசத்தை என்னிடமே திருப்பிக் கொடுத்துவிடு. அதாலேயே நான் என் யக்ஞ காரியங்களை முடித்து விடுகிறேன். அதையே நான் சாப்பிடுகிறேன் என் சிஷ்யர்களும் சாப்பிடட்டும் அமிர்தம் எனக்கு தேவை இல்லை அதை எடுத்துச் சென்றுவிடு. நாய் மாமிசத்தை என்னிடமே திருப்பிக் கொடு. இல்லாது போனால் உன்னையும் உன் உலகத்தையும் பஸ்மம் செய்து விடுவேன்" என்று எச்சரித்தார் முனிவர்.

இதைக்கேட்ட இந்திரன் பயந்து போனான். விஸ்வாமித்திரர் எப்படிப் பட்டவர் என்பது அவனுக்குத் தெரியும்.

"மகாமுனி! என்னை மன்னிக்க வேண்டும். இதோ பூலோகத்தின் பசியையும் தாகத்தையும் போக்குகிறேன். இந்த அமிர்தத்தை தாங்கள் ஏற்றருள வேண்டும்" என்றான் இந்திரன்.

"இந்திரா! முதலில் மக்களின் பசியையும் தாகத்தையும் போக்கு. அவர்கள் அல்லல் அகலாதவரை நான் அமிர்தத்தை ஏற்பதென்பது நடவாத காரியம் என்றார் விசுவாமித்திரர் கண்டிப்பாக.

என்ன செய்வான் இந்திரன். உடனே மழை பெய்யச் செய்தான். பஞ்சம் நீங்கியது. மக்களின் பசி அகன்றது.

குழந்தைகளே! உங்கள் நலனை மட்டும் கருதாது உலகில் உள்ள மற்றவர்கள் நலனை யும் கருதினால்தான் விசுவாமித்திரரைப் போல நீங்களும் புகழும் உயர்வும் அடையலாம்.

திரை உலகம்

விச்வம்

குற்றவாளி யார் ?

சுவற்றை வைத்துக்கொண்டுதான் சித்திரம் எழுதவேண்டும். நல்ல கதையை வைத்துக் கொண்டுதான் படம் எடுக்கமுடியும். ஆகவே ஒரு படம் தோல்வியடைய சுவையில்லாத கதை முதற் காரணம், அதை எழுதிய ஆசிரியர் முதற் குற்றவாளி.

உலகத்தில் எத்தனையோ கதைகள் எழுதப் படுகின்றன. எல்லாமா படவுலகுக்கு வந்து விடுகின்றன. பல கதைகளைப் படித்து ஆராய்ந்து சிறந்த கதையைத் தேர்ந்தெடுக்க வேண்டியது படாதிபதியின் பொறுப்பு. கதை ஆய்வுத் திறன் இல்லாமையாலோ அல்லது வேறு பல நோக்கங்களால் உந்தப்பட்டோ சில படாதிபதிகள் சுவையில்லாத கதையை படமாக்க முனைந்து விடுகிறார்கள். அப்பேற் பட்ட பட முதலாளி இரண்டாவது குற்ற வாளி.

படாதிபதி தேர்ந்தெடுத்துவிட்டால் படமாய் விடுமா! டைரக்டர் கதையை ஆய்ந்து படாதிபதிக்கு யோசனை சொல்லவேண்டாமா? கதை பொருத்தமாயில்லாவிட்டால் அதை எடுத்துக்காட்டி மாற்றி வைக்கச் செய்யவேண்டும். அது முடியாவிட்டால் வேறு கதையை தேர்ந்தெடுக்க படாதிபதிக்கு உதவி செய்யவேண்டும். கதையைத் தேர்ந்தெடுத்த பின் தன் கற்பனையைத் திரட்டி கதையில் புகுத்தி தனக்குத் தகுந்தபடி திரைக் கதையமைக்க வேண்டும். தன் 'ஷாட்டு'களுக்குத் தகுந்தபடி சீனரியோ எழுதி வசன கர்த்தாவுக்குத் தேவையான விவரணங்கள் கொடுக்கவேண்டும். வசன கர்த்தாவின் வசனங்களை தணிக்கை செய்து தேவையானவைகளை வைத்துக்கொண்டு அல்லாதவைகளை மாற்றியோ நீக்கியோ படம் எடுக்கத் துவக்கவேண்டும். இதையெல்லாம் விட்டு, படாதிபதி தேர்ந்தெடுத்த கதை எதுவாயிருந்தாலும் டைரக்டு செய்ய ஒப்புக் கொண்டு, கதையையே சரியாகத் தெரிந்து கொள்ளாமல் செட்டுக்குள்ளும் நுழைந்து 'ஸ்டார்ட், கட்' டைரக்டு செய்துவிட்டுத் தன் பொறுப்புக்கு முழுக்குப்போடும் டைரக்டர் குற்றவாளி!

டைரக்டர் கதையைப் பரிசீலனை செய்து, தனக்கு வேண்டியவையெல்லாம் சேர்ந்து, வசன கர்த்தா ஒத்துழைப்புடன் 'ஷாட்' வகுத்துக்கொண்டு செட்டுக்குள் நுழைகிறார் என்றே வைத்துக்கொள்வோம். நடிகர்கள் அவர் வகுத்த ஷாட்களைப் புரிந்துகொண்டு அவைகளுக்கேற்ப நடிக்கவேண்டும். அதை விட்டு "அப்படி வேண்டாம் சார்! நான் இங்கே நிற்கிறேன். இந்த வசனத்தைப் பேசுகிறேன். அவர் அங்கே யிருக்கட்டும். காமரா இங்கிருக்கட்டும் .." என்றெல்லாம் ஷாட்டுக்கு ஷாட் டைரக்டர் விஷயத்தில் தலையிட்டு அவருடைய கற்பனையைக்குலைத்து படத்தையும் கெடுத்து விடுகிறார்கள் பல நடிகர்கள். நடிகாகள் ஷாட்டுக்கு யோசனை சொல்லக்கூடாது என்று நான் சொல்ல வில்லை. நடிகர்கள் இந்த விஷயத்தில் டைரக் டருக்கு மிகவும் உதவி செய்யக்கூடும். ஆனால் யோசனை யோசனையாக இருக்கவேண்டும், தலையீடாக இருக்கக்கூடாது.

தவிர படத்திற்குத் தேவையான பொழு தெல்லாம் கால்ஷீட் கொடுத்து படத்தை உருவாக்க வேண்டியது நடிகர் கடமை. நேரம் போராத காரணத்தாலும், படத்தின் பூச்சு வேலை ஷாட்டுகளுக்குத் தான் தேவை யில்லை என்ற மனப்பான்மையாலும் சில நடிகர்கள் டைரக்டரோடு ஒத்துழைக்கத் தவறி விடுகிறார்கள். டைரக்டர் வேறு வழி யில்லாமல் டூப்ளிகேட்டை வைத்து எடுக்க முடிந்தவையை எடுத்து, முடியாதவையை நீக்கி, அதற்கேற்ப கதையைக் குலைக்க வேண்டி வருகிறது. அதன் காரணமாக படத்தில் தொடர்பு இல்லாமல் சம்பவங்கள் தாண்டித் தாண்டிச் செல்லும்.

இப்படி டைரக்டரோடு ஒத்துழைக்காத நடிகரும் குற்றவாளியே.

சில சமயம் உண்மையிலேயே, சில முன் னேற்பாடுகளின் காரணமாக சில நடிகருக்கு ஒரு படத்துக்கு கால்ஷீட் கொடுக்க இயலா மல் போய்விடலாம். அப்போது படாதி பதிக்கு அவசரம் பிடித்துக் கொள்ளும். "அவர் இல்லாமலேயே முடித்துவிடுங்கள்" என்று டைரக்டருக்கு உத்தரவு போடுவார். டைரக்டர் என்ன செய்வது என்று தெரியா மல் விழிப்பார். "அப்படியெல்லாம் செய் தால் படம் தேறாது" என்று சொல்ல வேண்டியிருக்க கதையை மாற்றுவார். அப்படியே அவர் முடியாது என்று சொல்லி

விட்டால் படாதிபதி விடுவாரா. "நீர் எடுக்கா விட்டால் நானே எடுக்கிறேன்" என்று கூடச் சொல்லிவிடுவார். இப்பேர்ப்பட்ட படாதிபதியை என்ன செய்வது?

பட விநியோகிகள் என்று ஒரு கட்சி! அவர்கள் நினைத்தால் படவுலகையே சீர்தூக்கி விடலாம். படத்தின் கதையைப் படித்து, அதை எழுதியது யார், டைரக்ட் செய்யப் போவது யார், நட்சத்திரங்கள் யார் யார் என்றெல்லாம் கவனம் செலுத்தாமல், கதை படமாக்க லாயக்கானதுதானு, படமாக்கினுல் சுமாராக ஓடுமா என்று மட்டும் ஆய்ந்து பணங்கொடுத்து உதவ வேண்டும். படம் வளரும்போது அடிக்கடி படத்தைப் பார்த்து யோசனைகள் கூற அவர்களுக்கு உரிமையுண்டு. அவர்கள் மனம் வைத்தால் புதிய நடிகர்களையும், புதிய எழுத்தாளர்களையும், புதிய டெக்னீஷியன்களையும் ஊக்கி நல்ல படங்கள் கொண்டுவரலாம். அதை விட்டு "அவர் எழுதிய கதையை, இவர்களைப் போட்டு, இன்னுரை டைரக்ட் செய்யச் சொல்லி எடுத்தால் பணம் கொடுக்கிறேன்" என்று சொல்லும் பட விநியோகிகளும் இருக்கிருர்கள். படாதிபதி துணிந்து புதுமுகங்களை ஆதரித்தாலும், புது டெக்னீஷியன்களை அமர்த்தினுலும், அவர்கள் துணிச்சலுக்கு முட்டுக்கட்டை போட்டு அவர்கள் தலையைக் குழப்பி, விளம்பரம் பெற்ற எழுத்தாளர்களையும், மற்றவர்களையும் புகுத்தி விடுகிருர்கள். சில விநியோகிகள் படம் பிடிக்கப் பணம் தேவையாயிருக்கிறதே! படாதிபதி என்ன செய்வார்? ஆகவே விநியோகஸ்தர்களும் குற்றவாளிகள் ஆகிருர்கள்.

இப்படியே குற்றம் சொல்லிக் கொண்டே போனுல் முடிவு இராது. குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை. எனவே குற்றச்சாட்டை நிறுத்தி ஒரு படத்தின் வெற்றிக்கு எல்லார் ஒத்துழைப்பும் தேவை என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

மேலை நாடுகளில் படப்பிடிப்பு உலகில் கதை இலாகாக்கள் உள்ளன. கதை இலாகா என்றுல் கதை எழுதுபவர்களின் குழு அல்ல. கதை தேர்ந்தெடுப்பவர்கள் குழு. இலாகாவின் அங்கத்தினர்கள் கதைகளைப் படித்து, சிறந்தவைகளைத் தேர்ந்தெடுத்து தங்கள் தங்கள் விமர்சனத்தோடு படாதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டும். படாதிபதி மூலக்கதை எழுதியவரை அழைத்து, அவருடைய அனுமதியைப் பெறவேண்டும் (ஆமாம் விலைக்குத்தான்!). பின் படத்திற்கு டைரக்டர் அமர்த்தி, அவருடன் கலந்து நடிகர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும். முக்கிய நடிகர்களைக் கூட்டி கதையை விளக்கி அவர்களுடைய யோசனையைக் கேட்க வேண்டும். பல படங்களில் நடிக்கும் நடிகர்கள், கதையில் ஏற்கனவே வேறு கதைகளில் உள்ள கட்டங்கள் எதுவும் இராமல் பாதுகாக்க முடியும். தவிர அவர்கள் நடிக்கும் படங்கள் எல்லாவற்றிலும் ஒரே மாதிரியான பாத்திரமே தாங்காமல் பார்த்துக் கொள்வதும் அவர்கள் பொறுப்பு. நடிகர்கள் ஒத்துழைப்பால் கதையின் தரம் உயரும். பிறகு டைரக்டர் டெக்னீஷியன்களோடு கலந்து தன் படத்தின் நுணுக்கங்களை விவாதித்து முடிவுக்கு வரவேண்டும். படத்தின் கதை, சம்பவங்கள் முழுவதையும் சங்கீத டைரக்டருக்கும் பாட்டமைப் போருக்கும் விளக்கி, அவர்களுக்குச் சிந்திக்கத் தேவையான அவகாசம் கொடுத்தால்தான் சிறந்த இசையமைப்பையும் பாடல் கவனத்தையும் பெற இயலும்.

இப்படியாக எல்லோரும் சேர்ந்து 'ஷாட் ஷாட்' ஆகத் தீர்மானித்து, செட்டில் இறங்கி விட்டபின் எதையும் மாற்றக் கூடாது. மாற்றினுல் சமைத்து வைத்திருக்கும் பதார்த்தங்களில் நினைத்து நினைத்து உப்பையும் மிளகாய்ப் பொடியையும் போட்டது போலாகும் படத்தின் சுவை.

வருந்துகிறேன்

காவேரி தீபாவளி மலரில் வெளியான "நாடகக் கலை வளர...?" என்ற அம்சம் யாரையும் தாக்கும் நோக்கத்தோடோ, புண்படுத்தும் நோக்கத்தோடோ எழுதப்படவில்லை. எனக்கு யாரிடமும் வெறுப்போ, குரோதமோ கிடையாது நாடகக்கலை வளர்ச்சியில் ஆர்வங்கொண்ட பலருள் நானும் ஒருவன். அந்த ஹோதாவில் நான் குறிப்பிட்ட கூட்டத்திற்குச் சென்றிருந்தேன். அங்கு சொல்லப்பட்ட விஷயங்களில் என் கருத்துக்கு மாறுபட்ட கருத்துக்களை விமரிசித்தேனேயொழிய அக்கருத்துக்களின் சொந்தக்காரர்களைத் தாக்கவேண்டுமென்ற எண்ணம் எள்ளளவும் எனக்கு இல்லை. இருந்தும் என்னையறியாமலேயே தாக்குதல் போல் தோன்றக்கூடிய நடை என் விமரிசனத்தில் இடம் பெற்றிருந்தால் அதற்காகப் பெரிதும் வருந்துகிறேன். சம்மந்தப்பட்டவர் தயைகூர்ந்து பொறுக்கக் கோருகிறேன்.

விமர்சனம்

கண் திறந்தது

"ஒன்றுமே இல்லாத படம்!"

"அதென்ன படம்? அதில் ஒண்ணுமேயில்லை!"

இப்படிச் சொல்லிக் கொண்டார்கள். சொல்லிக் கொண்டது யார்? பொது மக்கள் அல்ல. படாதிபதிகள்! படத்தில் என்னென்ன இல்லை தெரியுமா?

பார்த்துச் சலித்த பழைய முகங்கள் இல்லை! கேட்டு அலுத்த அடுக்கு மொழி வசனம் இல்லை எதுகையில்லை, மோனையில்லை! டப்பாப் பாட்டுக்கள் இல்லை! டப்பாங்குத்து நடனம் இல்லை! காதல் என்ற பெயரில் கயவாளித்தனம் இல்லை! உணர்ச்சி என்ற பெயரில் உளறிக் கொட்டி கிளறி மூடும் கூத்தும் இல்லை!

இவையெல்லாம் இல்லாவிட்டால் என்ன? வேறு எத்தனையோ நல்ல அம்சங்கள் இருக்கின்றவே!

பால் வடியும் முகம்! வெகுளித்தனம் சொட்டுகிறது. தாயில்லாத குறையால் தறுதலையாகி விட்ட குழந்தை! குறும்புத்தனமும் பித்தலாட்டமும வெளிப்படைதான். உள்ளம் பரந்தது, மிருதுவானது—கடினமானதும்கூட. அன்புக்கு உருகும் மெழுகு, அல்லலுக்கு உருகாத இரும்பு குழந்தையின் உள்ளம் தவறு என்ற தீயில் விழுந்து விழுந்து தப்பித்தழும்பேறிய மனம்! சாகசம், சகிப்புத் தன்மை, சத்தியப் பற்று, பிறர் வாழ தான் சாகத்துணியும் தியாக சக்தி எல்லாம் ஒருங்கே உருண்டு திரண்ட ஓவியப் பாத்திரம் முத்து.

அப்பேர்ப்பட்ட பிள்ளையைப் பெற்ற தாய்க்குக் கூட இல்லாத பெருமை அத்தகைய குணச்சித்திர பாத்திரத்தை உருவாக்கிய கதாசிரியருக்கு உரித்தானது. பெற்றவள் பேணி வளர்ப்பதுபோல் ஆசிரியர் அப்பாத்திரத்தைப் போஷித்து உருவாக்கியிருக்கிறார் அவருடைய வெற்றி எழுத்தாளர் உலகத்தின் வெற்றி! திரையுலகத்தின் வெற்றி!

முன் பின் காமராவையோ ஒளி வெள்ளத்தையே பார்த்திராத பாலகன் மாஸ்டர் வியாஸ் தானும் வெற்றி கண்டு, தன்னைப் படைத்தவருக்கும் வெற்றி தந்து விட்டான். பீடிக்கடைக்காரனை ஏமாற்றி பீடி வாங்கும் சாகசம்! அதைக் கண்டு பிடித்து அடித்து விட்ட அப்பாவின் மனத்தை மாற்றும் வித்தை! கஷ்டப்படுபவர்களுக்கு இரங்கும் காருண்யம்! கெட்டவர் முகத்தில் கரி பூசும் துணிச்சல் எல்லா கட்டங்களிலும் வியாஸ் வென்று விட்டான். கடைசிக் கட்டங்களில் அவன் படும் கஷ்டத்தைப் பார்த்து பெற்றவனைவிட நாம் அதிகம் வருந்துகிறோம்—நேர்மையைக் கண்டு நெஞ்சம் பூரிக்கிறோம்.

மாஸ்டர் வியாஸ் படத்தில் வரும் போலி ஜமீந்தாருக்கு மட்டும் கரியைப் பூசவில்லை—நட்சத்திரங்கள்தான் வேண்டும் என்று எண்ணும் படாதிபதிகளுக்கும் பூசிவிட்டான்—நட்சத்திர ஸ்தானம் நிரந்தரமானது, நட்சத்திர மண்டலம் புதியவர்கள் புகமுடியாத மண்டலம் என்று எண்ணும் எல்லோருக்கும் பூசி விட்டான்.

ராமநாதன் இன்னொரு புதுமுகம். புதுமுகமானால் என்ன? அழகிய முகமாகத்தானே இருக்கிறது! நடிக்கும் திறமை உள்ளூறையாக இருக்கிறது. பயிற்சிதான்

தேவை. உண்மையிலேயே இளைஞனை ராமநாதன் திரையுலகுக்கு ஒரு புதையல். அப்புதையலைக் கண்டெடுத்த நாராயணன் கம்பெனி மேலும் மேலும் இத்தொண்டைச் செய்யவேண்டும்.

அதிகப்பேச்சு இல்லாமே அடக்கமே உருவாய், அன்பே லட்சியமாய் அபாரமாக நடித்து விட்டார் மைனாவதி.

மதுரம் மதுரந்தான். கருணைக்கிழவி நம் கண்களைத் திறந்து விடுகிறாள். நல்ல பாத்திரம்: நல்ல நடிப்பு. "பைசா நாஸ்தி" மைனர்களுக்குப் பழம் இனாம் கொடுத்து விட்டுச் சிரிக்கும் சிரிப்பு நடிப்புமயம்.

வெங்கடாசலம் என்னபோடு போட்டிருக்கிறார்! சபாஷ் வெங்கடாசலம்!

கருப்பையாவின் பாத்திரம் ஒரு முரண். மகனிடம் அன்பு இருந்தும் அவனைத் தறுதலையாய் விட்டிருப்பது ஏன்? போலி ஜமீந்தாரிடம் அவ்வளவு பற்றுதல் ஏன்? அவ்வளவுக்கு ஒன்றும் போலி ஜமீந்தார் படியளக்

இறதாகத் தெரியவில்லையே! பாத்திரம் நல்ல உலோகந்தான். ஆனால் உருவந்தான் தெளிவாக இல்லை. தின்ற உப்புக்கு நன்றியா? இயற்கைப் பொல்லாத்தனமா? பெற்ற மகனையே பலி கொடுக்கத் துணிவது ஏன்? உப்புக்கு நன்றி என்றால் பெரிய ஜமீந்தாரிடமல்லவா நன்றி காட்டியிருக்க வேண்டும் — உண்மை தெரிந்த பிறகாவது. போகட்டும் சிருஷ்டி எப்படியிருந்தால் என்ன? சகஸ்ரநாமம் என்ன செய்திருக்கிறார்? முரண்பட்ட உணர்ச்சிகளை மிக நன்றாக வெளிப்படுத்தியிருக்கிறார், ஆனால் அவருடைய முக ஒப்பனை ஒத்துழைக்கவில்லை — உடம்புங் கூடத்தான்.

அவருடைய உடையும் ஒப்பனையும் சமீபத்தில் வெளிவந்த ஒரு படத்திலுள்ள ஒரு பாத்திரத்தின் நகல் போலில்லை?

பூபதியாக நடிக்கும் டி. ஆர். நடராஜன் நடிக்கிறார். பிரபல நட்சத்திரங்களை காபியடிப்பதற்குப் பதில் தன்னம்பிக்கை வளர்த்தால் இன்னும் நன்றாக சோபிக்கலாம்.

சில புதிய அம்சங்கள் இப்படத்தின் தரத்தை மிகவும் உயர்த்துகின்றன. சஸ்பென்ஸ் (Suspense) என்ற பெயரில் குழப்பம் இல்லாமற் பழமொழி பூர்வமாகக் காமெடி ஜோடி கூத்தடிக்காமை; வில்லனைத் தேவையில்லாத குற்றங்களில் சம்பந்தப்படுத்தி, அவன் குடிப் பதையும் ...... காட்டாமை; அனாவசியமான பாத்திரங்களுக்கு முடிவு கொடுக்க வேண்டும் என்பதற்காக அவைகளைவளர்த்து கதைக்குள் கதையை உண்டுபண்ணி போரடிக்காமை; தேவையற்ற வாதிப் பிரதிவாதங்களை கோர்ட் சீனில் புகுத்தி கதையின் வேகத்தைக் குலைக்காமை; அளவோடு நிற்கும் அழகு நடை வசனம்; கருத்துச் செறிவான பாடல்கள்; இனிமையான இசைத்தொகுப்பு; எல்லாவற்றிற்கும் மேலாக சோகக் கதையிலிருந்தும், பார்ப்பவர்கள் சோகத்தைப் பிழிந்தெடுத்து அவர்கள் இன்பத்தைக் குலைக்கும் போலி சோக கட்டங்கள் இல்லாமை; எல்லாம் கலை மயம்! களை தட்டுகிறது.

இக்கதையைப் படமாக்கத் தீர்மானித்து, முக்கிய பாத்திரங்களில் புது முகங்களை நடிக்கவைத்து, கதையின் சிருஷ்டி கர்த்தாவிடமே டைரக்ஷன் பொறுப்பையும் விட்டுவிட்ட தயாரிப்பாளர் ஸ்ரீ பட்டண்ணா அவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

வழக்கம் என்ற சாக்கடையிலிருந்து விலகி, புதுமைகள் நிறைந்த கதையைப் புதியமுறையில் எழுதி, டைரக்ட் செய்திருக்கும் ஸ்ரீ கே. வி. சீனிவாசன் அவர்களைக்கண்டு புகழ்வதா பெருமைப்படுவதா?

இந்த வெற்றிப்படம் வசூல் விஷயத்தில் ஒருகால் தோல்வியடைந்துவிட்டால், அது படத்தின் தோல்வியல்ல, ரசனையில்லாத நம்முடைய தோல்விதான். நம் கண் திறக்குமா?



CONNEMARA PUBLIC LIBRARY 20 FEB 1960

Edited & Published by N. R. Ramanujam, B.A., & Printed by S. Rangaswami, B. A., at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.